

சங்க நூலாய்வும் சாமியும்

S.S.THANDAVAM

சேகர் பதிப்பகம்

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	: SANGA NOOL AAYVUM SAMIYUM
Author	: N. VENKATESAN.
Langauge	: Tamil
Edition	: First
Date of Publicateion	: 3.7.199
Copy right Holder	: Sekar Pathippagam
Paper used	: White Printing D.Crown.
	: 11.2 Kg
Size of the book	: 18 . 5. X 12 . 5 cm.
Type	: 12 Point.
No. of pages	: 316
No. of Copies Printed	: 1000
Printer	: Page offset Printers Chennai-5
Publisher	: SEKAR PATHIPPAGAM Chenna i - 78
Price	: **Rs . 75.**
Subject	: Essays

சங்கநூலாய்வும் சாமியும்

தொகுப்பு
புலவர் ந. வேங்கடேசன்
வில்லியனூர்

சேகர் பதிப்பகம்
66 / 1, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600 078
471 43 25

முதற் பதிப்பு : 3 . 7 . 1999

நூலாக்கம் :

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

விலை ரூ. 75 .

ஒளி அச்சு : அன்னை கணினி
சென்னை - 33

அச்சிட்டோர் :
பேஜ் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 5 .

உயிரினங்கள்
சிந்துவெளி
பி.எல்.சாமி
மணிகள்
தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு
பி.எல்.சாமி I.A.S.
மீன்கள்
P.L. SAMY
FLORA and FAUNA
DRAVIDIAN and INDO-ARYAN
LANGUAGES
செடிகொடிகள்
பி.எல்.சாமி
அறிவியற் கலை
சங்க நூல்களில்
பூச்சி
இலக்கிய ஆய்வு
மரங்கள்

நன்றி!

- ★ அறிஞரின் குடும்பத்தார்
- ★ பாராட்டுரை வழங்கிய அறிஞர்கள்
- ★ நூலாக்கப் பணிக்குத் துணை நின்ற தோழர்கள்
- ★ அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி, கடலூர்
- ★ லெனின், புதுவை
- ★ கவிஞர் பூவை அமுதன், சென்னை
- ★ புலவர் வரத கோவிந்தராசன், சென்னை

பொருளடக்கம்

1. சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள் 25
2. பாகூர் ஜேஷ்டா தேவி 43
3. பருந்து உருவம் பொறித்த அரிய நாணயம் 54
4. பாண்டிச்சேரியின் தொன்மைக்காலப் பெயர் 59
5. கீழ்க்கணக்கு 71
6. சங்க நூல்களில் குரங்குகள் 81
7. சவிட்டு நாடகம் 87
8. அரப்பாவின் தமிழ்ப்பெயர் 94

பி. எல். சாமியின் **நூல் முகவுரைகள்** 105 - 160

பாராட்டுரைகள் (பகுதி -1) 161 - 183
இதழ்களில்... 184
புதுவைக் குரல் 185
வேளாங்கண்ணி குரலொலி 188
முகம் 200
நியூடைம்ஸ் அப்சர்வர் 205
மரியதாஸ் பிள்ளை - மதிப்பீடு 207
இண்டியன் எக்ஸ்பிரஸ் 209
இந்தியன் எக்ஸ்பிரஸ் 210
ஈழமும் ஸ்ரீலங்காவும் 211
அறிஞரின் நன்றியுள்ளம் 217
உரையாடல் :
அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி 220
பாராட்டுரைகள் (பகுதி - 2) 225 - 314

இரலை மான்



அறிஞரைப் போற்றுவோம்!

பதிப்புரை

சிந்தனை வளர்ப்போம்; சிறந்தோரைப் போற்று வோம். அறிஞர்களைப் போற்றாத நாடு முன்னேற முடியாது; அறிவை வளர்க்காத சமுதாயம் அடிமையாகும்.

பல பெருமைகள் கொண்டதென்று நம் நாட்டைப் புகழ்கிறோம். ஆனால் மனித சமுதாயத்துக்குப் பயன் படும் எந்த ஒரு பொருளையும் நாம் கண்டுபிடித்துக் கொடுக்க வில்லையே! பிற நாட்டார் முயன்று கண்டளிக்கும் பொருள்களையே நாம் வாங்கிப் பயன்படுத்தி வருகிறோம்.

நம் இந்தியர் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள், வசதிகள் அனைத்தும் நம் நாட்டு உருவாக்க மல்ல, பிற நாட்டாரின் கொடைகளே! எண்ணிப் பார்த்தால்...

குண்டூசி முதல்.. எழுதுபொருள் முதல்.. எல்லாமே எல்லாமே வெளியார் போட்ட பிச்சை! கையேந்திக் கையேந்தி வாங்கிப் பயன்படுத்தும் அத்தனைப் பொருள்களுமே அன்னியர் செய்தனுப்பியவை. அவை யெல்லாம் நம்மைப் பார்த்து எளனம் செய்வதை நாம் எப்பொழுதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? எப்பொழுது நாம் ஒரு புதிய பொருளை உருவாக்கப் போகிறோம்?

'இதோ என்னுடன் பிறந்தவன் கண்டு பிடித்த பொருள்! இதனை மனிதகுலம் முழுதும் பயன்படுத்தி மகிழ்கிறது!' என்று கூறத்தக்க நிலை நம்மிடம் உண்டா? இந்த நிலை எப்பொழுது உருவாகும்?

முன்னேற்றந்தரும் புதுமைகளை உருவாக்கும் மூளைபலம் அற்றவரா நாம்? எண்ணிப்பாருங்கள்.

தொண்ணூறு கோடிக்கு மேல் மக்கள் பெருக்க முடைய நம்நாடு, நோபல் பரிசு பெறுகின்ற பட்டியலில் பாருங்கள்! தேடுங்கள்; தெரிகிறதா?

மனிதக் கூட்டத்துக்கும் மகத்தான சாதனைகளுக்கும் ஓரிரு விழுக்காடாவது தொடர்பு இருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள். கோடிக்கு ஒருவராவது பீடுபுகழ் சேர்க்கக் கூடாதா?

வெட்கம் நம்மைப் பிடுங்கித் தின்கிறது. 'நம்மாலாவது ஒன்றுமில்லை; எல்லாம் அவன் செயல்! சும்மா இருப்பதே சுகம்!' என்று சோற்றுப்பிண்டங்களாகச் சோம்பிக் கிடக்கும் காலம் மாறுவது எப்போது?

சிந்தனை, செயல்! ஊக்கம், உழைப்பு, உயர்வு, நம்மால் ஆகும்! புதுமை புரிவோம் எனும் வேகம் தேவை, தேவை!

செயற்கரிய செய்யும் சீர்மை நோக்கம், புத்தெழுச்சி நம்மிடையே பொங்கி எழவேண்டும்!

நல்லது செய்வோரை நாளும் போற்றுவோம்! நாமும் ஏதாவது நன்மை செய்வோம் என்று எண்ணுவோம்! முயல்வோம், சிந்திப்போம், உழைப்போம்!

இத்தகு எண்ணங்கள் உருவாக இந்த நூல் உதவும் என்று நம்புகிறேன்.

புதுமை புரிந்தவரின் நினைவும் செயலும் நம்மை நிமிரச்செய்யட்டும்!

சிந்தனையாளரின் செயல்கள், சிறப்புகள், நம்மி டையே பாய்ந்து பரவட்டும்! புத்துணர்ச்சி தோன்றட்டும்! புதுமையை நாடுவோம், புதுமையை உருவாக்குவோம்!

இத்தகைய நம்பிக்கையை அறிஞர் பி.எல். சாமியின் சாதனைகள் நமக்கு ஊட்டும்! சிந்திப்போம்! சிறப்புறுவோம்!

1977 முதல் புதுவைப் புகழாளர் திருமுடி சேதுராமனார் தொடர்பு கிடைத்தது. பாகூர் புலவர் சு. குப்புசாமியால் ஏற்பட்ட பெருமை இது. திருமுடிப் பெருமகனார் அறிமுகத்தால் அறிஞர் பி.எல். சாமி அவர் களைச் சந்திக்கும் பேறுபெற்றேன். 'சங்கநூல்களில் மீன்கள்' எனும் அவரது படைப்பு எனது பதிப்பக வெளியீடாயிற்று.

அறிஞருடன் அமர்ந்து கருத்துக் கேட்பதும் உரையாடுவதும் எளிதல்ல; கடுமையானவர் என்பதை அவரது ஓரிரு சொற்களே காட்டிவிடும். எல்லோருடனும் எளிதாகப் பழகுவதற்கு நேரமும் அவருக்கு வாய்ப்பதில்லை.

என் பதிப்புமுறை அறிஞருக்குப் பிடித்ததை அவர் அன்புடன் பழகியதில் அறிந்தேன்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் முதலானவர்

களுடன் பழகியதும், அவர்களது அரிய சிந்தனைகளைப் புத்தகங்களாக வெளியிட்டதும் எனக்கிருந்த படிப் பார்வமும், தனிக் கருத்தும் பி.எல். சாமியவர்களுடன் உரையாட உதவியிருக்கலாம்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், உண்மையைத் தேடும் ஊக்கம், உழைப்பு; சான்றுகளைத் தேடுவதில் சலிப்பற்ற முயற்சி, பரந்து விரிந்த படிப்பறிவு, ஒப்பிட்டுக் காணும் அமைதிப் போக்கு, தேர்ந்த முடிவைத் திறமாகக் கூறும் நோக்கு, அடுக்கிக் காட்டும் அடிப்படைச் சான்றுகள், மொழி கடந்தும் நாடு கடந்தும் காலங்கள் கடந்தும் தேடித் திரட்டிய திறமான கருத்துகளின் கோவை.. இவை இவரது இயல்பு, உழைப்பு, சிறப்பு!...

உழைக்காமல் வெற்றியில்லை, ஊக்கமின்றி ஆக்கமில்லை; ஊண் உறக்கம் பார்போர்க்கு உயர்வே இல்லை.

நூல் கல்வி மட்டும் போதுமா? ஊர், காடு, வேலி, வரப்பு, மலை, ஆறு, கடல் ஓடிப் பார்த்து பலவகை மாந்தரோடும் பழகிப் பழகிப் பலவற்றைக் காணல், கேட்டறிதல், புது இடங்களைப் பார்க்கப் பயணம் செய்தல், பசி, களைப்பு, பாராமல் கள ஆய்வு செய்தல்... இத்தகைய முயற்சிகளும் உழைப்பும் சாமியவர்களிடம் நிரம்பியிருந்தன.

வெறும் புத்தகப் படிப்பு மட்டும் இருந்திருந்தால் இவரும் வெறும் எழுத்தாளராகவே இருந்திருப்பார். அறையிலிருந்தபடியே ஆராய்ந்திருந்தால் இவர் பெயர், அறைக்குள்ளேயே அடங்கிப்போயிருக்கும்.

இவர் இலக்கியவாதியவாகவும் இயற்கைவாதி யாகவும் இணைந்து வாழ்ந்தவர்.

'இவரைப் போல் எவர்?' என்னும் நிலையை ஏற்படுத்திச் சென்ற தனிப் புகழாளர். பி.எல். சாமி யவர்களால் புதுவை நிலம் மேலும் ஒரு பெருமை சேர்த்துக்கொண்டது. ஆனால் தமிழகமும் பிற வெளி யாரும் அறிந்த அளவு புதுவை அறிந்ததா என்பது ஐயமே!

இப்பெருமகனார் பற்றிய சிறப்பை விளக்கும் இத்திரட்டு நூல் நாட்டுக்கு உதவுமென நம்புகிறோம். மூதறிஞர் மறைந்த முப்பதாம் நாள் வெளிவருகிறது இந்நூல். குறுகிய காலத்தில் கேட்டவுடன் கருத்துருக் களை தந்துதவிய தமிழறிஞர் கட்குத் தலையாய அன்புடன் தலைதாழ்த்தி வணங்குகிறோம்.

அறிஞரின் இல்லத்திற்கு அடிக்கடி சென்று அவர் தந்த குறிப்புகளை எழுதிச் சேர்த்த, அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் இல்லத்தரசி மங்கள வதியார், லெனின், அறிஞரின் திருமகன் இளங்கோ, சாமியவர்களின் இளவல் பி. அருள்தாஸ் முதலியோர் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர் மறைந்த துயரச் செய்தியை முதலில் 'தினமலரில்' பெருஞ் செலவில் விளம்பரம் செய்து, இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கும் துணைநிற்கும் திருமுடி சேது. அசோக் அவர்கட்கும் நன்றி. தொகுப்பாசிரியரும் வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசனின் முயற்சி

உயர்ந்தது ; வெளியீட்டு விழாப் பணிக்கும் சேர்த்து நன்றி உரியது.

சிறந்த அறிஞரின் நினைவு என்றும் விளங்கிட வேண்டும், அவர்தம் சீரிய கருத்துகள் எல்லார்க்கும் தூண்டுகோலாக அமைய வேண்டும் என்ற நோக்குடன் இத் தொகுப்பு வெளியிடப் பெறுகிறது.

அறிஞரின் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் பாட நூலாகி மாணவர், ஆசிரியர் சார்ந்த கல்வியுலகில் புத்துணர்ச்சியும் புதுமை நோக்கும் மலர வேண்டும் என்பது எமது வேண்டுகோளாகும்.

தமிழுலகம் படித்துப் பயன்கொள்ளுமாக!

அன்புடன்,
வெள்ளையாம்பட்டு சுந்தரம்


பி.எல்.சாமி
சங்க இலக்கியத்தில்
அறிவியற்
கலை


சிந்துவெளி
எழுத்தோவியம்

தந்தையார்
ஆ. பெரியநாயக முதலியார்



10.10.1882 11.10.1950

தாயார்
கு. மரிய மதலேன்



1.4.1892 21.10.1976

பி.எல். சாமியின் பெற்றோர்

பி.எல். சாமியும் துணைவியார் மங்களவதியாரும்

பி.எல்.சாமியும் பன்மொழிப் புலவரும்



சாமியவர்களின் நூலை வெளியிட்டு வாழ்த்துகிறார்
தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம்.

மேடையில் பெருமக்கள்

அன்னை தெரசா - அறிஞர் சாமி

அலுவலகத்தில் பி.எல். சாமி, இ.ஆ.ப.,

புதுவை விடுதலைப் போராட்ட வீரருக்கான
தாமிரப் பட்டயம்

சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள்

தென்னிந்தியக் கல்வெட்டுகளை ஆரம்பத்தில் அறிவதற்கு முன்னோடியாக விளங்கும் **'சில முன்னாள் திருவிதாங்கூர் அரசர்கள்'** என்ற புத்தகத்தில், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள், தமிழில் கல்வெட்டுகள் பயன்படுத்தப்பட்ட வழக்காற்றினை ஆராய்ந்திருக்கிறார்.

எடுத்துக்காட்டாக, 'ஊரூட்டு' என்ற சொல், பெண் தெய்வங்களைப் பெருமைப்படுத்த எடுக்கும் கிராம விருந்து என்றும், அதன் மூலம் கண்ணகி திருப்தியடைந்தாள் என்றும் விவாதித்திருக்கிறார்.

'ஊட்டு' என்பது சங்க காலத்தில் இரத்தபலி என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளமை அகநானூறு 142ஆவது பாடலால் புலனாகும்.

இன்றும்கூட இச்சொல், காதர் போன்ற பழங்குடி மக்களிடையே பெண் தெய்வத்திற்கு அறுவடையின் முதல் பங்காக-நிவேதனமாக வழங்கும் 'கதிர் ஊட்டு' என்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தணப் புரோகிதர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படும் இடம், மலையாள மொழியில் 'ஊட்டுப்புரை' என்று வழங்கப்படுகிறது.

'பலி' என்ற வடமொழிச் சொல் தமிழில் 'ஊட்டு' என்ற மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. இதனைப் பழந்தமிழில் சில இடங்களில் காணவும் முடிகிறது.

கல்வெட்டுகளில் பயன்படுத்துகின்ற சொற்கள் புரிந்துகொள்ளக் கடினமாக இருப்பதோடல்லாமல் திருப்தியாக விளக்கவும் இயலாததாக இருக்கிறது.

கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கும் முழுமையான செய்திகள் எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதைச் சரியாக அறியவும், சில கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட உண்மையான பொருளைத் தெரிந்துகொள்ளவும் முதலில் முயற்சி செய்தவர் தென்னக அறிஞரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆவார்.

'பெருவுடையார்' என்ற சொல் கடவுளின் அபரி மிதமான என்று மொழி பெயர்க்கப் பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். ஆவணப்பதிவகம் என்ற பொருளில் 'ஆவணன் சேரி' என்ற சொல் 'ஆவனவன் சேரி' என்று படிக்கப்பெற்று 'ஒவ்வொருவருடைய குப்பம்' என்று விநோதமாக மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, திருவனந்தபுரம் பத்மனாப சுவாமி கோவில் கோபுரத்தின் தென்பக்கச் சுவரில், புரிந்துகொள்ளக் கடினமான **'ஒத்திரகடமை'** **'உவ்வி'**, **'வேய்நெல்'** போன்ற தீர்வையைக் குறிக்கும் பெயர்கள் காணக் கிடைப்பதாகக் குறிப்பிடுகிறார்.

ஆனால் 'ஒத்திர கடமை' என்ற சொல்லை, சேர மன்னர்களின் பா மாலையான பதிற்றுப் பத்தின் முடிவுரையில் காணக் கிடைக்கும் சொல்லைக் கொண்டு விளக்க முடியும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையால் குறிப்பிடப் பெற்ற 'ஒத்திர கடமை' என்ற சொல்லின் பொருளை, வேதகாலத்தில் பயன்படுத்தப்பெற்ற புனிதமான 'ஒத்திரநெல்' என்ற சொல்லின் சிறப்பைப் புரிந்து கொண்டால் நன்கு விளக்கமுடியும்.

'ஒத்திரபாடி' வளர்வதற்கான வரி என்ற பொருளில் 'ஒத்திர கடமை' என்று படிக்கப் பெறுதல் வேண்டும். மூங்கில் அரிசியைச் சேகரிப்பதற்கான தீர்வையை 'வேய்நெல்' என்ற சொல்லாக அதே கல்வெட்டில் கூறப்பட்டிருப்பதால் 'ஒத்திரகடமை' எனக்கொள்வதே சாலப் பொருந்தும்.

விளைந்தவுடனேயே உதிர்ந்துவிடுகிற, காட்டு இன வேதகால 'நீவாரா' நெல் 'ஒத்திர நெல்' ஆகும்.

சங்ககால அக்னி ஹோத்ரப் பிராமணர்கள்,உதிர்ந்த தானியத்தை நிலத்திலிருந்து திரட்டி ஆகுதிக்குப் பயன்படுத்தி வந்தார்கள். 'ஹோத்ரா' என்பது 'ஒத்திரம்' எனச் சங்கத் தமிழில் ஆகிவிட்டது.

'லோத்ரா' என்ற மரத்தின் பெயர் 'லோத்திரம்' என்று ஆகிச் சங்க காலச் செய்யுள் திரட்டான ஐங்குறு நூறு 301ஆவது பாடலில் 'வெல்லோத்திரம்' என மரத்தின் பெயராகக் காணப்படுகிறது.

'சேரமன்னன் செல்வக்கடுங்கோ வாழியாதன் திருமாலுக்கு அக்னிஹோத்ரம் செய்வதற்குத் தகுதியான நெல்லை விளைவிப்பதற்காக, ஒகண்டூர் என்ற கிராமத்தை தேவதானமாகக் கொடுத்தான்' என்று பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தின் முடிவுரை கூறுகிறது.

இவ்வின நெல் ஆகுதிக்குத் தகுதியான 'இராசனம்', 'இராஜஹம்ஸா' நெல்லாக இருக்கலாம் என்று சிறந்த தமிழறிஞரான உ.வே.சாமிநாதய்யர் கூறுகிறார். மேலும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இவ்வின நெல் ஆகுதிக்குப் பயன்படாத 'மின்மினி' இரகத்தைச் சார்ந்தது என்று கூறுவதாகவும் உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

ஆனால், இவ்வகை நெல் வேதத்தால் அக்னி ஹோத்ரம் செய்யத் தகுதியானதென்று ஏற்றுக் கொள்ளப்பட்ட 'நீவாரா' நெல்லைத் தவிர வேறொன்றுமில்லை.

இச்சொல் பயன்படுத்தப் பெற்ற சூழ்நிலையைத் துரதிர்ஷ்டவசமாகத் தமிழ் இலக்கியத்தின் சிறந்த உரையாசிரியரான நச்சினார்க்கினியரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஓர் இலட்சம் 'காணம்' நாணயங்கள் கொண்ட 'சிறுபுறம்' என்ற பணமுடிப்பைச் சேரமன்னன் கொடையாகக் கொடுத்தான் என்று அதே பதிகத்தில் சொல்லப்படுகிறது.

'சிறுபுறம்' என்பது 'புறவு' என்ற சங்கச் சொல்லின் பிற்கால வழக்கமாகும்.

மன்னனால் வேளாண்மைக்காக நிலம் கொடுக்க நிச்சயிக்கப்பட்ட தொகையே 'புறவு' எனப்படும்.

*பதிற்றுப்பத்தின் முடிவுரையாகக் காணப் பெறுபவை பிற்காலப் பாட்டுகளாகும். புறநானூற்றின் **149,179** ஆவது பாடல்கள் 'புறவுக்கடன்' என்ற நிலம் அளிக்கும் முறையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. 'புறவு' என்ற சொல் தொடக்கத்தில் 'ஆதரித்தல்' என்ற பொருளிலும் (பதிற்றுப்பத்து 18:9) பிறகு சங்க இலக்கியங்களில் 'பயிரிட உகந்த நிலம்' என்ற பொருளிலும் காணப்பெறுகின்றன.*

*'புறவு' என ஒரு சிறு கிராமம் வழங்கப்பட்ட விசேஷமுறை, புறநானூறு ஐந்தாவது பாட்டில் பயன்படுத்தப்பட்டிருப்பதை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'புறநானூறு' **279**ஆவது பாடல் உரைவிளக்கத்தில் மேற்கோளாக எடுத்துக்காட்டுகிறார். எனவே 'சிறுபுறம்','அறப்புறம்' என்ற குறிப்புகள் காணப்படுகின்றன.*

ஆனால், சங்க வழக்காற்றில் இடையின 'ர'கத்திற்குப் பதிலாக வல்லின 'ற' கரம் பயன்படுத்தப்பட்டது. இத் தவறான எழுத்துமுறை, கோயில் மடைப்பள்ளி செலவிற்காக வழங்கிய தர்மசொத்து என்ற பொருளில் அடுக்களைப் புறமாகவும், அமாவாசியன்றும் விழாவிற்கு வழங்கிய அமாவாசைப் புறமாகவும், கோயிலில் விழா எடுப்பதற்கு வழங்கிய தர்மசொத்து என்ற பொருளில் அம்பலப் புறமாகவும், பிற்காலக் கல்வெட்டுகளில் பார்க்க முடிகிறது.

*சங்ககாலத்தில் 'புறவு' என்பது வரி உள்ள நிலமாகக் குறிப்பிடப் பெற்ற போதிலும் பிற்காலக் கல்வெட்டுகளில் **வரியிலி** நிலம் எனப் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது.*

நிச்சயிக்கப் பெற்ற சிறு தொகையும், நிலவரியாகக் கொடுப்பதற்கேற்ற விளைச்சல் இல்லாத நிலத்தைப் 'புறவு' என்ற சொல்லால் 330ஆவது புறநானூற்றுப் பாடல் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அதே 'புறவு' என்ற சொல், தமிழ்நாட்டின் தென் பகுதியில் வறண்ட நிலம் என்ற பொருளில் வழக்காக உள்ளதைப் புறநானூறு 297ஆவது பாடலில் பயன்படுத்தப் பெற்றிருப்பதைக் காணலாம்.

பிற்காலக் கல்வெட்டுகளில் தீர்வைக் கணக்கு என்ற பொருளில் **'புரவரிப் பொத்தகம்'** எனச் சங்ககாலப் பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

'திணைக்களம்' என்ற சொல் கல்வெட்டுகளில் எவ்வாறு பயன்படுத்தப் படுகிறது என்பதைப் பற்றிப் பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறார். அவர்'புறவுவரித் திணைக்களம்' என்பதை நிலவரித்துறை எனக் கொள்கிறார்.

அதிகார பூர்வமான தமிழ்ச் சொல்லாக, ஈழத்தில் 'திணைக்களம்' என்ற சொல் இன்றும் அரசுத்துறைக்குப் பயன்படுத்துவதைக் காணவிந்தையாக இருக்கிறது.

பாண்டிச்சேரியிலும்கூட பிரெஞ்சு ஆட்சிகாலத்தில் வழக்கு மன்றம் 'விளக்கத்துறை' என அழைக்கப் பெற்றமை, பிற்காலக் கல்வெட்டு பயன்படுத்தப்பெற்ற முறையாவதோடு,இச்சொல் ஈழத்திலும் சமீபகாலம் வரை பயன்படுத்தப் பெற்று வந்துள்ளது.

பதிற்றுப்பத்தில் சாதாரண மக்கள் கூட்டம், கோயில் சுற்றுப்புறங்களில் உண்ணா நோன்பு (உபவாசம்)

இருக்கும் கூட்டம் 'உண்ணாப் பைஞ்நிலம்' என்ற சொற்றொடரால் இந் நூலின் நான்காம் பத்தில் அழைக்கப்படுகின்றது.

'பைந்நிலம்' என்ற சொல் உண்ணாநோன்பு நோற்கும் மக்களையும்,வாழைப் பழத்தையும் குறிப்பதால், சிலேடைச் சொல்லாக விளங்குகிறது. ஆகையால், உண்ணாப் பைந்நிலம் மறைமுகமாக, சாப்பிடாத வாழைப்பழத்தைக் குறிப்பதாகவும் கருதலாம்.

இன்றைய கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் உள்ள திருமாலுக்கு (விஷ்ணுவிற்கு) உபவாசம் இருக்கும் மக்கள் செய்யும் நோன்பு என இந்தப் பாட்டின் பழைய உரையில் உரை எழுதப்பட்டிருக்கிறது.

மணி அடித்து, நீராடி, உபவாசம் இருக்கும் மக்கள் கடவுளை வழிப்பட்டனர்.

மறைமுகமாக,சாப்பிடாத வாழைப்பழத்தைக் குறிக்கும் 'உண்ணாப் பைந்நிலம்' என்ற சொல்லினைப் பயன்படுத்தும் முறையில் விநோதமான புதிய ஒற்றுமை காணப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் முசிரிக்குக் கிழக்கே இருபத்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் 'திருப்பைநீலி' என்ற கிராமம் இருக்கிறது. இக்கிராமத்தில் அமைந்திருக்கும் சிவன்கோயில் சுற்றுப் புறத்தில் வாழைப்பழங்கள் பயிராகின்றன. அவை நிவேதனத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பிறகு வீசி எறியப்படுகின்றன. சாப்பிடக்கூடாத அந்த

வாழைப்பழத்தை எவராவது சாப்பிட்டால் தீராத வயிற்றுவலி வரும் என்று சொல்லப்படுகிறது.

பதிற்றுப்பத்தில் நேர் பொருளாக, உபவாசம் இருக்கும் மக்களையும், மறைபொருளாக வாழைப் பழத்தையும் குறிக்கும் 'திருபைஞ்ஞிலி' என்ற சொல்லாலேயே இக்கிராமம் அறியப்படுகிறது.

பைஞ்ஞிலம் என்ற சொல் 'திரிசொல்' என்பதற்கு உதாரணமாக, பன்னிரண்டு அல்லது பதிமூன்றாவது நூற்றாண்டின் தமிழ் இலக்கண நூலான யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோள் காட்டப் பெற்றிருக்கிறது.

தமிழில் ஒருசொல் இரு பொருளைக் கூறுமானால் அது 'திரிசொல்' எனப்படும். ஏறக்குறைய அது ஆங்கில மொழியின் சிலேடைபோல விளங்குகிறது. ஆகவே சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட 'பைஞ்ஞிலம்' என்ற பெயர் பதினொன்றாவது நூற்றாண்டிலிருந்தே அறிந்துகொள்ளபெற்றது.

திரு 'பைஞ்ஞிலி' கிராமத்தில் கடவுளுக்கு நிவேதனம் செய்து இப்போதும் சாப்பிடத்தடை விதிக்கப் பட்டிருக்கும். வாழைப்பழத்திற்குப் 'பைஞ்ஞிலம்' என்ற சொல்லைப் பயன்படுத்த முடியும். கடவுளுக்கு வாழைப்பழம் படையல் செய்யும் பழக்கம் சங்க காலத்திலேயே இருந்திருக்கலாமென்றும், படையல் செய்த பழத்தைச் சாப்பிடத் தடை விதித்திருந்த வழக்கம் அக் காலத்திலேயே இருந்ததெனவும் இதன் மூலம் ஊகிக்கலாம்.

கேரளக் கிராமங்களில் இன்றும் பகவதிக்கு வாழைப்பழம் படையல் செய்யப்படுகிறது.

ஏழாவது பாட்டின் முடிவுரையில் சொல்லப்பட்டிருக்கும் 'காணம்' என்ற துளையிட்ட காசினை நாணயத்தின் ஒரு பகுதியாகக் கருதலாம். 'காணம்' என்ற சொல் பிற்காலத் தமிழ் இலக்கியத்திலும், கல்வெட்டுகளிலும் காணப்படுவது மட்டுமல்லாமல் இன்றும் பிற்கால மலையாள மொழியில் பழமொழியாகவும் காணப்படுகிறது.

பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்து, சேரமன்னன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பெருமைப்படுத்த, கபிலர் என்ற பெருங்கவிஞரால் பாடப் பெற்றது ஆகும். கடுங்கோன் என்ற சொல், சேர மன்னனின் பெயராகக் காணப்படுவதைக் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டைச் சார்ந்த ‘தமிழ் பிராமி கல்வெட்டுகளிலிருந்து முதன் முதலாக ஐ. மகாதேவன் அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

சங்க இலக்கியத்தில் கூறப்பெற்றிருக்கும் மன்னர்களின்பெயரைத் தமிழ் பிராமி கல்வெட்டுகளின் சங்கேத வாசகத்திலிருந்து முதன் முதலில் சரியாக மொழி பெயர்த்த அறிஞர் ஐ. மகாதேவன் ஆவார்கள். இந்தக் கண்டுபிடிப்பால் சங்கஇலக்கியம் கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தது என நிரூபிக்கபட்டது.

'வாழியாதன்' என்ற மன்னன் பெயரில் பயன்படுத்தப் பெற்றிருக்கிற **வாழி** என்ற சொல் புதுமையான முறையில் பிற்காலக் கல்வெட்டுகளிலும்,

இலக்கியத்திலும் நிலைத்திருக்கிறது. இச்சொல் இன்றுகூட வட மலபாரில் மக்களால் பயன்படுத்தப் பெற்று நிலைபெற்றிருக்கிறது.

மன்னன் என்பதற்குரிய 'கோவாழி' என்ற கலைச் சொல்லை நாம் பல்லவர் கல்வெட்டுகளில் பார்க்கிறோம். சேர மன்னன் தாணுரவியின் பத்தாவது நூற்றாண்டுக் கல்வெட்டில் 'நாடு வாழ்தல்' என்ற சொல் அரசனைக் குறிக்கிறது. இச்சொல் பதிற்றுப்பத்தின் ஆறாம்பத்தின், 56ஆவது பாட்டில், அரசர்களுக்குத் தலைவன் என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்ற **'வாழ்ச்சி'** என்ற சொல்லைப் போன்றது.

இவ்வாறு பயன்படுத்தப்ப பெற்ற முறையின் சிறப்புத் தன்மை, இலக்கியப் பயன்பாட்டு முறையை அறியாத சாசன வல்லுநர்களால் கவனிக்கப்படவில்லை.

குறுநிலத் தலைவன் அல்லது கூட்டத் தலைவன் என்பது 'வாழி' என்ற சொல்லின் மூலப் பொருளாகும்.

சங்க காலத்தில் நன்னன், சேர மன்னனின் குறுநிலத் தலைவனாக இருந்து, பிறகு அரசனாக விளங்கினான்.

ஆனால் சேர மன்னன் நார்முடிச் சேரலால் தோற்கடிக்கப்பட்டு நன்னன் கொல்லப்பட்டான். ஏலிமலைப் பகுதியில் இருக்கும் எழில்மலையில் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பிறகும் நன்னன் குறுநிலத் தலைவன் என்ற பொருள் தரும் 'நாடுவாழி'யாக இன்றும் நினைக்கப் பெறுவதை என்னுடைய கள ஆய்வில் கண்டுள்ளேன்.

கள்ளர்களின் குறுநிலத் தலைவனான திருமங்கையாழ்வார், தலைவன் என்ற பொருள் தரும் 'குறையலூர் வாழி' என்று அறியப் பெறுகின்றார்.

மெக்கன்சி தன்னுடைய கையெழுத்துப் பிரதியில் வட மலபாரின் சிரக்கல் கோவிலகத்தை, 'குருவாழ்சா' என வழங்கும் முறையைப் பார்க்கலாம், என்று குறிப்பிடுகிறார்.

குருவாழ்சா என்பது சங்க காலப் பதிற்றுப் பத்தில் காணப் பெறும் 'வாழ்ச்சி' என்ற சொல்லைப் போன்றதாகும். வாழ்ச்சி என்ற சொல்லுக்குச் சிற்றரசன் அல்லது குறுநிலத் தலைவன் என்பது பொருளாகும்.

சங்ககால வழக்காறுகளை மலையாளமொழி அப்படியே தவறில்லாமல் தூய்மையோடு பாதுகாக்கின்றது. கடலால் சூழப்பட்டு, தனித்து விளங்குவதால், பழமையான சங்க முறைகளை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களும் பாதுகாக்கிறார்கள்.

பல்லவர்களுடையவும், மற்றையக் கல்வெட்டு களிலும் கிடைக்கும் 'கோவிஜயா' என்ற கலப்புச் சொல், கோவாழி என்ற சொல்லைப் போன்றதாகும். சங்ககாலச் சேரமன்னன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற பெயரில் 'கோவாழி' என்ற சொல் உள்ளது.

புறநானூறு 193ஆவது பாடலைப் பாடிய கவிஞரின் பெயர் 'ஒரு கலப்பை உழவன்' என்று பொருள்படும், 'ஓரேருழவன்' என்பதாகும்.

இவர் எழுதிய பாடல் தனி ஒரு மனிதன் தன் ஒரு கையால் சமவெளியில் ஓடுகிற மானைப் பிடிப்பது முடியாத காரியம் என்று குறிப்பிடுகின்றது. ஆனால் ஓர்

ஏரை உழுகின்ற பெயரில்லாத குடியானவனைப் பற்றிய எக்குறிப்பும் இக் கவிதையில் இல்லை.

கிராமத் தலைவன் தனக்குக் கிராமத்தாரால் கொடுக்கப்படும் அணா, பணா, இண்டணா முதலான வற்றைக் கொண்டு அனுபவிக்க வேண்டு மென்று மனு வடமொழியில் கூறியிருக்கிறார்.

ஆனால் பத்துக் கிராமங்களின் தலைவன் 'ஒரு குலா' அதாவது இரண்டு ஹலாவையும், இருபது கிராமங்களின் தலைவன், 'இரண்டுகுலா' வையும், நூறு கிராமங்களின் தலைவன் பத்து குலா'வையும், ஆயிரம் கிராமங்களின் தலைவன் 'நூறு குலா'வையும் முறையாக அனுபவிக்க வேண்டும்.

ஓர் ஏரால் ஓராண்டு உழக் கூடிய நிலத்தின் அளவு ஒரு 'ஹலா' ஆகும். பிராகிருதமும், வடமொழிச் சாசனங்களும் ஒரு கலப்பையின் நில அளவை 'நிவரத்தனா' என்றும், 'புட்டிகா' என்றும் குறிப்பிடுகின்றன.

'ஒரு கலப்பை நிலம்' என்பதைக் குறிப்பிட்ட அளவு நிலம் இரண்டு காளைகள் பூட்டிய ஒரு கலப்பையால், குறிப்பிட்ட காலத்தில் பயிரிடக் கூடியது என்று 'ஹலஸத ஸஹஸ்ரா' (நூறு ஆயிரம கலப்பைகள் நிலம்) என்ற சொல்லால் ஹிரிஹத ஹல்லிப் பல்லவர் செப்பேடு குறிப்பிடுகிறது.

'ஒரு கலப்பை உழவன்' என்ற கவிஞரின் பெயர், ஒரு கலப்பையால், கொடுக்கப்பட்ட கால அளவில் குறிப்பிட்ட அளவு நிலத்தை வேளாண்மை செய்பவன் என்று பொருள் தரும் சொல்லாகும். சங்க காலத்திலேயே

இருந்துவந்த இப்பயன்பாட்டு முறையையே பல்லவர்கள் கடைப்பிடித்தார்கள்.

பிற்காலத் தமிழ் அகராதி 'நிவர்த்தனம்' என்பது இருபத்து ஐந்திலிருந்து நூறு அல்லது இருநூற்று ஐம்பது சதுர முழம் என்றும் புட்டி (புட்டிகா) என்பது ஒன்றரை ஏக்கரிலிருந்து எட்டு ஏக்கர் என்றும் விளக்கம் தந்துள்ளது.

அறிஞர் எஸ்.சி.சிர்காரும் 'ஹலவாஸா' என்பதை நில அளவு என்று குறிப்பிடுகிறார்.

சாதாரண உழவனின் சொல்லான 'மாறு' என்பதற்கு, ஒரு காளை பூட்டிய ஒரு கலப்பையால் ஒரு நாளில் உழக் கூடிய நிலம் என **வின்ஸ்லோ**வின் நிகண்டு பொருள் தருகிறது.

சிறிய அளவு நிலத்தை இரண்டு காளைகள் பூட்டிய ஒரு கலப்பையால் ஒரு நாளில் உழும் உழவனை 'ஓரே ருழவனார்' எனத் தெளிவாகச் சங்க கால இக்கியம் கூறுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் இன்றும் ஓர் ஏரால் உழமுடிகிற நிலம் 'ஓர் ஏர் நிலம்' என்று அழைக்கப்படுகிறது. இந்நிலத்தின் பரப்பு சுமாராக ஏழு 'மா' என்கிற 2 1/3 ஏக்கர் என ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது.

சங்க கால வழக்காறு மற்றொரு வடிவத்தில் பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை இவ்வாறாக நிலைத்திருந்தது என்பதை இங்குச் சுட்டிக் காட்டலாம்.

சங்க காலத்திலும், பிற்காலத்திலும் 'ஓர்' என்பது அளவையின் ஒரு சிறிய அலகு என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்றது குறிப்பிடத்தக்கது ஆகும். 'ஓரடை' ஓரேடை' என்ற அளவைச் சொற்கள் நில அளவையின் சிறிய பகுதிக்குப் பயன்படுத்துகிற வழக்கத்தைப் பிற்காலத் தமிழ் அகராதிகள் எடுத்துக் காட்டாகக் கூறுகின்றன.

ஓரில் பிச்சையார் என்பதும் சங்கக் கவிஞருள் ஒருவரின் பெயராகும் (குறுந்தொகை 277). அச்சொல் இலக்கிய மரபில் ஒரு வீட்டுப் பிச்சைக்காரன் எனப் பொருள்படுகிறது. ஆனால் அப் பெயரை ஒரு வீட்டிலிருந்து மட்டும் வரையறுக்கப்பட்ட முறையிலே,பிச்சை எடுக்கும் பிச்சைக்காரன் என்று கூறியிருக்கலாம்.

ஒரு வீட்டிலிருந்து மட்டும் நெய்ச் சோற்றினை உணவாகப் பெற்ற ஞானி ஆதலால், **அறிவன்** என்ற சொல்லால் அழைக்கப் பெற்றுள்ளான். (எனவே அவன் ஒரு ஜைன பிட்சுவாக-பக்கிரியாக இருக்கலாம்.)

பாட்டில் பயன்படுத்தப் பெற்ற ஓரில் பிச்சையார் என்ற தொடராலேயே அப்பாட்டினைப் பாடிய கவிஞரும் ஓரில் பிச்சையார் என்று அழைக்கப்பெற்றுள்ளார்.

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கோபாலதேவன் என்ற பல்லவ மன்னன், ஹஸ்திபுர கன்னட கல்வெட்டுகளில் 'கோலகுப்பா', 'ஜீவஸி', 'கார்ஸபிண்டா', 'கெம்பகரோடம்' போன்ற வணிகப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

இப் பொருட்களின் பெயர்களை சங்கேத வாசகத்திலிருந்து மொழி பெயர்ப்பது கடினம் ஆகும். எனவே இக் கலைச் சொற்களுக்கு எந்தக் கல்வெட்டு நிபுணர்களும் விளக்கம் கொடுக்கவில்லை.

ஆனால் அதிர்ஷ்டவசமாக சங்க இலக்கியம் 'கம்பகரோடம்' என்ற சொல்லுக்கு விளக்கம் தருகிறது. சங்கப் பாடல்கள் (அகம்.1,136) கறோடன்' என்ற சொல்லுக்குப் பட்டைக் கல் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கலைஞன் என்று கூறுகின்றன.

வட மலபார் அரசனான நன்னனின் எழில் மலையிலும்,பழநிமலையிலும் பட்டைக் கற்கள் உற்பத்தி செய்யப் பெறுகின்றன. கிறிஸ்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பெற்ற குறைந்த மதிப்புள்ள கற்களாகக் 'குறந்தம்' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து 'கொறுண்டம்' என்ற சொல் பெறப்பட்டதாகும்.

தென் கன்னட அரசாங்க அறிக்கையும் இவ்வகைக் கற்கள் கிடைப்பதைக் குறிப்பிடுகிறது.

'கடன்டேல்' என்ற சிற்றூர் கன்னடத்தில் ஆரம்பத்தில் 'கடன்ட கல்லு' (அரவைக்கல்) என்று அறியப்படவும், பிற்காலத்தில் 'கடன்டேல்' என்று மருவியதாகவும் தோன்றுகிறது.

அரசாங்க அறிக்கையும் தென் கன்னடப் பகுதியில் சாதாரணமாகக் கூழாங்கல்லுடன் கலந்து வடிவமற்ற படிகங்களான கொறுண்டம் கற்கள் கிடைப்பதாகக் கூறுகிறது.

வடமலபார் குறுநிலத் தலைவனும், அரசனுமான நன்னன், தென் கன்னடப் பகுதியையும் ஆட்சி செய்தான்.

பெண்ணினத்திற்கு நன்னனால் இழைக்கப் பெற்ற அநீதிகள் சங்கப் பாடலான குறுந்தொகை 192ஆவது பாடலில் குறிப்பிடப்படுவது போல இப்போதும்கூட சமகால உள்ளூர் நாட்டுப்புறப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன.

பரம்பரைப் பழக்கங்கள் எளிதில் மறைவதில்லை. எனவே, பல்வேறு அறிவுத்துறைகளை இணைத்து ஆராய்ந்து பார்க்காமல் பாரம்பர்யத்தை எளிதில் புறக்கணிக்கவும் கூடாது.

நன்னனின் 'பாறம்' என்ற மலைப்பகுதியில் 'கொறுண்டம்' கற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அங்கு அவை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன என்பது அகநானூறு முதல் பாடலிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

வெள்ளைக் குந்தரிக்க மரத்திலிருந்து கிடைக்கும் ஒருவகைப் 'பயின்' என்ற பிசின் அல்லது அரக்கால் படிகத் துண்டுகள் ஒன்று சேர்க்கப்பட்டு, 'கொறுண்டம்' கற்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்று இப் பாடல் (அகம்.) குறிப்பிடுகிறது.

வாசமுள்ள மலருடைய மரம் என்று குறிஞ்சிப் பாட்டு இம் மரத்தைக் குறிப்பிடுகிறது. பட்டைக் கற்களின் இணைப்பு, இளம் காதலர்களின் பிணைப் பினைப் போன்றது. இளம் காதலர்களும் தங்களுடைய

பிணைப்பு துண்டுகள் ஒன்று சேர்க்கப் பெற்ற கொறுண்டம் கற்களின் பலத்தைப் போலத் தீவிரமாக இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள்.

கொறுண்டம் கற்கள் கறோடம் என்றும் அதனை உற்றத்திச் செய்பவனைக் 'கறோடன்' என்றும் சங்க இலக்கியம் கூறுகிறது. 'கெம்பகறோடம்' என்ற கன்னடச் சொல்லுக்கு சிவப்பு கறோடக்கல் என்று பொருள் கொள்ளலாம்.

தென் கன்னடப் பகுதி நன்னனுடைய ஆட்சிப் பகுதியாகவும், சேரர்களுடைய ஆட்சிப் பகுதியாகவும் சங்க காலத்தில் இருந்ததால் தமிழ் வணிகப் பெயர் 'கறோடம், கன்னடக் கல்வெட்டுகளில் பயன்படுத்தப் பெற்றது.

கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் இக் 'கறோடம்' கல் மேலைநாடுகளுக்கு எற்றுமதி செய்யப் பட்டதாகப் பிளினியும் கூறுகிறார் என்பது இங்குக் குறிப்பிடப்பட வேண்டும்.

'கோலகுப்பா' என்ற சொல்கூட, கோல குப்பை யாகவும் பிற்காலத் தமிழ் இலக்கண உரையிலிருந்து வணிகப் பொருளாகக் குறிப்பிடப் பெறும் 'கொள்ளு' என்றும் கொள்ளலாம். 'நெல் குப்பை' நெல் வாணிபத்தைக் குறிக்கிறது.

பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகள் பலவற்றிலுள்ள வழக்காறுகள் சங்க இலக்கியத்தின் அடியொற்றியே

வந்துள்ளன. அவைபற்றிய கல்வி பயன்தரக் கூடிய தாகவும், அறைகூவல் விடத் தக்கதாகவும் அமையும்.

பொதுவாகத் தமிழ்க் கல்வெட்டு வழக்காறு பல்லவர் காலத்தில் தொடங்கியது என்பது தவறாகும். ஏனென்றால், சங்க காலத்திலேயே இம் முறைகள் இருந்துள்ளன. அவற்றுள் சில பிற்காலத்தில் பல்லவர்களாலும், சோழர்களாலும், ஏன் விஜயநகர அரசர்களாலும்கூட எடுத்தாளப்பட்டன.

1.Professor T.v. Mahalingam- South Indian Polity.

2.Tamil-Brahmi Inscriptions-I.Mahadevan, Tamil Nadu Archaeological Society.

3.Machenzies Manuscripts-edited by T.V. Mahalingam, Madras University.

4.Dr.D.C.Sircar-Indian Epigraphical glossary.

5.Copper Plate inscriptions of Pallavas (Tamil)-Tamil Nadu Archaelogical Society.

பாகூர் ஜேஷ்டாதேவி

உக்கிரமான இறையம்சங்களைச் சாந்தப்படுத்துவது மிகப் பண்டைக்காலத்து வழக்கமாகும். ஜேஷ்டா தேவதையைத் திருவள்ளுவர் **மாமுகடி** என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜேஷ்டாதேவியை அலட்சுமி என்று அழைப்பர். முகடி, மோடி என்ற பெயர்களால் அழைப்பதும் உண்டு.

காடுகிழாள், காடுகாள் என்ற தாய்த் தெய்வம் எல்லா உயிர்களையும் பெற்றுப் பேணியதால், வயிறு பெரிதாக இருக்குமென்று கருதி மோடி என்று அழைத்தனர். இவ்வாறு தாய்த் தெய்வங்களுக்கு வயிற்றைப் பெரிதாகக் காட்டுவது பழங்கற்கால நாகரிகத்திலும், புதுக் கற்கால நாகரிகத்திலும் பல நாடுகளிலும் காணப்படுகின்றது.

தேவாரத்தில் கோடிக்கரையில் இருந்த மோடி என்ற **தாய்அம்சம்** பொருந்திய தெய்வம் குறிப்பிடப் பட்டுள்ளது. அதனால் **கோடிவனம்** என்னும் பெயரைப் பெண்கள் வைத்துக் கொள்கிறார்கள்.

ஜேஷ்டாதேவி சிலையிலும் பெரிய வயிறு காணப்படுகிறது. அதனால் ஜேஷ்டா தேவியை வள்ளுவர் 'முகடி' என்று அழைத்தார். நிகண்டுகளிலும் முகடி என்ற சொல் காணப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் கூறப்படும் காடுகிழாள், பழங்குடி மக்களின் தாய்த் தெய்வமாகும். இந்தக் காடு கிழாளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படையில், ''பைம்பூட் சேஎய் பயந்த மா மோட்டுத் துணங்கையஞ் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு'' என்று கூறியதைக் கவனிக்கவேண்டும்.

முருகனைப் பெரிய வயிறுடைய இறைவி பெற்றது கூறப்பட்டுள்ளது.

'காடுகெழு செல்விக்குப் பேய் கூறும் அல்லல் போல' என்று தொல்காப்பியத்தில் ஒரு பாடல் வரி மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப் படையில் முருகனைப் 'பழையோள் குழவி' என்று அழைத்ததைக் காணலாம். பழையோள் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையில், காடுகாள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

''காடுகிழாளென்பது இக்காலத்து காடுகாளென மருவிற்று. அவளும் இறைவனுடைய சக்தி" என்று எழுதியுள்ளார். இப்போது புகழ் பெற்று விளங்கும் முப்பாத்தம்மன் முதலிய அம்மன்கள் பழையோள் என்றழைக்கப்பட்ட பழங்குடி மக்களின் சக்தி தெய்வங்களாகும். தேவாரத்தில்,

> ''கையார் வளைக்கைக் காடுகாளோடு முடனாய்க்
> கொய்யார் பொழிற் கொடியே
> கோயில் கொண்டாயே''

என்று காடுகாளைப் பற்றிக் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

காடுகாள் வெயில் என்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. காடுகிழாள் என்ற பழையோளைக் காடுகாள் என்று சூடாமணி நிகண்டு கூறியுள்ளது. திருமுருகாற்றுப் படையில் வனதுர்க்கை யென்றும் கூறப்பட்டுள்ளது. இந்தத் தாய்த் தெய்வம் 'கானமர் செல்வி' என்று சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது.

''காடுகிழவோட்கு அரைத்திருந்த சாந்தை'' என்று யாப்பருங்கலவிருத்தி(93) மேற்கோள் கூறுகிறது. பரணி நட்சத்திரத்துக்குத், துர்க்கையின் ஆட்சிக்குட்பட்ட நட்சத்திரத்துக்கு- காடுகிழாள் என்ற பெயரைத் திவாகர நிகண்டு கூறியதும் கவனிக்கத் தக்கதாகும். ஆனால் காடு கிழாள் வெயில் என்று சூரியாஸ்தமனத்தில் தோன்றும் மஞ்சள் வெயிலைச் சிலப்பதிகாரம் (சிலம்பு. 4,5 உரை) கூறுவதையும் கவனிக்க வேண்டும்.

மாலைவெயில் மஞ்சள் நிற வெயில் என்று கருதியதை

''மாடும் கண்ணும் வாரவேளை
மஞ்சத் தண்ணி குடிக்கிறவேளை'' என்று,

''ஒருப் பட்டம் திருப்பட்டம் ஓடியா மங்கலம்'' என்றும் தொடங்குகிற சிறுவர்களுடைய நாட்டுப் பாடலில் காணலாம்.

இந்தக் காடுகிழாள் வெயிலைப் பற்றிய ஐதிக மரபை அடிப்படையாகக் கொண்டுதான் 'வெயிலுக் கந்தம்மன்' என்ற அம்மன் கோயில்கள் பிற்காலத்தில் தேன்றின.

சூரியாஸ்தமனத்தில் தோன்றும் மஞ்சள் வெயிலை அம்மன் உகந்தாள் என்ற செய்தியைச் சிலப்பதிகாரம்

கூறுகிறது. அந்த மரபில்தான் 'வெயிலுகந்தாள்' என்று அம்மனை இன்றும் வழிபடுவது வியப்புக்குரியதாக இருக்கிறது. காடுகாள் வெயில் என்ற சிலப்பதிகாரப் பெயர் மரபில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் 'வெயிலுக்கந்தாள்' என்று அம்மனைத் தெற்குத் தமிழகத்தில் அழைப்பதைக் காணலாம்.

திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு அருகிலும், திருப்பரங்குன்றம் கோயிலுக்கு அருகிலும் 'வெயிலுக் கந்தம்மனின்' சிறிய கோயில்கள் காணப்படுகின்றன. பழையோள் பெற்ற சிறுவனுக்கு, காடுகிழாள் பெற்ற முருகனுக்குப் பெரிய கோயில் பிற்காலத்தில் கட்டப் பட்டது. ஆனால் சங்க காலத்தில் திருச்சீரலைவாய் என்ற திருச்செந்தூரில் முருகனுக்குக் கோயில் இருந்தது. திருமுருகாற்றுப்படை பாடப்பட்ட காலமான ஆறு, ஏழாம் நூற்றாண்டில் திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு குகைக் கோயில் அமைக்கப்பட்டது. அதற்கு முன்னர் இல்லை.

முருகனைப் பெருந் தெய்வமாகப் பரவலாகத் தமிழகத்தில் தொழுதது பிற்காலத்தில்தான்.

''முருகனை மகனாய் வைத்தாய்'' என்று அப்பர் தேவாரம் கூறுகின்றது. அப்போது முருகன் சிவனின் பிள்ளையாகிவிட்டான். ஆனால் விநாயகன் சிவனுடைய பிள்ளையாக அப்பொழுது ஆகவில்லை. ஆதலின் சிறுதொண்டர் விநாயகனைச் சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டு வந்தார் என்று கருதுவது சரியானதாகும்.

முருகன் முதலில் காடுகிழாளின் சிறுவன். பின்னர் மும்மன்னர் ஆண்ட காலத்தில் கொற்றவையின் சிறுவன் ஆனான். அதற்குப் பிறகு சிவனுக்கும் காளிக்கும் சிறுவனானான். அதற்குப் பிறகு சிவனுக்கும் கார்த்திகை மகளிருக்கும் சிறுவனானான்.

ஜேஷ்டா தேவியின் கற்சிலை பல்லவர் காலத்தில்தான் முதலில் அமைக்கப்பட்டது. பாகூரில் பல்லவர்காலத்து ஜேஷ்டா தேவியின் பழைய சிலையைப் பார்க்கலாம். சப்தமாதர் கோயில் இருந்த இடத்தில் காணப்படுகிறது. தலையில் மகுடம் உள்ளது. கண்ணை மூடிக்கொண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். ''அம்மா, கண்ணைத் திற'' என்று ஜேஷ்டாதேவியை, தங்கள் துன்பத்திலிருந்து விடுபடக் கண்ணைத் திறந்து அனுக்கிரகிக்க வேண்டும் என்று பாமர மக்கள் வேண்டினர் என்பதில் ஐயமில்லை.

இலட்சுமி, அம்பாள் முதலிய தாய்த் தெய்வங்களின் சிலைகள் கண்ணை மூடிக் காண்பதில்லை. கண்ணை மூடி ஜேஷ்டாதேவி காணப்படும் செய்தியை ஆகமங்கள் கூறவில்லை. ஆதலின் சைவ ஆகமங்கள் இயற்றப் படுவதற்கு முன்னாலே இத் தெய்வத்தின் உருவம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆடை அணிகலன்கள் தொடையில் கணுக்காலுக்கு அடியில் தொங்குவதைக் கவனிக்க வேண்டும். இத்தகைய ஆடை அணிகலன்கள் பிற தாய்த் தெய்வங்களின் சிலைகளில் காணப் படவில்லை.

புதுவை மாநிலத்துக் கரிக்கலாம் பாக்கம் ஜேஷ்டாதேவி பாகூரில் காணப்படும் ஜேஷ்டாதேவிக்கு முந்தியதாகும். இது ஒரு குளக்கரையில் காணப்படுகிறது. பல்லவர் காலத்துப் பாகூர்க் கோயிலை ஒட்டியிருந்தது. போல் இல்லை.

கரிக்காலம்பாக்கம் ஜேஷ்டாதேவி குளத்துக்குப் பாதுகாப்பாக உள்ளது.

குளத்துக்குக் காவல் தெய்வமாக ஐயனார் சிலை இருப்பது பரவலான வழக்கம். இந்த ஜேஷ்டாதேவியைக் காளி யென்று பூஜை செய்கின்றனர். ஜேஷ்டாதேவிக்கு 'ஜலரூபிணி' என்ற பெயர் ஆகமங்களில் சொல்லப் பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாகக் கரிக்கலாம் பாக்கத்தில் உள்ள ஜேஷ்டாதேவிசிலை உள்ளது.. இதற்கு இரண்டு புராணக் கதைகளை இந்து ஆகமங்களை ஆராய்ந்து எழுதிய கோபிநாதராவ் கூறியுள்ளார்.

இலிங்க புராணத்தில் தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விஷம் முதலில் வந்தது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கு அடுத்து ஜேஷ்டாதேவி வெளிவந்தாள். ஜேஷ்டாதேவியைத் 'துஸ்ஸகா' என்ற பிராமணன் திருமணம் செய்து கொண்டான்.

அவள் விஷ்ணுவைப் பற்றியோ, சிவனைப் பற்றியோ, நல்லது செய்வது பற்றியோ கேட்டால், காதை மூடிக்கொள்வாளாம். காட்டில் கணவனான ரிஷி தவம் செய்தது ஜேஷ்டாதேவிக்குப் பிடிக்கவில்லையாம். அப்போது மார்க்கண்டேயர் வந்தாராம். அவருடைய

யோசனையைக் கணவன் கேட்டபோது, 'எங்கு எங்குத்துர்ச்சகுனமான சம்பவங்கள் நடக்கின்றனவோ, வார்த்தைகள் பேசப்படுகின்றனவோ அங்கு ஜேஷ்டா தேவியைக் காட்டில் காணலாம். பௌத்தர்களிடம் மற்றும் வைதிகம் இல்லாத இடங்களுக்கும் கூட்டிச் செல்லலாம்'' என்று கூறினாராம்.

பின்னர் ஜேஷ்டா தேவியின் கணவன், ''நான் ராசத்தாலம் லோகத்துக்குப் போகிறேன்'' என்று கூறி,தன் மனைவியான ஜேஷ்டா தேவியை ஒரு குளத்தின் அருகில் தங்கச் சொன்னாராம். பெண்கள் பலி தருவார்கள்,அதை உண்டு இருக்கலாம் என்று சொன்னாராம். கூடிய சீக்கிரம் வருகிறேன் என்ற அந்த ரிஷி 'ராசத்தாலம்' என்ற பாதாள லோகத்துக்குப் போவதற்குக் குளத்தில் மூழ்கினாராம். ஆனால் திரும்பவில்லையாம்.

அதிலிருந்து விஷ்ணு கொடுத்த வரத்தால் ஜேஷ்டா தேவி இங்கும் அங்கும் அலைந்து கொண்டும் கிராமத்தின் வெளியிலும் தங்கித் தனிமையாக வாழ்ந்தாளம்.

இவளையும் மற்றத் தெய்வங்களையும் துதிக்க வில்லையென விஷ்ணுவே அலட்சுமி தரும் துன்பத் திலிருந்து பாதுகாக்க, 'ருத்திர மந்திரத்தை' ஜபித்தாராம். ஆதலின் விஷ்ணு பக்தர்களும் பெண்களும் ஜேஷ்டா தேவிக்குப் பலி கொடுக்க வேண்டும் என்ற நியதி உண்டாகியதாம்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்ன வென்றால், ஜேஷ்டா தேவியைக் குளக்கரையில் விட்டுச் சென்றதால் குளக்கரையில் தன் கணவனுக்காகத் தேவி காத்திருந்த செய்தியாகும்.

இந்த ஆகமச் செய்தியை எடுத்துக் காட்டும் விதத்தில் கரிக்கலாம்பாக்கத்தில் ஜேஷ்டா தேவியின் சிலையைக் குளக்கரையில் இன்றும் காணலாம்.

பிராம்மண ரிஷி, ஜேஷ்டாதேவியைத் திருமணம் செய்ததை ஒட்டிப் பார்த்ததில் ஜேஷ்டா தேவி பழங்குடி மக்களின் 'மூதேவித் தாய்த் தெய்வம்' என்பதில் ஐயமில்லை. ஜேஷ்டாதேவியை 'ஜலமலி' என்று ஆகமம் கூறுவதும் கவனிக்கத் தக்கது.

ஜலத்தில் மூர்த்தீச்வரன் என்றும் அவன் ஜேஷ்டாதேவியின் கணவன் என்றும் ஆகமம் கூறுகிறது. ஜலரூபிணி என்று அழைப்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

ஜேஷ்டா தேவி, பழங்குடி மக்களின் தெய்வம் என்று கருதவேண்டியுள்ளது. பழங்குடி மக்கள் 'யட்சி' முதலிய துன்பம் தரும் தெய்வங்களைப் பயத்தினால் படைத்துத் தொழுதனர்; பலி தந்தனர். ஜேஷ்டாதேவியும் அத்தகைய தெய்வங்களில் ஒன்றாகும்.

நலம்தரும் தெய்வமான இலட்சுமி தோன்றிய பிறகு, பழந் தாய்த் தெய்வமான ஜேஷ்டா தேவியை இலட்சுமிக்கு மூத்தவள் என்ற பொருளில் **'தவ்வை'** என்று தமிழிலக்கியத்திலும் நிகண்டுகளிலும் அழைத்தனர். திருவள்ளுவரே 'தவ்வை' என்று கூறியுள்ளார்.

பிற்காலத்திய நிகண்டுகள், ஜேஷ்டாதேவியைக் கேட்டை என்று அழைத்தன. கேடு தருபவள் என்று பொருள். கேடு தரும் தூமகேதுவையும் கேட்டை நட்சத்திரம் என்று கூறியதைக் காணலாம்.

கேட்டை நட்சத்திரம் என்பது நிகண்டுகளில், கேடுவிளைக்கும் தூம கேதுவைக் குறிப்பதாகும். தூம கேதுவைப் பொதுமக்கள் 'துடைப்பக்கட்டை நட்சத்திரம்' என்று கூறுவர். பெருக்கும் துடைப்பம் போல் தொடங்கி விரிந்து காணப்படுவதால் அவ்வாறு கூறினர்.

தூமகேது, பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும்; அப்போது முடி மன்னர் மடிவர் என்பர். புறநானூற்றிலும், தூமம் பற்றிய குறிப்பு வருகிறது.

கேடு தருபவனைத் 'தூமை' என்று புதுச்சேரி வட்டாரங்களில் கூறும் வழக்கம் உள்ளது. தெள்ளாறு, கீழ்ப்பெரும்பாக்கம் முதலிய இடங்களில் உள்ள ஜேஷ்டாதேவி சிலைகளில் துடைப்பம் காணப்படுகிறது. சில இடங்களில் கழுதை வாகனமும் காணப்படுகின்றது.

அறிஞர் கோபிநாதராவ், உட்கார்ந்திருந்த பாணியில் இருந்த ஜேஷ்டா தேவியின் சிலைகளையே விளக்கியுள்ளார்.

ஆனால் பாகூரில் நின்ற நிலையில் ஜேஷ்டா தேவி சிலை உள்ளதைக் காணலாம்.

கரிக்கலாம்பாக்கம் ஜேஷ்டா தேவியின் கற்சிலை உருவத்தில் காக்கைக் கொடி காணப்படுகிறது.

நந்தி உருவத்தில் மகன் வலப்பக்கமாகவும், மகள் இடப் பக்கமாகவும் காட்டப்பட்டுள்ளது.

உட்கார்ந்த நிலையில் உள்ள ஜேஷ்டா தேவி பழையது என்று தெரிகின்றது. ஜேஷ்டாதேவிக்குக் கணவனும், மகனும், மகளும் ஆகம காலத்தில் ஏற்படுத்தியதாகும்.

திருப்பரங்குன்றத்து மலையில் ஜடிலவர்மனின் மனைவி திருப்பரங்குன்றத்தில் மலையை அகழ்ந்து சிவனுக்குக் கோயில் கட்டினாள். அதற்கு அருகில் ஜேஷ்டா தேவியின் சிற்பத்தையும் செய்து அமைத்தாள். இந்தச் செய்தியைக் கோபிநாத ராவ் எழுதியுள்ளார்.

இந்தக் கோயிலிலே ஜேஷ்டா தேவியின் சிற்பத்துக்குப் பக்கத்தில் காணப்பட்ட ஒரு கல்வெட்டில் இந்தச் செய்தி பொறிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

திருப்பரங்குன்றத்தில் கர்ப்பக்கிருகத்தில் இன்று காணப்படும் சிலை முருகனின் சிலை இல்லையென்றும் கூறுகிறார். ஜேஷ்டா தேவியின் சிலையை முருகன் என்று வழிபடுவதாகக் கூறுகிறார். பிற்காலத்தில் நடுவில் இருந்த ஜேஷ்டா தேவியின் சிலைக்கு ஆண்கள் அணியும் ஆடையை அணிவித்து முருகன் என்று போற்றியதாகக் கூறுகின்றார்.

சிவனின் மகனான நந்தியின் உருவத்தை நந்தி கேசுவரன் என்றும், ஜேஷ்டாதேவியின் மகளை வள்ளியாகவும் கருதினர் என்று அவர் கூறியுள்ளார். ஆனால் தேவயானை என்ற மனைவி அங்கு இல்லை. காக்கைக் கொடிக்கம்பத்தை மயில் கொடிக் கம்பம் என்று பூசாரி கூறியதையும் எழுதியுள்ளார்.

ஆகமங்கள் வடமொழியில் இருந்தாலும் அவை தமிழ்நாட்டுக் கோயில்களின் வழிபாட்டு முறைகளை முறையாக வடமொழியில் கூறியவையே என்று உணரவேண்டும்.

ஜேஷ்டா தேவி பழங்காலத்துத் தாய்த் தெய்வமாகும். இந்தத் தெய்வ வழிபாடு தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு இருந்திருக்கலாம்.

ஆகமங்கள் இயற்றப்பட்ட காலத்தில் தாய்த் தெய்வங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

தமிழிலக்கியத்தில் கூறப்படும் தெய்வங்களில் பழையோள், காடுகிழாள், கொற்றவை, முகடி, காளி, சப்தமாதர்கள், அம்பாள், இலக்குமி ஆகிய தாய்த் தெய்வங்களை வரிசைக்கிரமமாகக் கூறலாம். இந்தத் தாய்த் தெய்வங்களில் ஒன்றான பண்டைத் தாய்த் தெய்வங்களில் தவ்வை, மாமுகடி மூதேவி என்ற ஜேஷ்டாதேவியும் தமிழிலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

பருந்து உருவம் பொறித்த அரிய நாணயம்

'தினமலர்' நாளிதழ் ஆசிரியர் அறிஞர் இரா. கிருஷ்ணமூர்த்தி அரிதில் கண்டுபிடித்த சங்ககாலச் சோழரின் நாணயங்களில் பருந்துருவம் பொறித்த நாணயம், சில அம்சங்களில் மிக முக்கியமானதாகும். இந்த நாணயத்தில் யாகத் தூணான யூபத்தின் முன் பருந்தின் தலையும் கழுத்தும் காணப்படுகின்றன. இந்த நாணயம் கரிகாலனுடைய நாணயம் என்று கண்டு பிடித்துக் கூறியதும் பெரிய செய்தியாகும்.

'பருதி யுருவில் பல்புடைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்'' -புறம். 224

கருங்குளவாதனார் என்ற புலவர் சோழன் கரிகாற்வளத்தான் சிறப்பை நினைவுகூர்ந்து பாடியபோது அவன் செய்த வேள்வியைப் பற்றிப் புறநானூற்றில் (224) கூறியுள்ளார்.

பாட்டில், பருதி உருவிற் (வட்ட உருவில்) பல புடைப்புகளுடைய மதில்சூழ்ந்த வேள்விச் சாலை என்று கூறப்பட்டுள்ளது.

வேள்விக்குரிய சாலை (Altar)அமைப்பு பருந் துருவில் இருக்க வேண்டும் என்று சதப்பதப் பிராமணத்தில் கூறப்பட்டுள்ளது.

வடமொழியில் காணப்படும் சுல்வ சூத்திரங்களில் வேதவேள்விக்கு அமைக்கப்படும் செங்கல் கட்டிடம் பருந்துருவாகவும், கொக்குருவாகவும், தேரின் முன்பாக உருவாகவும், ஒருவகை முக்கோண உருவாகவும், இரண்டு முக்கோணங்கள் அடிமட்டத்தில் இணைந்தது போலவும், தேர் சக்கரம் போலவும், வட்ட அல்லது சதுரத் தொட்டி போலவும், ஆமை போலவும் அமைக்கப் படலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

முதலில் சொல்லப்பட்ட பருந்துருவ வேள்விச் சாலை அமைத்தவன் உயர்ந்த பலனான சொர்க்கத் திற்கு உடனே போவான் என்று சொல்லப்பட்டுள்ளது. மற்ற உருவில் அமைக்கப்பட்ட யாகசாலைக்குக் குறைந்த பலன்கள் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி இன்றைய அறிஞர்களிடையே சதப்பதப் பிராமணத்தில் கூறப்பட்ட செய்திகளும், சுல்வ சூத்திரத்தில் சொல்லப்பட்ட செய்திகளும் வேத காலத்தின் உண்மைநிலையைக் கூறவில்லை என்று கருதுகிறார்கள். ஏனெனில் வேதகாலத்தில் சுட்டசெங்கல் பயன் படுத்தப்பட்ட தேயில்லை.

ஆதலால் சில மூதறிஞர்கள் அரப்பா நாகரிகத் திலேயே அக்கினி வேள்விக்குச் சுட்ட செங்கல்லைப் பயன்படுத்திய அக்கினி வேள்விச்சாலை இருந்திருக்கும் என்று கருதுகிறார்கள்.

அதைப் பின்பற்றியே சதப்பதப் பிராமணம் முதலிய வடமொழி நூல்களில் செங்கல்லால் ஆன வேள்விச் சாலை கூறப்பட்டுள்ளது. அதற்கு 'அர்மா-அர்மகா'

என்று முற்பட்ட வடமொழி இலக்கியச் சொற்களுக்கு பர்ரோ அவர்கள், அண்மையில் கூறிய விளக்கம் உறுதிப் படுத்துகிறது என்றும் கூறியுள்ளனர்.

அது எப்படியாயினும் தக்காண முதுநிலைக் கல்விக்கழகத் தலைவர் எம்.கே. தவாலிக்கர், பண்டைய நகரமான கோசம்பியை அகழ்வாராய்ச்சி செய்தபோது கி.மு.41ஆம் ஆண்டிலிருந்து கி.மு.58ஆம் ஆண்டு வரை ஆண்ட,மித்ரா அரச வம்சத்தினர் கட்டிய வேள்விச் சாலை இருந்ததைக் கூறியுள்ளார்.

டேராடூனுக்கருகில் உள்ள **ஜகத்** என்ற கிராமத்தில் அகழ்வாராய்ச்சி செய்தபோது ஒரு வேள்விச் சாலை பருந்து உருவைப் போன்று செங்கற்களால் கட்டப் பட்டிருந்ததைக் கண்டு பிடித்தனர். இது அசுவமேதயாகம் செய்ததைக் காட்டுவதாகக் கூறினர்.

இந்தச் செய்தி எல்லாம் தக்காண உயர்கல்வி ஆராய்ச்சிக் கழகத்தின் 1973ஆம் ஆண்டுக்குரிய காலாண்டிதழில் வெளிவந்துள்ளது.

இந்தச் செய்திகளை வைத்துக் கொண்டு, சங்ககாலச் சோழரின் நாணயத்தை ஆராய்ந்து பார்த்தால், அதில் காணப்படும் பருந்துருவம் பருந்துருவாகச் செய்யப்பட்ட யாக சாலையைக் குறிப்பாக எடுத்துக் கொள்வதற்காகவே பொறிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

பருந்து வழக்கமாகப் பிணத்தைத் தின்று வாழ்வதன்று. எருவை என்பது பருந்தின் விசேடம் என்று பழைய உரையாசிரியர்கள் கூறினதும் கருதத்தக்கது.

நாணயத்தில் பொறிக்கப்பட்ட பறவையின் அலகில் பாம்பு நன்றாகத் தெரிவதால்,அது வேள்வியில் வரும் உயிர்ப்பலியைத் தின்பதல்ல என்பது தெளிவாகும். இங்கு அந்த உயிர்ப்பலியைத் தின்பது எருவை என்பது இந்தப் புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

எருவை உயிருடையவற்றைத் தின்னாது. ஆதலால் நாணயத்தில் பொறித்து இருப்பது பாம்பைத் தின்னும் கருடப்பருந்தே என்பது தெளிவாகும். உ.வே. சாமி நாதய்யர் பருந்து வடிவாகச் செய்ததற்கு 'கருடசயனம்' என்று அடிக்குறிப்பில் கூறியது மிகப் பொருத்த மானதாகும்.

இந்தப் புறநானூற்றுப் பாடலில் பருதி என்ற சொல்லிற்கு வட்டம் என்று பொருள் கூறப்பட்டி ருந்தாலும் அச்சொல் பருந்தையே குறிக்கலாம் என்று கருதவேண்டியுள்ளது. இதேகருத்தில் தான் உ.வே.சா. கருடசயனம் என்று அடிக்குறிப்பு எழுதினார் என ஊகிக்க வேண்டியுள்ளது.

யாகசாலை வட்டவடிவில் இருக்கவேண்டும் என்று வடமொழி நூல்களிலோ அகழ்வாராய்ச்சியிலோ காணப்படவில்லை.

இந்து மதத்தில் கருடப்பருந்தே புனிதமானது என்றும் கருதப்படுகின்றது. ஆதலின் யாகசாலையைக் குறிக்கும் பருந்து பிணத்தைத் தின்னும் கழுகான எருவை அன்று என்பதும் தெளிவு. யாகசாலை வடிவப் பருந்து, ஊர்களின் அருகில் சாதாரணமாகக் காணப்படும் கருடன் என்றழைக்கப்படும் பருந்தாகும்.

இந்த நாணயத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் இந்தியாவில் இதுவரை கிடைத்த எந்த நாணயத்திலும் பருந்துருவில் செய்யப்பட்ட வேள்விச்சாலைக் கட்டிட வரைபடமும், அதைக்குறிக்கப் பருந்துருவமும் பொறிக்கப் பட்டதாகவோ காணக் கிடைக்கவில்லை என்பதேயாகும்.



பாண்டிச்சேரியின் தொன்மைக்காலப் பெயர்

புதுவை என்று வழங்கும் பாண்டிச்சேரியின் உண்மைப் பெயர் என்ன, தொன்மைப் பெயர் என்ன, அதன் பெயர்க் காரணம் என்ன என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பெரும்பாலோர் புதுச்சேரி என்ற பெயரே 'பாண்டிச்சேரி' என்று பிரெஞ்சு மொழியில் அம்மொழிக்கேற்ற உச்சரிப்பு மரபால் மாறிற்று என்பர். எழுத்துப் பிழையாலும் மாறிற்றென்பர்.

சிலர், பாண்டிச்சேரியின் பண்டைப் பெயர் வேதபுரி என்று கூறுவர். ஆனால், வேதபுரி பண்டைப் பெயராக இருந்திருக்க முடியாது. ஆனந்தரங்கப்பிள்ளை வாழ்ந்த காலத்தில 'டூயூப்ளே'யின் மனைவியால் இடிக்கப்பட்ட வேதபுரீஸ்வரர் கோயில் இடைக்காலச் சோழர் காலத்துக் கோயிலாகும்.

பாண்டிச்சேரி கெஜட்டீரிஸ் புதுவையில் பண்டைக் காலத்தில் வேதரிஷி அகஸ்தியர் வாழ்ந்திருந்தார் என்றும், அதனால் வேதபுரி என்று வழங்கப்பட்டது என்றும் ஒரு கட்டுக்கதை சான்றாகக் கூறப்பட்டுள்ளது.

மற்றும் இப்போது அரவிந்தர் ஆசிரமம் இருக்கும் அதே இடத்தில்தான் பண்டை அகஸ்தியர் ஆசிரமம் முன்னர் இருந்தது என்றும் எழுதப்பட்டுள்ளது. எவ்வாறு

பண்டை அகஸ்தியர் ஆசிரமம் இருந்த இடத்தை இவ்வளவு துல்லியமாக, நுண்மாண் ஐமைபுலத்தால் கண்டுபிடித்தார்கள் என்பது வியப்பையும் நகைப்பையும் தருகின்றது.

அகஸ்தியர் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகையில் வாழ்ந்தவராகத்தான் தமிழ்ப்புராணச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் அதை வரலாற்று ஆசிரியர்கள் புராணச் செய்தி என்று ஒதுக்கிவிடுகின்றனர்.

செய்யாறு என்ற ஊரிலுள்ள திருவோத்தூர் சிவன் கோயில் கல்வெட்டில், அவ்வூர் 'வேதபுரி' என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அகத்தியர் கதை அதற்கு வழங்கவில்லை.

வேதபுரி என்ற பெயர் தமிழ்நாட்டில், வேறு சில ஊர் களுக்கும் கல்வெட்டில் வழங்கியுள்ளதைக் காணலாம். ஆதலின் வேதபுரி என்ற பெயரே பாண்டிச்சேரியின் பண்டைக்காலப் பெயர் என்பது அபத்தமானது.

அரிக்கமேடு அகழ்வாராய்ச்சிக்குப் பிறகு, பாண்டிச்சேரியின் பழைய பெயர் எது என்பதைப் பற்றி புதிய ஆராய்ச்சி தேவையாக உள்ளது.

புதுவைப் பிரெஞ்சிந்திய ஆராய்ச்சிக் கழகத்தில் தொல்லியல் துறையில் அலுவல் பார்த்த பட்டாபிராமன் அவர்கள், அரிக்கமேட்டில் கிடைத்த மட்பாண்ட ஓடுகளில் உள்ள எழுத்துகளால் 'பல ராம' என்ற பெயரும் அப்பெயருக்கு முன் 'யாது' என்ற குடிப்பெயரும் படிக்கப்பட்டுள்ளதாகப் பிரெஞ்சு மொழியில் எழுதிய நூலில் கூறியுள்ளார்.

'யாதவா பல ராம' என்ற பெயர் அரிக்கமேட்டுப் பானையோட்டில் காணப்படுவதால் அது வேளிர் ஊராய் இருந்தது தெளிவாகின்றது.

அரிக்கமேடு வீரையில் வாழ்ந்த வேளிர் பட்டின மாகச் சங்ககாலத்தில் இருந்ததையும் கூறியுள்ளார்.

இந்த எழுத்துகளை, பின்னர் ஐராவதம் மகாதேவன் வேறு விதமாகப் படித்துள்ளதாக என்னிடம் கூறினார்.

அரிக்கமேட்டின் பண்டைப் பெயர் 'வீரைவெளி' யாக இருக்கலாம் என்று பட்டாபிராமன் எழுதியுள்ளார். அரிக்கமேட்டிற்கு அருகில் கடற்கரைப்பட்டினமாக வீராம்பட்டினம் இருப்பதால் ஐராவதம் மகாதேவன் அவர்களும், பரிதிமாற் கலைஞர் நினைவுமலரில் அது சங்க கால வீரைவெளியாக இருக்கலாம் என்று எழுதியுள்ளார்.

'வீரை வேண்மாண் வெளியன் தித்தன்' என்ற பெயரில் ஒரு வேளிர் தலைவன் நற்றிணை 58ஆம் பாடலில் குறப்பிடப்பட்டுள்ளான். ஓரளவு அதே பெயரில் அகநானூறு 320ஆம் பாடலைப் பாடியவராக 'வீரை வெளியனார்' என்ற புலவர் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.

'அடுபோர் வேளிர்', 'வீரைமுன்றுறை' என்ற பெயர்கள் வீரைவெளியனார்' என்ற புலவர் பெயரையே குறிப்பிடுகின்றன.

'அடுபோர் வேளிர்' வீரை முன்றுறை' என்றும் அகநானூறு 206ஆம் பாடலில் குறிப்பிடுவதால் 'வீரை'

என்ற பெயரிலேயே ஒரு கடற்கரை ஊர் சங்ககாலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது.

வீரை என்ற சொற்கு, 'கடல்' என்ற பொருள் திவாகரம் முதலிய நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. வீரை என்ற சொல் கடல் என்ற பொருளில் சங்கநூல்களில் பயிலாவிட்டாலும், அச்சொல் சங்க காலத்தில் பயின்றிருக்கக்கூடும். ஏன் என்றால் அச்சொல் பிற்கால நூல்களில் எதிலும் அப்பொருளில் வழங்கவில்லை.

இடைக்காலக் கல்வெட்டுகளில் வணிகக் குழுக்களின் கடற்கரைப் பட்டினங்களை 'எறி வீரப் பட்டினம்' என்று அழைத்துள்ளதைக் காணலாம். சிலர் இப்பெயரை விளக்கும்போது வணிகக்குழுக்களைக் கொள்ளைக்காரர்களிடமிருந்து பாதுகாக்கப் பயன் படுத்திய வீரர்கள் இருந்த பட்டினமே எறிவீரப் பட்டினமாக இருக்கலாம் என்று கூறினர்.

வீரை என்ற பெயரில் வேறு சில ஊர்களும் தமிழ்நாட்டில் இருந்துள்ளன. சூடாமணி நிகண்டு எழுதிய மண்டல புருடர், 'பெருமண்டூர்' என்று இன்று அழைக் கப்படும் வீரை என்ற ஊரினர் என்று கூறப்பட்டுள்ளது.

திண்டிவனம் அருகே வீரணாமூர் உள்ளது. இவ்வூர்ப்பெயர் சுருக்கி வீரை ஆனதாகக் கூறுவர். இரு ஊர்களும் இன்றும் சைனர் முக்கியமாக வாழும் இடங்களாகும்.

பிரான் மலைக் கல்வெட்டில் சித்திரமேழி வணிகக் குழுவினரின் சாசனத்தில் பஞ்ச சதவீர சாசனம் என்று கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

நாநாதேசி ஐந்நூற்றுவர்களது சாசனம் வீரசாசனம் என்று அழைக்கப்பட்டுள்ளது.

ஆனால் ''வீரர்'' என்ற சொல் சங்க நூல்களில் போர்புரிபவர் என்ற பொருளில் வழங்கப்படவேயில்லை.

கடல் அலைகள் எறியும் பட்டினமே 'எறிவீரப் பட்டினம்' என்று வழங்கிப் பின்னர், அங்கு வீரர் தங்கியதால் 'எறிவீரர் பட்டினம்' என்று அழைக்கப் பட்டதாகத் தெரிகின்றது.

நீர் அலைகள் எறிவதைப் பற்றிச் சிந்தாமணி போன்ற தமிழ்நூல்கள் குறிப்பிட்டுள்ளன. சங்கப் பாடல்களின் கோவின் 'கரூர் எறிந்த' என்ற வழக்குகள் வருவதைக் காணலாம். இதில் எறிந்த என்ற சொல் போரில் கரூரை வென்ற பொருளில் வழங்கியிருந்ததைக் காண்கிறோம்.

அரிக்கமேட்டுக்குச் சங்க காலத்தில் 'வீரைப் பட்டினம்', 'வீரைவெளி' என்ற பெயர்கள் வழங்கியிருக்க வேண்டும். அரிக்கமேடு அழிந்த பின், அதற்கருகில் இப்போது கடற்கரையில் உள்ள ஊரை 'வீராம்பட்டினம்' என்று அழைத்தனர். வீரை வெளியன் தித்தன் என்ற பெயரில் வீரைவெளி என்ற ஊர்ப்பெயர் வருகின்றது.

வெளி என்ற பெயர்ச்சொல்லைப் பின்னொட்டுச் சொல்லாகக் கொண்ட ஊர்ப்பெயர்கள் புதுவை மாநிலத்தில் அரிக்கமேட்டைச் சுற்றி இன்றும் வழங்குவதைக் காணலாம். புதுச்சேரி மாநிலத்தில் மணல்வெளி, ஓடைவெளி, பாகூர்வெளி, ஏம்பலம்

வெளி என்ற பெயரில் ஊர்கள் இன்றும் உள்ளன. இத்தகைய ஊர்ப்பெயர் வழக்கு தமிழ்நாட்டில் கடற்கரை அருகே உள்ள ஊர்களுக்கு வழங்குவதாகத் தெரிய வில்லை.

அரிக்கமேட்டில் கி.பி.முதல் நூற்றாண்டுக்குரிய உரோமர் பண்டகசாலை இருந்திருப்பதால் அக்காலத்தைச் சேர்ந்த சங்க நூல்களில் அந்த ஊரின் பெயர் காணப்படலாம் என்று எதிர்பார்ப்பது இயற்கையானதே.

வட கேரளத்தில் கடற்கரை ஊர் ஒன்று வெளியம் என்று இன்றும் அழைக்கப்படுகின்றது.

'அடுபோர் வேளிர் முன்றுறை' என்று புறநானூறு குறிப்பிட்டிருப்பதால், அங்கிருந்த வேளிர் போர் வீரராக இருந்தது தெரிகின்றது. இதனாலும் இந்த ஊர் வீரர் பட்டினமாகக் கருதப்பட்டுப் பின்னர் வீராம் பட்டினமாக மாறியிருக்கலாம்.

புதுவை நகரில் 'வீரர்வெளி இளைஞர் சங்கம்' என்று பெயர் பொறிக்கப்பட்ட விளம்பரப் பலகையைப் பாரதித் தெருவில் பார்க்கலாம். ஆனால் அப்பலகை இருக்கும் இடத்திற்கே 'மீரா வெளி' என்று வழங்கின. பெயர் ஆனந்தரங்கம் பிள்ளை வாழ்ந்த காலத்தில் இருந்தது. அவரது நாட்குறிப்பிலிருந்தும், அக்காலத்திய நகரமைப்பு வரைபடத்திலிருந்தும் தெரிகின்றது.

அவ்விடத்தில் மீராவெளிப்பள்ளி என்ற பெயரில் முகம்மதியரின் மசூதி இருந்தது என்பதும் தெரிகிறது. புதுவை இளைஞர் சிலர் தங்களின் வீரத்தைப் பறைசாற்ற

வேண்டி மீராவெளியை வீரர் வெளி என்று மாற்றிவிட்டனர்.

வெளி என்ற இறுதி ஒட்டுச் சொல்லுடன் ஊர்களுக்குப் பெயரிடும் பழக்கம்,பிரெஞ்சுக்காரர் ஆண்டபோதும் புதுவை மாநிலத்தில் பழக்கமாக இருந்தது நன்கு தெரிகின்றது.

சங்கநூல்களில் (அகம். 72,73) ஒரு புலவர் பெயர் எருமை வெளியனார் என்று கூறப்பட்டுள்ளதையும் காணலாம். எருமை என்ற வேளிர் தலைவனுடன் சேர்ந்து ஏழு வேளிர் தலைவர்கள் போரிட்டுப் பாண்டியனிடம் தோல்வியுற்றது அகநானூற்றில் (36) கூறப்பட்டுள்ளது. எருமை என்ற பெயர் பிற்காலத்தில் மைசூர் என்று மாறிற்று என்று வரலாற்றறிஞர் கருதுவர். இந்த ஊரின் வெளி எருமை வெளி, என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

சங்க கால வீரைவெளியான அரிக்கமேடு, சங்க காலத்திலேயே ஆற்றுநீர் அரிப்பால் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்த பின்னர், அதை ஒட்டியே பிரெஞ்சுக்காரர்கள் ஏற்படுத்திய புதுச்சேரி என்ற துறைமுகப்பட்டினம் ஏற்பட்டிருக்கலாம். அதையே 'பொதுக்கே' என்று பெரிப்புளூஸ் என்ற கி.பி.முதல் நூற்றாண்டுக்குரிய அனாமதேய ஆசிரியர் நூலிலும், தாலமி எழுதிய கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்குரிய பூகோள நூலிலும் உச்சரிப்பு மாற்றத்துடன் அழைக்கப் பட்டதாகத் தெரிகிறது.

புதுச்சேரி என்ற பெயரே பிரெஞ்சுக்காரர் பாண்டிச்சேரியல் 18ஆம் நூற்றாண்டில் வணிக நிலையம் ஏற்படுத்தியபோது அப்போதிருந்தக் கடற்கரைத் துறை முகப் பகுதிக்கு வழங்கியிருக்க வேண்டும். அதுவே பிரெஞ்சுமொழியில் 'பாண்டிச்சேரி' என்று உச்சரிப்பில் மாற்றம் பெற்று வழங்கப்பட்டதாக தெரிகின்றது.

வீராவளிப்பட்டு என்ற பெயர் வீரைவெளியில் நெய்யப்பட்ட பட்டாக இருக்கவேண்டும்.

கேரளத்துக் கோயில்களில் காணப்படும் சுவர் ஓவியங்களில் ஒருவகை ஜியோமிதிக் கட்டங்கள் போட்டது போன்ற துணியை வெள்ளைத் துணியின் மேல் இடுப்பில் பூஜை சடங்குக்கு பூசாரிகள் கட்டுவதை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த வகை தனித்த வகைப் பட்டாடை கேரளத்தில் 'வீராளிப்பட்டு' என்று இன்றும் அழைக்கப்படுகின்றது. இது ஒரு பழம்பெருமை வாய்ந்ததும் தெய்வச் சடங்குக்குரியதும் ஆகிய புனிதத் துணியாகக் கேரளத்தில் கருதப்படுகின்றது. இதே துணி தெய்வச் சடங்குகளில் இன்றும் 'கோமரம்' என்ற இந்துமதச் சார்பில்லா பண்டைப் பூசாரியால் விசேஷமாகக் கேரளத்தில் அணியப் படுகின்றது. இத்துணி கோயில்களின் கருவறையில் தெய்வ உருவத்துக்குப் பின்னால் புகைப் புலனாகக் கேரளத்தில் வைக்கப்படுகின்றது.

இத்துணி கையால் நெய்யப்பட்டது. திரிக்கப் படாத நூலால் ஆனது. சூரத்தில் நெய்யப்பட்ட பிரசித்தி பெற்ற

கட்டங்கள் போட்ட 'படோலா' (PATOLA) என்ற துணி போல உள்ளது என்று அறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

இத்துணி முற்காலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் 18ஆம் நூற்றாண்டுவரை ஏற்றுமதி யானதாகச் சொல்லப்படுகிறது.

பிரான்மலைக் கல்வெட்டில் சித்ரமேழி வணிகக் குழுவினர் எல்லா நாடுகளிலும் ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் செய்யும் பொருள்களைக் கூறுமிடத்துக் 'கொள்கைப் பட்டு' கூறப்பட்டுள்ளது. அதுபோன்றே தமிழ்நாட்டில் இடைக்காலத்துக் கோயில் கல்வெட்டு களில் வணிகக் குழுக்களின் வணிகப் பொருள்களில் ஒன்றாகவே, 'வீராவளிப்பட்டு' கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். இப்பட்டு, சங்க காலத்திலேயே வீரை வெளியில் நெய்யப்பட்டிருக்க வேண்டும்.

பட்டு சங்ககாலத்திலேயே சீன நாட்டிலிருந்து தமிழகத்திற்குத் தரை வழியாக வடநாட்டிலிருந்து வந்ததாகப் பெரிப்புளூஸ் என்ற மேலைநாட்டுப் பயண நூலில் கூறப்பட்டுள்ளது.

கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்க, 'அடுபோர்வேளிர்கள் இருந்ததால், சங்க காலத்து வீரைவெளி பிற்காலத்தில் வீராம்பட்டினமாக மாறியதாகத் தெரிகின்றது.

அரிக்கமேட்டில் நாணயம் அச்சடிக்கும் சாலை இருந்ததாக அகழாராய்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்த நாணயங்கள் ரோமன் நாணயமாக

இருந்திருக்க வேண்டும். அவை எதுவும் கிடைக்க வில்லை என்று மார்ட்டிமர் வீலர் எழுதினார்.

அரிக்கமேட்டு அகழ்வில் உரோமர் நாணயங்கள் கிடைக்காததுபற்றிச் சிலர் வியப்படைந்தனர். ஆனால் அண்மையில் டெல்லி தேசிய அருங்காட்சியகத்திலும் பாரிஸ் அருங்காட்சியகத்திலும் அரிக்கமேட்டில் இருந்து சேர்க்கப்பட்ட பொருள்களை ஒரு மேலைநாட்டு அறிஞர் பெண்மணி ஆராய்ந்தபோது உரோம மன்னர் உருவம் பொறித்த காசுகளும் சோழரின் புலி உருவம் பொறித்த சங்ககாலக் காசில் ஒன்றும் கிடைத்துள்ளதாக சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் கே.வி. இராமன் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

அரிக்கமேட்டுத் துறைமுகம் வழியாகவும் மிளகு சங்க காலத்தில் ஏற்றுமதியாகி இருக்கவேண்டும் என்று கருத இடமுண்டு. வீலர் அவர்களும் அரிக்கமேட்டில் இருந்து மிளகு போன்ற வாசனைப் பொருட்கள் ஏற்றுமதி ஆகியிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுச்சேரி மாநிலத்தில் கலிதீர்த்தாள்குப்பம் என்ற ஊரில், நான் ஒருவரிடம் கண்ட சங்ககால உரோமப் பொன் நாணயத்தை 'மிளகுக் காசு' என்றழைத்ததை ஏற்கனவே தினமலரில் எழுதியுள்ளேன்.

பட்டினப்பாலையில் 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும்,' என்ற இரு வரிகள் (185-186) வருகின்றன. இவ்வரிகளுக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையில், நீரின் காலின் வந்த கருங்கறி மூடையும் என்று கொண்டு, **கடலிலே காற்றால்**

வந்த மிளகுப் பொதிகளும் என்று பொருள் கூறினார். ஆனால் நச்சினார்க்கினியர் இவ் விரு வரிகளையும் பிரித்துக் கொண்டு கூட்டிப் பொருள் கூறியது சரியல்ல.

185ஆம் வரி நீரில் கப்பல் வழியால் வந்த குதிரைகளும் 186ஆம் வரி காலில், அதாவது வண்டிகள் (சகடங்கள்)வழியாக வந்த மிளகுப் பொதிகளும் என்று ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளவேண்டும்.

கால் என்பது சிலப்பதிகாரத்தில் கலத்திலும் காலிலும்' (11:7) என்ற வரியில் சரக்கு கொண்டு வந்த வண்டிகளைக் குறித்து வழங்கியுள்ளது. கால் என்ற சொல் வண்டிச் சக்கரத்தையும், சக்கரமுடைய வண்டியையும் குறித்தது. **சகடக்கால் போல வரும்** என்று பிற்காலத்தில் நாலடி நானூறிலும் (2), புறநானூற்றுப் பாடலிலும் (102) குறிப்பதைக் காணலாம்.

கால் என்ற சொல் காற்றைக் குறித்துச் சங்கப் பாடல்களில் வழங்கினும் இடத்திற்கேற்ப இவ்விடத்தில் பொதி வண்டி என்று பொருள் கொள்ளவேண்டும். நீரின் வந்த நிமிர்பரி என்று கூறிய புலவர் அதே வரியில் கருங்கறி மூடையையும் இயல்பாகச் சேர்த்திருக்கலாம்.

அவ்வாறு பாடாது தனியாகக் காலின் வந்த கருக்கறிமூடையும் என்று நீரில் வந்த மிளகைக் கூறு வேண்டுவதில்லை.

'சிப்பூரா வீராளா' என்ற சிறந்த பட்டைப்பற்றி வடமொழி நூல் குறிப்பிடுகின்றது. ஆனால் அந்தப் பெயர் எக்காலத்தில் எழுதப்பட்டது என்பதைக் கூறவில்லை.

ஆனால் 'வீராளா' என்ற பெயர், வீராவெளி என்ற பெயருடன் ஒத்திருப்பதால், அது சங்க காலத்தில் வீரைவெளயில் நெய்யப்பட்ட பட்டையே குறித்துப் பிற்காலத்தில் வழங்கிய பெயராகக் கருத இடமுண்டு. இது மெல்லிய 'சாதா' துணி என்றும் டாக்டர் மோட்டி சந்திரா குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரத்திலே ஒரு வகை மெல்லிய மஸ்லின் துணி 'வங்கச் சாதர்' என்று அழைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஆதலின் வீராவெளிப்பட்டு மெல்லிய தாகவும் நேர்த்தியாகவும் செய்யப்பட்ட ஒரு வகை மஸ்லின் துணி என்று கருதவேண்டியுள்ளது.

கீழ்க்கணக்கு

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்ற வழக்கு 13, 14ஆம் நூற்றாண்டுகளில் வழங்கியதாக வையாபுரிப் பிள்ளை கருதினார். அவருடைய கொள்கைப்படி திருக்குறள் உள்ளிட்ட கீழ்க்கணக்கு நூல்கள் சங்க காலத்திற்குப் பிற்பட்டனவாகும். அதை மறுத்துக் கூறுவதன்று இக் கட்டுரையின் நோக்கம்.

கீழ்க்கணக்கு என்ற வழக்கு எப்படித் தோன்றிற்று என்று ஆராய்வதே இதன் நோக்கம்.

கணக்கு என்ற சொல்வழக்குச் சங்க காலத்திலேயே இருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமேயில்லை. கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய பாடல்கள் சங்க நூல்களில் உள்ளன.

கணக்கு என்ற சொல் 'கண்' எனும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்தது.

கண் என்ற சொல்லடியாகக் கிளைத்த பிற சொற் களையும் ஆராய்வது பயன்தரும்.

பண்டைக் காலத்தில் கணக்குத் தோன்றிய வரலாற்றில் பின்னிக்கிடக்கின்றது எழுத்துத் தோன்றிய வரலாறும்.

கண்ணெழுத்து என்றொரு எழுத்து வணிகரிடை வழங்கியதைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பண்டைய எகிப்து, சுமோ,சிந்துவெளி நாகரிகங்களை ஆராய்ந்த புதைபொருளாராய்ச்சியாளர்கள் வணிகரால், வணிகத்திற்காக வளர்க்கப்பட்டவையே கணக்கும், எழுத்தும் என்று கருதுகின்றார்.

அரப்பாவில் (Harappa)காணப்படும் விலங்குகள், மனிதர்கள், கடவுளர்கள் பொறித்த முத்திரைகள் வணிகர் தங்களுடைய பண்டங்களைப் பற்றிப் பிறருக்குத் தெரிவிக்க வணிக நோக்குடன் பயன்படுத்தியவை என்று ஸ்டூவர்ட் பிகாட்(Stuart Pigot)என்ற ஆராய்ச்சியாளர் ''வரலாற்றுக் காலத்திற்கு முந்திய இந்தியா'' (Pre historic India) என்ற நூலில் கூறியுள்ளார்.

அடையாளமாகப் பெயரும் உருவமும் பொறித்த சித்திரவெழுத்துகளே பின்னர் நெடுங்கணக்கெழுத்துகளாக மாறின என்றும் அவர் கருதுகிறார். இக் கொள்கைக்கு ஆதரவு தருவது போல் தமிழ் நூற்களில் சில செய்திகள் காணப்படுகின்றன. இதைப் பிறரும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

கண்ணெழுத்து என்ற எழுத்துமுறை வணிகர்களால் தங்களுடைய சரக்குகளின் அளவு, தன்மை முதலியவற்றைக் குறிக்கும் அடையாள எழுத்தாகப் பயன்படுத்தப் பட்டதென்றறிகிறோம். இந்த அடையாள எழுத்துச் சித்திரவெழுத்தாக இருந்ததென்றும் தெரிகின்றது.

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி''

என்ற சிலம்பு வரிகளில் வணிகர் பெயரும், கண்ணெழுத்தும் மூடைகளில் பொறிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும்,

"எய்யா வடவளத் திருபதி னாயிரம்
கண்ணெழுத்துப் படுத்த கைபுனை சகடம்"

என்ற வரிகளில் இருபதினாயிரம் வண்டிகளில் இருந்த வடபுலச் சரக்குகள் கண்ணெழுத்துப் பொறிக்கப்பட்டன வாயிருந்தன வென்றும் கூறப்பட்டுள்ளது.

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து ஏற்றின பண்டங்களெல்லாம் புலிப்பொறி வைத்து வரி விதிக்கப்பட்டன வென்றும் பட்டினப்பாலை கூறுகின்றது. கண்ணெழுத்தால் முடங்கல் தீட்டும் வழக்க மிருந்ததைக்,

"கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கலம் மன்னவர்க் களித்து"

என்ற வரிகள் காட்டும். உருவெழுத்து என்று வழங்குவதும் கண்ணெழுத்துப் போன்றதே.

"காணப்பட்ட உருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்"

என்ற சூத்திரத்தில் உருவெழுத்து விளக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்தை எழுதக் 'கண்ணெழுத்துக்கோல்' என்ற எழுதுகோல் இருந்ததாகவும் தெரிகிறது. ஓவியம் வரைபவரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று சிலப்பதிகாரம் கூறும்.

மற்றும் நாணய பரிசோதகரை 'வண்ணக்கண்' என்று அழைப்பதுமுண்டு. இதிலும் கண் என்ற சொல் பயிலுகின்றது. கண்ணுளர் என்று கூத்தரை மற்றோரிடத்தில் சிலப்பதிகாரம் கூறுகின்றது. கண் என்ற சொல் ஓவியம், கூத்து என்ற பொருள்களும் பெற்று வருகின்றது.

நோக்கினார் கண்ணில் தம் தொழிலை நிறுத்துவோர் என்று கண்ணுள் வினைஞர் என்ற சொற்கு நச்சினார்க்கினியர் பொருள் கூறுவார்.

"அன்றை யனைய வாகி யின்றுமெங்
கண்ணுள் போலச் சுழலு மாதோ"

"............ உண் கண
மணிவாழ் பாவை நடைகற் றன்னவெ
னணி யியற் குறுமக ளாடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே."

என்ற நற்றிணைப் பாடல்களில் கண்ணுள் நின்று நிலவுவதாக, சுழலுவதாகப் பழைய நிகழ்ச்சிகளைப் பற்றிச் செவிலித்தாய் கூறுகின்றாள். கண்ணுள் வினைஞர், கண்ணுளர் ஆகிய சொற்களும் நற்றிணைப் பாடலில் கூறுமுறை போன்றே தோன்றியிருக்க வேண்டும்.

கண் என்ற சொல் கணக்கு என்ற சொல்லில் நூலையும் இலக்கியத்தையும் குறித்துப் பொதுவாக வழங்கியிருக்கின்றது. நூலைச் சொல்லித் தருபவரான ஆசிரியர் கணக்காயர் எனப்பட்டார். கணக்கு என்பது எண்ணையும் எழுத்தையும் சேர்த்துக் குறித்தது. அதன்படி எண்ணும் எழுத்தும் கணக்கெனத்தகும்.

இக்காலத்தில் கணக்கெனில் எழுத்தைக் குறிக்கும். நெடுங்கணக்கென்றால் தன் எழுத்து வரிசையைக் குறிப்பதாக உணர்வர். கணக்கு என்ற சொல் கணிதத்தைக் குறிப்பதால் அதனின்றும் பிரித்துக் காட்டவே நெடுங் கணக்கென்று அழைத்ததாகத் தெரிகின்றது.

எழுத்து என்ற சொல்லே பண்டை நூல்களில் சித்திரத்தைக் குறித்து வழங்கியிருக்கின்றது. எழுத்து நிலை மண்டபம் என்று ஓவியம் வரைந்த மண்டபத்தைப் பரிபாடல் அழைக்கும். 'எழுது' என்ற வினைச் சொல்லும் சித்திரம் வரைதல்,அழகு செய்தல் என்ற பொருள்களில் பயின்றுள்ளது.

வட்டிகைச் செய்தி என்றால் ஓவச் செய்தி என்று பொருள்.

வட்டெழுத்து என்பதிலும் வட்டித்தல் என்ற சொல் வண்ணம் பூசுதல், சித்திரம் வரைதல் என்ற பொருளுடன் மறைந்திருக்கலா மென்ற ஐய மெழுகின்றது.

எழுத்து வரிசையைக் குறித்த நெடுங்கணக்கு என்ற வழக்கிருப்பினும், எண்வரிசையைக் குறிக்கும் 'குறுங் கணக்கு' என்ற வழக்கு இல்லை. கீழ்க்கணக்கு என்ற வழக்கோ நூற்களைக் குறித்து முதலில் மயிலை நாதருரையிலும் பேராசிரியர் உரையிலும் வழங்கி யிருக்கின்றது. பன்னிருபாட்டியியலிலும் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு ஆகியவற்றின் இலக்கணம் கூறப் பட்டுள்ளது. இனி, கிழ்க்கணக்கென்ற சொல் நூற்களைக் குறியாது ஏதோ ஒரு கணித முறையைக் குறித்து நாவுக்கரசர்

பாடலிலும் பட்டினத்தார் பாடலிலும் வழங்குவதைப் பிள்ளையவர்கள் காட்டியுள்ளார்,

"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே''.

என்று நாவுக்கரசர் நல்லவரையும் பொல்லாதவரையும் ஏதோ ஒரு கணக்கில் ஈசன் எழுதுவதாகக் கூறுகின்றார்.

"............... நின்
தமர் பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன்''

என்று பட்டினத்தடிகள் தம்பெயரைத் தமர்பெயரோடு வரிக்கணக்குப் புத்தகத்தில் சேர்த்தெழுதுமாறு இறைவனை வேண்டுகின்றார்.

இங்குக் கூறப்பட்ட கணக்கு, புத்தகம் என்பவை நிலவரிக் கணக்கு, நிலவரிக் கணக் கேறிய புத்தக மென்பதில் ஐயமில்லை. நிலத்தின் அளவு, தன்மை, வரி, உரியவர் ஆகியவை பற்றிக் கணக்கெழுதும்படி அரசர்கள் செய்வதுபோல் இறைவனும் கணக்கெழு துவதாகக் கற்பித்துக் கூறப்பட்டிருக்கின்றது. இம் முறையான கணக்கு ஊர்தோறும் அக் காலத்தில் வைக்கப்பட்டிருந்தது.

சோழ அரசர்கள் காலத்தில் நிலம் அடிக்கடி அளக்கப்பட்டு வந்தது. இஃது ஆங்கில நாட்டில் இருந்த Doomsday book போன்ற ஒரு வரிப் புத்தகத்தில் பதிவு

செய்யப்பட்டது. இந்த நிலவரிக் கணக்கு நிலத்தின் உரிமையாளர் பெயர், தன்மை, அளவு,வரி, இறையிலி முதலிய பல செய்திகளை உடையதாக இருந்திருக்க வேண்டும். இக்கணக்கும் தமிழ்நாட்டில் வழங்கிய இவ்வகை அளவையினால் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் வழங்கிய எண்ணளவை சிற்றிலக்கம் பேரிலக்கம் எனப்படும். சிற்றிலக்கத்தில் கீழ்வாயிலக்க மென்றும் மேல்வாயிலக்கமென்றும் இரு பிரிவுகள் இருந்தன. மிகச் சிறிய அளவைகள் கீழ்வாயிலக்கத்தில் தெரிவிக்கப்பட்டதெனத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் நிலங்கள் மிக நுட்பமாக அளக்கப்பட்டன. மிகச் சிறிய அளவுடைய நிலமும் விடப்படவில்லை..

"... ஆக இறையிலி நீங்கு நிலம்
முக்காலே இரண்டு மாக்காணி
அரைக்காணி முந்திரி
கைக்கீழ் அரை
இரண்டு மாமுக்காணிக் கீழ் முக்காலே நான்குமா
அரைக்காணி முந்திரிக்கீழ் நான்கு மாவினால்
இறை கட்டினக் காணிக்கடன்."

என்று சோழர் காலத்துக் கல்வெட்டுக் கூறுகின்றது. இதன் அளவு 1/32,428,800,000 வேலி என்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இவ்வளவு நுட்பமாக அளக்க அவர்கள் கீழ்வாயிலக்கத்தைப் பயன்படுத்தினர்.

மேற்காட்டிய கணக்கில் 'கீழ்' என்ற சொல் அடிக்கடி பயிலுவதைக் கவனிக்கவும். மிகச் சிறிய பின்ன எண்களைக் குறிக்கக் கீழ் என்ற அடைமொழியை அளவைகளுடன் சேர்த்துக்கொண்டதாகத் தெரிகின்றது.

கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் கீழ் முந்திரியாகும். இது 1/102,400 என்பதாகும்.

மற்றும் கீழரை 1/640, கீழ்க்கால் 1/1280,

கீழரைக்கால் 1/2560, கீழ்வீசம் 1/5120

என்று கீழ்வாயிலக்கம் சொல்லுகின்றது.

நிலங்கள் மிகச் சிறிய கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தில் அளக்கப்பட்டதாலும், இக் கணக்குகளில் 'கீழ்' என்ற சொல் பல தடவைகள் வருவதாலும் கீழ்க் கணக்கு என்ற பெயர் தோன்றிற்று. ஆதலின் நிலவரிக் கணக்குக் கீழ்க்கணக்கென' அழைக்கப் பட்டிருக்கலாம்.

அடி நிமிர்பில்லாச் செய்யுட்களை ஒப்புமை நோக்கிக் கீழ்க்கணக் கெனப் பெயரிட்டிருக்கலாம். பின்னர் அடிநிமிர்பான செய்யுட்களுக்கு மேற்கணக் கென்று பெயரிட்டிருப்பர்.

அடி குறைந்தவற்றைக் கீழ்க்கணக்கென்பதும் அடி நிமிர்ந்தவற்றை மேற் கணக்கென்பதும் இயற்கையாகத் தோன்றக்கூடியதே.

கீழ்க்கணக்கு என்ற கணக்குமுறையோடு ஒத்த வழக்காறு இந்தியக் கணித சாத்திரத்தில் இருப்பதாகத் தெரியவில்லை என்று வையாபுரிப்பிள்ளை கூறுகின்றார்.

ஆதலின் இது தமிழுக்கே உரித்தான,தனிக் கணக்கியல் முறையெனத் தெரிகின்றது.

அரப்பா நாகரிகத்தை ஆராய்ந்த ஸ்டூவர்ட் பாகாட் அரப்பாவில் வழங்கிய அளவைமுறை பதினாறின் மடங்காக இருந்ததைக் காட்டுகின்றார். 32, 64 என்று அளவைமுறை செல்வதைக் காட்டுகின்றார்; பதினாறின் மடங்காக வழங்கிய அளவுமுறை வேறுஎந்தப் பழைய நாகரிகங்களிலும் இருந்ததாகத் தெரியவில்லை என்றும் அவர் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

ஆதலின் இது சிந்துவெளிநாகரித்திற்கே உரித்தான அளவை முறை என்று தெளிவாகின்றது. ஆனால் இந்த அளவை முறை தமிழ்நாட்டு எண்ணளவை முறையுடன் ஒத்திருப்பது அவருக்குத் தெரியாது. கீழ்வாய்ச் சிற்றிலக்கங்களைக் கவனித்துப் பார்த்தால் அவை யெல்லாம் பதினாறின் மடங்காக இருப்பது தெரியும்.

சிந்துவெளியிலும் தமிழ்நாட்டிலும் ஒரேமுறை, எங்குமே காணப்படாத ஒரே அளவைமுறை, கணக்கியல் முறை வழங்கியிருப்பதை நோக்கும்போது அது நம்மை வியப்பிலாழ்த்துகின்றது. தமிழெழுத்துத் தோன்றிய வகையிலும் சிந்துவெளி மக்களுடன் தொடர்பு கண்டோம். கணக்கு முறையிலும் கி.மு.3000 ஆண்டு களுக்கு முற்பட்ட சிந்துவெளிமுறையோடு தொடர்பு காண்கின்றோம்.

கண்ணெழுத்தை எழுதியவர் கண்ணெழுத்தாளர் எனப்பட்டனர். அவரே பிற்காலத்தில் கணக்கர், கரணவர் எனப்பட்டாரென்றும் தெரிகின்றது.

எகிப்திய, சுமேரிய நாகரிகங்களில் தோன்றிய ஓவிய எழுத்துமுறை (Heiroglypic) அக்காலத்தில் மிகச் சிலருக்கே தெரிந்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

எகிப்திய நாட்டு வருமானத்தையும் செலவையும் கணக்கெழுதத் தோன்றிய எழுத்துமுறை சித்திரவெழுத்து முறையே என்றும் கூறுகின்றனர்.

சித்திர வெழுத்துமுறை தெரிந்த ஒருசிலர் பின்னர் ஒரு தனி அரசாங்க அலுவலகக் குழுவினராகவும், வகுப்பினராகவும் மாறினர். இந்த அலுவலர்களுக்கு அரசாங்க...

(கடைசிப் பகுதி கிடைக்கவில்லை)

சங்க நூல்களில் குரங்குகள்

சங்க நூல்களில் தமிழ்நாட்டில் காணப்படும் முக்கியமான மூன்று வகைக் குரங்குகள் கூறப்பட்டுள்ளன. அவை மந்தி, முசு, ஊகம் என்றழைக்கப்பட்டுள்ளன. நான்காவதாக மிகவும் அரிதாக நீலகிரிக்கருங்குரங்கும் கூறப்பட்டுள்ளது. அவற்றைப் பிரித்துக்காட்ட சரியான அடைமொழிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

குரங்காட்டிகள் கொண்டு வரும் குரங்கு முகத்தில் சிவப்பாய் இருக்கும். அதிலும் காடுகளில் வாழும் அக்குரங்குகளுக்கு முகம் நன்றாய்ச் சிவப்பாயிருக்கும்.

"கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை"

-நற்றிணை - 334

"அதவத் தீங்கனி யன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்க"

-நற்றிணை -95

மேலே காட்டிய நற்றிணைப் பாடல்களில் மந்திக்குரங்கின் செம்முகமும் அத்திப்பழம் போன்ற சிவந்த முகமும் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். இக் குரங்குகளை மந்தி என்றழைத்தனர்.

இக் குரங்கிற்கு வாயின் இருபக்கத்திலும் பைகள் உண்டு. இப் பைகள் உணவை நிறைய உண்டு அடக்கி வைத்துப் பின்னர் ஓய்வாக உண்ண உதவுகின்றன. வாயிற்காணும் பைகளைத் 'திரையணர் கொடுங்கவுள்' என்றொரு நற்றிணைப் பாடல் கூறுகின்றது. இந்தக் குரங்குதான் மக்களுடன் நெருங்கிப் பழகும் குணமுடைய தாகும். அதனால் அதைப் பிடித்து வளர்த்து விளையாட்டு காட்டுவர்.

சங்கநூல்களில் செம்முக மந்திக்கு அடுத்தபடியாக பல பாடல்களில் கூறப்படும் குரங்கு 'முசு' என்பதாகும். இக்குரங்கு இக்காலத்தில் 'முசுவா' என்றும், தெலுங்கில் 'குமுதமுசு' என்றும் பேச்சுவழக்கத்தில் அழைக்கப் படுகின்றது.

தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் இதைக் கொண்ட முசுரு என்று அழைப்பர். இக்குரங்கிற்கு முகம் கருப்புமை பூசினாற் போன்று இருக்கும். 'மைபட்டன்ன மாமுக முசுக்கலை என்று குறுந்தொகைப்பாடல் (121) கூறுகின்றது.

இதற்கு மெலிந்த உடலும் நீண்ட வாலும் கைகளும் உண்டு. பெரும்பாலும் காடுகளிலே மரங்களிலேயே காணப்படும். இக்குரங்கு திடீரென்று தோன்றும் ஓசைக்கும், ஒலிக்கும் மிகவும் பயப்படுமென்பதாக விலங்கு நூலார் கூறியுள்ளனர். இதை அகநானூறு (121) குறிப்பாகக் கூறியுள்ளது.

முசுக் குரங்குக் கூட்டத்தில் ஆண்குரங்குகள் பெரிதானவுடன் கூட்டத்திலிருந்து விரட்டி

விலக்கப்படும். அவ்வாறு விரட்டின ஆண்குரங்குகள் தனிக் கூட்டமாக வாழும். இதை அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆண்குரங்குகளின் கூட்டத்தைக் கணக்கலை என்றும் இனக்கலை என்றும் கலைக்கணம் என்றும் சங்கநூல்கள் அழைத்துள்ளன. கலை என்பது ஆண் குரங்கைக் குறிக்கும் பெயராகும்.

குரங்கு வகைகளிற் முசுவிற்கு அடுத்துச் சங்க நூல்களில் குறிப்பிடப்படும் குரங்கு ஊகம் என்பதாகும். செம்முகக் குரங்கையும், கருமுகக் குரங்கையும் கூறிய புலவர்கள், அவற்றினின்று பிரித்து ஊகக் குரங்கைக் காட்ட, 'நரைமுக ஊகம்' என்று விளக்கினர்.

தமிழ்நாட்டுக் காடுகளில் அடர்ந்த பகுதிகளில் கருமையான உடலுடன் முகத்தில் நீட்டிக் கொண் டிருக்கும் நரைத்த மயிர்க்கற்றையுடைய குரங்குகள் காணப்படுகின்றன.

ஊகக் குரங்குகள் உயர்ந்த மலைகளிலும் குன்று களின் உச்சியிலும் அடர்ந்த காடுகளிலும் காணப்பட்ட தாகச் சங்கநூல்கள் கூறும் செய்தி உண்மையானதே.

விலங்கு நூலாரும் ஊகக்குரங்குகள் 2000 முதல் 3000 அடி வரை உள்ள வெளிச்சமற்ற அடர்ந்த பசுங் காடுகளிலும் காணப்படும் என்று கூறுவர். 'இருள்தூங்கு இறுவரையில்' ஊகத்தைக் கலித்தொகை கூறியது போலவே விலங்கு நூலாரும் கூறுகின்றனர். In dimly lit dense forests சூழ்நிலையில் காண்பதாகக் கூறியுள்ளனர்.

இந்த ஊகக் குரங்கைப் பற்றி ஓர் அறிய செய்தியைச் சிறுபாணாற்றுப்படை கூறியுள்ளது.

'பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன'
என்ற உவமை வந்துள்ளது.

குரங்கு பாம்பைக் கண்டால் மிகவும் அஞ்சும். பாம்பை 'ப் பிடித்தால் அது கடித்தாலும் பயந்து கொண்டு விடாது. இதை ஹம்பியில் காணப்படும் ஒரு சிற்பம் காட்டியுள்ளது.

மலையாடு வாழும் சூழ்நிலையில் ஊகக் குரங்குகள் காணப்பட்டதாகப் புறநானூறு (383) கூறியுள்ளது. வரையாடு என்று அழைக்கப்படும் மலையாடு, நீலகிரி, ஆனைமலை முதலிய மலைகளில் காணப்படுகின்றன. அதே சூழ்நிலையில் ஊகக் குரங்கு காணப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

சங்கநூல்களில் அரிதாக, நான்காவது வேறொரு குரங்கையும் கூறியுள்ளனர். இதைப் பிற்காலத்து உரையாசிரியர்கள் புரிந்து கொள்ளாது மயங்கிப் பொருள் கூறினர்.

இந்தக் குரங்கு நீலகிரிக் கருங்குரங்காகும். தற்காலத்தில் கருங்குரங்கு லேகியம் என்று விற்கும் மருந்து, இந்தக் குரங்கின் இறைச்சியிலிருந்து தயார் செய்யப்படுவது. இக்காலத்தில் தமிழிலும் மலையாளத்தில் கடபமொழியிலும் பேச்சுவழக்கில் கருங்குரங்கு என்று குறிப்பிடுவது நீலகிரி கருங்குரங்கையே.

ஆனால் உரையாசிரியர்கள் ஊகத்திற்குக் கருங் குரங்கு என்று தவறுதலாகப் பொருள் கூறியுள்ளனர். (ஊகக்குரங்கு உடலில் கருமையானாலும் அதற்கு நரைமுகம் உண்டு. இது நீலகிரிக் குரங்கிற்கு இல்லை.

புறநானூற்றிலும் மலைபடுகடாத்திலும் நீலகிரி கருங்குரங்கு பற்றி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. அதாவது, இக் குரங்குகள் மலையில் காணும் தேனடையை அடையப் பாய்ந்தன; தேன் சொரிந்தது என்பதாகும்.

இவ்வாறு பாயும் குரங்கை ஓரி என்று அழைத் துள்ளனர். இப்பாடல்களில் ஓரி என்பது நீலகிரிக் குரங்கையே குறிக்கும்.

நீலகிரிக் கருங்குரங்கு, அதன் பளபளப்பான கருநிறத் தோலிற்காகவும் லேகியத்திற்காகவும் வேட்டை யாடப்பட்டு எண்ணிக்கையில் குறைந்துவிட்டது. நிகண்டுகளில் இதுவே 'கார்' என்று, முழுவதும் கருமை யானது என்ற பொருளில் அழைக்கப்பட்டுள்ளது.

சங்கநூல்களில் கருங்கலை என்று நீலகிரிக் கருங் குரங்கு அழைக்கப்பட்டுள்ளது. குறுந்தொகை 69ஆம் பாடலில் வரும் 'கருங்கண் தாக்கலை' என்ற பெயர் இதையே குறிப்பிடுவதாகத் தெரிகின்றது.

சங்க நூல்களில் மூன்றுவகைக் குரங்குகளைப் பற்றிச் செய்திகள் கூறியிருப்பினும் ஒரே பாடலில் மந்தி, முசு, ஊகம், ஓரி (நீலகிரிக்கருங் குரங்கு) ஆகிய நான்கு வகைக் குரங்குகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

மலைபடுகடாம் என்ற சங்கநூல், மலையையும் மலையைச் சார்ந்த காடுகளையும் ஆராய்ந்து அவற்றின் இயற்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டுவது போலப் பாடப்பட்டுள்ளது. ஆதலின், இதில் இந்த நான்கு வகைக் குரங்குகளையும் பற்றிக் கூறியது இயற்கையே.

முதலில் ஊகக் குரங்கும் (வரிகள் 207-208) அதற்கடுத்து, செம்முகக் குரங்கும் (236-237), அதற்குப் பிறகு முசுக்குரங்கும் (வரிகள் 292-293)

இறுதியில் நீலகிரிக் கருங்குரங்கும் (வரிகள் 524-525) கூறப்பட்டுள்ளன.



சவிட்டு நாடகம்

தெற்குக் கேரளத்தில் சில பகுதிகளில் தொழிலாளி களாகிய இலத்தீன் கிறித்தவர்கள் மத்தியில் இன்றும் சவிட்டு நாடகம் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நாடகம் தற்போது தெற்குக் கேரளாவில் நடைபெற்று வருகின்றது. சின்னத்தம்பி அண்ணாவி என்கிற தமிழர்தான் சவிட்டு நாடகத்தைக் கேரளத்துக்குக் கொண்டு சென்றார் என்பது மலையாளிகளிடையே இருந்துவரும் பொதுவான கருத்தாகும்.

மூன்று ராஜாக்கள் கூத்து என்ற சவிட்டு நாடகம்தான் பிரபலமான நாடகமாகும். மூன்று அரசர்கள் குழந்தை இயேசுவைக் காண வந்த நிகழ்ச்சிகளைத்தாம் இந்த நாடகத்தின் பாடல்கள் கூறுகின்றன. இந்த நாடகத்தை மூன்று நாட்கள் தொடர்ந்து நடத்துவார்கள்.

சவிட்டு நாடகத்தில் சில முக்கியமான அம்சங்கள் உள்ளன. இந் நாடகத்தில் பதினான்கு விதமான சவிட்டுகள் உண்டு என்று கூறுவர். சவிட்டுகள் என்பதை சுவடுகள் என்றும் சொல்வர்.

பாட்டும், சுவடுகள் வைத்தலும் ஒருங்கிணைந்து உருப்பெற்று ஒரு நாடகமாக நடத்தப்படுகின்றது.

சவிட்டு நாடகம் என்பது நாடக மேடையில் காலால் உதைத்து நசுக்குவதாக அபிநயம் கொண்டு செய்யும் நாடகம் ஆகும்.

சங்க காலத்தில் சவட்டி என்ற சொல் சிதைத்து, நசுக்கி, தறித்து என்னும் பொருள்களில் வந்துள்ளது.

சவட்டி என்பது தூய செந்தமிழ்ச் சொல்லாகும்.

"பஞ்சாய் கோரை பல்லிற் சவட்டி" என்று பெரும் பாணாற்றுப்படையின் 217ஆவது வரி கூறுகின்றது.

''வம்ப வடுகர் பைந்தலை சவட்டி'' என்று அகநானூறு 375ஆவது பாடல் கூறுகின்றது. சங்க காலத்திலேயே இச்சொல் வழங்கியுள்ளது.

இன்று கேரளத்தில் பயின்றுவரும் இந் நாடகத்தில், அரசனது சுவடுகளுக்கும், மந்திரியின் சுவடுகளுக்கும் வேறுபாடு உண்டு. பொல்லாத கதாபாத்திரங் களுக்கும், நல்ல கதாபாத்திரங்களுக்கும் சுவடுகளில் வேறுபாடு உண்டு.

மகளிருக்குரிய சுவடுகள் லலித மயமாக அமைந்துள்ளது.

இப்பொழுது கேரளத்தில் ஒருசில இடங்களில்தான் இந்த நாடகம் நடைபெற்று வருகின்றது. கேரளத்தில் துருத்திபுரம், கோதுருத்து, வள்ளிபுரம், கொச்சி முதலான ஊர்களில் இப்போதும் சவிட்டு நாடக ஆசிரியர்களும் கலை வல்லுநர்களும் உள்ளனர்.

இந்நாடகம் இலத்தீன் கிறித்தவத் தொழிலாளர் மத்தியில் மட்டுமே நிலைபெற்றுள்ளது.

இந்நாடகம் தற்போது கேரளத்தில் சிறுகச் சிறுக அழிந்து வருகின்றது. தமிழகத்தில் முற்றிலும் அழிந்து விட்டது என்று சொல்லலாம்.

பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் கேரளத்திற்கு வந்தபோது தங்களுடைய நாகரிகத்தையும், மொழியையும், மதத்தையும், கலைகளையும் அடிப் படையாகக்கொண்டு சவிட்டு நாடகத்தை இலத்தீன் கிறித்தவர்களிடையே உண்டாக்கினதாகத் தெரிகின்றது.

சிரியன் கிறித்தவர்கள் உயர்ந்த சாதியினரானதால் இந்த நாடகத்தை மதிப்பதில்லை

டென்மார்க்கில் நடைபெற்ற 'Passion Play' பாணியில் மேல்நாட்டு நடனத்தையும் சங்கீதத்தையும் அடிப்படை யாகக்கொண்டு ஒரு சவிட்டு நாடகம் நடத்தப்படுகின்றது. கத்தோலிக்கக் கிறித்தவர்களுக்கு, கூத்தம்பலங்களில் நாடகம் நடத்துவதற்கு அனுமதி கிடைக்காததால், போர்ச்சுக்கீசியர்களுடைய தூண்டுதலுடனும், உதவி யுடனும் சவிட்டு நாடகம் நடத்தப்பட் டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

இந்நாடகம் முற்றிலும் தமிழில் இருப்பதால் பதினாறாம் நூற்றாண்டில் தமிழ் கிறித்தவர்களாகிய கத்தோலிக்க மீனவர்களிடையே இந் நாடகம் நடத்தப் பட்டு வந்ததாகத் தெரிகின்றது. பிறகு தெற்குக் கேரளத்தில் பரவியுள்ளது.

மேல்நாட்டு நடன, தாள இசைக்கு இயைந்து உச்சக் கட்டக் காட்சியில், போர்ச்சுகீசியர் வாள் முதலிய

ஆயுதங் களையும் இந்நாடகத்தில் பயன்படுத்தப் படுவதைக் காணலாம்.

மேலும், மேலைநாட்டு இசை (Polyphonic music) முறையில்தான் பாடல்களெல்லாம் சவிட்டு நாடகத்தில் அமைந்துள்ளன. இந்த இசைகூட இலத்தீன் மொழியை அடிப்படையாகக் கொண்ட போர்ச்சுகீசிய, ஸ்பெயின் நாடுகளிலுள்ள இசைப்பாணியை ஒத்துள்ளது. ஓரளவு மேலைநாட்டு நாடக முறையாய் (opera போல) இருப்பினும் சில சவிட்டு நாடகங்களில் வரும் நிருத்தங்கள், சுவடுகள் எல்லாம் கர்நாடக சங்கீதத்தில் உள்ள தாளவட்டங்களுக்குட்பட்டே அமைந்துள்ளன.

சில சவிட்டு நாடகப் பாடல்களும் கர்நாடக சங்கீதத்தை ஒத்துள்ளன.

செந்தமிழில் அமைக்கப்பட்ட பாடல்கள் இலக்கண முறையுடன் அமைக்கப்பட்டவையாகக் கருத இடமுண்டு.

மத சம்பந்தமான ஒரு கலையாக மட்டும் அமையாமல் பொழுது போக்கிற்கும் இந்த நாடகம் அமைந்துள்ளது. ஐரோப்பிய கிறித்தவ மாமன்னர்களின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றிற்கு நாடகவடிவம் தந்து சவிட்டு நாடகங்கள் சில தோன்றின.

ஜெனோவா என்னும் நாடகம்தான் முதன்முதலில் நடிக்கப்பட்டது என்று கருதப்படுகின்றது. இந்த நாடகங்களைத் தொன்றுதொட்டுத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் நாடக ஆசிரியர்கள் இன்றும் உள்ளார்கள். ஆனால், அவர்கள் பா… வெளியிட முன் வருவதில்லை.

நாடக அரங்கேற்றத்தில் சில சடங்குகள் உண்டு. ஒரு நடிகன் அணியறையில் (Green or Make-up Room) நுழைந்ததும் முதலில் தன்னுடைய குருவிற்கு தட்சணை வைக்க வேண்டும். தட்சணை வைத்ததும் குரு அவனது நெற்றியில் சிலுவை அடையாளம் வைத்து நடிகனை அரங்கில் அறிமுகப்படுத்துவார்.

நாடகத்தில் வரும் அரசன் உரோமன் பாணியில் வேடம் புனைந்திருப்பான். ஆனால், அரசி வேடம் புனைந்திருப்பவளோ புடவையும், சோளியும் அணிந்து தலையில்மட்டும் ஒரு கிரீடம் அணிந்து காட்சி தருவாள்.

இப்போதும் வலியவீடன் அந்தோணிக்குட்டி போன்ற தமிழ் ஆசிரியர்கள் கேரளத்தில் இருக்கிறார்கள். இப்பவும்,

'காரல்மான்' (Charleman), 'அஞ்சேலிக்கா',

'பழைய (ஏற்பாடு) சூசை', 'ஆலேஸ்',

'எஸ்தாக்கியார்', 'கீவர்க்கீஸ்', 'மார்ட்டின்'

என்ற சவிட்டு நாடகங்கள் நடத்தப்படுகின்றன. சார்லெமன் நாடகமே முக்கியமான சவிட்டு நாடகமாகும்.

சவிட்டு நாடகத்து ஆசிரியர்கள் பெரும்பாலும் பணக்காரர்களாகவே இருந்துள்ளனர். இப்போது சவிட்டு நாடகங்கள் கேரளத்தில் புகழ்பெற்று இருக்குமிடம் பள்ளிபுரம்தான்.

கோவை மாவட்டத்தில் சவிட்டு நாடகங்கள் கருமத்தம்பட்டி, கோயில்பாளையம் ஆகிய ஊர்களில்

நடந்ததைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இங்கு நடத்தப்பட்ட சவிட்டு நாடகத்தை யூதர் வேடிக்கை என்ற பெயரில் பெரியசனி (Easter Saturday)அன்று இரவு Passion Play ஆக நடத்தப்பட்டது.

இப் பகுதியில் நடத்திய நாடகங்களில் 'ஆலேசியார்', 'எஸ்தாக்கியார்' என்னும் நாடகங்கள் முக்கியமானவையாகும். இந்த நாடகங்கள் முதலில் தெருக்கூத்தாக நடிக்கப்பட்டுப் பின்னர் சவிட்டு நாடகமானதாகத் தெரிகின்றது.

கோவை மாவட்டத்தில் அத்திக்கோடு முதலான ஊர்களில் பழைய நாடகங்கள் சிறிது காலத்திற்கு முன்னால் நடைபெற்றன. இதை மூன்று ராஜாக்கள் கூத்து என்று கூறுவர். இவையெல்லாம் பாட்டு வடிவத்திலேயே இருக்கும்.

தமிழிலுள்ள இந்த நாடகத்தின் சுவடிகள் அத்திக்கோடு என்ற ஊரிலும் கிடைக்குமெனத் தெரிகின்றது.

கோவை மாவட்டத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்ட இந் நாடகத்தில் நடித்த சிறப்பான பயிற்சி பெற்ற கலைஞர்கள் பலர் உத்தியோக அலுவல் காரணங்களால் சிதறிவிட்டதால் இந்நாடகம் சிறிது சிறிதாக மறைந்துவிட்டது.

சவிட்டு நாடகம், போர்ச்சுகீசியர்களால் மதம் மாற்றப்பட்ட இலத்தீன் கிறித்தவர்களிடையே மட்டும் காணப்படுகின்றது. மேல்நாட்டு நாடகக் கூறும்,

தமிழ்நாட்டு இசைக்கூறும் சவிட்டு நாடகத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

தென் கேரளத்தில் வழங்கும் சவிட்டு நாடகப் பாட்டுகள் எல்லாம் தமிழிலேயே, அதிலும் ஒருசில செந்தமிழிலேயும் உள்ளன.

மலையாள எழுத்தில் தமிழ்ப் பாடல்களை எழுதிப் படித்துப் பாடுகின்றார்கள்.

இந்த ஓலைச் சுவடிகளைத் தமிழக அரசு வாங்கினால் ஒரு பழங்கலையைக் காப்பாற்றியதாக அமையும்.

நாடகத்தைத் திரைப்படமாக எடுத்தால் இன்று அழிந்துபோகும் நிலையிலுள்ள ஒரு பழங்கலையைக் காப்பாற்றலாம்.

அரப்பாவின் தமிழ்ப் பெயர்

அறிஞர் ஐ. மகாதேவன் முதன் முதலில் அகத்தியர் என்ற பெயர் சிந்துநதி நாகரிகத்தில் காணப்படும் முத்திரைகளில் உள்ள பெயர் என்று உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தினரால் வெளியிடப்படும் தமிழியல் இதழில் (டிசம்பர், 1986) ஒரு கட்டுரையில் கருத்துத் தெரிவித்தார்.

அகத்தியர் என்ற பெயர் திராவிட மொழிப் பெயர் என்றும் அது வடமொழியில் புகுந்து அகஸ்தியர் என்று மாறிய தென்றும் தக்க காரணங்களோடு கூறியுள்ளார்.

மு.இராகவய்யங்கார் எழுதிய மிகச் சிறந்த ஆராய்ச்சி நூலான வேளிர் வரலாறு என்ற நூலில் முதன் முதலில் புறநானூற்று 201ஆம் பாடலில் இருங்கோவேள் வடபால் முனிவன் தடலில் தோன்றித் துவரையை ஆண்ட பரம்பரை வேளிருள் நாற்பத்தொன்பதாவது தலை முறையில் தோன்றியவன் என்று கூறப்பட்டுள்ளது.

வடபால் முனிவன் பெயர் புறநானூற்றில் கூறப் படாவிட்டாலும் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் (பாயிரம், பொருள் 3) அகத்தியரைப் பற்றிக் கூறிய கதையைக் குறிப்பிட்டுள்ளார்.

மேரு மலையில் கடவுளர் எல்லாம் கூடியிருந்ததால் மேருமலை தாழ்ந்ததென்று,அதைச் சரிப்படுத்த அகத்தியர் தெற்கே அனுப்பப்பட்டார் என்றும், அப்போது போகும் வழியில் துவராபதி (துவாரகை) சென்று நெடுமுடி அண்ணலின் சந்ததியாரையும், வேந்தரையும், பதினெண்வேளிரையும், அருவாளரையும் தென்னகத்திற்குக் கொண்டு வந்தார் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு வந்த வேளிரே காடு கொன்று நாடாக்கி உழவு செய்து வாழ்ந்த வேளிராவர் என்று கூறியுள்ளார்.

அகத்திய முனிவர் பொதியிலில் தங்கினார். மேருமலை தாழ்ந்தது. தென்றிசை உயர்ந்தது. அதைச் சரிப்படுத்த அகத்தியர் தென்னாடு போந்தார் என்ற கதைபோலப் புறநானூற்றுப் பாடல் 132 கூறியது நோக்கத்தக்கது. இதை யாரும் கண்டு கொள்ளவில்லை.

"வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஆய்குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே"

தென்றிசை ஆய்குடி இருந்ததால்தான் உலகம் தலைகீழாக மாறவில்லை என்ற புறநானூற்றுச் செய்தியையே கதையிலும் காண்கிறோம்.

ஆய்க்குரிய பொதியிலேயே அகத்தியர் தங்கினார் என்று கூறினதும் கவனிக்கத் தக்கது.

ஆய்க்குரிய புறநானூற்றுச் செய்தி அகத்தியர் கதையாகப் பிற்காலத்தில் மாற்றப்பட்டது தெரிகின்றது.

இந்த வேளிர் வழி வந்தவரே தற்காலத்தில் வேளாளர் எனப்படும் குடியினராவர்.

மு.இராகவய்யங்கார் வடநாட்டில் காணப்படும் வேளிர் பெயரில் வரும் பல ஊர்களையும் சாளுக்கியர், யாதவர், ஹொய்சளர், மைசூர் மன்னர்கள் ஆகிய குடிகள் யாதவர்களாகச் சொல்லிக் கொள்வதிலிருந்து வேளிரின் தொன்மை வரலாற்றை விளக்கியுள்ளார்.

புறநானூறு (200) கூறும் புலிகடிமால் பரம்பரையில் வந்ததாகக் கூறிக்கொள்வதான ஹொய்சள என்ற பெயர் கன்னடக் கதையொடு ஒத்துவருவதும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்தக் கதையை இரு புலிகளுடன் நின்று போரிடும் மாவீரனின் சிந்துவெளி நாகரிக முத்திரைகளிலிருந்தும் அது ஒப்ப இரண்டு சிங்கங்களுடன் போரிடும் 'கில்காமெஷ்' (Gilgamesh) சுமேரிய-பாபிலோனிய நாகரிக முத்திரைகளுடன் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒற்றுமையாகும்.

வடமொழியில் வசிஷ்டர், அகஸ்தியர் சாடியில் இருந்து தோன்றியதாக ரிக்வேதம் கூறுவதும், துரோணரும் கௌரவரும் அவ்வாறே சாடியில் இருந்து தோன்றியதாகக் கூறும் கதைகளையும், மகாதேவன் அவர்களே சாடியில் தோன்றிய வசிஷ்டர் போன்ற முனிவர்களின் கதைகள் அவர்கள் ஆரிய-திராவிட கலப்பில் உண்டானதைக் காட்டுகின்ற தென்பதைச் சுட்டிக் கூறினார்.

அதைத் தலைசிறந்த அகழ்வாராய்ச்சி மற்றும் வரலாற்றாசிரியரான எச்.டி. சங்காலியா அவர்களும் எடுத்துக் கூறியுள்ளார். இக்கருத்தை முதலில் எடுத்துக்

கூறியவர் இந்திய வரலாற்றை அறிவியல் நோக்கோடு முதல் முதல் ஆராய்ந்த கோசாம்பி ஆவார்.

ஐ.மகாதேவன் அவர்கள் மொகஞ்சதாரோ,அரப்பா, காலிபங்கன், லோத்தால் முதலிய அகழ்வுகளில் கிடைத்த முத்திரைகளில் சாடி உருவக் குறி எழுத்து மிகுதியாகக் காணப்படுவதைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சாடிக் குறியெழுத்து (Jar symbol) வேள்விக்குப் பயன்படுத்திய சாடியையே குறிக்கும் என்றும் அந்த வேள்வி செய்தவரே வேளிர் என்ற பூசாரி அரசர் (King Priests) என்றும் மகாதேவன் விளக்கியுள்ளார். இந்த முத்திரையில் சாடி வேளிரைக் குறிப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த வேள்கள் ஆண்ட தலைமை இடமான அரண்மனை ஒரு சதுரத்தில் ஒரு மூலையில் உள்ள சிறு சதுரத்தோடோ, அல்லது ஒரு முக்கோண சதுரத்தில் ஒரு மூலையில் உள்ள சிறு முக்கோண் சதுரத்தோடோ, அதே போன்ற நீண்ட வட்டத்தோடோ அரப்பா முத்திரைகளில் குறிக்கப்பட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குறியீடு கி.மு. 5000 நூற்றாண்டுக்கு முற்பட்ட எகிப்திய நாகரிகத்தில் காணப்படுகின்றது. இந்தக் குறியீட்டெழுத்தை அகம் என்றும் அகத்தி என்றும் மகாதேவன் படித்துள்ளார். அகத்தி என்ற பெயர் அகத்திய முனிவனான வேள் பூசாரியையும் குறித்தது என்றும் விளக்கியுள்ளார்.

அகத்தியர் என்ற பெயர் சிந்துவெளி முத்திரைகளில் இருக்கும் என்று முதலில் கூறியவர் சென்னை ராஜதானிக்

கல்லூரி முன்னாள் வரலாற்றுப் பேராசிரியரான டி.வி.நாயராவார். அவரே சண்டே ஸ்டாண்டர்டில் (ஜூலை 19, 1970) எழுதிய இரு கட்டுரைகளில், ஐ. மகாதேவன் அவருக்குப் பின்னர் முத்திரை எழுத்துக்களைப் படித்தபோது அகத்தியர் என்று படித்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

டி.ஜி.ஆராவமுதன் என்ற அறிஞர் ரிக் வேதத்தில் குறிப்பிட்டுள்ள 'ஹரியுப்யா'வே ஹரப்பா ஆகும் என்று எழுதியுள்ளார்.

ஹரப்பா போன்ற பெயர்கள் மேற்கு ஆசிய நாட்டுத் தொன்மை மொழிகளாக ஹுர்ரியன் (Hurrian) மொழியிலும் அசிரிய,பாபிலோனிய மொழிகளிலும் Arrapha/Arrapcha அர்ரபா/அர்ரப்சா என்று காணப்படுவதையும் பேராசிரியர் நாயர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரப்பா நாகரிகம் தென்மேற்கு ஆசிய் எலமைட், பாபிலோனிய,சுமேரிய நாகரிகங்களோடு நெருங்கிய தொடர்புடையது என்பது தெரிந்ததே.

நாயர் அவர்கள், அரப்பா என்ற பெயரைப் பதிற்றுப்பத்தில் பல்யானை செல்கெழு குட்டுவன் வென்ற 'அகப்பா' என்ற பெயரோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

அகப் பா என்ற சொல் கோட்டையையும் கோட்டையின் உள் வட்டத்தையும் குறிப்பதையும் கூறியுள்ளார். ஆனால், அகப்பா என்ற பெயருக்கும் அரப்பா என்ற பெயருக்கும் அவ்வளவு நெருங்கிய ஒலி ஒப்புமையைக் காண முடியவில்லை.

புறநானூறு 2ஆம் பாடலில் கபிலர், இருங் கோவேளை அவனுடைய முன்னோர் ஒருவன் மிகப் பழங்காலத்தில் கழாத்தலையார் என்ற புலவரை இகழ்ந்ததன் பயனாக அவனது தலைநகர் நடுநிலை அரையம் அழிந்தது பற்றிக் கூறியுள்ளார்.

புறநானூற்றில் மூன்று பாடல்களைப் பாடிய கழாத்தலையார் என்ற புலவர் கூறப்பட்டுள்ளார்.

புறநானூறு 202ஆம் பாடல் இருங்கோவேளின் முன்னோன் கழாத் தலையாரை இகழ்ந்ததாகக் கூறி யிருப்பதால் அந்தக் கழாத்தலையார் இருங் கோவேளின் முன்னோரின் மிக முற்பட்ட தொன்மைக் காலத்தவராக இருத்தல் வேண்டும்.

சங்ககால கழாத் தலையராக அவர் இருந்திருக்க முடியாது.

அந்த அரையம் பேரரையம், சிற்றரையம் என்று இரு பகுதிகளாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது. இந்த அரையமே அரப்பா என்பது தெரிகின்றது.

சிந்துவெளி நாகரிகத்தில் அரசமரம் அரசச் சின்னமாகத் தொழப்பட்டது.

மகாதேவன் முக்கியமாகக் கருதும் சாடிச் சின்னத்தையே ரஷ்ய அறிஞர்கள் நோரசோவ் போன்ற கணிப்பொறி ஆராய்ச்சியாளர், அரசமர இலையைக் குறித்ததாகக் கொண்டனர். அரசமரக் கிளையும் இலையும் பல சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்றன.

அரசச் சின்னமான அரை மரத்தின் (அரசமரம்) பெயரான 'அரையம்' என்ற பெயரே அரப்பாவின தொன்மைப் பெயரில் ஓர் அடிப்படைப் பகுதியாகும்.

அரையம் என்பது அரசனின் கோட்டையுடன் கூடிய தலைநகரம் மற்றும் நாடு என்ற பொருளில் 'அரைய அகப்பா' என்ற பெயரில் வழங்கியிருக்க வேண்டும்.

வேள்விக்குடி சாசனத்தில் 'பாவும் குறும்பும் முருக்கி' என்ற தொடர் வருகின்றது.

பாவென்பது பெரிய அரசனுடைய அரணுடைய நகரத்தையுடைய நாட்டையும், குறும்பு சிறிய அரணுடைய சிற்றரசர் நாட்டையும் குறிக்கும். கல்வெட்டில் கூறப்பட்ட 'பா' பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட அகப்பாவேயாகும். அதுவே அரையகப்பா, அரப்பா, ஹரப்பாவாகக் காலாவட்டத்தில் மாறியது.

ரிக் வேதத்தில் வரும் 'ஹரியுப்யா' என்ற சொல்லுக்கு ஒரு காரணப்பொருளும் கூறப்படவில்லை. ஆதலின் இப் பெயர் 'அரையப்பா' என்ற பொருளுடன் புணர்ந்த தமிழ்ப் பெயரிலிருந்து வந்ததாகும். அரையன் என்பது அரசன் என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது என்று பலர் கருதுவர். இது தவறு.

இது வேந்தனைக் குறிக்கும் அரையன் என்ற தூய திராவிடச் சொல்லுடன் ராஜன் என்ற வடமொழிச் சொல்லிற்கு ஒரோவழிக் காணப்பட்ட ஒற்றுமையால் வந்த குழப்பமேயாகும். இத்தகைய குழப்பத்தால்தான் அரையமரம் அரசமரமானது.

வடமொழியில் அஸ்வதம் என்றே இம்மரம் வழங்கப்பட்டுள்ளது.

அரை என்றே ஐங்குறுநூற்றில் இம்மரம் முதன் முதலில் குறிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் அரையால் என்று மலையாளத்தில் வழங்குகிறது. பிற திராவிட மொழிகளிலும் இம் மரத்திற்கு அரை என்று வேர்ச் சொல்லடியில் பெயர்கள் வழங்குகின்றன.

இந்திய அரசர் பலரது புராதன நாணயங்களில் உஜ்ஜையின் சின்னம் இருக்கின்றது. இது அரசனின் அதிகார நிலையைக் குறித்ததாகும். இச் சின்னத்தில், வேதிகையில் உள்ளே அரசமரமே காணப்படுகிறது. ஆதலின் சிந்துவெளி நாகரிகத்தில் காணப்பட்ட அரசச் சின்னமான அரசமரத்தின் பெயரால் அமைந்த கோட்டையுடன் கூடிய நாடே 'அரையகப்பா' •என்றழைக்கப்பட்டது.

அரப்பா, லோத்தால் முதலிய சிந்துவெளி நாகரிக ஊர்களில் பூசாரி அரசர்கள் தலைமைகொண்டு ஆண்ட அரண் அல்லது கோட்டை (Gitadel) ஒரு பகுதியாகவும் பொதுமக்கள் வாழ்ந்த வீடுகள் இருந்த இடம் இன்னொரு பகுதியாகவும் இருந்தது சிந்துவெளி அகழாராய்ச்சியில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

அது போன்றே பேரரையம், சிற்றரையம் என்று அரையம் இரு பகுதிகளாக இருந்தது புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிந்தாமணியிலும் அரசனது தலைநகர் அகநகர், புறநகர் என்று பிரிக்கப்பட்டுள்ளது. அரண்மனையும் கடவுளின் கோயிலும் அகநகரில் கூறப்பட்டுள்ளன.

புறநானூறு 202ஆம் பாடலிலும் புலிகடிமால் வழிவந்த அரசனான இருங்கேவேள் கூறப்பட்டுள்ளான். 'சிற்றரையம்,பேரரையம் என்ற இரு கூற்றாற் பெயர் பெற்ற உட்குபொருந்திய பழைய ஊரின்கட் பல கோடியாக அடுக்கப்பட்ட பொன் நுங்களுக்கு உதவிய நீடிய நிலைமை யுடைய அரையத்தின் கேட்டை' என்று பழைய உரை கூறப்பட்டதையும் காணலாம்.

நீடுநிலை யரையம் என்றதால், நீடித்த நாகரிக முடையது என்பது தெரிகின்றது.

சிந்தாமணியில் (1119) 'நீன்மைக்கணின்று வைத்த நிதி' என்பதற்குத் தொன்றுதொட்டு வந்த பொருள் என்று உரை கூறப்பட்டிருப்பது காணலாம்.

அரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களின் செல்வச் செழிப்பையும் அது திடீரென்று அழிந்ததையும் புறப்பாட்டு கூறியிருப்பதால் இச்செய்தி புறநானூற்றில் பொதித்துள்ள அரிய பெரிய பரம்பரை வரலாற்றுச் செய்தியாகும் என்று உணர வேண்டும். இது நீடு வந்து நிலைத்து இன நினைவாற்றலைக் (Racial memory) காட்டுகின்றது.

அரசன் என்ற சொல்லை டாக்டர் எமனோ மற்றும் பர்ரோ அவர்கள் 1961இல் ஆயிரம், ஓச்சன் ஆகிய சொற்களுடன் திராவிட வேர்ச்சொற் கோவையில்

வடமொழிச் சொற்களோடு ஒத்து நோக்கத்தக்கவை என்ற குறிப்பொடு சேர்த்திருந்தார்கள்.

ஆனால், 1962இல் இந்தோ-ஆரிய மொழியிலிருந்து வந்த திராவிட சொல்லாட்சிகள் பகுதியை வெளியிட்ட போது இந்த மூன்று சொற்களும் இந்தோ-ஆரிய மொழிகளிலிருந்து நிச்சயமாகக் கடன் வாங்கப்பட்டவை என்று கூறினார். அதனால் அவர்களுக்கே அரசன் என்ற சொல்லைப் பற்றியும் மூலம் பற்றி முதலில் ஐயம் இருந்தது தெரிகின்றது.

ஆனால், இந்த ஐயம் அரையம் என்ற ஊர்ப்பெயரில் இல்லையாதலால் 'அரையகப்பா' என்று நான் கொண்ட அரப்பாவின் தொல்பெயர் தூய திராவிட மொழிப்பெயர், தமிழ்ப்பெயர் என்பதில் ஐயமெழுவதற்கு எதுவுமில்லை.

சங்க காலத்தில் வஞ்சி, காஞ்சி முதலிய ஊர்ப் பெயர்கள் மரத்தால் பெயர் பெற்றன. அதுபோல் ஆல மரத்தால் பெயர் பெற்ற ஊர்களும் பல இருந்தன.

பாண்டியரின் தலைநகரான மதுரைகூட பண்டைத் தமிழரின் தலைசிறந்த நாகரிகத்தினைக் குறிக்கும் மருத மரத்தின் பெயரால் அமைந்த மருதை என்ற நகர்ப் பெயரின் மரூஉ ஆகும்.

ஆதலின், அரை மரத்தின் பேரால் அரையம் என்று அரப்பாவை அழைத்தது தொன்று தொட்ட பழந்திராவிடர் மரபே என்று தெரிகின்றது.

தினமலர் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி புதிதாகக் கண்ட சங்ககாலப் பாண்டியர் காசுகளில், உஜ்ஜையின்

சின்னமான வேதிகையில் உள்ள மரத்தின் இலைகள், ஒரு சில நாணயம் படங்களில், அரசமரத்தின் இலைகளைப் போலவே உள்ளது. இது வடநாட்டுத் தொன்மைக் காசுகளிலும் காணப்படுகின்றது. அரப்பா நாகரிகத்தில் திராவிடர்களால் போற்றப்பட்ட இந்த அரச மரத்தையே பின்னர் வந்த பௌத்த மதத்தினரால் போற்றித் தொழப்பட்டது.

புத்தர் முதன் முதலில் ஞானம் எய்தியது போதி மரத்தடியில் (ஆலமரம்) என்பது தெரிந்ததே. ஆனால், புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்ற கருத்து சிந்துவெளி நாகரிகத்தில் இருந்து தோன்றியது. முதலில் புத்தரின் சின்னமாகப் போதிமரமென்ற ஆல மரச் சிற்பத்தையே ஹீனயான பௌத்த மதத்தில் தொழுதனர். ஆனால் அதற்கு மிகப் பிறகு புத்தரின் உருவச் சிலைகளைத் தொழுதனர்.

சிந்துவெளி நாகரிகத்தில் அரசமரம் தொழப்பட்டது. அதைப் பின்பற்றியே பௌத்தர்கள் அரசமர இனத்தைச் சேர்ந்த ஆலமரத்தைத் தொழுதனர்.

ஆனால், வேதகால ஆரியர் அரசமரத்தையோ ஆல மரத்தையோ தொழுததாக வரலாறு இல்லை.

மர வழிபாடும் நாக வழிபாடும் திராவிட இனமும் அவ்வினத்திற்கு முற்பட்ட முது பழங்குடி இனங்களும் பின்பற்றியவையாகும்.

இதுவரை கூறியதிலிருந்து அரையகப்பா என்ற தமிழ்ப் பெயரே அரப்பா, ஹரப்பாவாக மாறியது என்பது தெரிகின்றது.

பி. எல். சாமி அவர்களின் படைப்புகள்
(1967 - 1993)

1.	மே, 1967	- சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்
2.	ஆகஸ்ட், 1970	- சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
3.	செப்டம்பர், 1975	- தாய்த் தெய்வ வழிபாடு
4.	மே, 1978	- சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்
5.	மே, 1976	- சங்க நூல்களில் மீன்கள்
6.	டிசம்பர், 1980	- சங்க நூல்களில் மணிகள்
7.	டிசம்பர், 1980	- Common Names and Myths of the Flora and Fauna in Dravidian and indo-Aryan Languages.
8.	மே, 1981	- இலக்கியத்தில் அறிவியல்
9.	டிசம்பர், 1981	- சங்க இலக்கியத்தில் விந்தைப் பூச்சி
10.	டிசம்பர், 1981	- சங்க இலக்கியத்தில் அறிவியற் கலை
11.	டிசம்பர், 1982	- இலக்கிய ஆய்வு
12.	டிசம்பர், 1983	- தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு
13.	டிசம்பர், 1984	- தமிழ் நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்
14.	ஏப்ரல், 1991	- சங்க நூல்களில் முருகன்
15.	டிசம்பர், 1991	- சங்க நூல்களில் செடி கொடிகள்
16.	டிசம்பர், 1992	- சங்க நூல்களில் மரங்கள்
17.	டிசம்பர், 1993	- சங்க நூல்களில் உயிரினங்கள்

* எண் 7, எண் 15 – இரு நூல்களுக்கும் முகவுரை எழுதவில்லை

நூல் : 1 சங்க இலக்கியத்தில்

செடிகொடி விளக்கம்

வெளியீடு : சை. சி. நூற். கழகம்
மே, 1967

முகவுரை

சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள சில செடி கொடி களின் விளக்கமாக இந்நூல் வெளிவருகின்றது. சங்க இலக்கியத்தில் இருநூறுக்கு மேற்பட்ட செடிகொடிகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இச் செய்திகளைச் செடி நூலறிவைக் கருவியாகக் கொண்டு ஆராய்ந்து அவ்வப்போது செந்தமிழ்ச் செல்வியில் கட்டுரைகள் எழுதியுள்ளேன்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் செடிகளைப் பற்றிய விளக்கத்தை ஒரு நூலாக வெளியிட வேண்டுமென்று கழக ஆட்சியாளரவர்களும் சில அறிஞர்களும் கருத்துத் தெரிவித்தனர். அன்னார் கருதியதற்கு இசைந்தே இந்நூல் முதல் நூலாக வெளிவருகின்றது.

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள மரஞ்செடிகொடிகளைச் செடிநூற்படி எவை என அறுதியிட்டுக் கூற அவைகளைப் பற்றிச் சங்கநூல்களில் காணப்படும் செய்திகளே உதவுகின்றன.

செடிகள் இயற்கை நிலையில் வாழுமிடம், வளரும் சூழ்நிலை ஆகியவற்றைத் திணையடிப்படையாகச் சங்க நூல்களில் பல பாடல்கள் விளக்குகின்றன. செடிகளின் வேர், இலை, பூ, காய் முதலியவைகளைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன.

இச் செய்திகளைச் செடிநூலில் கூறப்பட்டுள்ள செய்திகளோடு ஒத்திட்டு ஆராய்ந்து பார்க்குங்கால் சங்க நூல்களில் சொல்லப்பட்ட செடிகள் எவை எனக் கண்டு பிடிக்க முடிகின்றது.

சங்கப் புலவர்கள் உள்ளதை உள்ளவாறே கூறும் உளப் பாங்கு உடையவர் என்பதை யாவரும் அறிவர். உள்ளதை உள்ளவாறே கண்டு அதில் காணப்படும் அடிப்படை ஒழுங்கை, உண்மையைக் காண்பதே அறிவியலின் குறிக்கோளாகுமெனக் கூறலாம்.

இல்லதைக் கூறும் உயர்வு நவிற்சியைச் சங்க நூல்களில் காண்பதரிது. ஆதலின் சங்க நூல்களில் காணப்படும் செய்திகளை அறிவியற் செய்திகளாகக் கொள்ளலாம். சங்க நூல்களில் காணும் செய்திகளை அறிவியலடிப்படையில் ஆராயுங்கால் சங்கப் புலவர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வின் சிறப்பும், நுண்ணிய உணர்வும், திண்ணிய அறிவாற்றலும் விளங்குகின்றன.

சங்க நூல்களில் வழங்கிய பல மரஞ் செடிகொடிப் பெயர்கள் மறைந்துவிட்டன. சில மாறிவிட்டன. சில பெயர்கள் திரிந்து வழங்குகின்றன.

நிகண்டுகளும் பிற்கால உரைகளும் ஓரளவு சங்கப் பெயர்களைக் கண்டுகொள்ள உதவினும் அவை பெரும்பாலும் மயங்கவைக்கின்றன.

சங்க நூல்களிலும் பல செடிகளைப்பற்றி விளக்கம் காணப்படினும் ஒரு சில செடிகளைப்பற்றிச் சிறுகுறிப்புகளே அருகிக்காணப்படுகின்றன. சில செடிகளைப்பற்றி வெறும் பெயர்களே காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, பாலை என்பது கொடியோ, மரமோ எனப் பிற்காலத்தார் மயங்கினர். ஆனால் சங்க இலக்கியத்தில்

ஒரே ஒரு பாடலில் பாலையில் தனித்த உருவுடைய காயைப்பற்றி ஒரே ஒரு செய்தி வருகின்றது. இச்செய்தியே பாலை என்பது ஒரு மரமென்பதையும், இன்ன மரமென்பதை யும் கண்டு பிடிக்க உதவுகின்றது.

சங்க இலக்கியத்தில் செடிகளைப் பற்றிய செய்திகளை அரிதின் முயன்று ஆராய்ந்து ஐந்தாறு செடிகளைத் தவிர ஏனைய எல்லாச் செடிகளையும் செடிநூற்படி எவை எவை எனத் தெளிந்து கண்டுள்ளேன்.

இந்நூலில் ஐந்து அகத்திணைச் செடிகளும், சில அழகிய நிறமுள்ள பூச்செடிகளும், மணமுள்ள செடிகளும் விளக்கப் படுகின்றன. பிற செடிகொடிகள் பின்னர் வெளியிடப்பெறும் நூல்களில் விளக்கப்படும்.

இந்நூலை வெளியிடுவதுபற்றிக் கழக ஆட்சியாளர் சுப்பையாபிள்ளையவர்கள் என்னோடு பேசியபோது செடிகளின் விளக்கத்தைத் தெள்ளிதின் உணர நிறப்படங்கள் இன்றியமையாதன எனக் கூறினேன். நிறப்படங்களை வெளி யிடுவதற்கான உழைப்பையும் செலவையும் பொருட் படுத்தாமல் அவர் வெளியிட ஏற்றுக்கொண்டார்.

மாண்புமிகு தமிழகக் கல்வியமைச்சர் கூறியபடி இத் தகைய நூலை அதுவும் நிறப்படங்களுடன் வெளியிடத் திரு சுப்பையா பிள்ளையர்வகளால் தாம் முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதை எண்பிக்க இந்நூலே சான்று. அவருடைய அயராத் தூண்டுதலும் தளரா முயற்சியுமே இந்நூலை எழுத என்னை ஊக்குவித்தது.

இந்நூலுக்கான பல நிறப்படங்களை வரைந்து தருவதற்குப் புதுவையில் உள்ள பிரெஞ்சு இந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சியாளரும், என்னுடைய நண்பருமான பட்டாபிராமனவர்கள் செய்த உதவிக்கு எனது உளங்கலந்த

நன்றி. இவ்வாராய்ச்சிக் கழகத்தின் தலைவர் பில்லியோசா (Dr. Filliozat) அவர்கள் அவ்வப்போது நான் வேண்டிய உதவிகளை ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து தடங்கலின்றி அளிக்க வைத்தார். அப்பெரியாருக்கு எனது நன்றி.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய மாண்புமிகு கல்வி அமைச்சர் நெடுஞ்செழியனாருக்கு எனது மதிப்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். முன்னுரையினை எழுதிய டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது நன்றி.

இந்நூலைப் படித்தவர்கள் ஓரளவு சங்க இலக்கியத்தின் அருமை பெருமைகளை உணர்வரேல் அதுவே இந்நூலை எழுதியதால் அடைந்த பெரும்பயன் என்று கருதுவேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச்செய்யு மாறே"

என்ற திருமந்திர மொழியைக் குறிக்கோளாகக் கொண்டு எழுதிய இந்நூலைத் தமிழுலகம் வரவேற்குமென நம்புகிறேன்.

பி. எல். சாமி

நூல் : 2

சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்

வெளியீடு : சை. சி, நூற். கழகம்
ஆகஸ்டு, 1970

முன்னுரை

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள அறிவியற் செய்திகளை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தோடு முதலில் செடி. கொடி விளக்கம் என்ற எனது நூல் கழகத்தின் வழி வெளி வந்தது. அப்போது கழக ஆட்சியாளர் திரு சுப்பையாப் பிள்ளையவர்கள் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள விலங்குகளையும் பறவைகளையும் பற்றி விளக்கமாக நூல்களை எழுதவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதன்படி இந்த விலங்கின விளக்கம் நூலாக வெளிவருகிறது.

சங்க நூல்களில் சொல்லப்பட்ட விலங்குகளையும். அவைகளைப்பற்றிய செய்திகளையும் அறிவியல் அடிப் படையாக ஆராய்ந்து விளக்கமாகக் கூற இந்த நூலை எழுதியுள்ளேன்.

சங்க நூல்களில் முப்பத்தைந்து விலங்குகளைப்பற்றிக் காணப் படுகின்றன. அந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் ஆராய்ச்சி செய்து அந்த விலங்கு நூல்படி எவை எவை என்பதை அறுதியிட்டுள்ளேன்.

சங்க நூல்களில் வரும் நூற் செய்திகள் பெரும்பாலும் சங்கநூற் புலவர்கள் நேரில் கண்டு கூறிய அறிவியல் செய்திகளாகும்.

பண்டை தமிழகம் இன்றைய கேரளநாட்டையும் கொண்டிருந்தால் இன்று மேற்குத் தொடர்ச்சிமலைக்காடுகளில் சங்க நூல்களில் கூறப்படும் விலங்குகளை மிகுதியாகக் காண்கிறோம்.

இன்று தமிழ்நாடு, கேரளநாடு ஆகிய நாடுகளில் காணப்படும் சில சிறு விலங்குகளைத் தவிர மற்ற எல்லா விலங்குகளைப் பற்றியும் சங்க நூல்களில் வருவது வியப்பைத் தருகின்றது. ஆனால் இந்த விலங்குகள் இவை என்று கண்டும் கேட்டும் அறியாத தமிழ் மக்கள் இன்றும் பலர் உலர்.

அண்மையில் ஒரு "தமிழ் நாட்டு" அறிஞர் ஓர் அறிவியல் வரலாற்றில் ஆராய்ச்சி மாநாட்டிலும், பம்பாயிலிருந்து சிறந்த அறிவியல் ஆராய்ச்சி இதழிலும் தப்பும் தவறுமாக, சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள விலங்குகளைப்பற்றி எழுதினார். சங்க இலக்கியத்தில் விலங்குகள் பறவைகள் பற்றி சில செய்திகளே காணப் படுவதாகவும் அச்செய்திகளும் இயற்கைக்கு ஒவ்வாத கற்பனைகளுடன் கலந்திருப்பதாகவும் எழுதியுள்ளார்.

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள மரையானை விலங்கு என்று உணராது, மறையான் நெல்லிக்காயைத் தின்னும் ஒரு வகை கொக்கு என்று எழுதினர்.

எட்டுக்காலையுடைய வருடை மானைப் பற்றி, குறுந் தொகை கூறியிருப்பதாக உறுதியாகச் சொல்லி யிருக்கிறார்.

மற்றும் சங்க இலக்கியத்தில் காணாத கற்பனைச் செய்தி களையும் புராணச் செய்திகளையும் சங்க நூல்களில் கண்டதாக எழுதியுள்ளார்.

சங்க நூல்களில் போதிய புலமையில்லாக் காரணத்தால் இத்தகைய போலியான ஆராய்ச்சிகளை அறிவுலகில் உலவ விடுகின்றனர்.

ஆதலின் கற்றறிந்த தமிழர் சங்கநூல்களில் கூறிய விலங்குகளைப் பற்றி நன்கு உணர்ந்து அவைகளைத் தமிழ் நாட்டுக் காடுகளிலும், விலங்குக் காட்சிச் சாலைகளிலும் கண்டுகளிக்கவேண்டும்.

தமிழ் நாட்டு விலங்கு நூல் அறிஞர்களும் சங்க இலக் கியத்தில் கூறிய அரிய பெரிய அறிவியல் செய்திகளை உணர வேண்டும். அப்போதுதான் சங்கப் புலவர்கள் சிறந்த இயற்கை ஆராய்ச்சியாளர்கள் (Naturalists) என்பதை அறிவர்.

இந்த நூலின் பெயர் குறிப்பிடாமல் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கோள்களை பம்பாய் இயற்கை வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தால் வெளியிட்டுள்ள இந்திய விலங்குகள் (The Book of Indian Animals) என்ற நூலிலிருந்து எடுத்து ஆளப்பட்டவை. இந்த நூலில் வெளிவந்துள்ள படங் களில் பெரும்பாலானவை புதுவை ஓவியர் சந்தானசாமி அவர்கள் வரைந்தவை. அவருக்கு எனது நன்றி. மற்றும் அவ்வப்போது நான் எழுதிய கட்டுரைகளைப் படியெடுத்து

உதவிய வில்லயனூர் இலக்குமி நாராயணன் அவர்களுக்கும் எனது நன்றி.

இந்த நூல் வெளிவந்தது கழக ஆட்சியாளர் திரு சுப்பையா பிள்ளை யவர்களின் தளரா முயற்சியால் என்று நான் சொன்னால் அது மிகையாகாது. அவருடைய அயராத்தூண்டு தலுக்கும், அன்பிற்கும் நான் எனது நன்றியையும் செலுத்தச் கடமைப்பட்டுள்ளேன்.

கற்றிந்த தமிழுலகம் இந்நூலை வரவேற்கும் என்று நம்புகிறேன்.

* H. Srinivasa Rao in *Symposium on History of Sciences of INdia*, 1968 and in *Journal of the Bonbay Natural History Society*, 1957.



நூல் : 3 தாய்த் தெய்வ வழிபாடு

வெளியீடு : என். சி. பி. எச்.
செப்டம்பர், 1975

முகவுரை

"தமிழிலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு" என்ற தலைப்பில் எனது கட்டுரை முதலில் 'ஆராய்ச்சி' இதழில் வெளிவந்தது.

அதைத் தொடர்ந்து 'கேரளத்தில் பகவதி வழிபாடு', 'சாத்தன் வழிபாடு' என்ற கட்டுரைகளும் வெளிவந்தன.

'ஆராய்ச்சி' இதழின் ஆசிரியர் நா. வானமாமலை அவர்கள் 'தாய்த் தெய்வ வழிபாடு' என்ற கட்டுரையை விரிவாக்கி நூலாக வெளியிட வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

பண்டைக்காலத்தில் தமிழக மக்களிடையே இருந்து வந்த தாய்த் தெய்வ வழிபாட்டைப்பற்றித் தமிழிலக்கியத்தில் வரும் செய்திகள் மிகவும் ஆர்வமூட்டும் செய்திகளாகும்.

மிகப் பழங்காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, உலகில் உள்ள பல நாடுகளிலும், பல இனக்குழு மக்களிடையிலும் பரவலாக இருந்துவந்த வழிபாடாகும்.

இந்த வழிபாட்டின் தோற்றம், வரலாறு ஆகியவற்றை நன்கு அறிந்து கொண்டாலொழிய தற்கால மதங்களில் உள்ள தெய்வ வழிபாடுகளின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் நன்கு உணர முடியாது.

இந்து மதத்திலும் கிருஸ்துவ மதத்திலும் உள்ள பெண் தெய்வ வழிபாடுகளின் மூலக்கூறுகளைப் பண்டைத் தாய்த் தெய்வ வழிபாடுகளில் காண்கிறோம்.

ஆரியருடைய வேத காலத்திற்கு முற்பட்ட இந்தத் தாய்த்தெய்வ வழிபாடு மிகப் பழங்காலத்தில் இனக்குழு மக்களிடையே தோன்றி வழங்கி வந்து, பின்னர் இந்திய-ஆரிய நாகரீகத்தில் தோன்றிய இந்து மதத்தில் இணைக்கப் பட்டு, தேவி வணக்கமாகவும், அம்மன் வணக்கமாகவும் பரவலாக இன்று வழங்குகின்றது.

கிராமங்களில் உள்ள பாமர மக்கள் இன்றும் தாய்த் தெய்வத்தையே பல பெயர்களில், பல உருவங்களில் இந்தியா முழுவதும் தொழுது வழிபட்டு வருகின்றனர்.

இந்த வழிபாடுதான் இன்று இந்திய மக்களின் அடிப் படையான, பெரும்பாலான வழிபாடாக உள்ளதை மறந்து; இந்திய மக்களின் மதம் என்பது ஆத்மனும், பிரமனும், வேதமும் என்று பேசுவது இன்று வழக்கமாக உள்ளது.

பெரும்பான்மையான இந்தியர் பின்பற்றும் மதத்தில் உள்ள கூறுகள் தாய்த்தெய்வ வழிபாடும், செழிப்புத் தெய்வ வழிபாடுமே என்று ரோமிலா தாப்பர் என்ற வரலாற்று அறிஞர் எழுதியுள்ளதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

இந்தியாவில் சமஸ்கிருத, ஆரிய மரபிற்குப் புறம்பான மதவழிபாடுகள், வணக்கங்கள் பெரும்பாலான மக்களிடையே நிலவி வருவதை வரலாற்று அறிஞர்கள்கண்டுகொள்ளவில்லை என்றும் ரோமிலா தாப்பர் எழுதியுள்ளது மிகவும் முக்கியமான கருத்தாகும்.

கிருஸ்துவ மதத்தில் உள்ள 'கன்னி மாதா' வணக்கத் திலும் பண்டைத் தாய்த்தெய்வ வழிபாட்டின் கூறுகளைக் காணலாம்.

தாய்த்தெய்வ வழிபாட்டின் வரலாறு மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியின் ஒரு மிக முக்கிய கட்டத்தையே தெளிவுபடுத்துகின்றது.

பண்டை எகிப்திய, கிரேக்க, ரோமானிய நாகரீகங்களிலும், பிற நாகரீகங்களிலும் வழங்கிய தாய்த்தெய்வ வழிபாடுகள் மேலை நாடுகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. ஆனால் தமிழகத்தில் பண்டைக்காலத்தில் வழங்கிய இந்த வழிபாட்டைப்பற்றி இதுவரை விரிவாக ஆராயவில்லை. அறிவியல் அடிப்படையில் தமிழிலக்கியத்தில் காணப்படும் சான்றுகளை ஒப்பிட்டு, மதிப்பிட்டு இந்த நூல் எழுதப் பட்டுள்ளது.

* The common feature of religion for the majority of Indian lies in the worship of the mother goddess and the fertility cults. Emphasis is continually given by historians to the spread of Hinduism as reflected in the Sanskritic tradition. Yet so little recognition is given to the fact that in the parctice of religion it is the local cult, the non-Sanskritic tradition which is often predominant, -- Romila Thaper in 'The Past and Prejudice' - N.B.T., India.

தமிழகத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் வளர்ச்சியின் வரலாற்றில் சிலப்பதிகாரத்தின் தலைவியான கண்ணகி தாய்த்தெய்வமாக மாறினது முக்கியமான செய்தியாகும். கண்ணகியின் வழிபாடு இன்று கேரளத்தில் பகவதி வழிபாடாக மாறிப் பெருமளவில் பாமர மக்களிடையே நிலவி வருகின்றது. இந்தப் பகவதி வழிபாடும் ஆராயப்படுகின்றது.

அது போன்று, தாய்த்தெய்வத்தின் மூத்த மகனாகக் கருதப்படும் சாத்தனின் வழிபாடும் கேரளத்தில் இன்று

சிறப்புற்று இருக்கின்றது. ஆனால் இந்த வழிபாட்டின் மூலக்கூறுகள் தமிழிலக்கியத்தில்தான் காணப்படுகின்றன. சாத்தன் வழிபாடும் இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகின்றது.

இந்த நூலை எழுத எனக்கு ஊக்கமளித்த "ஆராய்ச்சி" ஆசிரியர் திரு. நா. வானமாமலை அவர்களுக்கு எனது நன்றி. இந்த நூலை வெளியிட முன்வந்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் எனது நன்றி உரித்தாகுக.

பி. எல். சாமி



நூல் : 4

சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்

வெளியீடு : சை. சி. நூற். கழகம்
மே, 1976

முகவுரை

கழகவழியாகச் சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம் என்ற இரு நூல்கள் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப் பெற்றன.

சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் என்ற இந்நூலில் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள பறவைகளைப் பற்றிய இயற்கைச் செய்திகளை அறிவியல் அடிப்படையாக ஆராய்ந்து விளக்கியுள்ளேன்.

சங்க நூல்களில் மர செடி கொடிகளைப் பற்றிய இயற்கைச் செய்திகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. அதற் கடுத்தபடியாகப் பறவைகளைப் பற்றிய செய்திகள் கூறப் பட்டுள்ளன. விலங்கினங்களைவிடப் பறவையினங்கள் தமிழ் நாட்டில் மிகுதியாகக் காணப்படுவதால் சங்க நூல்களில் பறவை களைப்பற்றிய செய்திகள் கூடுதலாக உள்ளன.

பறவைகள் வாழும் சூழ்நிலை, உண்ணும் உணவு, கூடுகட்டி வாழும் முறை, முட்டையிட்டுக் குஞ்சை வளர்த்தல், இனப்பெருக்கம் ஆகிய பலவற்றையும் கண்டறிந்து சங்கப் புலவர்கள் பாடல்களில் கூறியுள்ளனர். இந்தச் செய்திகளை யெல்லாம் விளக்கவே இந்நூலை எழுதினேன்.

சங்க காலப் பறவைப் பெயர்களில் சில உரை ஆசிரியர்கள் காலத்திலேயே வழக்கில் வீழ்ந்துவிட்டன. சில சங்ககாலப் பெயர்கள் தமிழ் மொழியில் வழக்கில் வீழ்ந்து விட்டாலும் பண்பாடடையாப் பிற திராவிட மொழிகளில் வழங்கி வருவதைக் குறிப்பிட்டுள்ளேன்.

பறவைகளின் சங்க காலப் பெயர்களோடு திராவிட மொழிப் பெயர்களும் கொடுத்துள்ளேன். தமிழ்நாட்டில் வழங்கும் தற்காலத் தமிழ்ப் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இப் பெயர்கள் இடத்திற்கு இடம் மாறுவதையும் காணலாம்.

தற்காலம் படித்தவர்களைவிட நாட்டுமக்களே பறவை களைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டுள்ளனர். படித்தவர் களுக்குப் பல பறவைகளின் பெயர்களும் தெரியாது.

பறவைகளைப் பிரித்து இனங் காணும் சக்தி நகர்ப்புற மக்களுக்கு இல்லை.

சங்க நூலில் கூறப்பட்டுள்ள பறவைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள எனக்கு நாட்டு மக்களிடம் பழகித் தெரிந்த செய்திகள் மிகவும் துணைபுரிந்தன.

இந்த நூலை எழுத எல்லா வகையிலும் ஊக்குவித்து உதவிய கழக ஆட்சியாளர்க்கு எனது நன்றி உரித்தாகுக. இந்த நூலையும் அறிவுசான்ற தமிழுலகம் வரவேற்குமென்று நம்புகிறேன்.

பி. எல். சாமி

நூல் : 5

சங்க நூல்களில் மீன்கள்

வெளியீடு : சேகர் பதிப்பகம்
23-2-1978

முகவுரை

சங்கநூல்களில் மீன்கள் என்ற எனது நூல் ஏற்கனவே செந்தமிழ்ச் செல்வி என்ற திங்களிதழில் தொடர்ந்து வெளி வந்த கட்டுரைகளைத் தொகுத்துச் சீர்படுத்தி எழுதியதாகும்.

சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்
சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்

என்ற மூன்று நூல்களைத் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. அவை தமிழறிஞர் களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றன.

இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த சங்க காலத்துப் புலவர்கள் செடி, கொடி மரங்கள், விலங்குகள், பறவையினங்கள் மற்றும் ஊர்வன முதலிய பல உயிரினங்களையும், அவைகள் வாழும் சூழலில் நன்கு கவனித்து அரிய பெரிய அறிவியற் செய்திகளை அழகுணர்ச்சியுடன் பாட்டுகளில் கூறியதையும் ஆராய்வோர் எண்ணி எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

மனிதன் இயற்கையுடன் ஒட்டி ஒன்றித்து வாழ வேண்டும்; செயற்கையை மிகுத்தால், இயற்கையைக் கெடுத்தால் இன்னல் பல அடைகின்றான் என்று தற்காலத்து முன்னோடி அறிவியலறிஞர்கள் கூறுகின்றனர். இயற்கைச்

சூழ்நிலையைச், சுற்றுச் சார்பைக் கெடுத்து மனிதன் வாழ முடியாது என்ற கொள்கை இன்று அறிவு சான்ற உலகில் வற்புறுத்தப்படுகின்றது.

இக்காலத்தில் இதற்காகவே Ecology, Environmental Science என்று இரு புது அறிவியல் துறைப் படிப்பு சிறப்பாகப் பயிலப்படுகின்றது. சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள திணைப் பாகுபாட்டிற்கு இன்று இந்தப் புது அறிவியற்துறை வழி புது விளக்கத்தையும் வியப்பான ஒற்றுமையையும் காண்கிறோம்.

திணைக்குரிய முதற்பொருளான நிலமும், கருப் பொருளான விலங்கு, புள் முதலிய உயிரினங்களும், மரஞ்செடி கொடிகளும் உரிப் பொருளான வாழ்க்கை நெறியும், இன்று ஆங்கிலத்தில் கூறப்படும் Eco-System என்பதைப் பெரிதும் ஒத்திருப்பதைக் காணும்போது வியப்புறாமல் இருக்க முடியாது.

சங்க நூல்களில் பல வகை மீன்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் சில மீன்களின் பெயர்கள் அரியதாக ஓரிரு பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

சில மீன்களின் பெயர்கள் இன்று தமிழ் மொழியில் வழங்கவில்லை. சில மீன்களின் பெயர்கள் மலையாளத்திலும், சிங்கள மொழியிலும் வழங்குகின்றன. சில மீன்களின் பெயர்கள் வழக்கொழிந்துவிட்டன.

ஆயினும் இந்த அரிய மீன்களைப் பற்றிச் சங்க நூல் களில் கூறிய செய்திகளை, மீன்களைப்பற்றி எழுதப்பட்ட தற்காலத்து அறிவியல் நூலறிவோடு நேரிலும் இம் மீன்களைக் கண்டும் மீனவர்களைக் கேட்டும் அறிந்து தெளிந்து நான் எழுதியுள்ளேன்.

கடல் மீன்களைவிட ஆறு, குளங்களில் வாழ்ந்த மீன் களையே பெரும்பாலும் கூறியுள்ளதைக் காணலாம். கடலில் வாழும் பெரு மீன்களான சுறா, திமிங்கலத்தை வேட்டையாடிய செய்திகள் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளன.

சங்க நூல்களில் மீன்களை அறிந்த அளவு பிற்கால நூல்களில் சொல்லவில்லை. ஆயினும், பள்ளு நூல்களில், பல மீன்களின் பெயர்கள் விளக்கம் ஏதுமின்றிக் கூறப்பட்டுள்ளன. பிற்காலப் புலவர்களிடையே மீன்களைப்பற்றிய அறிவு குறை வாகவே இருந்துள்ளது.

மூவேந்தர்களில் முத்தமிழ் வளர்த்த பாண்டியரின் அடையாளமே இரு கயல் மீன்கள் என்பதைப் பார்க்கும்போது, பாண்டியனின் பெயரே மீனவன் என்பதைக் காணும்போது மீனினத்திற்குப் பண்டைத் தமிழர் எத்தகைய சிறப்பைக் கொடுத்து வந்தனர் என்பது தெரிகின்றது.

சங்க நூல்களில் மீன்களைப்பற்றி எழுதிய இந்த ஆராய்ச்சி நூலை வெளியிட சேகர் பதிப்பகத்தார் விரைவுடன் முன்வந்து, குறுகிய காலத்தில் நல்ல முறையில், அழகிய முகப்போடு வெளியிட்டதைப் பாராட்டுகின்றேன். சேகர் பதிப்பக உரிமையாளரான வெள்ளையாம்பட்டு சுந்தரத்தின் ஆர்வமும் ஊக்கமுமே இந்நூல் விரைவில் வெளிவரக் காரண மாகும். அவருக்கு எனது நன்றி உரித்தாகும். சங்க நூல்களில் மீன்கள் என்ற இந்த நூலையும் அறிவு சான்ற தமிழுலகம் வர வேற்கும் என்று நம்புகிறேன்.

பி. எல். சாமி.

நூல் : 6

சங்க நூல்களில் மணிகள்

வெளியீடு : சேகர் பதிப்பகம்
டிசம்பர், 1980

முகவுரை

சங்க இலக்கியத்தில் மணிகள் என்ற எனது இந்நூல், சங்க இலக்கிய ஆராய்ச்சி நூல்களின் வரிசையில் வெளிவரும் ஐந்தாவது நூலாகும்.

சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், சங்க நூல்களில் மீன்கள் ஆகிய நான்கு நூல்களும் உயிரினங்களைப்பற்றி நான் ஆராய்ந்து எழுதிய நூல்களாகும்.

இந்நூல் அவைகளில் முற்றிலும் வேறுபட்டதாகும், சங்க நூல்களில் மணிகளைப்பற்றியும் சொல்லியிருப்பார்களோ என்று பலர் ஐயுறுவர். சங்க நூல்களில் மணிகளைப்பற்றிய செய்திகளை ஆராயும்போது, பல அரிய செய்திகள் காணப் படுவதை எண்ணி வியப்படைய வேண்டியுள்ளது.

தமிழ் நாட்டில் கிடைத்த சிறந்த கற்களான வைடூரியம், முத்து ஆகியவைப் பற்றிய செய்திகள் புதியவையாகும். வைடூரியம், முத்து என்ற பெயர்கள் தூய தமிழ்ச் சொற்களி லிருந்து தோன்றின என்பதும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் மணிகளைப்பற்றிய செய்திகளை, உரோமர், கிரேக்கர் கூறியுள்ள பண்டைய செய்தி களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து முதல் முறையாக இந்நூலில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியச் செய்திகளும், கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமரும் கிரேக்கரும் இந்தியாவுடன் கொண்டிருந்த வாணிகத்தைப் பற்றிய செய்திகளும், பல வகையில் ஒன்றுக்கொன்று சான்று பகர்வனவாகும்.

சங்க நூல்களின் காலத்தை அறுதியிட்டுக் கூறவும் முடிகின்றது. இந்நூலை எழுத, மணிகளைப்பற்றிய அறிவியல் செய்திகள், வரலாற்றுச் செய்திகள், பாரம்பரியச் செய்திகள் முதலிய யாவும் பயன்படுத்தப்பட்டுள்ளன சங்க நூல்களில் காணப்படும் அரிய பெரிய நுணுக்கமான செய்திகளைப் புரிந்து கொள்ள பல்துறை அறிவு இன்றியமையாததாகும்.

சங்க நூல்களில் இயற்கைச் செய்திகள் உள்ளது உள்ள வாறு விளக்கமாகவும் நுணுக்கமாகவும் கூறப்பட்டுள்ளன; அறிவியல் தழுவிய இயற்கைச் செய்திகள் மிகுந்து காணப் படுகின்றன. ஆதலின் சங்க நூல்களில் கூறப்பட்ட இயற்கைச் செய்திகளை நன்கு உணர்வதற்கு வெறும் தமிழ் இலக்கிய அறிவு மட்டும் போதாது; பல்துறை அறிவும் வேண்டும். சங்கப் புலவர்களுக்கு இருந்த இயற்கையைப்பற்றிய பட்டறிவு தற் காலத்தில் இல்லாததால் அறிவியல் துணை கொண்டு ஆராய வேண்டியுள்ளது.

இந்நூல், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடும் திங்கள் இதழான 'செந்தமிழ்ச் செல்வி'யில் தொடர்ந்து வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். அக்கட்டுரைகளில் தேவையான அளவு திருத்தியும் பிரித்தும் செப்பமுற நூலாக்கப்பட்டுள்ளது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பரந்த உள்ளத்தோடு ஒரு சங்கப் புலவர் கூறினார். சங்ககாலத்தில், நாகரிக உலகு என்று கருதப்பட்ட உரோம, கிரேக்க நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு, மணிகளின் ஆராய்ச்சியிலிருந்து நன்கு விளங்கும். சங்க இலக்கியத்திற்குப் பிறகு மணிகளைப் பற்றியதாகச் சிலப்பதிகாரத்திலும், கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் பல செய்திகள் - நூலிலும் உரையிலும் காணப்படுகின்றன. ஆனால் இச்செய்திகளில் பலவற்றிற்கு இன்று விளக்கம் தர முடியவில்லை.

இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் கோயில் களுக்கு அளித்த அணிகலன்களில் மிகப் பல, மணிகளை உடையனவாக இருந்தன. மணிகளைப்பற்றிய செய்திகளும் நிறையக் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவைகளில் பல செய்திகள் விளங்காமல் உள்ளன.

மணிகளைப் பற்றிய மிகுந்த அறிவுடையவராகத் தமிழர் கள் இருந்துள்ளனர். மணிகளைப் பற்றிய நூல்களும் அக்

காலத்தில் இருந்தன. ஆனால் இக்காலத்தில் அந்த அழகு மணிகளைப் பற்றி அறிவும், நூல்களும் இல்லாதிருப்பது ஒரு குறையே.

சங்க காலத்தில் கூறப்பட்ட மணிகளைப்பற்றி நான் எழுதிய இந்த நூலை, சென்னை சேகர் பதிப்பகத்தார் நல்ல முறையில் அழகாக உருவாக்கி வெளியிடுகிறார்கள். தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுப் பயன்பெறுமென்று நம்புகின்றேன்.

பி. எல். சாமி

நூல் : 7

இலக்கியத்தில் அறிவியல்

வெளியீடு : சேகர் பதிப்பகம்
மே, 1981

முகவுரை

'இலக்கியத்தில் அறிவியல்' என்ற தலைப்பில் வெளி வரும் எனது நூல் செந்தமிழ்ச் செல்வி, தினமணிசுடர், ஆராய்ச்சி முதலிய சில இதழ்களில் வெளிவந்த கட்டுரை களின் தொகுப்பாகும். கட்டுரைகள் பல ஆண்டுகளில் வந்தனவாகும்.

தமிழ் இலக்கியத்தில் உள்ள அறிவியல் பற்றியே பெரும்பாலான கட்டுரைகள் இருப்பினும் கல்வெட்டு, மொழியியல், வானவியல், இலக்கியம் பற்றியும் கட்டுரைகள் அமைந்துள்ளன.

கவைமகன் என்ற தலைப்பில் வந்த கட்டுரையைப் படித்துவிட்டுப் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார், புதுவையி லிருந்து வில்லியனூருக்குக் கைவண்டியில் வந்து, என்னை நேரில் பாராட்டினார். அத்துடன் தான் வெளிக் கொணர்ந்த 'குயில்' இதழிலும் வெளியிட்டார். எனது முந்தைய நூல்களைப் போலவே இந் நூலையும் தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்கு மென்று நம்புகின்றேன்.

பி. எல். சாமி.

நூல் : 8

சங்க நூல்களில் விந்தைப் பூச்சி

வெளியீடு : சேகர் பதிப்பகம்
23 -12 -1981

முகவுரை

நான் எழுதியுள்ள இச்சிறு நூல் ஒரு விந்தைப் பூச்சியைப் பற்றியதாகும். தமிழ்நாட்டில் தென் மேற்குப் பருவக் காற்றினால் முதல் மழை பெய்தவுடன் திடீரென்று பசும் புற்களில் தோன்றும் அழகிய, கருஞ்சிவப்பான பூச்சியைப் பற்றிச் சங்க இலக்கியங் களில் காணப்படும் இனிய காட்சிகள் என்னைக் கவர்ந்தன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர்கள், 'மூதாய்' எனும் இப்பூச்சியை உவமித்துப் பாடிய அறிவியற் செய்திகள் போற்றத் தக்கன. அதைப்பற்றிய இச் சிறு நூல் அரிய செய்திகளைக் கொண்டுள்ளது. இதனை மிகக் குறுகிய காலத்தில் அழகாக வண்ணப்படங்களுடன் வெளியிட்ட சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர் களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

கேரளப் பல்கலைக் கழக மொழியியற்றுறைத் தலைவர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் இப்பொழுது தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தகுதிமிக்க துணை வேந்தராய் விளங்குகின்றார். இவர் தமிழ் அறிஞரை இனங் கண்டு அவர்களின் திறமையை, ஆற்றலைப் பயன் படுத்து வதில் வல்லவரும் நல்லவரும் ஆவார்.

1967இல் வெளிவந்த 'சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்' எனும் எனது முதல் நூலுக்குப் பேராசிரியர் வி. ஐ. சு. அவர்கள் தந்த அறிவார்ந்த பாராட்டு மொழிகள் எனக்கு ஊக்கமும் உரமும் ஊட்டின.

"செடிநூற் செய்திகளைப் பெருக்குவித்துப் படிப்பவர்களைத் துன்புறுத்தாமல் இனிமையாக ஆசிரியர் தமது கருத்தை விளக்கும் திறன் பாராட்டுக்குரியது.

"இந்நூலாசிரியர் தந்துள்ள விளக்கங்களால் செடி கொடிகளுக்குச் சங்கப் புலவர்கள் பெய்துள்ள அடைகள் பொருட் செறிவு பெறுகின்றன.

"*சங்க நூல் மாணவர்கள் சாமியின் நூலால் பெறும் பயன்* சிறிதன்று. பழம் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் தேட நினைக்கின்றவர்களுக்கும், உரையாசிரியரின் ஆற்றல்களை அறுதியிட நினைக்கின்றவர்களுக்கும், செடிச் செய்திகளை வரலாற்று முறையில் எழுத நினைக்கின்றவர்களுக்கும் இந் நூலாற் கிடைக்கும் பயன் பெரிது...."

இவ்வாறு என்னை இனங்கண்டு ஊக்குவித்த தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு நன்றி செலுத்துகிறேன். அது போன்றே தமிழ் அறிஞன் என்று என்னைப் பாராட்டி ஊக்கமளித்து வரும் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரவர்களுக்கும் நன்றியுடையேன்.

நான் எழுதிய நூல்களில் சிறியதான இதில் ஆராயப் பட்டுள்ள இலக்கிய அறிவியற் செய்திகள் மிகப் பெரியன, அரியன என்பதில் ஐயமில்லை. இந்நூலையும் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுமென்று நம்புகிறேன்.

பி. எல். சாமி.

நூல் : 9

சங்க இலக்கியத்தில்
அறிவியற் கலை

வெளியீடு : சேகர் பதிப்பகம்
டிசம்பர், 1981

முகவுரை

இந்த நூல் சங்க இலக்கியத்தில் கூறப்பட்ட அறிவியல் செய்திகளையும், தொல்காப்பியத்திலும் குறிஞ்சிப்பாட்டிலும் கூறப்பட்ட செடி, கொடி, மரங்கள் பற்றிய அறிவியல் செய்திகளையும் ஆராய்ந்து எழுதப்பட்டது.

சிறந்த வரலாற்று அறிஞரான டாக்டர் சங்காலியா அவர்கள், வடநாட்டில் ஜபல்பூருக்கு அருகே இலங்கை இருந்ததாகக் கூறியுள்ளார்.

வால்மீகி ராமாயணம் கூறியுள்ள இலங்கை, இப்பொழுது உள்ள இலங்கையன்று. லங்கா என்ற ஊர்ப்பெயர்கள் ஆந்திராவிலும் வடநாட்டிலும் பல ஊர்களுக்கும் வழங்குகிறது. ஆதலின் இப்பொழுது சிரீலங்கா என்பது வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்ட தன்று.

மயிலை என்ற மரத்தின் பெயர் மயிலின் அடியைப் பார்த்துப் பெயரிட்டதாகும்.

மயிலுக்குக் கால்களில் நான்கு விரல்கள் உண்டு. ஆனால் தரையில் மூன்று விரல்களே பதியும். நான்காவது விரல் காலில் சற்று உயரத்தில் இருப்பதால் தரையில் பதிவதில்லை.

மயிலை மரத்திற்கு மூன்று இலைகள் ஒரு காம்பில் இருப்பதால் மூன்று விரல்கள் பதியும்.

மயிலின் பெயரால் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளில் இந்த மரத்தை அழைத்தனர்.

'மயிலடி இனைய மாக்குரல் நொச்சி' என்று சங்க நூல்களில் அழைக்கப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் கூறப்பட்ட சாலமரம் தென்னாட்டில் இயற்கையாக வளர்வதில்லை.

டாக்டர் சங்காலியா வால்மீகி இராமாயணம் கி.பி.நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் இயற்றியதாகக் கூறியுள்ளார். அதை நான் மறுத்து, புறநானூற்றிலும் கி.பி. முதல் - இரண்டாம் நூற்றாண்டில் இராமன் இலங்கைக்குச் சென்ற கதை தமிழ் நாட்டில் வழங்கியது தெரிகின்றது என்று தெரிவித்தேன்.

இச் செய்திகளை அறிந்த டாக்டர் சங்காலியா அவர்கள், இச் செய்திகள் மிக அருமையானவை, அரிதானவை என்றும் இவைபற்றித் தன்னுடைய நூலில் மறுபதிப்பில் சேர்த்துக் கொள்வதாகவும் எனக்கு எழுதினார். ஆனால் மறுபதிப்பு வருமுன் அவர் இறந்து போனார்.

வால்மீகி ராமாயணம் கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே இயற்றியிருக்க வேண்டும். அதில் கூறப்பட்ட செய்திகள் சிரீலங்காவுடன் இணைக்கப்பெற்றுச் சங்க காலத்தில் வழங்கியிருந்தது.

சிறுபாணாற்றுப்படையில் வரும் சிறுமாவிலங்கை என்ற பெயர் சிரீலங்காவிலிருந்து வந்ததாகும்.

சிறுபாணாற்றுப்படைத் தலைவனான நல்லியக்கோடன், சிரீலங்காவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து, கிடங்கில் என்ற ஊரைத் தலைநகராகக்கொண்டு சிறிய நாட்டை ஆண்டவனாவான்.

இன்றும் திண்டிவனம் அருகில் கீழ் மாவிலங்கை, மேல் மாவிலங்கை என்னும் ஊர்கள் இருக்கின்றன.

வடநாட்டில் நன்கு பயனுடைய சாலமரத்தின் இனமான மரம் (Shoria Talura) தமிழ்நாட்டில் இலையுதிர்க் காடுகளில் இருக்கின்றது. இதுவே சங்கநூல்களில் கூறப்பட்ட மராமரம் (பக். 90) ஆகும்.

வடநாட்டில் காணப்பட்ட சாலமரம்போல் இருந்ததால் பிற்காலத் தமிழ் நிகண்டு நூல்கள், மராமரத்தைச் சாலமரம் என்று கூறின. இதைப் பின்பற்றிச் சென்னைப் பல்கலைக்கழக அகராதியும் கூறியது.

தொல்காப்பியத்திலும் குறிஞ்சிப்பாட்டிலும் வரும் சில மரம் செடிகள் அறிவியல்படி எவை என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அவைகளைப் பற்றிப் போதுமான விளக்கம் இல்லை. இப்பெயர் வழக்குகளும் வீழ்ந்துவிட்டன.

இந்த நூலைக் குறுகிய காலத்தில் அச்சிட்ட வெள்ளை யாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

பி. எல். சாமி.

நூல் : 10

இலக்கிய ஆய்வு

வெளியீடு : சேகர் பதிப்பகம்
23. 12. 1982

முகவுரை

"இலக்கிய ஆய்வு" எனும் தலைப்பில் வரும் இந்நூல் எனது பத்தாவது நூலாகும்.

இது செந்தமிழ்ச்செல்வி, ஆராய்ச்சி, தினமணிசுடர் முதலிய இதழ்களில் அவ்வப்போது வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும்.

சங்க நூல்களில் கூறப்படும் உயிரினங்களில் பூச்சியினம் இன்னும் அறிவியலின்படி ஆராயப்படல் வேண்டும். மற்ற உயிரினங்கள் அனைத்தும் அறிவியல் அடிப்படையில் ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளன.

இந்நூலில் வந்துள்ள 6 கட்டுரைகள் பூச்சியினத்தையும் ஊர்வனவற்றையும், பெரும்பாலானவை 12 சொல்லாய்வு சார்பான வரலாறு பற்றிய அறிவியல் கட்டுரைகளாகவும் அமைந்துள்ளன.

அகநானூற்றில் கோடிக்கரை, பவத்திரி என்னும் ஊர் களைப் பற்றி ஒரே ஒரு குறிப்புச்செய்தி வருகின்றது.

கோடிக்கரையில் பறவைகள் நிறைந்திருந்து இரைச்சல் இட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் கூறிய செய்தி இன்றும் உண்மையாக இருப்பது வியப்பினைத் தருகின்றது.

இன்று கோடிக்கரை (Point calimere) பறவைகளின் புகலிடமாக, சரணாலயமாக (sanctuary) அறிவிக்கப்பட்டு உள்ளதைக் கவனிக்க வேண்டும்.

இலக்கிய ஆய்வு எனும் இந்நூலில் சங்க நூல்களில் காணப்படும் பல செய்திகள் ஆராயப்பட்டு விளக்கப் பட்டுள்ளன.

இந்த நூலைத் தொகுத்து அழகாக, மிக விரைவில் வெளியிட்ட திருவாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் புத்தகக் கலையில் ஒரு வித்தகர் ஆவார்.

எனது நண்பரும் எல்லார்க்கும் இனிய வருமான புதுவை திருமுடி சேதுராமன் அவர்களது மூன்றாவது நினைவு நாளை யொட்டி இந்நூலை வெளியிடுவதில் மிகவும் பெருமைப் படுகின்றேன்.

பி. எல். சாமி



நூல் : 11

தமிழிலக்கியத்தில் நாட்டார் பண்பாடு

வெளியீடு : வானதி பதிப்பகம்
டிசம்பர், 1983

முகவுரை

நாட்டுப்புறவியல் தமிழகத்தில் இக்காலத்தில் பல அறிஞர்கள் ஆர்வத்துடன் ஆராய்ந்து வரும் துறையாகும்.

ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டை முழுமையாக அறிந்துகொள்ள இலக்கிய ஆராய்ச்சி மட்டும் போதாது. நாட்டுப்புறவியல் ஆய்வும் முக்கியமானதாகும்.

நாட்டுப்புறப் பண்பாட்டை இலக்கியத்திலும் காணலாம். அண்மைக் காலம் வரை நாட்டுப்புறப் பண்பாட்டைப் புறக்கணித்து வந்ததுண்டு. அண்மையில் நாட்டுப்புறப் பண பாட்டை ஆராய்வது இன்றியமையாதது என்பதை நன்றாக உணர்ந்து உள்ளனர்.

இந்நூல் பொதுவாக நாட்டுப்புறப் பண்பாட்டின் கூறுகளை விரிவாக ஆராய்ந்து கூறுவது அல்ல. இலக்கியத்தில் காணப் படும் சில நாட்டுப்புறப் பண்பாட்டுச் செய்திகளைத் தொகுத்துக் கூறுகின்றது.

இந்நூலிலுள்ள கட்டுரைகளில் சில, ஆராய்ச்சி, தாமரை, தினமணிசுடர் முதலிய இதழ்களில் வெளிவந்தவையாகும்.

வேறுசில கட்டுரைகள் புதிதாக எழுதப்பட்டுத் தொகுக்கப் பட்டதாகும்.

இந்நூலில் மானிடவியல், சமூக இயல் ஆகிய துறைகளின் செய்திகளும் காணப்படும்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் வெளியிட்ட வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

பி. எல். சாமி



நூல் : 12 தமிழ்நாட்டில்

சிந்துவெளி எழுத்தோவியம்

வெளியீடு : சேகர் பதிப்பகம்
23 - 2 - 1984

முகவுரை

இந் நூல், விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கீழ்வாலை என்ற ஊரிலே கண்டு பிடிக்கப்பெற்ற பாறை ஓவியங்களைப் பற்றியதாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட இந்த ஓவியங்களுக்கிடையே முதன் முதலாகச் சிந்துவெளி நாகரிகக் குறியீட்டு எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

என் தலைமையில் இயங்கிவருகின்ற புதுவை வரலாற்றுக் கழகத்தைச் சார்ந்த பாகூர் புலவர் சு. குப்புசாமியும், வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசனும் இவ்வோவியங்களைக் கண்டுபிடிப்பதில் காட்டிய ஊக்கமும் பேருழைப்பும் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி முதல் தகவல் தந்தார். பின்னர் இக் கண்டுபிடிப்பு, செய்தித் தாள்களில் வெளியிடப்பெற்றது.

இந்தக் கண்டுபிடிப்பு, வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங் களைப் பற்றிய ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. தொல்பொருள் ஆய்வுத் துறை, வரலாற்றுத் துறை சார்ந்த அறிஞர் பலரும் இந்தப் பாறை ஓவியங்களைக் காணச் சென்றார்கள். ஆர்வத்தோடு ஆராய்ந்தார்கள்.

கீழ்வாலைக் குன்றில் காணப்படும் எழுத்து வடிவங்கள் சிந்துவெளிக் குறியீட்டு எழுத்துகளே என்று அறிஞர் பலரும் ஒப்புக்கொள்கின்றார்கள்.

சிந்துவெளி நாகரிகத்தை முதல் முதலில் அகழ்வு செய்தவர் சர். ஜான் மார்ஷல் என்ற அறிஞராவார்.

இவர் மேற்கொண்ட அகழ்வாய்வில் கண்டெடுக்கப் பெற்ற பசுபதி போன்ற சிற்பம், இலிங்கம், யோனி, தாய்த் தெய்வச் சிற்பம் ஆகியவற்றை இவ்அறிஞர் நன்கு ஆராய்ந்தார்.

சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையது அன்று என அறிஞர் சர். ஜான் மார்ஷல் கூறினார். வேறு சில அறிஞர்களும் அவ்வாறே கருதினர்.

பின்னர், இந்த உயர் நாகரிகத்தைப்பற்றி ஆராய்ந்தவர் பம்பாய் தூய சவேரியார் கல்லூரியின் வரலாற்றுக் கழகத் தலைவரான ஈராஸ் அடிகள் ஆவார்.

நன்கு ஆராய்ந்த அறிஞர் ஈராஸ் அடிகளார் 'இந்த நாகரிகம் பழந்திராவிட நாகரிகம்' என்று, தாம் எழுதிய 'தொல் பழங்கால நடுநில இந்துப் பண்பாட்டின் ஆய்வு' (Studies in Proto Indo Mediterranean culture) என்ற நூலில் விளக்கமாக எழுதினார்.

அங்குக் கிடைத்த முத்திரைகளில் உள்ள எழுத்துகளை ஈராஸ் அடிகளார் ஊன்றிப் படித்துக் காட்டினார்.

அப்போது அவர் படித்தவற்றில் பல தவறுகள் இருப்பினும், அவருடைய அணுகுமுறை பற்றி யாரும் குறை கூற முடியாது.

ஆனால், அப்போது வரலாற்றறிஞர்கள் பலர், ஈராஸ் அடிகளாரின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது மேலைநாட்டு அறிஞர்கள், இக்குறியீட்டு எழுத்துகளை ஆராய்ந்து, பெரும்பாலும் ஈராஸ் அடிகளாரின் அடிப்படைக் கொள்கையை நிலைநாட்ட முயன்று வருகின்றனர் என்பது கருதத் தக்கது

இந்தக் குறியீட்டு (முத்திரை) எழுத்துகள் குஜராத் மாநிலத்தில் அகழ்வாய்வு செய்துள்ள லோத்தால், காலிபங்கன் என்ற இடங்களிலும் காணப்பட்டன.

ஆயினும், இப்பொழுது திடீரென்று தமிழ்நாட்டில் விழுப்புரம் அருகில், திருக்கோவிலூர் வட்டத்தைச் சார்ந்த கீழ்வாலையில் உள்ள பாறை ஓவியங்களுக்கிடையே காணப்பெறுவது பெரிய புதிராக உள்ளது.

புதுவை வரலாற்றுக் கழகத்தினர் இந்தப் பாறை ஓவியங்களைக் கண்டுபிடித்த பின்னர், அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் அப்பகுதியில் மூன்று நான்கு பாறை ஓவியங்களைக் கண்டு பிடித்தனர்.

அவற்றில் விலங்கு, மனித (உருவங்கள்) ஓவியங்கள் கிடைத்தன. ஆனால், இந்த ஓவியங்களில், கீழ்வாலை ஓவியத்தில் காணப்பெறும் சிந்துவெளி நாகரிகக் குறியீட்டெழுத்துகள் கிடைக்கவில்லை.

இந்தக் குறியீட்டெழுத்துகளை ஆராய்வதற்கு ஈராஸ் அடிகளாரின் நூலில் காட்டப்பெற்றுள்ள குறியீட்டெழுத்து களையும் உருவப் படங்களையும் அடிப்படையாகக் கொண்டு நான் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளேன். அவர் கருத்து களையும், பிற அறிஞர்களின் கருத்துகளையும் சீர்தூக்கி என் கருத்துகளைத் தந்துள்ளேன்.

இக் கருத்துகள் முடிவானவை அல்ல என்று கூற விரும்புகிறேன்.

இன்று ஒருசில இந்திய வரலாற்று அறிஞர்கள் சிந்து வெளி நாகரிகம் ஆரியருடன் தொடர்புடையது என்று கூறுகின்றனர்.

கணிப்பொறி (Computer) வழியாக ஆராய்ந்து வரும் வெளிநாட்டறிஞர்கள் யாதொரு பற்றுமின்றி, அவை பழந் திராவிடக் குறியீட்டெழுத்துகளே என்று கூறுகின்றனர்.

அண்மையில் அறிஞர் ஜான் மார் என்பவர் ஒருநூலில், "இன்னும் முடிவு பெறாத மொகஞ்ச தாரோ முத்திரை (குறி வடிவம்) பற்றித் திராவிடருடையது என்று பெரும்பாலான கருத்து நிலவுகிறது"

(of recent years Dravidian has been the strongest Contender for language of the as yet undeciphered Mohanjadaro Seal character (*A cultural History of India* edited by A. L. Basham) என்று எழுதியுள்ளார்.

எகிப்திய ஓவிய எழுத்துகளை, ரோசட்டா (Rosetta) என்னும் ஊரில் காணப்பெற்ற முத்திரையில் எகிப்திய, டெமாட்டிக், கிரேக்க மொழிபெயர்ப்புகளில் இருந்து அறிஞர்கள் கண்டுபிடித்தனர்.

அவ்வாறு இரு மொழி முத்திரைகள் கிடைக்குமாயின் சிந்துவெளிக் குறியீட்டெழுத்துகள், சிந்துவெளி நாகரிகம் திராவிடருடையது என்பதற்கு ஒருவாறு சான்று தருகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இக் கருத்தினை நான் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையாக எழுதினேன். அது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் காலாண்டு வெளியீடான Tamil Civilization (ஜூன், 1982) இரண்டாம் இதழில் வெளியாயிற்று. அக் கட்டுரையை வெளியிட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிஞர் பெருந்தகை டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கட்கு என் அன்பும் நன்றியும் உரியது.

ஆங்கிலக் கட்டுரையைக் கண்ணுற்ற சென்னை, சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம், தமிழிலே அதனை மேலும் விளக்கமாக எழுதித் தருமாறு ஆர்வத்துடன் கேட்டார். அவர் கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வு, வரலாறு, இதழியல், அறிவியல் முதலான அரிய துறைகளைச் சார்ந்த சிறந்த நூல்களையே விரும்பி வெளியிட்டு வருகின்றவர்.

நான் பல ஆண்டுகளாக எழுதிவரும் சங்க இலக்கியங்களில் அறிவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து, அவரது பதிப்பகத்தின் வாயிலாக,

சங்க நூல்களில் மீன்கள்
சங்க நூல்களில் மணிகள்
சங்க நூல்களில் விந்தைப் பூச்சி
இலக்கியத்தில் அறிவியல்
இலக்கிய ஆய்வு

எனும் நூல்களாகத் தொடர்ந்து அழகுற வெளியிட்டு வருகின்றவர் அவர்.

அவரது விருப்பமிகு தூண்டுதல், எல்லாரும் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு தமிழில் இதனை எழுதியுள்ளேன். படிப்போர் மனத்தில் நன்கு பதியும் வண்ணம், விளக்கம் தரும் வகையில் பல படங்களை அமைத்து, இச் சிறு நூலினை எழிலுறப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாளர் சுந்தரம் பாராட்டுக்குரியவர்.

தமிழ் மாணவர்கள், ஓரளவேனும் வரலாற்றார்வம் கொண்டவர்கள் சிந்துவெளி நாகரிகம் பற்றியும், நம் நாட்டின் தொன்மைச் சிறப்பு மிக்க வரலாற்றைப் பற்றியும் மேலும் ஊக்கமுடன் அறிய இச் சிறு நூல் பயன்படும் என்று நம்புகின்றேன்.

ஆய்வுகள் மேலும் விரிவடைந்து, தமிழினப் பெருமை நன்கு ஒளிபெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

பி. எல். சாமி.
தலைவர்,
புதுச்சேரி வரலாற்றுக் கழகம்.

நூல் : 13 சங்க நூல்களில்

முருகன்

வெளியீடு : சேகர் பதிப்பகம்
10 - 4 - 1991

முகவுரை

சங்க நூல்களில் முருகனைப்பற்றிப் பல பாடல்களில் செய்திகள் காணப்படுகின்றன. அவைகளை ஆராய்ந்து விளக்குவதே 'சங்க நூல்களில் முருகன்' என்ற எனது இந் நூலின் நோக்கமாகும்.

முதன் முதலில் முருகன் என்ற பெயர்க் காரணம் ஆராயப்படுகின்றது. இதுவரை இது பற்றி வெளியிட்டுள்ள ஆசிரியர் பலருடைய கருத்தை மறுத்து, நான் புதிய காரணம் கூறியிருக்கிறேன்.

திருமுருகாற்றுப்படையில் முருகனை அந்தணர் தொழும் முறை கூறப்பட்டுள்ளது. வேலன் வழிபடும் முறையும் கூறப் பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை, சங்க காலத்துக்குப் பிற்காலத்தில் தோன்றிய நூலாயினும் அதில் காணப்படும் வேலன் வழிபாடு, சங்க கால வேலன் வழிபாடு ஆகும்.

திருமுருகாற்றுப்படையில் வேலன் செய்யும் வழிபாட்டுச் சடங்குகளுடன் வட மலையாளத்தில் வேலன் களம் இழைத்து இரத்தப்பலி பெய்து செய்யும் சடங்குகள் ஒத்திருப்பதைப் பற்றி நான் விளக்கியுள்ளேன்.

புதுவை மாநிலப் பகுதியான வடமலையாள நாட்டில் உள்ள மாஹேற நகரில் நான், வேலன் களம் இழைத்து வழிபாடு செய்வதைக் கண்டேன்.

வேலன் என்ற பழங்குடி இனத்தினரைச் சேர்ந்த குஞ்சுராமன் என்ற பூசாரியை வரவழைத்து, களமிழைத்து, இரத்தப் பலி வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்து, அதை வண்ணப் படங்களாக (Colour Photo Graphs) எடுத்துக் கொண்டேன். அப் படங்கள் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. படங்கள் நான் மாஹேறயில் 1962ஆம் ஆண்டு ஆட்சித் தலைவராக இருந்தபோது எடுக்கப்பட்டவை.

பரி பாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் முருகன் பிறப்புக் கதை, மகாபாரதம், இராமாயணம் முதலிய வட நூல்களில் இருந்து எடுத்துக்கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன.

அகநானூறு முதலிய சங்க நூல்களில் முருகனை வட வாரிய ஸ்கந்தனுடன் இணைத்துக் கூறவில்லை. பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் அவ்வாறு இணைத்துக் கதைகள் கூறப்பட்டுள்ளன. அக் கதைகள் ஆராயப்பட்டுள்ளன.

முருகன் பிறப்புப் பற்றித் தமிழ் நாட்டில் தோன்றிய புராணக் கதையும் விளக்கப்பட்டுள்ளது.

சங்க நூல்களில் முருகனுக்குத் தாய் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தந்தை கூறப்படவில்லை.

முருகன் எப்படி, பழங்குடியினரின் தாய்த் தெய்வமான பழையோளின் மகனாகவும், தமிழரின் தாய்த் தெய்வமான கொற்றவையின் மகனாகவும், வட வாரியக் கலப்பு ஏற்பட்ட பின், மலைமகள் பார்வதியின் மகனாகவும் கருதப்பட்டுள்ளான் என்பது விளக்கப்பட்டுள்ளது.

சங்க நூல்களில் முருகனைப்பற்றிக் கூறப்பட்டுள்ள எல்லாச் செய்திகளும் இதில் ஆராயப்பட்டு விளக்கப் பட்டுள்ளன.

இந் நூலைப் பல இடையூறுகளுக்கு இடையே வண்ணப் படங்களுடன் சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் வெளியிட்டுள்ளார். அவருக்கு என் நன்றி உரித்தாகுக. தமிழ் கூறும் நல்லுலகம் இதுவரை எனது நூல்களை ஏற்றுக் கொண்டது போல இந்நூலையும் வரவேற்கும் என நம்புகிறேன்.

பி. எல். சாமி.

நூல் : 14 சங்க நூல்களில்

மரங்கள்

வெளியீடு : திருக்குறள் பதிப்பகம்
டிசம்பர், 1992

முகவுரை

சங்கநூல்களில் ஏறக்குறைய 125 மரஞ்செடி கொடிகள் புற்கள் கூறப்பட்டுள்ளன. செடிகொடிகள், புற்கள் பற்றிய எனது நூல் ஏற்கனவே டிசம்பர், 1991ஆம் ஆண்டு சேகர் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1992) டிசம்பரில், 'சங்க நூல்களில் மரங்கள்' என்னும் எனது நூல் திருக்குறள் பதிப்பகத்தால் வெளியிடப்படுகின்றது. மரங்கள் அகரவரிசையில் அடுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.

செடிகொடிகள், புல்வகைகள் முப்பத்தெட்டும் மரங்கள் ஐம்பத்தொன்றும் இதுவரை வந்த இரு நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. இன்னும் சில செடிகொடிகளும் மரங்களும் விளக்கப்படவேண்டியுள்ளன.

வளம் தரும் மரங்களைப்பற்றி அண்மையில் **N.C.B.H.** வெளியிட்ட நான்கு நூல்கள் அறிவியல் தரமானவை; பயனுள்ளவை. ஆனால் அவை சங்க நூற் பெயர்களையோ விளக்கங்களையோ கூறவில்லை. இக்காலப் பெயர்களையே கூறியுள்ளது.

பல்கலைக்கழக அகராதியில் தவறு

சென்னைப் பல்கலைக் கழக அகராதி, சங்கநூல்களிலும் பிற்கால நூல்களிலும் காணப்படும் தாவரப் பெயர்கள் பலவற்றைத் தவறுதலாக விளக்கியுள்ளது.

மருதம்

எடுத்துக்காட்டாக, மருதம் என்பதற்கு, தற்காலம் மரப்பலகைகளுக்கு மிகவும் பயன்படுகின்ற பிள்ளை மருது, கலி மருது என்ற மரத்தின் வடமொழிப் பெயரான அர்ஜுன மரம் (Ter minalia arjuna) என்று எழுதியுள்ளது.

இந்த மரம், சங்கநூல்களில் கூறப்பட்ட மருத மரத்தின் பூவைப்பற்றிய விளக்கத்திற்கோ, ஏனைய விளக்கத்திற்கோ முற்றிலும் பொருத்தமற்றது.

தற்காலத்தில்கூட மணிமருது, பூமருது என்றழைக்கப் படும் அழகிய, சிறந்த மரத்தை அறிந்து கொள்ளாமல் சென்னைப் பல்கலைக் கழக அகராதி பொருள் கூறியுள்ளது.

ஆனால், லுஷிங்க்டன் என்னும் மேல்நாட்டு அறிஞர் ஆங்கிலத்தில் எழுதிய 'மரஞ் செடி கொடிகளின் தென்னிந்திய மொழிப் பெயர்கள்' என்னும் நூலைப் பயன்படுத்தியிருப்பார் களானால் பல தவறுகளைத் தவிர்த்திருக்கலாம்.

டாக்டர் எமனோ, பர்ரோ ஆகிய பேராசிரியர்கள் லுஷிங்க்டன் எழுதிய நூலைப் படித்தும் சரியாக அதனைக் கருவியாகப் பயன்படுத்தாமல், சென்னைப் பல்கலைக்கழக அகராதி எழுதினதையே 'வேதவாக்காகக்' கொண்டு மருதத் திற்குப் பொருள் கூறினர். அதையே வெளிநாட்டு அறிஞர்கள் கமில் சுவலபில், மார் போன்றவர்கள் பின்பற்றித் தமது நூல் களில் தப்பும் தவறுமாக எழுதினார்கள்.

தமிழினத்தின் சிறந்த நாகரிகத் திணையான இந்த மருத மரத்தின் பெயர் பற்றிக்கூட இன்றும் குழப்பிக் கொண்டிருக் கிறார்கள். நான் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சை. சி.நூ. கழக வாயிலாக எழுதிய 'சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்' என்ற நூலில் அழகிய வண்ணப்படத்துடன்

மருதத்தின் பூவை விளக்கியிருந்தேன். அதைப் படித்த பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் குமாரசாமி எனக்கு ஒரு பாராட்டு மடல் எழுதினதோடு, 'நீங்கள்தான் முதல் முதலில் சங்க இலக்கிய மருதம் எதுவென்று அறிவியல் செய்தி ஆதாரத்தோடு கண்டு பிடித்தீர்கள்' என்று எழுதினார்.

இந்தப் பேராசிரியர் சித்த வைத்திய மூலிகைகளை அறிவியல்படி அறிந்துகொள்ள காடு மேடுகள் சென்று களப் பணி புரிந்தவராவர். சங்க இலக்கியத்தில் வரும் நறைக் கொடியைக் காடுகளில் கண்டு பிடித்து எனக்கு முதலில் விளக்கியவர். அப்போது நான் நறைக் கொடியைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருந்தேன். அவர் களப்பணியில் கண்டு பிடித்த செய்தி எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.

நான் சில ஆண்டுகளாகவே ஞாழல் என்பது என்னமரம் என்று தெரிந்துகொள்ள உழன்று கொண்டிருந்தேன். அப்போது, கலித்தொகைக்கு அனந்த ராமையர் எழுதிய விளக்கக் குறிப்பில், ஞாழலின் வடமொழிப் பெயர்களைப் பற்றி எழுதிய குறிப்பு என் கண்ணைத் திறந்தது.

ஞாழல், கடற்கரைச் சதுப்பு நிலக் காட்டு மரம் என்பதைக் கண்டுபிடித்துக் கேரளக் கடற்கரையில் நேரே சென்று கண்டுகொண்டேன்.

அது போன்றே, கேரளத்தில் இருந்த புதுவை மாநிலத்தைச் சேர்ந்த பண்டைப் பிரெஞ்சுத் திட்டான மாகியில் நான் நிர்வாகியாகப் பதவி ஏற்றபோது, நிர்வாகியின் மாளிகைக்கு முன்னால் இருந்த ஒரு பெரிய, பழைய மரத்தை ஆர்ாய்ந்தேன். அந்த மரம் பூத்தபோது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதுவே சங்க இலக்கிய மருதம் என்பதைக் கண்டு உறுதி செய்தேன். மலையாளப் பெயர் மணிமருது என்று வழங்குவதையும் கண்டு கொண்டேன்.

ஓவியரை வைத்து மருத மரத்தின் சிவந்த பூங்கொத்தைப் பல தடவை வரைய வைத்தேன். அதையே எனது முதல் (கழகம்) நூலில் வெளியிட்டேன். அதற்குப் பிறகு எல்லாத் தாவரங்களின் அடையாளங்களைத் தெரிந்துகொள்ளக்கூடிய பூக்களையோ, காய் கனிகளையோ பாகங்களையோ நிழற்படமாக வெளியிட விரும்பினேன். செலவு நிறைய ஆகுமாகையால், நூல் வாங்குவார் இல்லாததால் அம் முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று.

சந்தன மரம்

நற்றிணைக்கு உரை எழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், சந்தன மரம் பிற மரஞ் செடி கொடிகளின் வேரோடே முயங்காவிடில், நறுமணமுள்ள வைரம் பாயாது என்று எழுதினார். அது அறிவியற்படி உண்மை என்பதை, நான் கல்லூரியில் இளங்கலை வகுப்பு படிக்கும்போது, நற்றிணையை முதல் முதல் படித்தபோது கண்டுபிடித்தேன்.

சாதாரணமாய், எந்தெந்தத் தாவரங்களின் வேர்களிலிருந்து சந்தனமரம் உணவைத் திருடுகின்றது என்று டேராடூன் வனத்துறை ஆராய்ச்சியாளரைக் கேட்டேன். அவர்கள், 'பல தாவரங்களுடைய வேரிலிருந்து உறிஞ்சிக் கொள்வது தெரிகிறது' என்று எழுதினார்கள்.

ஆனால், சங்கநூல்களில் நறைக் கொடிதான் சந்தன மரத்தில் சுற்றிப் படர்வதாகக் கூறப்பட்டிருப்பதால், சந்தன மரம் நறைக்கொடியின் வேரிலிருந்து உணவைச் சேகரிக்கலாம் என்று தெரிகின்றது. இதை அறிவியல் அறிஞர்கள் ஆராய்வது அவசியம்.

ஞாழல்

நான் ஞாழலை எதுவென்று அறுதியிட்டுச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் கட்டுரையாக வெளியிட்ட பிறகு, 'பூக்கள் சிந்தும் புதுமைகள் ' என்ற நூல் என் பார்வைக்கு அனுப்பப்பட்டது. 'பரிசளிப்பதற்கேற்ற நூல்' என்று இலக்கியமேதை வல்லிக் கண்ணன் இந்நூலைப் பாராட்டியிருக்கிறார். அதற்காக, வி.ஜி.பி. அறக்கட்டளையின் சார்பில் சிறந்த எழுத்தாளர் விருது வழங்கப்பட்டதாக இந்தச் சிறு நூலில் கூறப்பட்டுள்ளது.

'ஞாழல் பூ கண்டதுண்டா?' என்ற கட்டுரையைப் பார்த்தபோது, நான் அயர்ந்து போய்விட்டேன். 'காஷ்மீர் பள்ளத்தாக்கில் வளர்க்கப்படும் குறும் செடியின் பூ' என்று அதில் எழுதியிருக்கிறது. குங்குமம் என்று எழுதியிருக்கிறார் அதன் ஆசிரியர்.

தமிழ் இலக்கியங்களில் இந்தப் பூவிற்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்தான் ஞாழல் பூ என்றும் எழுதியிருக்கிறார். இது எவ்வளவு பெரிய நுண்மாண் நுழை புலனால் ஆய்ந்தறிந்த கண்டுபிடிப்பு!

ஞாழல், சங்க இலக்கியத்திலோ பிற்கால இலக்கியத்திலோ மரமாகவே கூறப்பட்டுள்ளது. அதுவும் கடற்கரை மரமாகவே சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்க, 'செயற்கையாகப் பயிரிடப் பெறும் ஒரு குறுஞ்செடிப் பூவின் மகரந்தத் தாளிலிருந்து எடுக்கப்படும் குங்குமப் பொடி தரும் ஞாழல்' என்று எழுதியுள்ளமை பகுத்தறிவுக்கும் அறிவியல் அறிவுக்கும் அப்பாற்பட்டதாகும். மிகப் பிற்கால நிகண்டான சூடாமணியில் கண்ட உண்மையற்ற செய்தியைப் பெரிய கண்டுபிடிப்பாக இவர் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் பஞ்சமுக வாசம் என்று குறிப்பிடும் மணமுள்ள தாவரங்களின் மணப் பொருள்கள் ஐந்தில், தீம்பூ

கூறப்பட்டுள்ளது; அது குங்குமம் ஆகும். தீம்பூ எதுவென்று உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரோ, சென்னைப் பல்கலைக் கழக அகராதியோ கண்டுபிடித்து விளக்கவில்லை. அதைப் பற்றிப் பாளையங்கோட்டைப் பேராசிரியர் குமாரசாமியவர் களுடன் என்வீட்டில் விவாதித்தபோது, அது, 'தேன்பூ' என்று தேன் நிறைந்த - திருவாங்கூரில் அகப்படும் மரத்தின் பூ' என்று ஆங்கிலத்தில் அவர் விளக்கினார். அதுவும் தவறானது என்பது தெரிகின்றது. 'தீம்பூ' என்பதைத் 'தேன்பூ' என்று அவர் கொள்வது தவறானது.

வஞ்சி

சங்க நூல்களில் வஞ்சி என்பது ஒரு மரம் என்று இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. 'வஞ்சி நகரம் கொடிப் பெயரால் வந்தது' என்று சீத்தலை சாத்தனார், சங்க நூல்கள் கூறிய செய்தியை உணராது கூறினார். இதையே பின்பற்றிச் சென்னைப் பல்கலைக் கழக அகராதி, 'வஞ்சுளா' என்ற வடமொழிப் பெயரில் இருந்து வந்ததாக, ஊகமாகக் கூறியுள்ளது.

மணிமேகலை ஆசிரியர் செய்த பிழையை இந்த அகராதியும் செய்தது.

வஞ்சியின் காயின் விளக்கம் ஐந்திணை எழுபதில் காணப்படுவதால், வஞ்சி எதுவென்று உணர முடிகின்றது.

வெளிநாட்டவரான லுஷிங்க்டன் வஞ்சி மரத்தைச் சரியாக அறிந்து கூறியிருக்கவும், சென்னைப் பல்கலைக்கழக அகராதியோ, திராவிட வேர்ச் சொல் அகராதியோ (D.E.D) சரியாக விளக்கவில்லை. இதே பிழையை ஒளவை துரைசாமி யவர்கள் கழகப் பதிப்பான புறநானூற்று உரையில் செய்துள்ளார்.

வஞ்சியைப் பிரம்பு என்று கூறிப் பல்கலைக்கழக அகராதி மேலும் குழப்பியது.

இன்றும் காரைக்காலில், வெளிநாட்டிலிருந்து ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவிற்கு வந்த சவுக்கு மரத்தை வஞ்சி என்றழைக்கின்றனர்.

வஞ்சியும் காஞ்சியும் வளைந்து தாழ்ந்து கொடுக்கும் மரங்களாகையால், ஆங்கியலத்தில் வில்லோ (Willow) என்று அழைப்பர்.

காஞ்சி

காஞ்சியின் பெண் பூ பச்சைப்பயறு போல இருந்ததாகக் கூறப்பட்டிருப்பது, உண்மைச் செய்தியாகும். இதிலிருந்து அறிவியற்படி எது என்பதை அறிய முடியும்.

காஞ்சி என்பது மேகலை என்று பரிபாடலிலும் மணி மேகலையிலும் பொருள் பெற்றது. அதுவே பிற்காலத்தில் மகளிர் இடுப்பில் ஆடைக்குமேல் அணியும் ஒட்டியாணம் என்று வட மொழியில் மொழி பெயர்க்கப் பெற்றது. அதுவே காஞ்சிபுரத்தின் பெயராகக் கூறப்பட்டது.

வரலாற்றாசிரியர் ஒருவர், காஞ்சி நகரம் முன்னர் கச்சி என்று வழங்கிப் பின்னர்தான் காஞ்சி என மாறிற்று என்று எழுதினார்.

கச்சி என்ற பெயர் சங்கநூல்களில் வழங்கவேயில்லை. கச்சிப்பேடு நன்னாகையார் போன்ற புலவர் சிலரது பெயர்கள், சங்கநூற்பாடல்கள் பாடியவர்களாகக் கூறப்பட்டிருந்தாலும், அப்பெயர்கள் தொகுக்கப்பட்ட காலத்தில், காஞ்சி என்ற பெயரைக் கச்சி என்று சுருக்கியதால் வந்த தவறாகும்.

சென்னைப் பல்கலைக்கழக அகராதி, காஞ்சி என்ற தூய தமிழ்ப் பெயரால், மரப் பெயரால் வந்த நகர் என்று உணராது, 'இது பிராகிருதத்தில் இருந்து வந்த'தாக அதிமேதாவித்தனமாக எழுதியுள்ளது.

ஓமை

நான் எழுதியுள்ள இந்நூலில் ஓமை என்ற மரத்தைப் பற்றி எழுதிய விளக்கத்தை அண்மையில் படித்த செடி நூல்களில் புதிதாய்க் கண்டறிந்த செய்திகளின்படி மாற்ற வேண்டியுள்ளது.

முதலில், என்.எல். போர் என்பவர் எழுதிய 'வனநூல் தாவரவியல்' என்ற ஆங்கில நூலில், முதலைத்தோல் போன்று (Crocodile Bark) உள்ளதாக ஒரு மரத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அந்த மரத்தைப் பற்றி அவர் மேலும் விளக்கம் கூறவில்லை.

'இந்த மரத்திற்குச் சிறிது கருமை நிறத்துடன் நீள வாட்டத்திலும் இடை மட்டத்திலும் பட்டை பிளவாக முதலைத் தோல் போன்று இருக்கும்' என்று இப்போது எழுதிய நூல்களில் விளக்கப்பட்டுள்ளது. மற்றும், காயப்படுத்தினால், செந்நிறப் பிசின் கசியும் என்று கூறப்பட்டுள்ளது.

'பொருத யானைப் புண்தாள் ஏய்ப்பப்
பசிப்பிடி உதைத்த ஓமைச் செவ்வரை'

என்று நற்றிணைப் (279) பாடல், ஓமையின் அடிமரத்தைப் பெண்யானை உதைத்ததால் ஏற்பட்ட காயம், புலியுடன் போரிட்ட யானையின் காலில் ஏற்பட்ட இரத்தம் கசியும் புண்போல் இருந்ததாகக் கூறியுள்ளது. இந்த விளக்கம் செடிநூலார் கூறுவதற்கு முற்றிலும் ஒத்துள்ளதைக் காணலாம்.

மற்றும், 'பணைத்தாள் ஓமைப் படுசினைப் பயந்த' என்று நற்றிணை (313) கூறுவதால், பெரிய ஓமையின் அடிமரத்தி லிருந்து பூக்கள் தோன்றியது தெரிகின்றது. இவ்வாறு பழைய அடிமரத்திலிருந்து பூக்கள் தோன்றுவதைச் செடிநூலார் கூறியுள்ளனர். இந்த விளக்கங்களிலிருந்து ஓமை, அறிவியற் படி **Ougenia Oojeinensis** என்பதாகும் என்று தெளிவாகின்றது.

மூங்கில்

இந்நூலில் மூங்கிலை மரமென விளக்கப்பட்டுள்ளது. உண்மையில் மூங்கில், தென்னை, பனை போலப் புல்லி னத்தைச் சேர்ந்ததாகும். ஆனால் நீண்டு உயர்ந்து வளர்வதால் மரம் என்று மூங்கிலை அழைக்கும் தமிழ்மரபு உண்டு.

இந்நூலில் பல செய்யுள் வரிப் பிழைகளும் அறிவியல் பெயர்களில் எழுத்துப்பிழைகளும் அச்சுக் கோப்பவரின் அறியாமையால் நேர்ந்துள்ளன. அவற்றைப் பிழை திருத்தத்தி லிருந்து சரி செய்து கொள்ள வேண்டுகின்றேன். இத்தகைய ஆராய்ச்சி நூல்களை ஊதியம் கருதாது உடல் பொருள் ஆவியைச் செலவழித்து வெளியிட்டு வரும் பதிப்பாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

அறிவு சான்ற தமிழுலகம் எனது நூல்களை இனங்கண்டு இதுவரை பாராட்டி வந்துள்ளது. அந்த உலகம் இந்த நூலையும் வரவேற்கும் என்று நம்புகின்றேன்.

பி. எல். சாமி

நூல் : 15 சங்க நூல்களில்

சில உயிரினங்கள்

வெளியீடு : சேகர் பதிப்பகம்
டிசம்பர், 1993

முகவுரை

இந்த நூல், நான் முன்னர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வாயிலாக வெளியிட்ட சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், புள்ளின விளக்கம் ஆகிய இரு நூல்களுக்குப் பிறகு, சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள பிற உயிரினங்களைப் பற்றி எழுதிய கடைசி நூலாகும்.

இந்த முகவுரையில் பொதுப் பார்வையாகச் சில செய்திகள் விளக்கப்படும்.

உயிரி என்ற சொல் ஆங்கிலத்தில் பயன்படுத்தும் Animal என்ற சொல்லின் நேர் மொழி பெயர்ப்பாகும்.

ஆங்கிலச்சொல் உயிருடையது, மூச்சுடையது என்ற பொருள்கள் தருவதாகும். ஆங்கிலத்தில் விலங்குகள், பறவைகள் போன்ற உயிரிகளை Fauna என்றும் தாவரங்களை Flora என்றும் லத்தின் மொழிவாயிலாக அழைப்பர்.

jkpHpy ;gpwfhy f;fy bt l;Lfsp y ;மரவிடை, மாவிடை என்றழைப்பதைக் காணலாம். அவைகளை Flora and Fauna என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இக் கல்வெட்டு வழக்கையே அறிவியல் வழக்காகத் தமிழில் புழங்கவிடுவது நல்லது.

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள உயிரிகளில் குட்டி போட்டுப் பால் தரும் உயிரிகளையும் முட்டையிட்டுக் குஞ்சு

பொரிக்கும் பறவைகளைப்பற்றியும் நான் சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழக வாயிலாக இரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். அவ்வகையில் இந்த நூல் பிற உயிரிகளைப் பற்றி எழுதி முடிக்கும் நூலாக உள்ளது.

இன்றைய கேரளம் உள்பட இருந்த சங்ககாலத் தமிழகத்தில், இன்றுள்ள விலங்குகளில் நான்கு கொம்புடைய மான், எலிமான் அல்லது கேழமான், காட்டாடு ஆகியவையே சங்க நூல்களில் கூறப்படவில்லை. மற்ற எல்லா விலங்குகளும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வளவு விலங்குகள் வடமொழியில் எந்த நூல்களிலும் கூறப்படவில்லை.

இன்று அரிதாகக் காணப்படும் மீன் நாய், பூனைபோல உருவத்திலும் நிறத்திலும் உள்ள ஒருவகைப் புலி போன்ற புலி சங்ககாலத் தமிழகத்தில் இருந்திருக்கவேண்டும்.

நான் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த கேரளத்தில் உள்ள மாஉறி திட்டுப் பகுதியில் ஆட்சித் தலைவராக இருந்தபோது பூனை போன்ற புலியைக் கேரளத்து வானந்தொட்டிக்காட்டில் துப்பாக்கியால் சுட்டிருக்கின்றேன்.

நான் புதுவை மாநில ஆட்சித்தலைவராக இருந்தபோது 1980ஆம் ஆண்டு வீராணம் ஏரியில் வலசை வரும் பறவைகளை ஆராயச் சென்றபோது, முதியவர்களிடம் அங்கு இருந்த விலங்குகளைப் பற்றி உசாவினேன். அப்போது மீன்நாய் (Fishing Cat) 25 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்ததாகக் கூறினார்கள். இன்று அந்த விலங்கு முற்றிலும் அழிந்துவிட்டது.

சங்க நூல்களில் இடங்கர் என்ற முதலை கூறப் பட்டுள்ளது. இதைச் சாணாகமுதலை என்று வீராணத்து முதியவர் கூறினார். இது 25 ஆண்டுகளுக்கு முன் இருந்ததாக வும், இப்போது அழிந்துவிட்டது என்றும் கூறினார்.

முதலைகளில் தமிழகத்தில் வாழும் இரண்டுவகை முதலைகளும் கூறப்பட்டுள்ளன. ஆனால் வடநாட்டு ஆறுகளில் வாழ்ந்த கராம் என்ற முதலையும் கூறப்பட்டுள்ளது. இந்த முதலை பண்டைத் தமிழக மன்னர்களால் வட நாட்டி லிருந்து தருவிக்கப்பட்டு அகழிகளில் வளர்க்கப்பட்டது.

முதலை என்று அழைக்கப்பட்ட கடற்கரை முதலையைத் தவிர, இடங்கரோ, கராமோ ஆட்கொல்லி அல்ல.

கராம் பார்ப்பதற்கு பயங்கரமாகக் காணப்படுமே தவிர, ஆட்கொல்லி இல்லை. பெண்முதலை தன் குட்டிகளைத் தின்றுவிடுவதை ஐங்குறுநூறு கூறியுள்ளது. இந்தச் செய்தியை ஜபல்பூர் உயிர்க்காட்சி சாலையில், சங்கப் புலவர்கள் அன்று கண்ட செய்தி இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் முட்டையிட்டுக் குட்டிப்போடும் ஊர்வனவும், நிலம் நீரில் வாழும் தவளை போன்ற உயிரிகளும், நன்னீரில் வாழும் நத்தைகளும், நன்னீரிலும் கடல்நீரிலும் வாழும் கணுக்காலிகள் வகுப்பைச் சார்ந்த நண்டும் இறாவும் விளக்கப்பட்டுள்ளன.

நான் முன்னர் எழுதிய சங்க நூல்களில் மீன்கள் என்ற நூலில் மீனினத்தைச் சேரா இறாவைப்பற்றிக் கூறியிருப்பினும் இந்நூலில் கடலிறாவில் இறாவகையும் நன்னீர் இறாவில் ஒருவகை பற்றியும் விளக்கியுள்ளேன். இந்த இறாக்களே இன்று பெரும்பாலும் உண்ணப்படுகின்றன.

கடலில் கிடைக்கும் சங்கு வகைகளும் முத்துச்சிப்பியும் விளக்கப்பட்டுள்ளன. நத்தையோட்டுக் கிளிஞ்சில் வகைகளில் பறையலகு எனப்படும் பலகறை (சோழி) அரிதாக ஒரே ஓர் இடத்தில் 'மதுரைக் காஞ்சி'யில் கூறப்பட்டுள்ளது. இந்தக்

கிளிஞ்சில் பண்டைக் காலத்திலிருந்து கி.பி.17ஆம் நூற்றாண்டு வரை சில்லறை நாணயமாகப் பயன்பட்டதாகத் தெரிகிறது.

அலகு என்ற சொல் அளவைப் பெயராகச் சங்க காலத்திலிருந்து அண்மைக் காலம் வரை வழங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இச் சொல் கேரளப் பழங்குடிகளிடையே தென்னைமரத்தில் தேங்காய் பறிக்கும்போது தேங்காய்களின் எண்ணிக்கையை அளக்கப் பயன்பட்டுள்ளது.

தாலி என்ற ஓரோட்டுக் கிளிஞ்சிலைப்பற்றியும் ஒரே ஓர் அரிய குறிப்பு ஐங்குறுநூற்றில் கிடைக்கிறது.

தாலி என்ற சொல் திருமணமாகும் மகளிர் அணியும் மங்கல நாணினைக் குறித்துச் சங்கநூல்களில் வழங்கவில்லை,. ஆனால், மீனவர் பயன்படுத்தும் வலையில் கோக்கும் ஒருவகைக் கிளிஞ்சிலுக்கு வழங்கியுள்ளது. அண்மைக்காலம் வரை மீனவர்கள் அவ்வாறு ஒரு வகைக் கிளிஞ்சிலை வலையில் கோக்கிறதை நான் கண்டுள்ளேன். இந்த இரண்டு கிளிஞ்சில்கள் பற்றிய அரிய குறிப்பு அண்மையில்தான் நான் கண்டுகொண்டேன்.

சங்க நூற்களில் அரசநா என்றும் நீல நாகம் என்றும் இராஜநாகம் அழைக்கப்பட்டுள்ளது. இந்த நாகம் அடர்ந்த மரக்கிளையில் கூடு கட்டி முட்டையிட்டு வாழும். பாம்புகளில் கூடு கட்டி முட்டையிடும் பாம்பு இது ஒன்றுதான்.

இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலப் படைகள், அடர்ந்த பர்மியக் காடுகளில் யானை மீது சென்றபோது தழைகளைப் பறித்த யானையின் தும்பிக்கையை, கூட்டில் வாழும் இராஜ நாகம் கடித்ததால் பல யானைகள் இறந்தன என்று போர் வரலாற்றுச் செய்திகளிலிருந்து தெரியவருகின்றது.

இந்த நாகம் மேற்குத் தொடர்ச்சிமலையில் அடர்ந்த காடுகளில் காணப்படுகின்றது. இதை மலையாள மொழியில் கருங்குறிஞ்சி என்ற அழகிய தமிழ்ப்பெயரால் அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன். குறிஞ்சியில் வாழ்வதால் கருங்குறிஞ்சி என்றழைப்பது மிகவும் பொருத்தமே. இதை இராஜ வெம்பாலை என்றும் மலையாளத்தில் அழைப்பர்.

மலையாளத்தில் பலவகைப் பாம்புகளுக்கும் தூய திராவிட மொழிப்பெயர்கள் உண்டு. தமிழில் அந்த அளவு சேகரிக்கப்படவில்லை.

பறவைகளைப்பற்றித் தமிழில் பறவைப்பெயர்கள் ஓரளவு சேகரிக்கப்பட்டு வனத்துறையால் வெளியிடப் பட்டுள்ளது. இராசேந்திரன் என்ற பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரிப் பேராசிரியர் பாம்புகளைப் பற்றி அரியதொரு நூலை எழுதினார். அதில் திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கும் அரிய பாம்புப் பெயர்களைத் தந்திருக்கிறார்.

தமிழக அரசு இத்தகைய முறையில் விலங்குகள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள் பற்றிய பெயர்களை இதுவரை சேகரித்து வெளியிடவில்லை. இது கவனித்துச் செய்தல் வேண்டும்.

சிரீலங்காவில் பறவைகள்பற்றி அழகிய தமிழ் நூலை நிறப்படத்துடன் உயரிய தாளில் முன்னரே வெளியிட்டுள்ளனர். தமிழக அரசு இத்துறையில் ஒன்றுமே இதுவரை செய்ததில்லை.

இந்நூலில் பூச்சிகளில் 12 வகை பற்றி விளக்கியுள்ளேன். உலகிலேயே பூச்சிகள்தான் மிகுதியாக உள்ளன. பெரும் பாலான பூச்சிகள்பற்றி இன்றும் அறிவியல் அறிஞர்கள் ஆராயவில்லை.

இந்த முகவுரையில் எப்படி விலங்கியல் அறிவு தமிழ் நூல்களின் காலத்தைக் கணிக்க உதவுகின்றது என்று விளக்க விரும்புகின்றேன்.

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் சங்க நூல்களில் கூறப்படாத இரண்டு விலங்குகள் கூறப்பட்டுள்ளன.

கீரிப்பிள்ளையைப் பொருளதிகார மரபியலில் மூங்கா என்று அழைத்துள்ளதைக் காணலாம். இந்த மூங்கா சங்க நூல்களுக்குப் பிறபட்டது என்பது தெரிகிறது.

அவ்வாறு எழுத்ததிகாரத்தையோ சொல்லதி காரத்தையோ கூற முடியாது.

சங்க நூல்களில் எளிதாகக் கிராமங்களில் வீட்டுமனைக் கருகில்வாழ்ந்து வீட்டுக்கோழிகளைப் பிடித்துக்கொல்லும் சாதாரண கீரிப்பிள்ளை கூறப்படவேயில்லை. ஆனால், மிக அழகான நீலகிரி மலையில் வாழும் மலைக்கீரி, மலைபடுகடாத்தில் செங்கண்மா மலையில் இருந்தாகக் கூறப்பட்டுள்ளது. இதை 'அரவுக் குறும் பெறிந்த தீர்வை' என்று கூறியுள்ளனர்.

அரவைத்தீர்ப்பதால் தீர்வை என்றழைத்தது பொருத்தமே. இத்தகைய மலைக் கீரியைக் கூறியிருக்கும் போது ஏன் சாதாரணக் கீரியைக் கூறவில்லை? சங்ககாலத்தில் இந்தச் சாதாரணகீரி தமிழகத்தில் வாழவில்லை என்று தெரிகின்றது.

மூங்கா என்ற சொல் மணிமேகலையில் ஊமையைக் குறித்து வழங்கியுள்ளது.

மலையாள மொழியில் வெள்ளிமூங்கா என்ற சொல் கூகையைக் குறித்து வழங்குகின்றது.

மூங்கா என்ற சொல் மராத்தி மொழி வழியாக மங்கூஸ் என்று ஆங்கிலத்தில் புகுந்துள்ளது.

பொருளதிகாரத்தில் 'வெவ்வாய் வெருகினை பூசை யென்றலும்' என்று மரபியலில் கூறப்பட்டுள்ளது.

காட்டுப்பூனையாகிய வெருகு சங்கநூல்களில் கூறப் பட்ட விலங்குதான். வீட்டுப்பூனையைக் காட்டுப் பூனையின் பெயரால் அழைக்கலாம் என்று பொருளதிகாரம் கூறியுள்ளது.

வீட்டுப் பூனையைக் குறித்த பூனையென்ற சொல் சங்க நூல்களில் எங்குமே கூறப்படவேயில்லை. ஆதலின் சங்ககாலத்தில் வீடுகளில் பூனை வளர்க்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. வீடுகளில் சங்ககாலத்தில் நாயையும் கிளியையும் வளர்த்தது கூறப்பட்டுள்ளது.

தற்கால நூலான ஆசாரக்கோவையில்தான் பூசையென்று பூனை அழைக்கப்பட்டுள்ளது.

மலையாள மொழியில் இக்காலத்தில் பூச்சா என்று வீட்டுப் பூனையை அழைப்பர்.

காட்டுப்பூனையும், வீட்டுப்பூனையும் வெவ்வேறு இனம் என்று கூறுவர். வீட்டுப்பூனையைக் கூறினதால் சங்க நூல்களுக்குப் பிற்பட்டதுதான் பொருளதிகாரம் என்பது புலனாகிறது.

அரப்பா அகழ்வாராய்ச்சியிலும், அதற்குப் பிறகு கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட செப்புநாகரிகக் கால அகழ்வாராய்ச்சியிலும், தமிழ் நாட்டுப் பெருங் கற்கால அகழ்வாராய்ச்சியிலும் வீட்டுப்பூனை எலும்புகளே கிடைக் காதது சங்கச் செய்தியோடு ஒத்துள்ளது. அப்படியிருக்க, பொருளதிகாரம் சங்கநூல்களுக்கு முந்தியது என்று எப்படிச் சொல்ல முடியும்?

சிலப்பதிகாரத்தில் வடமொழிப் பஞ்சதந்திர வாக்கியம் கூறப்பட்டுள்ளது. இதில் கீரிப்பிள்ளை தமனிய நகுலம் என்றழைக்கப்பட்ட செங்கீரி வடநாட்டுக்குரியது. இது, சிலப்பதிகாரம் சங்ககாலத்தை ஒட்டிய கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்குரியதல்ல என்பதைக் காட்டுகின்றது. அறிஞர் தெ. பொ. மீ. அவர்கள்கூட இலக்கண உருபுகளை வைத்து ஆராய்ந்துப் பொருளதிகாரம் பிற்பட்டதுதான் என்று தமிழ் மொழி வரலாற்று நூலில் கூறியுள்ளார்

இவ்வாறு தமிழ்நூல்களில் வழங்கப்பட்ட தாவர, விலங்குப் பெயர்களை அறிவியல் அறிவோடு ஆராய்ந்தால் காலத்தைக் கணிக்க உதவும் என்பது விளங்கும்.

விலங்கு நூல், தாவரநூல் ஒரு துல்லிய அறிவியல் துறை (EXACT SCIENCES) என்று கூறுவர். அவை காலத்தை அறுதியிட்டுக் கணிக்க உதவுமளவு வரலாறோ இலக்கியமோ, மொழிநூலோ உதவாது என்று கூறலாம்.

இந்த நூலைக் குறுகிய காலத்தில் வெளியிட்ட வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனது பல நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய அறிவுபூர்வமான அறிவியல் ஆராய்ச்சி நிறைந்த 'கனமான' நூல்களை வாங்குவோர் அதிகம் இல்லை. இருப்பினும் ஊதியம் கருதாது தரமான நூல்களை வெளியிடும் சுந்தரம் அவர்களைப் போற்றுகிறேன்.

அறிவுசார்ந்த தமிழுலகம் இந்த நூலையும் வரவேற்கும் என்று கருதுகிறேன்.

பி. எல். சாமி.

பாராட்டுரைகள்

பகுதி - 1

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

10, செல்லம்மாள் தெரு,
சென்னை-10.

19. 7. 1954.

உங்கள் தமிழார்வமும் ஆற்றலும் சிறப்பாக உள்ளன. அலுவல் வாழ்விற்கு இன்றியமையாதது. ஆதலின் அதைப் போற்றியவாறே தமிழ்த் தொண்டு செய்துவரல் நல்லது.

மு. வரதராசன்

★

Dr. SUNITI KUMAR CHATTERJEE
Chairman,
Legislative Council
West Bengal
Calcutta,

8th September 1956.

I Know and appreciate the greatness of the literatures of the South and sangam literature of Tamil has got a unique place not only in the literature of India but also in the literatures of the world. But that belongs to the ancient period. Sangam literature is of course remarkable in having a special treatment of the subject matter of poetry-the various founa of lovers moods and connecting them with the geographical sub-divisions

of the country and with the seasons such as we find in - described in "Porul Adikaram' of Tolkappiam.. You seem to think that there is not even a distant connection with ancient North *Indian literatures for the pattern of Sangam literature* in Tamil. Granting some orginal lines of development in old Tamil which are not found in either the literatures of the North or of the South,the consensus of opinion of scholers who know both old Tamil and Sanskrit is as far as I can see that they belong to the same type of "criticism of life'. However I congratulate you on your research studies in Sangam literature . Your guidance in the matter to make a case that Sangam literature is totally independent Tamil for those opposed to that of Sanskrit and North Indian languages. Tamil Sangam literature has been mad but will be very much appreciated.

Suniti Kumar Chatterjee

★

டாக்டர் மா. இராசமாணிக்கம்

எம்.ஏ.லிட்., எம்.ஓ.எல்., பிஎச்.டி.,

பேராசிரியர், தமிழ்த்துறை,

தியாகராயர் கல்லூரி,

மதுரை.

7.11.1958.

திரு பி.எல்.சாமி எழுதிய பாம்புச் செடி என்னும் கட்டுரை என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

தமிழ் இலக்கியத்தில் இச்செடி கூறப்பட்டுள்ள இடங்களைக் குறிப்பிட்டு, தாம் படித்த தாவர சாத்திர அறிவு கொண்டு விளக்கியிருக்கும் திறம் மிகவும் பாராட்டத்தக்கது.

விஞ்ஞானத் துறைகள் ஒவ்வொன்றிலும் புலமை உடையவர் தமிழ் நூல்களை ஆராய்வது பாம்புச் செடியைப்பற்றிய உண்மைகளை வெளியிட்டிருப்பதைப் போல வெளியிடுதல் நாட்டிற்கு நலம் தரக்கூடியது. நம் முன்னோரது பலதுறை அறிவையும் நாம் உணர்ந்து பாராட்டுதல் இயலும்.

இவ்வாசிரியரது தமிழ்ப் பற்றும் நன்முயற்சியும் வளர்க. வெல்க. இவரது உழைப்பைப் பெரிதும் போற்றி வாழ்த்துகின்றேன்.

மா. இராசமாணிக்கனார்

★

தே. ஆ. ஸ்ரீனிவாசன்
திருவாடுதுறை ஆதினப் புலவர்
(ஓய்வு பெற்ற, மஞ்சைத் தூய வளனார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்)

14.11.58.

தங்களுடைய கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்தேன். தங்கள் நுன்மதியாம் மதுகரம், ஊமனை உரையாடச் செய்தற்கு ஊதிப் பாம்புச் செடியைச் சூழப்பறந்து குறிஞ்சித் தேனைக் குடித்துப் பெருந் தேனிழைத்துக் கீழ்க்கணக்கில் கிளர்ச்சிக் கரைப்பொரும் கும்மாய்த்துளது எனச் சுருங்கிய முறையில் பாராட்டுகின்றேன்.

தமிழ்மொழி என்றும் பழமை வாய்ந்ததும், இன்றும் புதுமை பொருந்தியதுமான கெழுதகையையுடைய தாகும். அன்றியும் மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞானத் தையும் மாறின்றி இணைத்து வைக்கும் வாராவதியாகவும் திகழ்கின்ற தென்பதைத் தங்களைப் போன்ற சான்றோர் ஆராய்ந்து எழுத வேண்டும்.

நலமும் புலமும் பெருகுக.

தே.ஆ. ஸ்ரீனிவாசன்

(இவர் திரு பி.எல். சாமியின்
தமிழாசிரியர், சங்கத் தமிழின்பால்
திரு பி.எல். சாமிக்கு ஆர்வமும்
பற்றும் உண்டாகக் காரணமானவர்.)

★

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

15, மேட்டுத் தெரு,
சென்னை-1. *8.12.59.*

உங்கள் 'கலைமகன்' என்ற கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். உங்கள் தமிழறிவையும் விஞ்ஞான அறிவையும் அக்கட்டுரை நன்கு புலப்படுத்துகிறது. உங்கட்கு என் மகிழ்ச்சியும் ஆசியும்.

மா. இராசமாணிக்கனார்

(பாரதிதாசனார் இக்கட்டுரையைத் தன்னுடைய 'குயில்' பத்திரிகையில் வெளியிட்டதுடன் நேராகப் பாராட்ட இவரிடம் நேரில் வந்தார்.)

★

ப. இராமநாதன்

பெரும்புலவர்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். *27.9.1961.*

'நரந்தம்' என்ற பெயரில் அரிய கட்டுரை வரப்பெற்று வரம்பிலா மகிழ்வுற்றோம்.

இதுபோல் தங்கள் சீரிய கட்டுரை திங்கடோறும் செந்தமிழ்ச் செல்வியை அணி செய்ய விழைகின்றேன்.

ப. இராமநாதன்

★

வ. சுப்பையா
ஆட்சியாளர்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

சென்னை.
26.9.1966.

'செல்வி'யில் வெளிவந்த தங்கள் கட்டுரைகளைப் படித்துப் பாராட்டி, கேரளா பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் வி.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய கடிதத்தின் படி ஒன்றை இத்துடன் அனுப்பி யிருக்கிறேன். அதனைப் பெற்ற யான் பெருமகிழ் வடைந்து அவர்கட்கு இன்று நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதி இருக்கின்றேன்.

வ. சுப்பையா

★

Dr. **V.I. SUBRAMANYAM**, M.A.,Ph.D.(Ind.U.S.A.)
Professor and Head of the
Department of Linguistics,
University of Kerala.

Trivandrum,
17th June,1967.

When your superb studies on the flora and fauna are complete they have to be to correlate with the architectural representations available in temples of South India and in the myths, adages etc.of Tamil Nadu. Indirectly your research

confirms one of my dypotheres that the prime function of literature is not reproducing but of producing nature.

Dr V.I. SUBRAMANYAM

★

வ. சுப்பையா பிள்ளை

8. 7. 67.

'சங்க இலக்கியமும் அறிவியலும்' என்ற துறையில் தங்களைத் தவிர வேறு ஆராய்ந்து எழுதுவாரைக் காணுதல் அருமை. இறைவன் தங்களை இதற்கெனவே அரிய பிறவியாகப் படைத்திருப்பதை எண்ணி இறும்பூதெய்து கின்றேன். நீடு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

வ. சுப்பையா பிள்ளை

★

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்

தமிழ்த் துறைத் தலைவர்.
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

6. 8. 1968.

தங்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் மீதுள்ள ஆர்வமும் ஆற்றலும் பற்றி அறிந்துள்ளேன். உயிரினங்கள் பற்றித் தங்கள் ஆய்வு குறித்தும் உணர்வேன்.

இத்துடன் தங்கள் பார்வைக்குக் கம்பன் கண்ட உயிரினங்கள் என்ற நூலை அனுப்பியுள்ளேன். தங்கள் கருத்தைத் தெரிவித்தால் திருத்திக்கொள்ளத் துணையா யிருக்கும்.

ச.வே. சுப்பிரமணியன்

★

'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' எனும் நூல் வெளியீட்டுவிழாவில்,பொன்னாடை போர்த்தி நாவலர். இரா. நெடுஞ்செழியன் கூறிய பாராட்டுரை (9.8.1970)

''பி.எல்.சாமி அவர்கள் சிறந்த தமிழறிவு பெற்று சிறந்த அறிவியல் அறிவையும் இணைத்த காரணத்தினால் இந்த அருமையான நூல் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதுபோன்ற அருமையான 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' இன்னும் வரவிருக்கின்றது.

'புள்ளின விளக்கம்'ஏற்கனவே வந்த 'செடிகொடி விளக்கம்' ஆகிய அத்தனையும் அவர்கள் அறிவியல் இயற்கைப் பொருட் பாட அறவியலில் சிறந்து விளங்கு கின்ற காரணத்தால், அதுமட்டுமல்லாமல் நல்ல தமிழறிவு பெற்று விளங்குகின்ற காரணத்தினால், இரண்டு அறிவு இணைந்த காரணத்தால் இவ்வளவு அழகான நூல்கள் வர முடிந்தது.

வெறும் தமிழறிவு பெற்றிருக்கிறவர் மட்டுமே இந்த நூலை எழுதியிருக்க முடியாது. இரண்டும் இருக்கின்ற காரணத்தால் அவர்களால் இந்நூல்களை எழுத முடிந்தது.''

நாவலர் நெடுஞ்செழியன்

(கல்வி அமைச்சர், தமிழக அரசு.)

★

X.S.THANINAYAGAM

6, Clenabar Place,
Colombo - 4
Ceylon.
27th Feb.1971.

I have found your book on Animals mentioned in Sangam very absorbing and interesting as your book on plants.

Accept my hearty congratulations.

X.S. Thaninayagam

★

IRAVATHAM MAHADEVAN, I. A. S.

11th Oct.1971.

I have very greatly enjoyed reading your two fine monographs on the Plant and Animal life during Sangam Age. They are easily best studies of the kind I have come across in recent years.

I. Mahadevan

★

தெ.தி. சை.சி.நூற்பதிப்புக் கழகம்
சென்னை. **21.10.71.**

'பெருங்குருகும் பெருநாரையும்' பற்றிய கட்டுரை மிகவும் நன்றாயிருந்ததென்று அறிஞர்கள் புகழ் கின்றார்கள். மூன்றாவது பரலுக்குப் பறவைக் கட்டுரை விரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வ. சுப்பையா பிள்ளை

★

எஸ். ராகவன், எம்.ஏ.,
பொறியியற் கல்லூரி, கிண்டி. **29-1-72.**

திரு நா. வானமாமலை, எம்.ஏ.,எல்.டி.,
ஆசிரியர், 'ஆராய்ச்சி'.

''தமிழ்நாட்டில் இவ்வளவு சிறப்பான,தரமான ஆராய்ச்சிப் பத்திரிகையைப் பார்ப்பது அரிது. கட்டுரைகள் எல்லாம் உயர்தரமானவை.

சிறப்பாக பி.எல். சாமியின் வேலன் வழிபாடும் பகவதி வழிபாடும் புதிய அரிய செய்திகள் பல கூறுகின்றன. விஞ்ஞான முறையில் ஆராயும் திறமை சிறப்பாக உள்ளது. கண்ணகிப் பாட்டைப் பதிவு செய்த நாடாவை அரசாங்கம் வாங்கிப் பாதுகாக்க வேண்டும்.

இத்தகைய சிறந்த ஆராய்ச்சியாளர்களைக் கண்டு பிடித்து அவர்களது கட்டுரைகளை வெளியிடும் உங்களுக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தவேண்டும்.''

எஸ். இராகவன்

★

க. ரத்னம், பி.ஏ.,(ஆனர்ஸ்),
தமிழ்ப் பேராசிரியர்,
சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி.

இராமநாதபுரம்,
26. 9. 1972.

பறவைகளில் ஈடுபாடுடைய நான் என்னுடைய பிஎச்.டி. ஆய்வுக்குச் சங்க இலக்கியத்தில் பறவைகள் என்ற தலைப்பை எடுத்துக்கொள்ள எண்ணினேன்.

அப்பணியை நீங்கள் செய்வதால் இன்னொரு ஆய்வு தேவையில்லை என்று கருதுகின்றேன். விரைவில் உங்கள் கட்டுரைத் தொடர் நூலாக வெளிவரும் எனவும் நம்புகிறேன்.

உங்கள் கட்டுரைகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை. மொழியியல், இலக்கண நுட்பங்களோடு பறவைகளின் பெயர்களை ஆராய்ந்துள்ளீர்கள்.

உங்கள் மலையாள மொழியறிவும் உங்கள் ஆய்வுக்குப் பெருந்துணையாக உள்ளது.

க. ரத்னம்

★

Dr. V. I. SUBRAMANYAM,
Head of the Department of Linguistics,
University of Kerala.

Trivandrum,
9.9.74.

The 'Nannan' article will be a good one for the Historical Congress. It has a methods of reconstructing the history form the present to the past.

V. I. Subramanyam

★

ச. மெய்யப்பன்

விரிவுரையாளர்.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

மணிவாசகர் நூலகம்,
சிதம்பரம்.

7. 4. 75.

பறவை, விலங்கினங்கள், பயிர் வகைகள் பற்றித் தங்கள் நுண்ணிய ஆராய்ச்சி இங்கு எல்லோராலும் பாராட்டப்படுகிறது. மேற்கண்ட துறைகளில் தாங்கள் மிகச் சிறந்த வல்லுநர் என எல்லோரும் ஒருமனதுடன் பாராட்டினார்கள்.

தங்களிடமிருந்து மிக நல்ல நூல்களைப் பல்கலைக் கழகத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

ச. மெய்யப்பன்

★

N. VANAMAMALAI
Editor, "Aaraaichi'.

Palayamkottai,
10.12.1975.

your article on *நன்னன்* is really good. It combines modern folklore research with literary notices. I like the article and its methodology very much.

V. Vanamamalai

★

எம். சற்குணம்
ஏ. சி. எல். ஜி. எஸ் அலுவலகம்,

பெத்கோல்,
ஸ்ரீ லங்கா.
20.12.75.

மலையாள நாட்டுப் பகுதிகளில் அல்லது தென்னகத்தில் வரும் கண்ணகி சம்பந்தமான பாடல்களை அல்லது உங்களிடம் உள்ள கண்ணகி, பகவதி பாடல் களைத் தயவுசெய்து அனுப்பிவையுங்கள்.

எனது ஆய்வு நூலின் பிற்சேர்க்கையில் சேர்த்துக் கொண்டு நன்றியுரையில் உங்கள் உதவியைக் குறிப்பிடுவேன்.

ம. சற்குணம்

★

N. VANAMAMALAI,
Editor, "Aaraaichi"

Palayamkottai,
7th January 1976.

Rudin from Russia has written a personal letter. He has referred to many of the articles as models of modern research. Yours is listed as one of the best.

முரசு வணக்கம், வேலன் ஆட்டம் போன்ற கட்டுரைகள் ஆழமான அறிவியல் ஆராய்ச்சிக்கு உதாரணங்கள்.''

Dr. Troubnikova also spoke highly of your articles when I met her in Moscow. She has also referred to your articles in her papers published in Russian. She told me so.

N. Vanamamalai

★

M. SALKUNAM, *B.A. (Hons.)*
Division No.2
Karai River, E.P.

23.1.76.

தங்கள் ஆய்வுகள் தமிழில் கண்ணகி, தாய்த் தெய்வத்தைப்பற்றிக் கிடைக்காததால் என்னுடைய ஆய்வுகள் முற்றுப் பெறவில்லை என்று வருந்துகின்றேன்.

உங்களது சிறந்த ஆய்வுகள் கிடைக்கவில்லையே என்று வருந்துகின்றேன்.

எம். சல்குணம்

Dr H. D. SANKALIA

Deccan College

Post - graduate and Research Institute.

Poona-411 006
(India)
18.3.1976.

Last year you wrote to me a letter in 15-1-1975. There you kindly drew my attention to 'Shorea talura' in South India and also a reference to Sangam Poem.

I would now like to study the Rama problem in the entire early Tamil(Sangam) literature if this has been translated in English.

H.D. Sankalia

★

Dr V. I. SUBRAMANYAM

7.7.76.

You may expand the topic to include Plants, animals and birds. Somebody someday have to cover them. Why not you? There is no doubt that the Dravidians come from the north.

The evidence you furnish will certainly enhance the proof for that pre-history.

V. I. Subramanyam

Justice S. MAHARAJAN
*Retired Judge, High Court of Madras
and Chairman,
Tamil Nadu State Official Languages
Commission.*

18.7.1976.

I have gone through the three important books written by Mr. P.L.Samy on Plants in Sangam literature, Animals in Sangam literature and Birds in Sangam literature.

No one having the author's deep knowledge of Botany, Zoology and Ornithology has so far brought his knowledge to bear upon so far brought his knowledge to bear upon a critical study of Sangam literature and revealed as these three books do, the remarkable and intimate knowledge of plants, animals and birds, which the ancient Tamils possessed.

S. Maharajan

★

ஆர். ஸ்ரீனிவாசன், எம்.ஏ.,
தமிழ்த்துறை
கேரளா பல்கலைக்கழகம்

திருவனந்தபுரம்
15. 9. 1976.

தங்களின் நூல்கள் கட்டுரைகள் ஆகியவற்றைத் தவறாது ஒன்றுவிடாமல், ஆர்வத்துடன் படிக்கும் வழக்கமுள்ளவன் நான். தங்களால் அவிக்கப்படுகின்ற செய்திகள் அனைத்தையும் ஒன்றுவிடாது குறிப்பு எடுக்கும் பழக்கம் எனக்கு உண்டு.

நான் எம்.ஏ.,ஆய்வுக் கட்டுரை எழுதும்போது தங்களால் தாய்த் தெய்வ வழிபாடு பற்றி எழுதப்பட்ட அத்துணைக் கட்டுரைகளையும் பயின்று குறிப்புகள் எடுத்து உபயோகப்படுத்தியமைக்குத் தனிப்பட்ட முறையில் முன்னுரையில் நன்றி கூறுவதற்குத் தவறியதற்கு மிகவும் வருந்துகின்றேன்.

ஆர். ஸ்ரீனிவாசன்

★

எஸ். சார்லஸ்
விரிவுரையாளர்,
கிறிஸ்ட் கல்லூரி.

பெங்களூர்-29,
11. 10. 1976.

தங்கள் அறிமுகத்துக்கு மிக சந்தோஷம். தங்கள் உயர்ந்த நூல்களைப் படித்துள்ளேன். தங்கள் மீது உயர்ந்த மதிப்பு எனக்கு உண்டு.

'ஆராய்ச்சி' யில் தாங்கள் எழுதிய Anthropology சார்ந்த கட்டுரைகள் என்னை மிகவும் கவர்ந்தன. தங்கள் பணி தொடர்க. தங்கள் தொடர்புக்கு என்றும் மகிழ்வேன்.

எஸ். சார்லஸ்

★

என். பழனி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அண்ணாமலை நகர்,
16. 9. 77.

தமிழறிவு சான்ற பெருந்தகையே, வணக்கம்!

தாங்கள் எழுதிய 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்', 'விலங்கின விளக்கம்' ஆகிய நூல்களைப் படித்துத் தங்கள் ஆராய்ச்சி வன்மையினையும், தமிழில் தாங்கள் பெற்றுள்ள நுண்மாண் நுழைபுலத்தினையும் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்.

தாங்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டும் தமிழ் மொழியின்பால் கொண்டுள்ள பற்றும் நினைந்து நினைந்து பாராட்டத்தகும் தன்மையினை உடையதாகும்.

என். பழனி.

★

பேராசிரியர் அ. சிவலிங்கம்,
மயிலம் தமிழ்க் கல்லூரி.

இம்மாதச் செந்தமிழ்ச் செல்வியில் தங்கள் 'இரலைமான்' பற்றிய அரிய ஆய்வுக் கட்டுரையைக் கண்டேன்.

அரிய சிறந்த செய்திகளை யான் அறியலானேன். என் மாணவர்க்கு அவை பெரிதும் பயன்தருவனவாம்.

தொடர் கட்டுரையையும் காணும் அவாவினன்.

அ. சிவலிங்கம்.

★

இரா. முத்துகுமாரசாமி, எம்,ஏ., பி.லிட்.,
மறைமலையடிகள் நூல்நிலையம்.
சென்னை-1.

அவ்வப்போது தாங்கள் எழுதிவரும் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்து வருகின்றேன். தங்களுடைய 'தாய்த் தெய்வ வழிபாடு' நூலும் சிறப்பாக அமைந்துள்ளது.

இரா. முத்துகுமாரசாமி.

★

சுபா. சண்முகநாதன்
முதல்வர். பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

"சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்"

1. மொழி: எளிதில் புரிந்து கொள்ளத்தக்கது.
2. நடை: அறிவியல் எழுத்தாளரின் ஆற்றொழுக்கு நடை.
3. கருத்து: ஆழ்ந்தகன்று ஆய்ந்த தனித் தன்மை வாய்ந்த முடிவுகள்.

சுபா. சண்முகநாதன்.

★

M. ARUNACHALAM

Director,
Tamil, Sanskrit, South
Indian Languages Research Institute,
Marshalls Road,
Egmore,
Madras-8.

I had occasion to see only your articles in the September 72 issue of the Journal of Tamil Studies and very much appreciate your identification of the flore of Kapilar.

I can understand all the immense pains you would have taken in the matter.

I believe I can also say a few things more on the flora.

M. Arunachalam

★

N. VANAMAMALAI, M.A., L.T.,
Editor, 'Aaraaichi',

Palayamkottai.

I am deeply impressed by your arsiduous efforts of collecting facts about Mother worship from literary sources of early Tamil literature and comparing them with facts in Sanskrit literature and trying to trace them to their origin.

The comparative methodology is applied with fruitful results. I heartily congratulate you on your success.

N. Vanamamalai

★

வி. ஐ. சுப்பிரமணியம்
'International Journal of Linguistic Studies'.

'வடமலையாள நாட்டில் நன்னன் நினைவுகள்' மிக நல்ல கட்டுரை. ஆங்கிலத்தில் ஆக்கி 'Journal of Indian History' *க்கு அனுப்பினால் மிகவும் பயன்படும் பலருக்கு.*

வி. ஐ. சுப்பிரமணியம்

★ ★ ★

இதழ்களில்...

'புதுவைக்குரல்'

குரல் : 4 | 16. 9. 1977 | ஓசை : 317

திரு பி. எல். சாமி I.A.S.

அவர்கள்!

ஆராய்ச்சி நூல்களை எழுதிய அறிஞர்!

புதுவை மாநிலத்தில் திரு.பி.எல்.சாமியை ஒரு திறமை மிக்க அதிகாரி என்றே பலரும் அறிவர். மிகச் சிலரே அவரது சிறந்த இலக்கியப் புலமையையும் அறிவாற்றலையும் அறிந்துள்ளனர்.

இவர் ஏனைய துறைகளில் ஆர்வமின்றி ஒரே போக்காகச் செல்லும் அதிகார வர்க்கத்தைச் சார்ந்தவரல்லர். தமிழிலக்கியத்தில் துறை போகிய சிறந்த அறிஞராவர். தமிழ்ப்புலவர் உலகில் நன்கு மதிக்கப் படுபவர். பழந்தமிழ் இலக்கியம், தென்னிந்திய வரலாறு, தாவரநூல், விலங்கு நூல், பறவைநூல், இயற்கைநூல், சமுதாய மானிடவியல் நூல் ஆகிய துறைகளைப் பற்றியெல்லாம் நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவருடைய பல்துறை அறிவு போற்றத் தக்கதாகும்.

திரு சாமி அவர்கள் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் பற்றி மிகச் சிறந்த மூன்று நூல்களை எழுதிப்

புகழ்பெற்றார். இந்த நூல்களைத் தமிழில் உயர்ந்த இலக்கிய நூல்களை வெளியிடும் சிறந்த பதிப்பகமான சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமே வெளியிட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

மக்களிடையே தாய்த் தெய்வத்தைத் தொழும் வழிபாடு, தோன்றி வளர்ந்து வந்த வரலாற்றை ஆராய்ந்து எழுதியுள்ளார். இந்த நூல் பலதுறை அறிவையும் ஒருமுகப்படுத்தி எழுதிய சமுதாயமானிடவியல் பற்றிய மிகச் சிறந்த நூலாகும்.

கம்பன் காவியத்தில் உயிரினங்கள் என்ற ஒரு நூலும் புதுவைக் கம்பன் கழகத்தினரால் வெளியிடப்பட்டது.

இவர் இதுவரை தமிழிலும்,ஆங்கிலத்திலும் 200க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாளிதழ்கள், ஆராய்ச்சிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வெளியிட்டுள்ளார். இந்துப் பத்திரிகையிலும் இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள் வெளியாகியுள்ளன.

இவர் எழுதிய முதல் இரண்டு ஆராய்ச்சி நூல்களுக்கும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசளித்துப் பாராட்டியுள்ளது.

இவரது தமிழ் இலக்கிய ஆராய்ச்சியைப் போற்றி இவருக்கு ஒரு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளிக்க முன்வரும் என்று தெரியவருகின்றது.

அரசாங்க அலுவலகத்தில் அதிகாரியாக வேலை செய்துகொண்டு ஒரு சிறந்த ஆராய்ச்சியாளராகவும்

மேதையாகவும் இவர் விளங்குவது மிக அரிதாகக் காணத் தக்கதாகும். விரல்களால் எண்ணக் கூடிய ஒரு சில உயர் அதிகாரிகளே இலக்கியம் போன்ற பிற துறைகளில் பெயர் பெற்றுள்ளனர்.

புதுவை மாநிலத்தில் அதிகாரியாக உள்ள ஒருவர் ஆராய்ச்சித் துறைப் பேரறிஞராக விளங்குவதும் போற்றப் படுவதும் நமது மாநிலத்திற்குப் புகழைத் தருவதாகும்.

இவருடைய 'அறிவுத்திறமை' யும் தமிழ்ச் சேவையும் அரசின் சார்பு ஆற்றும் நேர்மையான தொண்டும் தமிழுக்கும் புதுவைக்கும் ஒரு மாபெரும் பேரும் புகழுமாகும்.

வேளாங்கண்ணிக் குரலொலி மார்ச், 1982

பேட்டி அனுபவம்:

'அறிவியல் தமிழை' அறிமுகப் படுத்திய சங்க நூற் பேரறிஞர்

-கவிஞர் அமலன்

'புதுவைச் சித்தர்' என்று போற்றப்படும் திரு பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ். புதுவை மாநில அரசுச் செயலர், மாவட்ட ஆட்சியர் எனப் பல பொறுப்புகளை ஏற்றுத் திறம்படப் பணியாற்றி வருகிறார். ஓர் அதிசய மனிதர்; ஆற்றல் மிக்க பேரறிவாளர்.

'புலவர் மணி' ஜோசப் ராயர் (தேம்பாவணிக்கு முதன்முறையாக முழு வசனம் எழுதியவர்) அவர்கள் பொன் விழாவில் கலந்துகொள்ள 1979 மார்ச்சு மாதக் கடைசியில் பாண்டிச்சேரிக்குச் சென்ற என்னை திரு பி.எல்.சாமிக்கு அறிமுகம் செய்து வைத்தார். இந்தச் சந்திப்பு புதுவை ஆட்சியர் அலுவலகத்தில் நடை பெற்றது.

பி.எல்.சாமி அவர்களைப் பற்றி நான் சிறிதளவு அறிந்துவைத்திருந்தேன். சங்க இலக்கியங்களில் ஈடுபாடு உடையவர்; 'செந்தமிழ்ச்செல்வி' திங்கள் இதழில் தொடர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகிறவர்;

பி.எஸ்சி. பட்டதாரி (தாவர இயல்); நூல்கள் சிலவற்றின் ஆசிரியர்! இந்த விவரங்களோடு, திரு பி.எல்.எஸ்.ஸை அன்று அவரது அலுவலகத்தில் பார்த்தபோது ஆன்ற விந்தடங்கிய புலமைச் சான்றாண்மைக்கு எடுத்துக் காட்டாகவே அன்னார் எங்களை வரவேற்றதில் எனக்கு வியப்பேற்பவில்லை.

புலவர்மணி சொன்னார் : ''தம்பி, இவரையும் நமது கத்தோலிக்க எழுத்தாளர் பேரவையில் இணைத்துக் கொண்டால் நமக்குப் பெருமை..''

''என்னது இந்துத் தெய்வங்கள் மற்றும் கடவுட் சிலை பற்றிய ஆராய்ச்சிகள் செய்து 'தினமணி சுடர்' போன்ற இதழ்களில் எழுதிவரும் இவரைப்போய் கத்தோலிக்க எழுத்தாளர் என்று எப்படி ஏற்றுக்கொள்வது அண்ணா?''

எங்களுக்கு எதிராக புதுவை மாவட்ட ஆட்சியர் நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்தவண்ணம் பைல்களைப் புரட்டிக்கொண்டிருந்த திரு பி.எல்.எஸ். புன்முறுவல் செய்தார். ''ராயர், கவிஞருக்குப் பதில் சொல்லுங்கள்...'' என்றார் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல்.

''திருச்சபைச் சரித்திரத்தை முதன்முதலில் தமிழில் எழுதினாரே கோவைப்புலவர் பெரியநாயக முதலியார். அத்தமிழ்ப் பெரியாரின் எட்டுப் பிள்ளைகளில் ஒருவர் இவர். அம்மா மதலேன் மரியம்மாளுக்குச் செல்லப் பிள்ளை இந்த லூர்துசாமி.''

புலவர்மணி சொல்லி முடிக்கவில்லை. எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. ''ஐயா, நீங்கள்

கத்தோலிக்கரா? அடடா, இது அலுவலகமாகவல்லவா இருக்கிறது. இல்லை என்றால், அப்படியே எழுந்து உங்களை வாரி அணைத்துக் கட்டி ஆரத் தழுவி மகிழ்வேன்!'' என்றேன் உணர்ச்சி வசப்பட்டு. ''உங்களை நம்மவர் இன்னும் இனங் கண்டுகொள்ளவில்லையே!'' என்றும் ஆதங்கப்பட்டுக்கொண்டேன்.

''தம்பீ, வீரமாமுனிவர் எழுதிய நூல்களைனைத் தையும் அவர் எழுதவில்லை. அவருக்கு ஆசானாக இருந்த சுப்ரதீபக் கவிராயரே எழுதித்தந்தார் என்கிற தப்பறையான பிரச்சாரத்திற்கு முதன் முதலில் சரியான பதிலடி கொடுத்தவர் இவர்தாம். தக்க ஆதாரத்துடன் எழுதிய இவரது கட்டுரைகள் வீரமாமுனிவரை மட்டுமல்ல நம்மையும் தலைநிமிரச் செய்திருக்கின்றன...''

''ஆ, அந்தப் பி.எல்.சாமியும் இவர்தானா? இவரை ஊருக்கு ஊர் அழைத்துச் சிறப்புச் செய்து பாராட்டாமலிருக்கிறோமே... இவர் தமிழுக்கு மட்டுமல்ல... கிறிஸ்துவர்களுக்கு..குறிப்பாகக் கத்தோலிக்கர்களுக்குக் கிடைத்துள்ள பெரும் பேறல்லவா?''

அப்போது திரு.பி.எல்.சாமி அவர்கள் பற்றி, அவரோடு முன்னாளில் திண்டிவனம் புனித அன்னாள் பள்ளியில் பணியாற்றிய பெரும்புலவர் சீ. கோபால கிருஷ்ணன் எம்.ஏ., (இருமாயன்) அவர்களின் கட்டுரை ஒன்றினை எடுத்துக்காட்டினார் புலவர்மணி. அதில் ஒரு நோட்டம்விட்ட என்னைத்

'தமிழை இவர் தனியாக விரும்பிக் கற்றிருக்கலாம். தாமே படித்து வளர்த்துக் கொண்டிருக்கலாம்.

அப்புலமையை விஞ்ஞானத்தோடு இணைத்து ஆய்வு செய்யப் பயன் படுத்திக் கொண்டது நாம் செய்த பேறாகும்..'

என்கிற வரிகள் என்னைக் கவர்ந்தன.

திரு பி.எல்.எஸ். அலுவலகப் பணிகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அண்ணன் ராயர் அடுத்து, 1978 நவம்பர் 'தேம்பாவணித் தீபத்தை' என்னிடம் தந்தார். அட்டைப்படத்தை, வரைபடமாக வரைந்து அச்சிட்டு திரு பி.எல்.சாமி அவர்களை அதில் காட்டியிருந்தார்கள். திரு பி.எல்.சாமி அவர்களைப் பாராட்டிச் சிறப்பிதழ் வெளியிட்டிருக்கிறார் இதழின் ஆசிரியர் ஜி. காணிக்கை சாமி.

இச்சிறப்பிதழில் 'தமிழ்ச் செல்வர்' பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ். என்கிற தலைப்பில் இதழின் இணையாசிரியர் சக்திவசந்தன் எழுதியிருந்த பேட்டிக் கட்டுரை என்னைப் பெரிதும் கவரவே மளமளவென்று படிக்க ஆரம்பித்தேன்.

குடத்திலிட்ட விளக்காக நம்மிடையிலுள்ள நம் எழுத்தாளர் சக்தி வசந்தனின் பேனா என்னமாய் பி.எல்.எஸ்.ஐப்பற்றிச் சொல்லிக்கொண்டு போகிறது? திரு.சக்தி வசந்தன், பேட்டிக்காகப் பி.எல்.எஸ். ஐப் போட்டுத் துருவியிருக்கிறார். அப் பேட்டியில் சக்தி வசந்தன் கேட்கிறார்:

''இன்று தமிழ் எழுத்துலகில் கையாளப்படும் 'செக்ஸ்'பற்றி என்ன கூறுகிறீர்கள்?''

இக்கேள்விக்கு பி. எல். சாமி பதில்:

''இதிலெல்லாம் 'ஆசராம்' பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. இலக் கியத்தில் எந்தக் காலத்தில் 'செக்ஸ்' கையாளப்பட வில்லை?''

தொடர்ந்து இதற்கு எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியத்திலிருந்து 'நலம் உண்டநாரை' யைப் பற்றிச் சொல்லி, 'நலம்' என்பது 'போகம்' என்பதற்குப் பதிலாக அன்று தமிழர்கள் கையாண்ட சொல் என்றும் விளக்கம் தந்திருக்கிறார் அறிஞர் பி. எல். சாமி அவர்கள்.

இப்பேட்டியைச் சக்தி உன்னதமான பரம்பொருள் வரை, அனைத்தையும் ஒரு கவிஞனின் கண்ணோட்டத்தி லிருந்து பார்க்கவும், பரவசப்படவும் அவருக்கு (பி.எல்.சாமிக்கு)த் தெரிந்திருக்கிறது. அந்தக் கவித்துவம் தான் அவரை மற்ற ஆராய்ச்சியாளர்களிடமிருந்து - ஏன் மனிதர்களிடமிருந்தும்கூட தனித்து அடையாளம் காட்டுகிறது!' என்றெழுதுகிறார்.

எனது கண்களில் இந்த வரிகள் நீர்த் திவலைகளைப் பெருக்கிவிடுகின்றன. நான் பெருமிதத்தால் விம்மியபடி நிமிர்ந்து அந்த மாமனிதரைப் பார்க்கிறேன். அவரும் என்னைக் கூர்ந்து நோக்குகிறார் அன்புடன்.

பிறிதொரு நாள் அவரை, வேளாங்கண்ணிக் குரலொலிக்காகப் பேட்டி எடுப்பேன் என்று நான் அன்று நினைக்கவே இல்லை. 1979மார்ச்சுக்குப் பிறகு பல தடவை நான் அங்குச் செல்லும்போதெல்லாம் புதுவை ஆட்சியரைப் பார்த்துத் திரும்புவேன்.

''உங்களை நம்மவர்க்குத் தக்கபடி காட்டுவது எனக்குள்ள கடமை...'' என அந்தச் சந்திப்பிலேயே சொல்லி வைத்தேன்.

அவரோ''பிற சமயத்தார் என்னைப் புரிந்துகொண்டு எவ்வளவோ கௌரவிக்கிறார்கள். நமக்குத்தான் அந்த பரந்த மனப்பான்மை இல்லையே..'' என்றார்.

பெற்ற தாய் தூக்கி, உச்சி மோந்து என்னைச் சீராட்டவில்லையே என்று ஆதங்கப்படுகிற குழந்தையின் உணர்வு அவ்வார்த்தைகளில் உள்ளதை நான் உணர்ந்து கொண்டு திரும்பியவன், பெரம்பலூர் புனித பனிமாதா திருத்தல விழாவிற்குத் தலைமை ஏற்கச் சொல்லிப் பாராட்டுகிறேன்.

நகரமே விழாக்கோலம் பூண்டு அவர் அங்கு தங்கிய இரு நாட்களிலும், அவருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் வாழ்த்துச் சொல்கிறது. பூரித்துப் போகிறார் திரு பி.எல். எஸ்.

ஊருக்குத் திரும்பியதும் எனக்கு எழுதுகிறார்.

''கவிஞர் அமலன் அவர்களை ஓர் உணர்ச்சி வசப்படும் இயல்புள்ளவர் என்று மட்டும் நினைத்தது தப்பாகி விட்டது. சொல்லியது போலவே செய்து காட்டுகிற செயல் வீரர் என்றும் புரிந்துகொண்டேன். பெரம்பலூர் மக்கள்தான் எனக்கு முதன்முதலாக மாபெரும் வரவேற்பு அளித்துச் சிறப்பித்தவர்கள். சாதி சமய பேதமின்றி மக்கள் கூடியிருந்து, நகர சபையும் வரவேற்று வாழ்த்தளித்தது எங்களை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது....''

பிறகு சென்ற நவம்பரில் தவத்திரு.தஞ்சைஅமுதன் அடிகள், வீரமாமுனிவர் 3ஆவது நூற்றாண்டு நிறைவு விழாவிற்குத் திரு பி.எல்.சாமி, ஐ.ஏ.எஸ். அவர்களை அழைத்துக் கௌரவித்தார்கள்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் புதுச்சேரிக் கிளை 11.5.81இல் பெரியதொரு விழாவினை எடுத்துப் பி.எல்.எஸ். அவர்கட்குச் **சங்கநூல் பேரறிஞர்** என்கிற பட்டத்தைப் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் தலைமையில், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறளார் முனிசாமி போன்றோர் முன்னிலையில் தந்து சிறப்பித்திருக்கிறது.

இவ்விழாவுக்குப் புதுவை அரசின் எல்லா அமைச்சர்களும் வருகைதந்து பி.எல்.சாமி அவர்களைப் பாராட்டியது குறிப்பிடத் தக்கது.

பி.எல்.எஸ்.ஐச் சாதாரணமாக 'செந்தமிழ்ச் செல்வர்' என்றும் போற்றுகின்றனர். இதற்குரிய காரணத்தை 'வேளாங்கண்ணிக் குரலொலி' பேட்டிக்காக அண்மையில் நான் சென்றபோது கேட்கிறேன்.

அதற்கு பி.எல்.எஸ். ''சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் திங்கள் இலக்கிய இதழான செந்தமிழ்ச் செல்வியில் நான் தொடர்ந்து எழுதுவதால் அப்படி அழைக்கின்றனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அதிபர் சுப்பையா பிள்ளைக்கு என்னை ஆரம்பத்திலேயே சரியாக இனங் கண்டு அறிமுகப்படுத்தியவர். இன்றைக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருக்கும் வி.ஐ.சுப்பிரமணியம் அவர்களே'' என்று நெஞ்சார்ந்த

நன்றிப் பெருக்கோடு துணைவேந்தர் வி.ஐ. சுப்பிர மணியம் அவர்களை நினைவு கூர்கிறார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக 'சிண்டிகேட்' உறுப்பினராகவும், புதுவை மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும், புதுவை வரலாற்றுச் சங்க முதல்வராகவும் கௌரவப் பொறுப்பிலுள்ள திரு பி.எல். சாமி ஐ.ஏ.எஸ். அவர்கள் சிறந்த ஆட்சியாளர்.

பி.எல்.எஸ்-ஸின் நேர்மையும், திறமையும் அவரை ஒரே சமயத்தில் ஆளுநரின் செயலராகவும், அரசுச் செயலராகவும், புதுவைஆட்சியராகவும்வைத்திருக்கின்றன.

இவ்வாறு மூன்று பதவிகளையும் சேர்ந்து ஒரே சமயத்தில் வகித்தவர்கள் புதுவை அரசு வரலாற்றிலேயே வேறு எவரும் இல்லையாம். தற்போது புதுவை அரசின் வருவாய்த் துறைச் செயலராகவும் புதுவை பெருமாவட்ட ஆட்சியராகவும் இருக்கிற பி.எல்.சாமி அவர்கட்கு, தமிழ் ஆராய்ச்சி செய்ய எவ்வாறு நேரம் கிடைக்கிறதோ?

நடந்து முடிந்த ஐந்து உலகத்தமிழ் மாநாட்டிலும் இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிக்கப் பட்டிருக்கின்றன. இன்றுவரை 600க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் 10க்கு மேற்பட்ட ஆராய்ச்சி நூல்கள்!

உலகளாவிய புகழ் பெற்றுள்ள நம் அறிஞரைச் சரியாக நம்மவர் புரிந்துகொள்ளாதது யார் குற்றமாக இருப்பினும் சரி, இனியாவது திருவாளர் பி.எல்.சாமி அவர்களை நாம் பெரிதும் பாராட்டிக் கௌரவிக்கக்

கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப் பாராட்டுவதும் நமக்கு நாமே பெருமை சேர்த்துக் கொள்வது போலத்தான்!

குரலொலி பேட்டிக்காக நான் சென்ற சமயம் திரு.பி.எல்.எஸ். ரொம்பவும் 'பிஸி'யாக இருந்தார். மதியம் வீட்டில் சந்திக்க அவரது மனைவியார் மங்களவதி அம்மையார் ஏற்பாடு செய்து தந்தார்கள்.

''சாப்பிட்டு விட்டுப் பேசலாமே?'' என்றார் செந்தமிழ்ச்செல்வர்.

நானும் தலையசைத்தேன். மிகு பணியிலும் ஓய்வுக்குச் சற்றும் செல்லாமல், ''ஆரம்பியுங்கள்....'' என்றார் விருந்து முடிந்தவுடன்.

பீடிகை எதுவும் போடாமலேயே, ''ஏன் நீங்கள் பி. லூர்துசாமி என்கிற இயற்பெயரைச் சுருக்கிப் பி.எல்.சாமி என்று வைத்துக் கொண்டுள்ளீர்கள்?'' என்றேன், எதையோ பெரிய காரியத்தைச் செய்து விட்டவன் போல.

சிரித்துக்கொண்டே சொல்கிறார்:

''நான் ஹைதராபாத்தில் கொஞ்சகாலம் அஞ்சல் துறையில் பணிசெய்தேன். பணிக்கு வந்த தொடக்க காலம் அது. அங்குள்ள தெலுங்கர்கள் லூர்துசாமியை 'லவ்ருடு சாமி' என்று குழறிக் குழறிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் சௌகரியத்திற்காகப் பி.எல்.சாமி என்று மாற்றிக் கொண்டேன். அதுவே, ஐ.ஏ.எஸ். அளவிலும் நிலைத்த பெயராகிவிட்டது...''

''பேராயர் டி.எஸ்.லூர்துசாமி தங்களோடு படித்தவர் என்கிறார்களே?''

''ஆமாம்... கடலூரில் புனித வளனார் பள்ளியில் நாங்கள் இருவரும் ஒன்றாகப் படித்தோம். எங்களுக்குத் தமிழ் ஆர்வம் ஏற்படக் காரணமாயிருந்தவர் திரு சீனிவாசாச்சாரியர் என்பவர்.

பேராயரும் தமிழில் கெட்டிக்காரர்.

ஒருசமயம் வகுப்பில் தமிழாசிரியர் புறநானூற்றுப் பாடல் ஒன்றினைக் கரும்பலகையில் எழுதிச் சுவைபட நடத்தியதும் அதை அழித்துவிட்டு அப்பாடலை உடனே சொல்லும்படி கேட்டார்.

நானும் அவரும்தாம் அப்பாடலை உடனே ஒப்பித்தோம். பிறகு யாராலும் அப்பாடலைச் சொல்ல முடியவில்லை...''

''ஏன் கிறிஸ்தவ இலக்கியங்களில் உங்கள் கவனம் செல்லவில்லை?''

''என் தந்தையார் பெரியநாயகம் அவர்களே பெரும்புலவராயிற்றே? அறிவியலில் பி.எஸ்ஸி.பட்டம் பெற்றதும், அறிவியல் தொடர்பாகவே சிந்தித்திருந்த, இருக்கிற எனக்குக் கிறிஸ்தவ இலக்கியங்களில் கவனம் செல்லவில்லை. அதற்காக நம்மவரை விட்டுக்கொடுக் கிறவனுமல்ல. வீரமாமுனிவர் பிரச்சினையில் ஆராய்ச்சி பூர்வமாக முதற்குரல் எழுப்பியவனே நான்தான்...!''

''அண்மைக் காலமாகத்தான் உங்கள் பெயர் பிரபலப்படுவதாக நான் உணர்கிறேன்... ஏன் அப்படி?''

''நான் எழுதிய நூல்கள் பி.ஏ.,பி.எஸ்சிக்குப் பாடமாகத் தற்போதுள்ளன. ஒன்பதாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலிலும் நான் எழுதிய கட்டுரை ஒன்று இடம் பெற்றுள்ளது. எனது நூல்களை மக்கள் பரவலாக இப்போதுதான் படிக்க ஆரம்பித்திருப்பதும் என் பெயர் பரவலாவதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.....''

''அறிவியல் தமிழை அறிமுகப்படுத்திய அறிஞர் பெருமகன் எனத் தங்களைக் கற்றறிந்த வட்டாரம் சொல்லி வருகிறதே... இதுபற்றி உங்கள் கருத்து?''

''சங்க காலத்திலேயே தமிழர்கள் அறிவியலை அறிந்திருந்தார்கள். அதுவும் துறைதோறும் துறைதோறும் பகுத்துணர்ந்திருக்கிறார்கள். இதனை எனது ஆராய்ச்சி நூல்கள்

(1) சங்கஇலக்கியத்தில் செடி கொடி விளக்கம்.

(2) சங்கஇலக்கியத்தில் விலங்கின விளக்கம்

(3) சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்

(4) சங்க நூல்களில் மீன்கள்

(5) சங்கநூல்களில் மணிகள்,

(6) சங்க நூல்களில் விந்தைப் பூச்சி,

(7) இலக்கியத்தில் அறிவியல்

என்கிற நூலும் விரிவாக எடுத்துச் சொல்கின்றன. எனவே இவற்றைப்படித்தவர்கள் அப்படிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன்.

என்னுடைய ஆராய்ச்சி முடிவுகளுக்குப் பின்னர் தான் அறிவியலில் தமிழுக்கென்று, தஞ்சைத் தமிழ்ப்

பல்கலைக்கழகம் ஒரு துறையினையே வைத்திருக்கிறது என்றுகூடச் சொல்கிறார்கள். எல்லாம் படைத்தவனுக்கே இது பெருமை..."

இந்தச் சிறிதுநேர உரையாடலுக்குள்ளாகவே இருமுறை அலுவலகத்திநின்று 'போன் கால்' வருகிறது. உதவியாளர் ஏதோ கையெழுத்துக்காகக் கோப்பைத் தருகிறார்.

"சரி, முடித்துக்கொள்வோமா?" என்கிறார் சங்க நூற் பேரறிஞர். பல்வேறு அலுவல்களினால் அவருக்கு ஏற்பட்டிருக்கும் அலுப்பினை அறிகிறேன். நேரம் மதியம்; சாப்பாட்டை முடித்துக்கொண்டு பேசுகிறோம். ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடிய கொஞ்ச நேரத்தை நான் சாப்பிட்டுவிட்டேன். எழுந்த அவரிடம்,

"இறுதியாக ஒன்று, உங்கள் எதிர்காலத் திட்டம் ஏதாவது?"

எழுந்து நின்றவர் சற்று மலைக்கிறார்...

"மேலும் மேலும் ஆராய்ச்சி செய்வது... அறிவியல் தமிழை ஜனரஞ்சகமாக்குவது..."

என்றவர், கைகூப்பி எனக்கு விடை தருகிறார்.

அவரது மனைவி மங்களவதியார் அவரை அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தப்படுத்துகிறார்.

அந்த அம்மையாரின் தெய்வபக்தி, அவரின் கணவருக்கு என்றும் துணைபோவதை நான் பல சந்தர்ப்பங்களில் பார்த்து மனம் நிறைந்தவன். அதே நிறைவுடன் அன்றும் திரும்பினேன்.

முகம்

இதழ்: 186

அக்டோபர் 94

சங்கநூல் அறிவியல் அறிஞர் பி.எல். சாமி!

திரு.பி.எல்.சாமி, கோவையில் 1925ஆம் ஆண்டு காந்தி பிறந்த அக்டோபர் 2ஆம் தேதி பிறந்தார்.

திண்டிவனத்தில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டுத் திருச்சியில் தூய வளனார் கல்லூரியில் இளங்கலைப் படிப்பை அறிவியல் துறையில் படித்துவிட்டு, ஓரிரண்டு ஆண்டுகள் ஆசிரியப் பணிசெய்து, பின்னர் புதுவை மாநிலஅரசில் கிராமவளர்ச்சித் திட்ட உயர் அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியில் அமர்ந்து, தகுதி, திறமையின் அடிப்படையில் ஐ.ஏ.எஸ். ஆகிச்

செயலாளராகவும் மற்றும் ஆட்சித் தலைவராகவும், துணைநிலை ஆளுநரின் செயலாளராகவும் நான்கரை ஆண்டுகள் பணி புரிந்தார்.

பணி ஓய்வுக்காலம் முடிவதற்கு ஆறு திங்களுக்கு முன் கூட்டியே ஓய்வு பெற்றுத், தமிழ்ப்பணி செய்வதற்காகத் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் தமிழில் தயாரிக்கப்படவிருந்த அறிவியல் களஞ்சியத்தின் முதன்மை ஆசிரியராகப் பணி புரிந்தார்.

அங்கிருந்து விடுபட்டவுடன் முன்னர் புதுவை மாநில ஆட்சித்தலைவராக அவர் இருந்தபோது அரிதின் முயன்று நிறுவிய புதுவை திராவிட மொழியியல் பண்பாட்டு நிறுவனம் முன்வந்து கொடுத்த ஓர் ஆராய்ச்சித் திட்ட ஊதியத்தை பெற்றுச் சங்கஇலக்கியத்தில் விலங்கியல், தாவரவியலைப்பற்றிய அரிய பெரிய ஆய்வு நூலை உலகத்தார் அறிய வேண்டி ஆங்கிலத்தில் எழுதி வருகின்றார்.

இந்த நிறுவனத்தின் பெயரில், 'திராவிட' என்ற பெயர்ச் சொல்லை வட நாட்டிலிருந்து புதுவைக்கு வந்த அரசு அதிகாரிகளால் தூண்டப்பட்டுத் தமிழனாகப் பிறந்த ஒரு கோழை மந்திரியால் மாற்றப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நூல் உயிரினங்களின் நிறப் புகைப்படங்கள் மற்றும் கறுப்பு வெள்ளைப் புகைப் படங்களுடன் வெளிவரும்.

இவர் கல்லூரியில் இளங்கலை மாணவனாக இருந்தபோதே சங்கநூல்களை அறிவியல் கண்ணோட்டத்

துடன் ஆராய்ந்து வந்தார். அவற்றில் பல அரிய அறிவியல் மற்றும் இயற்கையியல் செய்திகள் இருப்பதைக் கண்டார். அவற்றை இக்கால அறிவுபூர்வமான நவீனத் தமிழுலகம் உணர வேண்டுமென்பதற்காக முதலில் தமிழ்ப் பதிப்புத்துறையின் சிறப்பு மிக்க கழக வாயிலாக வெளியிட்டார்.

முதல் நூலான' 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்' அட்டையில் அழகிய, தமிழருக்கே உரிய தமிழ்க்கடவுள் முருகனுக்குரிய காந்தள்மலர் நிறப்படத் துடனும் மணி மருதம்பூ போன்ற நிழற் படங்களுடனும் வந்தது. அந்த நூலுக்குப் பிறகு இதுவரை நிறப்படங் களுடன் எந்த நூலும் தமிழ் நூற்பதிப்பு உலகில் வெளிவரவில்லை. இந்த நூல் சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டலில் மறைந்த முன்னாள் முதல்வர் பக்தவத்சலனார் தலைமையில், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பாராட்ட வெளியிடப்பட்டது.

பாராட்டுரை கொடுத்தவர்களில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ந. சஞ்சீவி போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவராவர்.

இவருடைய இரண்டாவது நூலை முன்னாள் தலைமை நீதிபதி இஸ்மாயில் அவர்களின் தலைமையில் நாவலர் நெடுஞ்செழியன் வெளியிட்டு, 'யாரும் நுழையாத ஒரு சிறப்புத்துறையில் நுழைந்து ஆராய்ந்திருக்கும் திறன் போற்றத்தக்கது' என்று பாராட்டினார். இரண்டு நூல்களும் தமிழ்வளர்ச்சித் துறையின் பரிசுகளைப் பெற்றன.

சென்னை சேகர் பதிப்பகத்தில் சங்கநூல்களில் மீன்கள், சங்க நூல்களில் செடி,கொடிகள் என்ற தலைப்பு களைத் தொடர்ந்து மொத்தம் பத்து அரிய ஆய்வுநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு பொங்கல் விழாவில் மூன்றாவது தடவையாக, 'சங்க நூல்களில் அறிவியல் கலை' என்ற நூல் தமிழ்வளர்ச்சித் துறையினரின் பரிசைப் பெற்றது.

தமிழ் இலக்கியத்தில் ''தாய்த் தெய்வ வழிபாடு'' என்ற நூல் என்.சி.பி.எச்.பதிப்பகத்தாராலும் ''தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு'' என்ற நூல் வானதி பதிப்பகத்தாராலும் வெளியிடப்பட்டன. இதுவரை பதினெட்டு ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்துள்ளன.

இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் செந்தமிழ்ச்செல்வி, ஆராய்ச்சி, தினமணிசுடர், தினமலர், அமுதசுரபி மற்றும் ஆங்கில இதழ்களான 'இந்து' நாளிதழ், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இதழ், தமிழ்ப் பல்கலைக்கழக இதழ் ஆகியவைகளில் வெளிவந்துள்ளன.

இதுவரை ஐநூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. திரு நா. வானமாமலை அவர்களின் சிறந்த 'ஆராய்ச்சி' என்ற ஆய்வு இதழில் இவர் எழுதிய மன்பதை இயல் பற்றிய கட்டுரைகள், வடக்கு மலபாரில் நன்னன் நினைவுகள் முதலிய கட்டுரைளை உருசிய தமிழ் அறிஞர்களான ருடில், டுரீப்னிகோவா போன்ற அறிஞர்கள் பாராட்டி வானமாமலைக்குக் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராலும் 'தினமணி' நாளிதழ் ஆசிரியராக இருந்த திரு ஐராவதம் மகாதேவன் அவர்களாலும், 'தினமலர்' ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களாலும் பாராட்டப்பட்டுள்ளார் இவர். தமிழ் இலக்கியத்தில் அறிவியல், மன்பதை இயல், நாணயவியல் முதலிய பலதுறைகளில் புகுந்து பன்முக நோக்கில் ஒருங்கிணைத்து ஆராய்ந்துள்ளார்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் புதுவைக் கிளைக்கழகம், தமிழகப் புலவர் குழுவினர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் குன்றக்குடி அடிகளார், திருக்குறளார் முனிசாமி, பன்மொழிப் புலவர் அப்பாத் துரையார் ஆகியோர் பாராட்டிப் பேசி, ''**சங்கநூற் பேரறிஞர்**'' என்ற பட்டத்தைத் தந்தனர். அப்போதைய புதுவை மாநில முதன்மந்திரி பொன்னாடைப் போர்த்து ஒரு பாராட்டுக் கேடயத்தையும் அளித்தார்.

சங்கத் தமிழ் அறிவியல் வெளிப்பாட்டில் தனித் தன்மை படைத்தளித்த இப் பெருமகனார் இளமை யிலேயே புரட்சிக் கவிஞரின் பாராட்டைப் பெற்றதை மிகவும் மகிழ்வோடு தெரிவிக்கிறார்.

புதுவைப் புகழ் நிலத்தில் இவரும் ஓர் ஒளி மணியாய் விளங்குவார். சில ஆண்டுகள் உடல் நலமின்றி இருந்து, 3.6.99 வியாழன் இரவு மறைந்தார்.

மதிப்புரைகள்:

நியு டைம்ஸ் அப்சர்வரில்
13.11.78இல்
வெளியான ஒரு கடிதம்.

பி. எல். சாமி

பி.எல்.சாமி அவர்களைப் பாண்டிச்சேரியின் வளர்ச்சிக்குப் பலவகையிலும் பணியாற்றும் ஒரு திறமையான ஐ.ஏ.எஸ் அதிகாரியாகக் கண்டிருக்கும் மக்கள், அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறம்பட எழுதும் புலமை மிகுந்த படைப்பாளர் என்பதையும் இன்று கண்டு கொண்டிருப்பார்கள். உங்கள் இதழில் கவனத்தை ஈர்க்கக் கூடிய அவரது பல படைப்புகள் வெளியாகும் வரை இது பலருக்கும் தெரிந்திருக்காது.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நிர்வாகப் பணிகளைத் தவிர மற்ற எல்லாவற்றிலுமிருந்தும் விலகியுள்ளவர்கள் என்று எண்ணிய காலம் மலையேறிவிட்டது.

பாண்டிச்சேரிக் குடிமகன் ஒவ்வொருவரும் மற்று வேறு மாநிலத்தவரும் இந்த மாநிலத்தின் பண்டைய வரலாற்றைப் பற்றிப் படிப்பதில்

மிகவும் பயனடைந்தவர்களாக மகிழ்ச்சி யுற்றிருப்பார்கள்.

சாமி அவர்கள் பாண்டிச்சேரியில் புகழ்பெற்ற முக்கியமானவர்களைப் பற்றியும் அங்கு நடைமுறையிலிருந்த பண்டைய பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகளைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார்.

பறவைகள், மிருகங்கள் மற்றும் செடி கொடிகள் குறித்த இவரது ஆராய்ச்சிகளும் குறிப்பிடத் தகுந்தவையாகும். பண்டையப் பதிவேடுகளை ஆய்ந்து கண்டு அவர் அறிவித் திருக்கும் உண்மைகள், பல ஆண்டுகளாக ஆய்ந்து வரும் ஆராய்ச்சி மாணவராகவே அவரைக் காட்டுகின்றன.

தங்கள் பத்திரிகையின் மூலமாக, சாமி அவர்கள் பெரிதும் மக்களுக்கு இத்தகைய உண்மைகளைப் புகட்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாண்டிச்சேரி. **கிருஷ்ணமூர்த்தி**
3. 11. 78

★

பி. எல். சாமியின் மரியதாஸ் பிள்ளை எனும் கட்டுரை குறித்த மதிப்பீடு.

மரியதாஸ் பிள்ளையின் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த படைப்புகள் இன்றுவரை புதைக்கப்பட்டுக் கிடந்ததை வெளிச்சமிட்டு வெளிக் கொணர்ந்த சிறப்பான கட்டுரையாகத் தங்கள் வார இதழில்,

(நியு டைம்ஸ் அப்சர்வர் - 9 அக்டோபர் 78) திரு பி.எல். சாமி அவர்கள், மரியதாஸ் பிள்ளை குறித்து எழுதியிருந்ததைப் படிக்க நேர்ந்தது.

இவ்வகையில் சாமி அவர்கள் வரலாற்று அறிவியலுக்கு மகத்தானதொரு சேவையை ஆற்றியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். மரியதாஸ் பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலத்தே நிகழ்ந்த சிறப்புமிக்க வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிட்டிருப்பதோடு, பிள்ளை அவர்களின் கடைச் சங்க கால ஆய்வு குறித்த செய்திகளையும் ஆய்ந்திருக்கிறார்.

மரியதாஸ் பிளையைப் பற்றிக் குறிப்பிடத் தகுந்த பல உண்மைகளை அவர் வெளிப்

படுத்தியிருக்கிறார். பிரெஞ்சு மொழியில் பாகவத புராணத்தை அவர் புனைந்திருப்பதை ஆதரமாகக் கொண்டே பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் தென்னிந்திய வரலாற்றைப் படைத்துள்ளார் என்கிறார் சாமி.

வரலாற்றுத் துறைக்குச் சாமி அவர்கள் செய்திருக்கும் மகத்தான பணி, பதினெட்டாம் நூற்றாண்டில் பாண்டிச் சேரி பெற்றிருந்த பெரும் புகழினை வெளிப்படுத்திய வரான மரியதாஸ் பிள்ளையின் போற்றத் தகுந்த வரலாற்று அறிவினையும் ஆய்வினையும் வெளிப்படுத்தியதோடு, பிற்கால வரலாற்று ஆய்வாளர்கள் பாண்டிச்சேரியைப் பற்றிய உண்மைகளை அறியவும், ஆய்வு செய்து மேலும் அரிய உண்மைகளை வெளிப் படுத்தவும் புதுவையிலுள்ள 'ரோமன் ரோலண்ட் நூலகத்தில் கிடைக்கின்ற பதிவு ஏடுகளையும் பத்திரிகைகளையும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று உந்தி யதையும் குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு பாண்டிச்சேரி பொதுமக்கள் பி.எல். சாமிக்குப் பெரிதும் கடன்பட்டவர்கள் ஆகின்றார்கள்.

- வி. சுப்பையா

இண்டியன் எக்ஸ்பிரஸ்

ஜூன் 28, 1983

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 'தமிழ் நாகரிகம்' எனும் காலாண்டு ஆய்வு இதழில் வெளியான திரு பி.எல்.சாமி அவர்களின் கட்டுரை குறித்து, இண்டியன் எக்ஸ்பிரஸில் வெளியான மதிப்புரை.

திரு சாமி அவர்கள் சங்க காலத்தில் வடக்கு மலபார் பகுதியை ஆண்ட மன்னன் நன்னன் பற்றி எழுதியிருப்பது அறிவியல் அணுகுமுறையில் படைக்கப் பெற்ற ஆழ்ந்த நுட்பமான சிறந்த வரலாற்றுக் கட்டுரையாகத் திகழ்கிறது.

★

இந்தியன் எக்ஸ்பிரஸ்

22 ஏப்ரல் 1984

தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு

இந்த நூலில் உள்ள 10 கட்டுரைகளில் ஒவ்வொரு கட்டுரையும் நாட்டுப்புற இலக்கியத்தில் குறிப்பிட்ட ஒரு கொள்கையைச் சார்ந்ததாக அமைந்துள்ளது. ஒரு கட்டுரை தமிழில் புத்த ஜாதகக் கதைகள் வகிக்கும் இடத்தை ஆய்கிறது. இன்றளவும் பாண்டிச்சேரியில் பிரபலமாக உள்ள ஒரு விளையாட்டின் பிரெஞ்சு மூலத்தை இது ஆராய்கிறது.

ஆசிரியரின் வரலாற்றறிவு, மொழியறிவு, மாந்தரியல்பு குறித்த அறிவு போன்றவை இந்நூலில் கணிசமாக வெளிப்பட்டுள்ளன. பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட கட்டுரை களாயிருந்தாலும் இத்தொகுப்பில் அவற்றிற் கிடையே உள்ள தொடர்பு புலப்படுகிறது. அவை பல்வேறு இனமாந்தரின் வாழ்க்கையினையும் அனுபவத்தையும் அறிவதற்குப் பெரிதும் பயனாகின்றன.

தமிழில் இவ்வாறான நூல்கள் மிக அரிதாகவே உள்ளன. நல்ல புலமைக்கும் புரிதலுக்கும் சான்று பகரும் படைப்பு வாசகர்களுக்கு அபூர்வமாகவே கிடைக்கும் ஒன்றாகும்.

★

ஈழமும் ஸ்ரீலங்காவும்

பி. எல். சாமி

(ஆங்கிலக் கட்டுரை)

ஸ்ரீலங்கா எனும் பெயர் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிறகே தெரிய வந்திருக்கிறது என்று புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியர் டாக்டர் சங்காலியா குறிப்பிட்டிருக்கிறார்.

சிலோன் தாமரலிப்டி (TAMARALIPTY) என்றுதான் பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அசோகரைப்பற்றிய அறநூல்களில் தாம்ரபரணி என்றே காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்காவைச் சிஹாலே (Sihale) என்று குறிப்பிடுவதும் மிகமிகப் பிற்காலத்தில் ஏற்பட்டதே என்றும் அவர் கூறுகிறார்.

சீன யாத்ரிகர் பாஹியான் (ஐந்தாம் நூற்றண்டு), ஹுவான் சுவாங், (ஏழாம் நூற்றாண்டு) (I-tsing) (எட்டாம் நூற்றாண்டு), ஆகியவர்கள் சிம்ஹாலா என்றும் தாம்ரபரணி என்றுமே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கி.மு.முதலாம் நூற்றாண்டுக்கும் கி.பி.மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த தமிழ்-பிராஹ்மி குறிப்புகளிலும் முதல் இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டுச் சங்க இலக்கியத்திலும் ஸ்ரீலங்கா என்பதற்கு ஈழம் என்னும் சொல் ஒரு புலவரைக் குறிப்பிடும் வகையில்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் அனைக்கொட்டை (Anai koddai) என்னும் ஊரில் கிடைத்த தமிழ்-பிராஹ்மி ஓலைச் சுவடியிலிருந்தும் இக் கருத்தே பெறப்பட்டுள்ளது என்கிறார் திரு ஐராவதம் மகாதேவன். அந்தக் குறிப்பு கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகும்.

டாக்டர் சங்காலியாவின் கருத்தின்படி இராமாயணம் கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னதாக எழுதப்பட்டதாகாது என்றும் தற்போதுள்ள இலங்கை என்பதும் இராவணனுடைய இலங்கை என்பதும் ஒன்றன்று என்றும் தெரியவருகின்றன. இராமாயணத்துச் சிலோன் என்பது, ஜபல்பூருக்கு அண்மையில் இராவணனால் ஆளப்பட்ட ஒரு சிறு பகுதியே என்பதைப் பல சான்றுகளோடு அவர் உறுதிப்படுத்துகிறார்.

அவர் குறிப்பிடுவதில் ஒத்துக்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு சான்று, தென்னிந்தியாவிலும் சிலோனிலும் சால மரங்கள் கிடையாது என்பதாகும். அவர்கூறும்சான்றுகள் ஒத்துக்கொள்ளப்பட வேண்டி யவையாக இருப்பினும், இலங்கையை ஆண்ட இராவணன் கதையான இராமாயணம் என்பது காலத்தால் மிகவும் பிந்தியது என்பதை ஏற்பதற்கு இல்லை.

கி.மு. இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சங்கநூலான அகநானூறு பாடல் 70இன் மூலம், இராமன்,இலங்கையைக் கடக்க முயன்றான் என்ற சேதி நமக்குக் கிடைக்கிறது. எனவே இராமாயண காலம் என்பது கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்தியது என்பது புலனாகிறது.

மற்றொரு சங்கநூலான புறநானூறு (பாடல் 378).

'இராவணனால் வான் வழியே சீதை கடத்தப் பட்டபோது கீழே பூமியில் விழுந்து கிடந்த சீதையின் ஆபரணங்களை அணிந்துகொள்ள வானரங்கள் முயன்று கொண்டிருந்தன' என்னும் குறிப்பைத் தருகிறது.

திரு சங்காலியா எனக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றில் சில கேரள வரலாற்றாசிரியர்கள் தரும் தகவலின் படி சங்க இலக்கியங்கள் கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்குப் பிந்தியது என்று தாம் கருதுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

சங்க இலக்கியங்கள் அத்துணையுமே கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிந்தியது என்று கூறிவிட முடியாது.

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரும் மற்றும் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்களும் இதே கருத்தைக் கொண்டுள்ளனர். திரு.ஐராவதம் மகாதேவன் ஐ.ஏ.எஸ். அவர்கள் தமிழ்-பிராஹ்மி குறிப்புக்களை வைத்துச் சங்ககாலம் என்பது கிறித்தவ சகாப்தத்தின் ஆரம்பகாலமே என்பதைத் திட்டவட்டமாக நிரூபித்துள்ளார்.

கருருக்கு அண்மையில் உள்ள புகளூரில் கிடைத்த தமிழ் பிராஹ்மியில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களில் பதிற்றுப் பத்தில் குறிப்பிடப்பெறுகிற சேர மன்னனின் பெயர் பதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியும் மாங்குளம் கல்வெட்டிலிருந்து அறிய முடிகிறது.

அவ்வாறான தமிழ் - பிராஹ்மி எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட சின்னங்கள் கிறித்துவ சகாப்தத்தின் ஆரம்ப காலத்திற்கு முந்திய காலத்திற்குக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சேர்ந்ததாகும்.

இருப்பினும், 5 நவம்பர் 1983 'தி டைம்ஸ் ஆப் இண்டியா' தீபாவளி இதழில் ஒரு கட்டுரையில், டாக்டர் சங்காலியா இராமாயணம் முதற்பகுதி எழுதப்பட்ட காலம் 'கி.மு.500,' இரண்டாம் பகுதி கி.மு. 500க்கும் கி.மு.300க்கும்இடைப்பட்ட காலமாக இருக்கக்கூடும் என்றும் எழுதியுள்ளார்.

ஜாகோபி, மோனியர் வில்லியம்ஸ் ஆகியோர் கருதுவது போல் இராமாயணம் புத்தர் காலத்துக்கு முற்பட்ட நிகழ்வு என்பதையும் அக்காவியம் படைக்கப் பெற்றது கி.மு.ஐந்து ஆறு நூற்றாண்டுகளில் இருக்கலாம் என்பதையும் சங்காலியா ஒத்துக் கொள்கிறார்.

எனவே அந்தக் கதையானது வாய்மொழி மூலமாகத் தமிழ்நாட்டுக்குக் கி.மு.100க்கும் கி.பி.100க்கும் இடையேயான காலத்தில் பரவியதற்கு வாய்ப்புஉண்டு என்றுகொள்ளலாம். தொலைதூரத்திலுள்ள தென்பகுதிக்கு

அக்கதை பரவியபோது, மூலக்கதை யிலிருந்து பெரும் மாறுதல் ஏற்படவும் வழியுண்டு என்பது கண்கூடு.

சிலோன் வம்சாவளிபற்றிக் கூறும்மகா வம்சத்தின் படி கிறித்து பிறப்பதற்கு முன்பே தமிழர்கள் சிலோனில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் டாக்காவில் கிடைத்த பதிவேட்டின்படி, முதன்முறையாக இலங்கையில் இராட்சதர்கள் குடியேறி வாழ்ந்தது குறிப்பிடப்படுகிறது என்று டாக்டர் சங்காலியா கூறுகிறார்.

சங்க இலக்கியமான புறநானூறில் ஒரு பாட்டிலும் இராட்சதர்கள் என்பதனைத் தமிழில் குறிக்கும் அரக்கன் (இராவணன்) என்ற பெயர் வருகிறது.

சைவ சமயக் குரவரான திருஞான சம்பந்தர், இராவணன் கைலாயமலையைத் தூக்க முற்பட்டபோது சிவபெருமானால் தண்டிக்கப்பட்டான் என்று பாடுகிறார். தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி திருஞான சம்பந்தரின் காலம், ஏழாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதன்று என்பது உறுதியாகிறது.

சிறுபாணாற்றுப் படை எனும் சங்கநூலில் ஸ்ரீலங்காவை மாவிலங்கை (மாஇலங்கை) என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

சிலோன் குறித்த பழைய வரலாற்றில் கோடிக் கரையில் நிகழ்ந்ததாக **இராமகோனா** நிகழ்ச்சி, மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கடலால் கொள்ளப்பட்ட சங்காலியாவின் யூகங்கள் இந்தியச்

சான்றுகளை வைத்தே அமைந்திருக்கின்றனவேயொழிய அண்டையிலுள்ள தமிழ்நாட்டின் மிகப் பழமையான, ஆதாரபூர்வமான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டவை அல்ல.

இராமனைப் பற்றிய கதை தமிழ்நாட்டுக்குச் சங்க காலத்திலேயே அறியப்பட்டதாக உள்ளது. கோடிக் கரையில் பறவைகளின் சரணாலயம் இன்றளவும் உள்ளது. இராமன் கோடிக்கரையில் கடல்கடந்து இலங்கைக்குச் செல்ல முயன்றான் என்பது கதை.

எண்ணமுடியாத அளவில் பறவைகள் கூடி எழுப்பிய பேரொலியை இராமன் நிறுத்தினான். இது இராமனுடைய வீரச் செயல்களுள் ஒன்றாகக் குறிக்கப் படுகிறது.

சுருங்கக்கூறின், ஸ்ரீலங்கா என்பது தமிழர்களுக்கு ஈழம் என்றும் இலங்கை என்றும் கிறித்தவ சகாப்தத்துக்கு முந்தைய காலத்திலும்,ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவப் பெரியார்காலத்திலும் அறியப்பட்டிருக்கிறது.

இலங்கை தொடர்பான இராமனுடைய கதை கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட கதையாக இருந்தது என்பதற்கு, சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

தமிழில்· **பூவை அமுதன்**

அறிஞரின் நன்றியுள்ளம்!

கருவிலே திருவுடையார்

திரு பி. எல். சாமி, பி. எஸ்சி.,
துணைச்செயலர், புதுவை அரசு, புதுச்சேரி.

வ. சுப்பையா பிள்ளை பவளவிழா மலர்

நான் கல்லூரிப் படிப்பை முடித்து இரு ஆண்டுகள் இருக்கும். எனக்குப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத் துரையவர்களின் நட்புக் கிடைத்தது.

சங்க இலக்கியத்தில் எனக்குள்ள ஆர்வத்தையும் அறிவியல் கண்ணோட்டத்தில் சங்க இலக்கியத்தை ஆராயுந்திறனையும் கண்டு என்னை ஒரு கட்டுரை எழுதச் சொல்லிக் கழகத் தலைவர் திரு சுப்பையர் பிள்ளை அவர்களிடம் அறிமுகப்படுத்திச் செந்தமிழ்ச் செல்வியில் அக் கட்டுரையை வெளியிட வைத்தார். அந்த முதல் கட்டுரை சங்க இலக்கியத்தில் செடி நூற்செய்திகள் பற்றியதாகும்.

திரு சுப்பையா பிள்ளையவர்களிடம் அறிமுக மானது முதல் அவர்கள் என் கட்டுரைகளைச் **செல்வி** இதழில் வெளியிட அடிக்கடி கேட்டுத் தூண்டிக் கொண்டேயிருந்தார்.

திரு அப்பாத்துரையார் வழி ஏற்பட்ட அந்த முதல் அறிமுகமே என்னைக் கழக நூலாசிரியர்களில் ஒருவனாக்கும் நற்பேற்றைத் தந்தது.

நான் தொடர்ந்து செந்தமிழ்ச் செல்வியில் சங்க நூல்களை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வரும்போது, திரு சுப்பையா பிள்ளையவர்கள் ஒரு முறை புதுவையில் எனது இல்லத்திற்கு வந்து, 'நீங்கள் சங்கநூற் செய்திகளை அறிவியலுடன் தொடர்பு படுத்தி விளக்கம் தரும் நூல்களைக் கழக வாயிலாக வெளியிட வேண்டும்' என்று தூண்டினார். தொடர்ந்து என்னை நினைவுறுத்தி எழுதச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அரசு அலுவல் செய்யும் என்னை நூலாசிரியன் ஆக்கியது திரு சுப்பையா பிள்ளையவர்கள் என்றால் அது மிகைக்கூற்று அன்று. அவருடன் அளவளாவும்போது, அவரே சொல்வார்:

'எங்கேயோ இருந்த உங்களை என்னுடன் நட்புறவு செய்து இத்தகைய நூலை வெளியிடக் கூடிய, இலக்கியமும் அறிவியலும் ஒருங்கே கைவரப் பெற்ற உங்களைக் கூட்டுவித்தது இறைவனுடைய அரிய செயல்' என்று கூறி மகிழ்வார்.

'இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்'

என்ற குறள் கருத்தைக் கடைப்பிடித்துச் செயலாற்றும் திறன் மிக்கவர் கழக ஆட்சியாளர். இல்லையேல் என்னைப் போன்ற வேலைத் தொல்லை மிக்க அரசு அலுவலன் ஒருவன் நூல்எழுத எண்ணியிருக்கவே முடியாது. இந்த ஆற்றல், திறன் திரு சுப்பையா பிள்ளையவர்கள் கருவிலே பெற்ற திருவாக இருக்க வேண்டும்.

திரு சுப்பையா பிள்ளையவர்களின் செயல் திறன் என்னை மிகவும் கவர்ந்தது. கடிதங்களுக்கு உடனுக் குடன் மறுமொழி எழுதுவார். அவருடைய செயல் விரைவு, சுறுசுறுப்பு என்னை வியப்பிலாழ்த்தியுள்ளன. அவருடைய தனித் தமிழ்ப் பற்று அளவு கடந்தது. பலமுறை தமிழ் நூல்களை வெளியிடப் போதுமான ஆதரவின்மை, மக்களிடையே விழிப்பின்மை ஆகியவை பற்றிப் பேசி அங்கலாய்த்துள்ளார். நல்ல உயரிய தமிழ் நூல்களை வாங்குவாரில்லாமையினாலேயே போற்று வாரில்லை என்று கூறுவார். இருப்பினும் என்றும் தளர்ச்சியை அவர்பால் நான் கண்டதில்லை.

என் நூல்களை வெளியிடும் போது அவரே சொல்வார்,இவற்றை ஊதியத்தை எதிர்பார்த்து வெளியிட முடியாது என்று. இருப்பினும் என்னை ஊக்குவித்து இத்தகைய நூல்களைத் தமிழ் மக்கள் வாங்கும் நாள் வரும், இத்தகைய முயற்சி வீணாகாது என்று கூறி என்னை மேலும் நூல்கள் எழுதத் தூண்டினார்.

இதன் காரணமாகவே 'சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்' என்ற எனது நூலைத் தொடர்ந்து 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' என்ற நூலும் வெளிவந்துள்ளது. இந்த இரு நூல்களும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பயன் தந்திருந்தால் அதற்கு அடிப்படைக் காரணம் திரு சுப்பையா பிள்ளையவர்கள் என்று நான் கூறினால் அது மிகையன்று.

உரையாடல்:

திரு பி.எல். சாமி அவர்களுடன் அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி* உரையாடியதில் சில கருத்துகள்.

நாள் 16.2.94 *இடம் : பி. எல். சாமி இல்லம்*

இளமையில் இவர் கண்டிப்பானவராக, கோபக்காரராக இருந்துள்ளார்.

வில்லியனூரில் இவர் குடும்பம் இருந்தபோது இவரதுஒரு குழந்தை இறந்துவிட்டதாம். காலரா காரணமாம். மனைவியின் பொறுப்பின்மை தான் காரணம் என்றார். சர்க்கரை கொடுக்கவேண்டும் என்று தெரியாமலேயே தன் மனைவி இருந்ததைக் கூறினார்.

ஆட்சியாளராக இருந்தபோது லட்சுமி என்ற ஒரு பெண் சுகாதாரத்துறை பணியில் இருந்தாராம். அவரை இவர் தேர்வுசெய்து உத்திரவு வழங்கி இருக்கிறார். இப் பெண், ஒரு கிராமத்தில் பணியில் இருந்தபோது அவ்வூர் இளைஞன் ஒருவனோடு தொடர்பு இருந்ததாகவும், இதனை ஊரினர் நேராக இவரிடம் வந்து கூறி இருக்கிறார்கள்.

அந்தப் பெண்ணையும், அந்த இளைஞனையும் வரச் சொல்லி இவர் தனித்தனியாக விசாரித்துள்ளார்.

இருவரையுமே அடித்துவிட்டாராம். இதனைத் தன் மனைவி கதவின் சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்து இருக்கிறார். அவர்கள் சப்தமும் அழுகையையும் கேட்டு இவர்கள் பார்த்திருக்கவேண்டும். அவர்கள் சென்ற பிறகு இவர் சாப்பிடும்போது ''ஏன்? அடித்தீர்கள்'' என்று மனைவி கேட்டாராம். ''இது சொந்த விஷயம்; நீ கேட்காதே!' என்று அதட்டிவிட்டுச் சென்றுவிட்டாராம்.

புதுவையில் குல்கர்ணி என்பவர் கவர்னராக இருந்தபோது கவர்னரின் செயலாளராகவும், ஆட்சி யாளராகவும் இவர் இருந்துள்ளார். இவர் ஒருவர் மட்டுமே கவர்னரின் செயலாளராகவும் ஆட்சியாளராகவும் இரண்டு பொறுப்புகளையும் கவனித்து வந்துள்ளார்.

காலைப் பகுதியில் கவர்னரைச் சந்தித்துக் கடிதங்களைக் கவனிப்பாராம்.

மதியத்தில் ஆட்சியாளர் பொறுப்பைக் கவனிப்பாராம்.

கல்வி, சுகாதாரம், பொதுப்பணி என்ற அனைத்துத் துறைகளின் கடிதங்களையும் கவனித்து உள்ளார்.

இவர் பொறுப்பில் இருந்த துறைகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்யும்போது, மந்திரிகளுக்கும் இவருக்கும் சிக்கல்கள் ஏற்படுமாம். இவர் தம் கண்டிப்பாலும், நேர்மையான குணத்தாலும், 'கைப்பட எழுதிவிடுங்கள்; மாற்றிக் கொள்வேன்' என்று கூறுவாராம். அமைச்சர்களும் செய்யாமல் விட்டுவிட, இவரின் முடிவே இறுதியாக்கப்பட்டு ஆணை பிறப் பிக்கப்படுமாம்.

முதலமைச்சருக்கும் இவருக்கும் பலமுறை, பல செயல்பாடுகள் குறித்து கருத்துவேற்றுமை முற்றி விடுமாம். இது ஊமைகளின் போராட்டமாக இருக்குமாம். இவர் கவர்னருக்கு நெருக்கமாக இருந்ததால் மந்திரிகளின் முயற்சி செயல்பாடற்றுப் போய்விடுமாம்.

ஆரம்பத்தில் மது குடிக்கும் பழக்கம் இல்லாமலேயே இருந்துள்ளார். அரசியல், அலுவல் தொடர்பாக டெல்லி, மற்றும் வெளிநாடுகளுக்கும் மந்திரிகளுடன் செல்லும்போது கிடைக்கும் விருந்தின் மூலமும் அங்கு அளிக்கப்பட்ட உயர்ந்த ரக மதுவை குடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாம். ஆரம்பத்தில் இவ்வாறு தொடங்கிய குடிப்பழக்கம் பின்னர் தொடர்ந்து விட்டதாகக் கூறினார். முன்னைய பழக்கத்திலிருந்து பின்னர் இரவில் மட்டுமே குடிப்பாராம். (நான் பகலிலும் குடிப்பதைப் பார்த்திருக்கிறேன்.)

ஒருமுறை இவர் அழைப்பின் பேரில் ஒரு விருந்துக்குச் சென்றேன். அப்போது இவரது நண்பர்களோடு மதுகுடித்தார். நான் குடிக்கமாட்டேன் என்றபோது, வருந்தினார். பிறகு எலுமிச்சம் பழச்சாறு எனக்குக் கொடுக்கப்பட்டது.

இவர் உயர்நிலைக் கல்வியை முடித்து, கல்லூரிக்குச் செல்லும்போது இவர்தம் அன்னையார் சாணம் கொண்டு திருஷ்டி கழிப்பார்களாம்.

ஏன் என்று கேட்டபோது 'ஒருவர் கண்போல இருக்காது; கண்ணேறுபடும்' என்பாராம்.

இளமையில் இவர் அழகாக, சிவப்பாக, கட்டான உடலோடு இருப்பாராம். இதனால் கல்லூரிக்கு வரும் பெண்கள் ஆசைப்படுவாராம் என்று அம்மா கூறியதாகவும் அதற்காகத் திருஷ்டி கழிப்பார்களாம்.

மனோன்மணீயம் நூலைப் படித்துக் கொண்டு இருந்தபோது இவருக்குப் பெண் குழந்தை பிறந்ததால், அதற்கு மேரி மனோன்மணி என்று பெயர் வைத்தாராம்.

இலக்கிய நினைவாகத் தாம் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர்கள் வைத்ததுபோல வேறு கிருத்துவர்கள் யாரும் வைக்கவில்லை என்று பெருமையோடு கூறினார்.

தன் பெயரைக் கேட்ட பலர் என்னை பார்ப்பனரா இருக்கவேண்டும் என்று நினைத்து நேரில் வந்து பேசிய பிறகு கிருத்துவன் என்று அறிந்து ஏமாந்து போனார்களாம்.

இளமையில் படிக்கும்போதே பூச்சிகளிடம் அதிகம் ஆர்வம் இருந்துள்ளது. காக்கையின் கூட்டில் முட்டையை எடுத்து குருவிக் கூட்டில் வைத்து அதன் குஞ்சை மாற்றி வைப்பது. அங்கு அவற்றின் வாழ்க்கையைக் கவனிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார்.

தம் குடும்பத்தில், தமக்குப் பிறகு யாரும் இது போன்ற இலக்கியப் பணிகளை மேற்கொள்ள இல்லை என்று வருந்தினார். ஆனாலும் தன் மகளின் மகன் (பேரன்) ஆர்வம் கொள்ளலாம் என்று கருதினார்.

★ 1992க்குப் பின்னர், சாமியவர்கள் ஆய்வுக்குறிப்புகள் எழுத இவர் உதவியாயிருந்தார். பயணங்கட்கும் உடன்சென்று உதவியவர்.

பாராட்டுரைகள்

பகுதி - 2

உள்ளடக்கம்

1. செந்தமிழ்ச் செல்வி - ஜூன், 1999	227
2. முனைவர் இரா. இளவரசு	231
3. சி. முருகன்	234
4. மா.சந்திரமூர்த்தி	236
5. வயி.நாராயணசாமி	238
6. வில்லியனூர் ந. வேங்கடேசன்	245
7. அரிமதி தென்னகன்	247
8. வளர்மதி	248
9. தமிழமல்லன்	250
10. ஆ.வேங்கடேசன்	254
11. துரை மாலிறையன்	256
12. முத்து எத்திராசன்	257
13. வி. இராமலிங்கம்	259
14. நடன.காசிநாதன்	260
15. முனைவர் தேவிதாசன்	265
16. ம.அய்யாசாமி	266
17. வசந்தகல்யாணி	269
18. இ. சுந்தரமூர்த்தி	270
19. விக்கிரமன்	274
20. பூவை அமுதன்	279
21. இரா. சேது	282
22. அ. அறிவுநம்பி	284
23. இளமாறன்	287
24. திருமுடி சேது	288
25. புலவர் வரத கோவிந்தராசன்	291
26. பி.எல்.இளங்கோ	294
27. சுப்பராயன்	297
28. பி. அருள்தாஸ்	302

கழக இலக்கியச் செம்மல்
பேரறிஞர் பி. எல் . சாமி
காலமானார்

செந்தமிழ்ச் செல்வி ஜூன்,1999
(சிலம்பு 73, பரல்10)

கழக நூலாசிரியரும், சிறந்த திறனாய்வாளரும், அறிவியல் தமிழ் வளர அயராது பாடுபட்டவரும், சிறந்த ஆட்சியாளருமான புதுவைப் பேரறிஞர் பி.எல்.சாமி அவர்கள் 3. 6. 99 இரவு 8 மணியளவில் மறைந்தார்.

புதுவை அரசுப்பணியில் தலைமைச் செயலாளர் பொறுப்பு வரை பல்வேறு பொறுப்புகளை வகித்த சாமி மறைவு தமிழ் இலக்கியத்திற்குப் பேரிழப்பாகும்.

சங்க இலக்கியம் என்பது பழந்தமிழ்க் கவிதைகளின் தொகுப்பு, எதற்கெடுத்தாலும் சங்க இலக்கியம் என்று கூறும் தமிழ்ப் புலவர்களின் பழம்பெருமைப் பாட்டுக் குவியல் என்று கூறிவந்த தமிழர்களிடையே, சங்க இலக்கியம் அறிவியல் உணர்வும் அறிவும் கொண்ட தமிழ்ப்பெரும் புலவர்களின் பாடல்கள் கொண்ட தங்கச் சுரங்கம் என்பதை உலகுக்கெடுத்துக் கூறிய பேரறிஞர் சாமி மறைந்துவிட்டார்.

சாமி 1925 அக்.2ஆம் நாள் கோவையில் பிறந்தார். இவர்தம் தந்தையார் பெரியநாயகம் ஆவார். இவர்தம்

முழுப்பெயர் லூர்துசாமி. இதனையே சுருக்கி, பி.எல். சாமி என்று வைத்துக்கொண்டார்.

1945-46களில் 'செந்தமிழ்ச் செல்வி'யில் பி.லூர்துசாமி என்ற பெயரில் கட்டுரை எழுதத் தொடங்கிய பெரியநாயகம் லூர்துசாமி, திருச்சி செயின்ட் ஜோசப்புக் கல்லூரி மாணவராகத் திகழ்ந்தார்.

இளமையிலேயே தமிழிலக்கியத்தில் நாட்டம் கொண்ட சாமி முதலில் எழுதத் தொடங்கியது கவிதை, காதல் கவிதை. அதைப் பார்த்த பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் 'நீர் ஓர் அறிவியல் பட்டதாரி. அறிவியல் பற்றி நல்ல கட்டுரை எழுதும். காதல் கவிதை எழுதத் தமிழ்நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்' என்று கூறி மடைமாற்றம் செய்தார். அதன் பயனாக 50 ஆண்டுகட்கு மேலாக, ஐநூறுக்கு மேற்பட்ட அறிவியல் கட்டுரைகளைச் செந்தமிழ்ச் செல்வியிலே எழுதினார். ஆராய்ச்சி, தினமணி, தினமலர், அமுதசுரபி போன்ற இதழ்களிலும் எழுதியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் செடி, கொடி, விலங்கினம், புள்ளினம் போன்றவற்றின் அறிவியல் நுணுக்கங்களைக் கண்டுபிடித்து அன்று அப்புலவர்கள் பாடிய உண்மைகள் இன்று அறிவியல் அறிஞர்கள் எடுத்துக் கூறும் விளக்கங்களோடு எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதை ஆயிரக்கணக்கான மேற்கோள்களோடு எடுத்துக் காட்டி, சங்கப் புலவர்கள் எவ்வாறு அறிவியல் உணர்வோடும் இயற்கையோடும்

இயைந்து வாழ்ந்தார்கள் என்பதை நிறுவினார். இதனால் சங்க இலக்கியத்தின் பெருமை கூடிற்று.

இத் துறையில் வேறு யாரும் ஈடுபடாத சூழ்நிலையில் சாமி ஒருவரே 50 ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

இவருடைய ஆய்வுகள் 'செந்தமிழ்ச் செல்வி'யில் தொடர் கட்டுரைகளாக வந்ததுடன், சங்க இலக்கியத்தில் செடி, கொடி, விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், சங்க இலக்கியத்தில் மீன்கள், சங்க நூல்களில் செடி, கொடிகள், சங்க நூல்களில் அறிவியல் கலை என்று பல்வேறு நூல்களாகவும் வெளி வந்து சாமி அவர்களுக்குப் பெயரும் புகழும் ஈட்டித் தந்தன.

இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தவர் கழக மேனாள் ஆட்சியாளர் வ.சுப்பையா அவர்களே. திரு.சாமி அவர்களை அவ்வப்போது தூண்டிவிட்டு ஊக்கப்படுத்திக் கொண்டேயிருப்பார். நூல்களை வெளியீட்டு விழா வைத்து வெளியிட்டு, சாமிக்குப் பெருமை சேர்த்தார். நாற்பதாண்டுகள் நெருங்கிப் பழகி, சாமி அவர்கள் வாழ்க்கையில் உயரும்போதெல்லாம் அந்த உயர்வைக் கண்டு களித்தவர் வ.சு. அவர்கள்.

சங்க இலக்கிய ஆய்வோடு நில்லாது சமகாலச் சமுதாய ஆய்விலும் ஈடுபட்டார். தம் தமையனாரான பி.தாமஸ் வழியில் நின்று சிந்துவெளி எழுத்துக்களின் ஆய்வில் ஈடுபட்டுக் கீழ்வாலை ஓவிய எழுத்துக்களுக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டினார்.

சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்று முதன் முதல் நிலைநாட்டிய ஈராசுப் பாதிரியாரின் உதவியாளராகப் பணியாற்றியவர் சாமி அவர்களின் தமையனார் பி. தாமஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டப் படிப்பு முடிந்தவுடன் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய சாமி, புதுவை அரசுப் பணியில் நுழைந்து, படிப்படியாக உயர்ந்து, இ.ஆ.ப. (ஐ.ஏ.எஸ்) அலுவலராக நியமிக்கப் பெற்று, ஆளுநரின் (தலைமைச்) செயலர் பொறுப்பு வரை உயர்ந்து ஓய்வு பெற்றவர்.

இவர்தம் அறிவியல் தமிழ் ஈடுபாட்டைக் கண்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சையில் அமைந்தபோது அதன் முதல் துணைவேந்தரான டாக்டர் வி.ஐ.சுப்ர மணியம், இவரை அறிவியல் களஞ்சியத் தொகுப்புப் பணியில் தொகுப்பாசிரியராக நியமித்தார். தலைமைப் பதிப்பாசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றிச் சில தொகுதிகளை வெளியிட்டவுடன் உடல் நலம் காரணமாக ஓய்வு பெற்றுப் புதுவை திரும்பிய சாமி, கடந்த சில ஆண்டுகளாக உடல் நலிவுற்று, தம் 73ஆம் அகவையில் மறைவுற்றார்.

அவரைப் பிரிந்து வாழும் அவர்தம் துணைவி யாருக்கும் மக்கள் நால்வருக்கும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆசிரியர் இரா. முத்துக்குமாரசாமி)

புதிய வெளிச்சம் பாய்ச்சியவர்

முனைவர் இரா. இளவரசு,
சென்னை

அறுபதுகளின் பிற்பகுதியில் ஒருநாள்; முற்பகற்பொழுது! திருவனந்தபுரத்தின் நடுப்பகுதியில் அமைந்திருந்த கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு ஒருவர் வருகிறார். என் பேராசிரியப் பெருந்தகை வ.அய்.சுப்பிரமணியனாரைக் காண வந்த அவர் ஆய்வுத்துறைக்கு அழைத்து வரப்படுகிறார்.

அகன்ற நெற்றி, வழுக்கை மேவிய உருண்டைத்தலை, மூக்குக்கண்ணாடி அணிந்தமுகம்; பளிச்சென்று தோற்றமளிக்கும் நிறம்; கேரளத்தை ஒட்டிய புதுவை மாநில மாஃகே பகுதியின் ஆட்சி அதிகாரி என்று பேசிக்கொள்கிறார்கள். அவர்தான் பி.எல்.சாமி என்று அறிந்தபோது மகிழ்ச்சி ஏற்படுகிறது. பேரா.வ.அய்.சு.வின் நண்பர் என்று தெரிந்தபோது மதிப்பு ஏற்படுகிறது. 'செந்தமிழ்ச் செல்வி'யில் அவர் எழுதிய சிறு சிறு கட்டுரைகளைப் படித்த நினைப்பும் சேர்ந்து மதிப்பு அதிகமாகிறது.

ஆட்சித்துறையில் ஈடுபட்டுள்ள ஒருவர் தமிழ் இலக்கியத்தில்,அதுவும் சங்கஇலக்கியத்தில் நிறைந்த பயிற்சியும் அறிவியல் நோக்கில் செய்திகளைக் கூர்ந்து

பார்க்கும் திறமும் கொண்டு விளங்கியது எனக்கு வியப்பை அளித்தது.

ஆய்வுலகிற்கு அவரின் பங்களிப்பு தனித்துச் சுட்டத்தக்கது. ஒவ்வொரு கட்டுரையிலும் ஏதேனும் ஒரு புதிய செய்தி, புதியபார்வை, புதியவிளக்கம் கட்டாயம் இடம் பெற்றிருக்கும்.

தொல்காப்பியம்,சங்க இலக்கியம், உரைகள், கல்வெட்டுகள் முதலியவற்றில் காணப்படும் செய்திகளை விலங்கியல், பயிரியல் முதலிய அறிவியல் உரைகல்லில் தேய்த்துக் காட்டும் திறம் மிக்கவர் அறிஞர் பி.எல்.சாமி.

பானைச் சோற்றுக்குப் பருக்கைப் பதமாக ஒன்று:

திருக்குறள் உரையாசிரியர்கள் 'கவரிமா என்பது தன் உடம்பிலிருந்து ஒரு முடி நீங்கினும் உயிர்வாழாது' என்றும், மானமிக்க விலங்கு ஆதலால் அது 'மானமா' என்றும் எழுதிச் சென்றனர்.

அறிஞர் பி.எல்.சாமி 'கவரிமா என்பது இமயமலை போன்ற குளிர் மிகுந்த பகுதிகளில் வாழும் 'யாக்' எனப்படும் எருதுபோன்றதொரு விலங்கே' என்றும், 'கடுங்குளிரைத் தாங்க அதன் மயிர்க்கற்றைகள் போர்வையாக உதவுகின்றன' என்றும், 'அவற்றை இழந்தால் அதனால் உயிர்வாழ முடியாமல் போய்விடும்' என்றும் சங்க இலக்கியச் சான்றுகளை இணைத்து அறிவியல் அடிப்படையில் புதிய விளக்கத்தைத் தந்தார்.

அந்த விளக்கத்தை நான் முதன் முதலில் அறிந்தபோது செறிதோறும் சேயிழை மாட்டு பெறும்

இன்பத்தை எய்தினேன். புதிய வெளிச்சம் பாய்ச்சிய அவரின் அறிவியல் பார்வையைப் பல கூட்டங்களில் எடுத்துக் காட்டிப் பாராட்டினேன்.

இலக்கியங்களைப் புரிந்துகொள்ள அறிவியல் துணைசெய்வதை ஆய்வுலகிற்குப் புலப்படுத்தியதில் தலைமை சான்ற இடம் அறிஞர் பி.எல்.சாமிக்கு என்றும் உண்டு.

எழுத்திலே வாழும் ஏந்தல்!

சி. முருகன் (சோமு) காஞ்சிபுரம்

என்னருஞ் சங்கப் பாவின்
இதயத்தில் போற்றும் வண்ணம்
மன்னராய், ஆய்வில் வாழும்
மதிமிக்க சான்றோர் சாமி
உன்னத அறிவின் கீர்த்தி
உதிர்ந்தன நூல்க ளாக!
எண்ணிடும் தமிழ ரெல்லாம்
ஏற்றமே காண லாகும்!

கன்னலாம் சங்க நூல்கள்
கண்களாம் இயற்கை ஆற்றல்
மண்ணெலாம் புகழும் வண்ணம்
மனவள விளக்கம் தந்தார்
அண்ணலார் சாமி என்றும்
அறிவொளி வீசி நிற்பார்;
விண்ணிலே புகழைப் பாய்ச்ச
வேகமாய் விரைந்து போனார்!

கண்ணிலே வைத்துச் சென்ற
கருத்திலே வாழ்வார் என்றும்;
எண்ணிய எண்ண மெல்லாம்
எழுத்திலே வைத்துப் போனார்
திண்ணிய நூல்க ளாக்கித்
திசையெட்டும் காட்டு கின்ற
நண்ணிய பதிப்ப கத்தார்
நாடெங்கும் பரப்பி வாழ்வார்!

நீங்காத நினைவுகள்

மா. சந்திரமூர்த்தி, எம்.ஏ.,
பதிவு அலுவலர்,
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை,

திரு பி.எல்.சாமி அவர்கள் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தாவரவியலில் இளங்கலைப் பட்டதாரியாகிச் சிறிது காலம் கல்வித்துறையில் ஆசிரியராகவும், அஞ்சல் துறையில் உதவியராகவும் பணிபுரிந்துகொண்டே ஐ.ஏ.எஸ். பட்டம் பெற்றுப் பெரும் பதவிகளைப் பெற்று நிர்வாகத்தில் தம் முத்திரையைப் பதித்துக்கொண்டே, ஆர்வத்தால், ஆற்றலால் பல்துறை அறிஞராகப் பரிணமித்தவர்.

அறிஞர் பி.எல்.சாமி அவர்கள் சென்னை சேகர் பதிப்பகம் மூலம் பல்வேறு அறிவியல் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது ஆய்வுக்கட்டுரையின் தலைப்பினைக் கொண்டே அவர் தாவர இயலிலும், விலங்கியலிலும் கொண்ட முழு ஈடுபாட்டினை நன்கறியலாம்.

சான்றாக, 'சங்க இலக்கியங்களில் முயிறு', 'கடுந்தேறு என்னும் குளவி', 'சைவசித்தாந்த இலக்கியத்தில் வேட்டுவன் என்னும் குளவி', 'கருங் குருவியும் திருவிளையாடலும்', 'யானை உண்ட அதிரல்', போன்ற கட்டுரைகளைக் கூறலாம்.

அறிவியல் சங்ககாலப் புலவர்களுக்கிருந்த அடிப்படை அறிவையும், ஆழத்தையும் நுண்மாண் நுழைபுலத்தையும் முழுமையாகக் கூர்ந்தாய்வு செய்து வெளியிட்ட முதலறிஞர் இவரே. மேலும் உழவர், வேட்டுவர், கானவர், மீனவர் போன்ற பலதரப்பட்ட மக்கள் இன்றும் இலக்கியம் காட்டும் பறவையினங்களையும், விலங்கு முதலான உயிரினங் களையும் எவ்வாறு அழைத்து வருகின்றனர் என்றும் அச்சொற்கள் இலக்கிய வழக்கிலிருந்து எவ்வாறு மாற்றம் பெற்றன என்றும் விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

இன்னும் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் அவை என்ன பெயர்களில் அழைக்கப் பட்டன என்றும் ஒப்பாய்வு செய்த அறிஞர் இவர்.

மேலும் இவற்றைக் கூர்ந்தாய்வு செய்யும் நோக்கில் தம் இல்லத்திலேயே மான், மயில், கிளி, புறா, கோழி, முயல் போன்றவற்றை வளர்த்து வந்ததும் குறிப்பிடத் தக்கது.

இந்நூற்றாண்டில் இவர் தமது புதிய பார்வையில் சங்க இலக்கியத்தில் உயிரியல் தாவரஇயல் எனும் இரு அறிவியல் பரிமானங்களைப் புதிய வார்ப்புகளாகத் தந்துள்ளார் எனில் அது மிகையாகா. இவர் இருபதாம் நூற்றாண்டில் பண்டைய இலக்கியத்தில் அறிவியலைக் கண்ட மாமனிதர்.

இவரே ஒர் இலக்கியம், ஒரு வரலாற்றுப் பெட்டகம்; அறிவியல் சோலை; மாபெரும் தத்துவம் என்றே கூறலாம். இவரது பணியின் பயன் நீடு வாழ்க. வளர்க இவரது புகழ்.

அவருக்குப் புகழ்!

திரு.வயி. நாராயணசாமி
முன்னாள் சட்டத்துறைச் செயலர், புதுச்சேரி,

''குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.'' -குறள்.

உலகில் மனிதனாகப் பிறக்கின்றோம்! வாழ்கின்றோம்! ஆனால் பிறரிடம் எதையும் எதிர்பார்த்து வாழாமல், மற்றவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகள் செய்து வாழ்ந்து, புகழோடு இறப்பவர்கள், எண்ணிக்கையில் இச்சமூகத்தில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர். இக்குறைவான எண்ணிக்கையில் ஒருவராக வாழ்ந்தவர் திரு P.லூர்துசாமி ஐ.ஏ.எஸ். எனக் கூறலாம்.

முதன்முதலாக, நான் புதுவை அரசில் 1963 ஆம் ஆண்டு ஜுன் மாதம் சம்பளப்பட்டுவாடா மற்றும் கணக்கு அலுவலகத்தில் மேல்நிலை எழுத்தாளராகச் சேர்ந்தேன். சேர்ந்த ஒரு ஆண்டிற்குள் மற்றொரு அரசாங்கத் தேர்வு எழுதி 1964 நவம்பர் மாதம் செயலக அலுவலராக (Secretariat Assistant) அலுவலர்களை அமர்த்தும் அலுவலகத்தில் (Apprintments & Dept.) திரு P.L. சாமி அவர்களின் கீழ் பணிபுரிய அமர்த்தப்பட்டேன்.

அவரது மேற்பார்வையின்கீழ் ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் பணிபுரிந்திருக்கின்றேன். நாள்தோறும் வாழ்க்கையில் எவ்வளவோ மனிதர்களைப் பார்க்கின்றோம்; உரையாடுகின்றோம். ஆனால் எல்லோரையும் நாம் நினைத்துப்பார்க்க முடிவதில்லை. மற்றவர்களுக்குத் திரு P.L.சாமி அவர்கள் கடுமையான அதிகாரியாகத் தோன்றினாலும், அவர் மிகவும் நேர்மையான, கண்ணியமான, கட்டுப்பாடான, அதே சமயம் எல்லோருக்கும் உதவக்கூடிய அதிகாரியாகவே விளங்கினார்.

நான் இரவு, பகலாக வேலை செய்து அவருடைய ஒப்புதலுக்கு ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான கோப்புகளை முடித்து, இரவில் அவரது மேஜையின் மேல் வைத்துவிட்டு, வீடு திரும்புவேன்.

அன்றைய நாட்களில் அரசு அலுவலக நேரம் காலை 8 மணி முதல் 12 வரையிலும், மீண்டும் 2 மணி முதல் மாலை 5 மணி வரையிலும் இயங்கும்.

நான் இரவு அதிக நேரம் வரை வேலை செய்ததால், மறுநாள் காலை 8 மணிக்கெல்லாம் அலுவலகம் செல்ல இயலாது. காலை 9 மணியளவில்தான் செல்ல முடிந்தது. நான் காலம் கடந்து வருவதைத் திரு P.L. சாமி அவர்கள் பொருட்படுத்தவே மாட்டார். காரணம், எந்தக்கோப்பும் என்னால் தாமதம் ஆகாது என்ற நம்பிக்கைத்தான்!

9 மணிக்கு நான் அலுவலகம் செல்லும்பொழுது, முதல்நாள் இரவு அவரது மேசைமேல் வைத்த அவ்வளவு கோப்புகளும் எனது மேசைமேல் இருக்கும். ஒரு சில கோப்புகளில் மட்டும் 'please speak நேரில் பேசவும்' என்று

எழுதியிருப்பார். மற்றவைகளில் தனது கையொப்ப மிட்டு, ஒப்புதலளித்து அனுப்பியிருப்பார்.

அவர் குறிப்பிட்டுள்ள கோப்புகளை, அவரது அறைக்கு எடுத்துச் சென்றால், திரு P.L.சாமி அவர்கள் ஒரு ஆராய்ச்சி நூலோடு அமர்ந்து அதில் ஈடுபட்டிருப்பதைக் காண்பேன்.

ஒரு துளி நேரத்தையும் அவர் வீணாக்கமாட்டார்.

ஒரு மணி நேரத்தில் அவ்வளவு கோப்புகளையும் எப்படி படித்து, சிலவற்றில் மட்டும் கேள்விகளை எழுப்பமுடிகின்றது என்று நான் வியப்படைவதுண்டு! எதையும் விடாமல் எளிதில் ஈர்த்து, தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதிறன் படைத்தவர் திரு P.L.சாமி என்பதில் எனக்குத் துளியளவும் ஐயமில்லை!

அன்றைய நாட்களில், புதுவை அரசில் ஏறத்தாழ இரண்டாயிரம் அலுவலர்கள்தாம், அரசுபதிவு பெற்றோர் உட்பட பணியாற்றினர். மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் பல சட்டங்கள் இயற்றப்பெற்று, அதனால் பல புது அலுவலகங்கள் திறக்கப் பெற்றன.

அரசு வேலைக்கு ஆங்கில மொழி பயின்ற பலரை அமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே வேளையில், முன்னால் பதவிகளில் சேர்ந்தவர்களுக்குப் பதவி நிரந்தரம் மற்றும் பதவி உயர்வு ஆகியவை கொடுக்க வேண்டிய தேவையும் எழுந்தது. ஆதலின், நானும் ஓய்வின்றி உழைக்க வேண்டியிருந்தது.

வேலை பளு அதிகமாக இருந்தாலும், திரு P.L.சாமி அவர்கள் எனக்குக் கொடுத்த ஊக்கத்தினாலும், அன்பாலும், நம்பிக்கையாலும் நாள்தோறும் நான் சோர்வில்லாமல் மகிழ்வோடு உழைக்க முடிந்தது.

எனது அரசுப்பணியில் அதன்பின் நான் பல ஏற்றம் பெற்று, பல ஐ.ஏ.எஸ். செயலாளர்களுடன் பணி யாற்றவும், உரையாடவும், பல மாநாடுகளில் பங்கேற்றுக் கருத்துக்களைக் பறிமாறவும் இயன்றது என்றால், அதற்கு வித்திட்டவர் திரு P.L.சாமி என்றே கூறலாம்.

உழைப்பை நம்மிடம் வாங்கிக்கொண்டு, நமக்கே தீமை இழைப்பவர்களையும் பார்த்திருக்கின்றேன். ஆனால் இத்தன்மையில் முற்றிலும் மாறுபட்டு, தன்கீழ் இயங்கும் அலுவலர் ஒவ்வொருவருக்கும் ஊக்கமளித்து வாழ்ந்தவர் திரு பி.எல்.சாமி என்று உறுதியாகக் கூறலாம்.

அவருடன் அந்த அலுவ்லகத்தில் நான் வேலை செய்த பொழுதுதான் பாண்டிச்சேரி சிவில் சர்வீஸ் என்ற ஓர் அமைப்பினை நானும் அவரும் ஏற்படுத்தினோம். மத்திய அரசு, மத்திய தேர்வாணையம் (U.P.S.C) மூலம் பல புதுவை அதிகாரிகளுக்கு ஐ.ஏ.ஏஸ். வழங்க இது வழிவகுத்தது என்பதனையும் அதற்கு வித்திட்டவரே திரு பி.எல். சாமி தான் என்ற உண்மையினையும் யாரும் மறுக்க இயலாது.

இதன் மூலம், திரு P.L.சாமி அவர்களும் பிற்காலத்தில் ஐ.ஏ.எஸ். தகுதிபெற்று, இப்புதுவையின் மாவட்ட ஆட்சியாளராகத் திறம்பட விளங்க ஏதுவாயிற்று என்ற உண்மையினையும் நான் நினைவு கூர்கின்றேன்.

திரு பி.எல்.சாமி அவர்கள் புதுவை சுதந்திரப் போராட்ட வீரர்.

அவர் இந்திய நாட்டின் மேல் மிகுந்தபற்றும், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களின்மேல் எவ்வளவு பாசமும் வைத்திருந்தார் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

புதுவையில் எங்கள் அலுவலகம்தான் தேர் வாணையமாக விளங்கியது. ஒவ்வொரு பணித்தேர்விலும் விடைத்தாள்கள் திருத்தப்பெற்று வந்ததும், தனிமையில் நான், தேர்வு எழுதிய ஒவ்வொருவரும் பெற்ற மதிப்பெண். களைக் கணக்கிட்டு, அட்டவணை (Tabulatim) போட்டு, வெற்றி பெற்றவர்களின் பட்டியலைத் திரு பி.எல்.சாமி அவர்களின் கையொப்பத்துடன் வெளி யிடுவது வழக்கம்.

ஒரு தேர்வாணையின் முடிவின் பிரதி ஒன்றினை, செயலாக அலுவலர் ஒருவர் வெளியில் எடுத்துக்கொண்டு போய், தனக்குத் தெரிந்த தேர்வு பெற்றவர்களிடம் காட்டி, விரைவில் அவர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் கூறி, ரூபாய் நூறு அன்பளிப்பாகப் பெற்றுவிட்ட செய்தி எனக்குத் தெரியவந்தது. உடனே இந்நிகழ்ச்சியைப்பற்றிப் பி.எல்.சாமி அவர்களிடம் கூறவும், அவர் சினமடைந்து, அந்தக் குறிப்பிட்ட செயல் செய்த அலுவலரை அழைத்து, அவரை உடனே வேலையை விட்டு நீக்குவதாகக் கடிந்தார்.

அந்த அலுவலர் அப்படியே அவர் கால்களில் விழுந்து மன்னிப்புக்கேட்க, திரு பி.எல்.சாமி அவர்கள்,

''இந்த நூறு ரூபாய் காசுக்காகவா வெள்ளையனிடம் அடிவாங்கினாய்? எப்படிப்பட்ட சுதந்திரத்தைப் பெற்று, நூறு ரூபாய்க்கு அதை விற்றுவிட்டாயே!''

என்று மனம் புழுங்கிக் கூறியபொழுது தான், அந்த அலுவலர் ஒரு சுதந்திரவீரராக இருந்தும், தவறு செய்துவிட்டார் என்பதை உணர்ந்தேன். அவரை மன்னித்தும் விட்டு விட்டார்.

சுதந்திர வீரர்களின் தியாகத்தை நினைத்து மனிதநேயத்துடன், அவர்களிடம் பரிவு கொண்டவர் திரு பி.எல்.சாமி என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டல்லவா!

இன்று, எவ்வளவோ எழுத்தாளர்களும் இலக்கிய வாதிகளும், தங்களைத் தாங்களே சிறந்த எழுத்தாளர், பேச்சாளர் என்று பறைச்சாற்றிக் கொண்டு இருக்கின்றனர்.

உயர் அதிகாரிகளாகப் பணிபுரிந்து கொண்டு, அவர்களின்கீழ் இயங்கும் மற்ற அலுவலர்கள் மூலம், தங்கள் படைப்புகளை வற்புறுத்தி மக்களிடம் விற்பனை செய்து, அவர்கள் படைப்புகளின் தரம் எண்ணிக்கையில் அதிகமாக விற்பனையானது என்று, பணம் திரட்டிக் கொள்வதோடுமன்றி, தற்புகழ்ச்சிக் கொள்பவர்களையும் சமூகத்தில் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்! அவ்வரிசையில் முற்றிலும் மாறுபட்டவர் திரு P.L.சாமி அவர்கள்.

தமிழ் அறிஞர்கள் வரிசையில் எல்லோராலும் ஏற்றத்தோடு எண்ணப்படுபவர் அவர்!

இவர் எழுதிய நூல்களெல்லாம் உயர்ந்த ஆராய்ச்சி நூல்கள்தாம். காசுக்காக எழுதுபவரல்லர் அவர். உயர்ந்த அறிஞர்களால் மட்டுமே பாராட்டக்கூடியவர் அவர்!

அவர் படைத்த நூல்கள் பல! பணம் ஈட்டவேண்டும் எனத் திரு P.L.சாமி நினைத்திருந்தால், அவர் மாவட்ட ஆட்சியாளராகப் பணிபுரிந்தபொழுதே பல இலட்சம் ரூபாய் திரட்டி இருக்கலாம். ஊர்தி உரிமையாளர் பலர் இவரால் புதுச்சேரியில் பயன்பெற்று, இன்று கோடீசுவரர்களாகத் திகழ்கின்றனர் என்பதும், எதையும் எதிர்பார்க்காமல், நேர்மையான அதிகாரியாகத் திரு பி.எல்.சாமி விளங்கினார் என்பதனையும் இன்றும் அவர்களே நினைத்துப் பார்ப்பர்!

சுதந்திரப் போராட்ட வீரராக விளங்கி, அரசுப் பணியில் திறம்படச் செயலாற்றிப் பல ஆய்வு நூல்களைத் தமிழகத்திற்கும், புதுவைக்கும் அளித்துப் பெருமை பெற்ற செல்வம்தான், திரு P.L.சாமி ஈட்டிய உண்மையான செல்வம்! இச்செல்வத்தினை அவர் நமக்கு விட்டு விட்டு, நிறைவாகச் சென்றுள்ள அவரது மரணம் தான் அவருக்குப் புகழ்!

வான் கலந்த நுண்மாண் நுழைபுலம்!

புலவர் ந.வேங்கடேசன்.
வில்லியனூர்

நுண்மாண் நுழை புலத்தார் யார்? அவரே திருவாளர் பி.எல்.சாமி. ஏன் அவ்வாறு கூறுதல் வேண்டும்?

எப்பொருளையும் உற்று நோக்கினார். அதன் விளைவாகச் சங்க இலக்கியங்களை அறிவியற் கண்கொண்டு பார்த்தார். தாம் பார்த்து அறிந்தவற்றை உலகமக்கள் அறிந்து இன்புறவேண்டும் என்று எண்ணி பல நூல்களைத் தந்தார்.

''தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்''

என்னும் தமிழ் மறைக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தார். சங்க இலக்கியங்களில் விலங்கின விளக்கம், செடிகொடி விளக்கம், புள்ளின விளக்கம், தாய்த் தெய்வழிபாடு, முருகன், சிந்துவெளி எழுத்துக்கள் போன்ற பல அரிய நூல்களை உலகம் பெற்றது. எண்ணிலா அரியா கட்டுரைகளை அளித்தார். தொல்லியல் அறிஞர்கள் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர். ''துறைமுகம்''

என்னும் கட்டுரையைக் கேட்டு அறிஞர்களே வியப்படைந்தனர்.

பண்டைத் தமிழ்ப் புலவர்களுக்கும் பன்முக ஆற்றல் உண்டு என்பதைத் தம் நூல்களால் அறியச் செய்தார். நம் தமிழ் இலக்கியங்களில் பல அறிவியல் உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன என்பதை முதன் முதலில் வெளிப்படுத்தியவர் இவர்.

இச் சீரிய பணியினைத் தமிழ்த் தாய்க்குச் செய்ய யாரே உள்ளார்?

சங்க நூல்களில் 35 விலங்குகள், 58 பறவைகள்; அதில் 22 நீர்ப்பறவைகள். புறாவில் 5வகை, வல்லூறுகளில் 3 வகை, காக்கையில் 2வகை, ஆந்தையில் 6வகை, கழுகினத்தில் 2 வகை; அதில் பிணம் தின்னிக் கழுகினத்தில் 3 வகைகள் இப்படியெல்லாம் வகைகளை அறிந்து கூறி அவற்றிற்கு விளக்கந் தர இனி யார் யார்....?

இவர் வில்லியனூரில் B.D.O.வாகப் பணியேற்றார். அப்போது சங்க இலக்கியங்கள் அனைத்தையும் வாங்கி; அவ்வலுவலகத்தில் சிறந்ததொரு நூலகத்தை ஏற்படுத்தினார்.

இவர் இன்னும் பல ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்திருந்தால்,எத்தனையோ அரிய கருத்துக் கருவூலங்கள் நமக்குக் கிடைத்திருக்கும் திருவாளர் பி.எல்.சாமியின் பிரிவு தமிழக மக்களுக்கும், நம் நண்பர்களுக்கும் ஈடு செய்ய இயலா பேரிழப்பாகும்.

பொன்வரலாற்றின் புதுமை ஏடே!

புலவரேறு அரிமதி தென்னகன்
புதுச்சேரி

சங்க இலக்கியச் சந்தனக் காட்டில்
பொங்கிப் பெருகிய புதுமைத் தென்றலே!

இலக்கியச் சுரங்கம் எத்தனை வகையாய்ப்
பொலியும் மணிகளைத் தம்முள் புதைத்துக்

கிடக்கும் என்பதைக் கிளறிக் காட்டிடும்
கடமையில் வென்ற களஞ்சியம் நீயே!

ஆட்சித் துறையில் அதிகா ரியெனும்
மாட்சிமை பெற்றோர், மாத்தமிழ் அறிஞராய்

வாழ்ந்தார் என்னும் வரலாற் றினையே
ஆழ்ந்த புலமையால் அறிவன் வளமையால்

காட்டிய முதல்வன் நீ எனக் காலம்
ஏட்டில் பொன்னாய் எழுதிக் கொண்டது!

பி.எல். சாமி எனும்பெரி யோனே!
புகழ்எல் லாமே, உன்புக ழாக

வாழும்; அதற்கு வானமே எல்லை!
வாழும் தமிழாய் உன்திறம் வாழுமே!

அறிஞர் பெருந்தகை பி.எல்.சாமி

மு. வளர்மதி, ஆராய்ச்சி உதவியாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்து கிடக்கும் அறிவியல் கருத்துகளை ஆய்ந்தாய்ந்து புதியனவற்றைக் கூறுவதற்குத் தமிழுக்கு வாய்ப்பாக வாழ்ந்த அறிஞர் பி.எல்.சாமி அவர்கள். இவர் பிறந்தது கோவை (2.10.1925) என்றாலும், புதுவையில் நிர்வாகத் தனி அலுவலராக 28ஆண்டுகள் பணியாற்றி வந்ததால், அவர் புதுவை அறிஞராகப் போற்றப்படுகிறார்.

சங்க இலக்கிய ஆய்வில் தோய்ந்து பல நூல்களை எழுதியவர் என்பதுடன் அவற்றின் அறிவியல் தன்மையை எடுத்துக் காட்டினார் என்பதுதான் அவருடைய தனித்தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

சிந்துவெளி எழுத்தோவியம், Common Names and Flora Founa ஆகிய ஆய்வு நூல்களை வழங்கி, தமிழ் இலக்கியத்தின் செழுமையையும், வரலாற்றுப் பண்பையும் அறிஞர் பி.எல்.சாமி புலப்படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியக்தில் சில பாடல்களில் யானையைப் புலி கொல்வதாகக் கூறப்பட்டுள்ளது. சில பாடல்களில் புலியை யானை கொல்வதாகப் பாடப்பட்டுள்ளது. சில

பாடல்களில் யானையும் புலியும் போரிட்டு ஒன்றையொன்று வெல்லமுடியாது வலியிழந்து புண்களுடன் போவதாகப் பாடப்பட்டுள்ளது. இந்த மூன்று செய்திகளும் விலங்கு நூலாரும் வேட்டையாளரும் கண்டறிந்த செய்திகளுடன் ஒத்தே காணப்படுகின்றன! (சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்.ப.256)

இக் கருத்தைப் பல சங்க இலக்கியப்பாடல் வரிகளுடன், இன்றைய விலங்கியலார் கண்டறிந்த உண்மைகளுடன் ஒப்பிட்டு விறுவிறுப்பான மொழிநடையுடன் இந்நூலில் எழுதியுள்ளார் அறிஞர் பி.எல்.சாமி.

உயிரினங்கள் ஆராய்ச்சி மட்டுமல்லாமல், 'சங்க நூல்களில் மணிகள்' என்ற நூலில் கோமேதகம், வைடூரியம், நீலம், மாணிக்கம், வைரம், சாணைக்கல், கட்டளைக்கல், பளிங்குக் கல், பவளம், முத்து, போன்ற பலவிதமான மணிகள் பற்றிய இவருடைய ஆய்வு, தமிழகத்தின் பண்டைய வணிக வரலாற்றைப் புலப்படுத்தும் சான்றுகளாக உள்ளன. இம் மணிகள் பற்றிய பெயர்க்காரணங்கள் குறித்த ஆய்வு நம்மை வாய்ப்பில் ஆழ்த்துவதாகும்.

நீரியல் தாவரவியல் உயிரியல் கல்வி கற்றதால் அறிவியல் பார்வையுடன் ஆராயந்த இப் பெருமகனார் இழப்பு தமிழ்நாட்டுக்கே பேரிழப்பாகும்.

பி.எல். சாமியின் ஆராய்ச்சி !

க.தமிழமல்லன், க.மு.கல்.இ., புதுவை.

புதுச்சேரி தமிழ்மண்ணே, இலக்கியத் துறையில் எப்போதும் சிறந்த வழிகாட்டியாக விளங்கி வருகிறது. பாவேந்தர் பாரதிதாசன், வாணிதாசன் போன்ற படைப்பாளர்களை வழங்கியது போலவே ஆராய்ச்சித் துறையிலும் தமிழ்ச் சுடர்களை வழங்கியுள்ளது. சுந்தர சண்முகனார், பி.எல்.சாமி போன்றோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

அறிஞர் பி.எல்.சாமி எப்போதும் பிறர் எளிதில் இறங்கி உழைக்கத் தயங்கும் கழக (சங்க) இலக்கியத் துறையில் மூழ்கி ஆய்வு செய்து நன்முத்துகளை வழங்கியவராவார்.

அவர் ஆராய்ச்சியில் முதன்மையானது தரவுகளைத் தொகுத்துக் கொள்ளும் முறையாகும். கணிப்பொறி இல்லாத அக்காலத்திலேயே பி.எல்.சாமி தரவுகளைத் தொகுத்த முறை அத்துறை ஆய்வாளர்க்கு என்றும் பயன் தர வல்லதாம். ஒரு பொருள் குறித்துக் கழக இலக்கியங்களில் சொல்லப்படும் இடங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தொகுத்த கடும் உழைப்பாளர் அவர்.

அவருடைய ஆய்வுகள் பலவகைப் பயன்களை விளைவித்தன. அவற்றுள் முதன்மையானவை இரண்டு.

1. கழக இலக்கியச் செய்திகளைப் பலரையும் சுவைத்துப் படிக்கச் செய்தது.

2. தமிழ் இலக்கியத்தில் விளங்காத புதிர்கள், ஐயத்திற்கிடமான செய்திகள் முதலியவற்றைத் தெளிவுபடுத்தியது.

கவரிமா ! கவிரிமான் !

''மயிர் நீப்பின் வாழாக் கவிரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்!''

இக் குறட்பாவுக்குப் பலவகையான விளக்கங்கள் கூறப்பட்டன. ''கவரிமான் தன் உடலில் உள்ள முடி ஒன்று விழுந்துவிட்டால் அது, தன் மானத்துக்கு இழுக்கு என்று கருதி உயிரை விட்டுவிடும்;'' என்பதே பெரும்பான்மையாகச் சொல்லப்பட்டு வரும் கருத்தாகும்.

ஆனால்,பி.எல்.சாமியின் ஆய்வு அக்கருத்தை மாற்றியது.

கவரிமான் எனும் விளக்கத்தை அவர் மறுத்தார். அது வள்ளுவர் கூறிய 'கவரி மா' வே ஆகும். அது ஒரு மாட்டு வகையைச் சேர்ந்தது. பனிமலைகளில் வாழும் அக் கவரி மாவுக்கு அதன் முடியே குளிரிலிருந்து காவலாக இருக்கிறது. அது அம் முடியை இடிந்துவிட்டால் குளிரிலிருந்து காத்துக்கொள்ள இயலாமல் இறந்துவிடும் என்ற விளக்கத்தைப் பி.எல்.சாமி கூறியபின் கருத்தில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

அவர் கருத்து வெளிப்பாட்டின் விளைவாகத் தமிழ் இலக்கியத்தைப் பார்க்கும் பார்வையே மாறிவிட்டது.

அறிஞர் பி.எல். சாமி ஆய்வு முறையில் சொல்லாராய்ச்சி தவறாமல் இடம் பெறும். நடுநிலையோடும் ஆழ்ந்த கவனத்துடனும் அச் சொல்லாராய்ச்சி மேற்கொள்ளப் பெறும்.

துகில் பற்றி ஆய்வு செய்யும்போது அச்சொல் தமிழே என்பதைக் குறித்துச் சான்று காட்டி எழுதினார். ''துய், துய்யில், துகில் என்று வரும் மாற்றம் இயற்கையானதாகும். துய் என்ற சொல் மெல்லிய இழையைக் குறிக்கும். மலைபடு கடாத்தில் 'துயம் மயிர்'(418) என்ற வழக்கில் துய மென்மைப் பொருளில் வழங்கியுள்ளது.''

''துகில் என்ற ஆடையைக் குறித்த சொல் வடநூலில் Dukilaஎன்று மாறியது. கி.மு.சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே துகில் என்ற தமிழ்ச் சொல் வடமொழியில் புகுந்து சிறிது ஒலிமாற்றம் அடைந்தது. வடமொழிப் பற்றுடையோர் இச் சொல் வடமொழிச் சொல் எனினும் அதற்குச் சான்றுகள் கூற முடியவில்லை.

''ஆரியர் இந்தியாவில் நுழைவதற்கு முன்னரே நெய்யுந் தொழில் சிறப்புற்றிருந்தது. அதற்கு அரப்பா நாகரிகம் சான்று பகர்கின்றது. ஆதலின் ஆரியர்க்கு முன்னரே இந்தியாவில் இருந்த திராவிடரிடமிருந்து ஆடையைப் பற்றிய சொல்லை ஆரியர் எடுத்துக் கொண்டனர்.' என்று அவர் நடுநிலையோடு உணர்ச்சி காட்டாமல் எடுத்துரைத்த முறை எதிரியைக்கூட ஏற்கச்

செய்வதாகும். ஆரவாரச் சொல்லாராய்ச்சி செய்வோர்க்கு அவர் ஒரு பாடம்.

கழக (சங்க) இலக்கிய அறிவு வரலாறு எழுதுபவர்க்கு இன்றியமையாதது என்பதை வலியுறுத்தியவர் பி.எல்.சாமி. அவ்வளவு இன்மையால் வரலாற்றைப் பிழையாக எழுதிய நீலகண்ட சாத்திரியின் குறையையும் நாகரிகமாக எடுத்துக் காட்டினார்.

நீலகண்ட சாத்திரி 'வெளிநாட்டுப் பயணிகளின் செய்திகள்' என்றொரு நூல் எழுதினார். அதில் கட்டளைக்கல் என்பதுபற்றிக் ''கூர்ந்து ஒப்பிட்டு ஆராய்ந்து நேர்வுபடுத்திக் கூறவில்லை'' என்றார் அவர்.

கழக இலக்கியங்களில் கட்டளைக்கல் 'கறுப்பு நிறமுடையது' எனக் கூறப்பட்டுள்ளதையும் பிளினி என்னும் உரோம ஆசிரியர் கூறுவதையும் அவர் சான்றாகக் காட்டினார். கழக இலக்கிய அறிவு நீலகண்டர்க்கு இல்லாத குறையால் வரலாற்றில் நேர்ந்த பிழையைப் பி.எல்.சாமியே கண்டறிந்தார். 'பாம்பறியும் பாம்பின் கால்' அன்றோ?

வாழ்ந்த காலத்தில் மதிப்புடன் வாழ்பவர் சிலரே. பெரும்பாலோர் மறைந்த பின்னர் மதிக்கப் படுவர். பி.எல்.சாமி வாழுங்காலத்திலேயே மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டார்.

செந்தமிழ்ச் செல்வி, அவருக்கு முனைவர் பட்டம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியது கொண்டு இதனை உணரலாம்.

✱

நினைவிலிருந்து நீங்காதவர்!

ஆ. வேங்கடேசன், எம்.ஏ.,
பாரத ஸ்டேட் பாங்கு, சென்னை-97.

திரு பி. எல். சாமி ஐ.ஏ.எஸ் அவர்கள் அரசாங்க இயந்திரத்தில் ஒரு முக்கியமான இடத்தில் இருந்து கொண்டு, எவ்வளவோ பணிச் சுமைகளுக்கு இடையில், தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று நினைத்து, அதன்படியே பல தமிழ் இலக்கியங்கள் படைத்துச் செயலாற்றித் தமிழ்இலக்கிய சாதனையாளர் என்ற உயரிய இடம் பெற்றுவிட்டார். இதை நினைக்கும் போது மிகவும் விந்தையாக இருக்கின்றது.

தமிழ்த் துறையி இருந்து கொண்டு, திரைப்படத் துறைக்குப் பணியாற்றிப் பணம் நிறைய சேர்க்க நினைக்கும் இந்த நூற்றாண்டில், தமிழர் மனம் நிறைய, நிறைந்த தமிழ் பணியாற்றிய இவர் ஓர் அதிசயத் தமிழர் என்றால் மிகயாகுமா?

இவரின் பணியால் இலக்கிய நயங்கள் பட்டைத்தீட்டப்பட்ட வைரங்களாக மிளிர்கின்றன என்றால் மிகையாகாது.

தமிழ் இலக்கியத்தை, இவர் அறிவியலாகவும், வரலாறாகவும் மாறுபட்ட முறையில் உணர்ந்து சங்க இலக்கியங்களில் மூழ்கி வாழ்வின்பம் கண்ட அதிசய

மனிதர். இவரது 'இலக்கிய ஆய்வு' எனும் நூலில் நாவல் மரம்பற்றிக் குறிப்பிடும்போது, நற்றிணை, அகம், புறம், மலைபடுகடாம், மணிமேகலை, சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, பரிபாடல், பொருநராற்றுப் படை, ஆகிய இலக்கியங்களில் நாவல் மரத்தைப் பற்றிய குறிப்புகளை எல்லாம் மேற்கோள் காட்டி - எழுதிய இவரது கட்டுரையைப் படிக்கும்போது இவரது தமிழ் ஆராய்ச்சித்திறன் அதிகமாகவே புலப்படுகின்றது.

இயற்கை வாழ்வும், இலக்கியப் பயனும் மிக்க பழந்தமிழ் இலக்கியங்களை, இன்றைய தமிழருக்கு எளிதாக, இனிதாக வழங்கிய இவரின் தமிழ்ப்பணி - சிறந்த தொண்டாகும்; அல்லவா!

இவரது படைப்புகள் ஆழக்கல்வியும், அகலக் கல்வியும் இல்லாதவரும் கூட எளிதில் புரியும்படியாக அமைந்து இருப்பது, இவரின் தமிழ்ப்பணிக்கு கிடைத்த சிறந்த அங்கீகாரம் என்று கூடச் சொல்லாம்.

இவரது கட்டுரைகள், தமிழில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டோருக்குச் சிறந்த ஒளிவிளக்காக இருந்து உதவி செய்துவருகிறது.

தமிழ்நாட்டில் இவ்வளவு சிறப்பான, தரமான, தமிழ் அறிஞர்கள் அனைவரும் போற்றும்படியான ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பார்ப்பது மிகவும் அரிது. இத்தகைய சிறந்த தமிழ் ஆராய்ச்சிப் பணியைச் செய்த இவரை, இவரின் தமிழ்ப் பணிக்காக, இவருக்கு என்றென்றும் தமிழுலகம் நன்றி சொல்லும்!

★

தமிழர் இதயத்தில் வாழ்கின்றார்!

கவிஞர் துரை. மாலிறையன், புதுச்சேரி

சின்னதொரு பூவோடும் இலையி னோடும்
   செந்தமிழால் பேசியவர் இன்பம் கண்டார்
பின்னுகிற கொடிகளொடும் செடிக ளோடும்
   பெருமலையின் மரங்களொடும் நட்புக் கொண்டு
மன்னுகிற வாழ்வுநிலை அடைந்து விட்ட
   மாமனிதர் நாம்போற்றும் பி.எல். சாமி
இன்னலற இயேசுநாதர் அடிகள் சேர்ந்தார்
   எல்லார் தம் இதயத்துள் வாழ்கின் றாரே!

பதவியிலே உயர்ந்தாலும் பணிவு கொண்டார்
   பைந்தமிழின் துணை யோடும் உலாவச் செல்வார்
முதுமை என ஒருநாளும் முயற்சி இன்றி
   முடங்கிஒரு இடம்நில்லார் சங்கப் பாவின்
புதுமைகளை அறிவியலின் நோக்கத் தோடு
   பொன் சுரங்கம் எனத்தோண்டித் தோண்டித் தோண்டி
வித வித மாய் நன்மணிகள் எடுத் தெடுத்து
   வியன்தமிழை அணிசெய்தார் உழைப்பி னாலே!

தமிழுக்குத் தொண்டு செய் வோர் சாவ தில்லை
   தமிழுலகில் எப்போதும் நிலைத்து வாழ்வார்
இமைப்போதும் சோராமல் பி.எல். சாமி
   இணையில்லாத் தமிழாய்வு செய்த வேந்தர்
கமழ்கின்ற தமிழ்ச்சங்கப் பாடல் எல்லாம்
   கனிகின்ற நெஞ்சத்தால் பெருமை கொண்டார்
நமை இன்று பிரிந்தாலும் தமிழி னோடு
   நட்பியற்றி வாழுகின்றார் வணங்கு வோமே!

அறிவியல் பேரறிஞர்

பி.எல்.சாமி

புலவர் முத்து. எத்திராசன், எம்.ஏ.,

வித்துவான் தேர்வு எழுதுவதற்காக வைக்கப்பட்ட பாடங்களில் சங்க இலக்கியப் பாடல்களும் ஒருசில இடம் பெற்றிருந்தன. அப்பொழுதுதான் சங்க இலக்கியத்தைப் பற்றிய அறிவு ஓரளவு எனக்குக் கிடைத்தது. அதன்பின்னர் சங்க இலக்கியங்களைப் படிக்கும் ஆர்வம் தொடர்ந்தது.

கருப்பொருள்களைக் காணும்போது அக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த உயரினங்கள்,செடி கொடி மரங்கள் பலவற்றை அறியமுடிகிறது. ஒரு சிலவற்றின் பெயர்கள் இன்றும் மறையாமல் உள்ளன.

பேரறிஞர் பி.எல்.சாமி அவர்களுடைய நூல்களான சங்கநூல்களில் செடிகொடிகள்,சங்க இலக்கியத்தில் அறிவியற்கலை,சங்க நூல்களில் சில உயிரினங்கள், சங்கநூல்களில் விந்தைப்பூச்சி, இலக்கியத்தில் அறிவியல்,சங்கநூல்களில் மீன்கள், சங்கநூல்களில் மரங்கள், சங்கநூல்களில் மணிகள், சங்கநூல்களில் முருகன், இலக்கிய ஆய்வு முதலிய நூல்கள்யாவும் தொடர்ந்து வெளிவரலாயின.

நமது சங்க இலக்கியங்களைப் படிக்கின்ற ஒவ்வொரு வரும் கவிதைகளின் நயம், சொல்லாட்சி, சமூகப்பார்வை, அரசியல் செய்தி புலவர்களின் பெருமை,மக்களின் பண்பு, கலாச்சாரம் ஆகியவற்றைக் காண்பர்.

ஆனால் அக்காலத் தமிழர்கள் இயற்கையை ஒவ்வொன்றாக அணு அணுவாக அனுபவித்துக் கூறிய செய்திகளை யாரும் எடுத்துக் கூறியிருக்கமாட்டார்கள். இதை நன்கு அறிந்து நமக்கெல்லாம் காரண காரியங்களுடன் எடுத்துக் காட்டியவர் மறைந்த அறிஞர் பி.எல்.சாமி அவர்களே.

இக்காலத்தில் மேல்நாட்டார் ஒவ்வோர் உயிரினத்தையும் மரஞ்செடி கொடிகளையும் புல்,பூண்டுகளையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து அதை நூல்களாக வெளியிட்டுள்ளனர். இன்னும் வெளியிடும்படி ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம்தமிழர்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அதைப் பாட்டின்மூலம் படைத்துக் காட்டியுள்ளார்கள் என்று நினைக்கும்போது அக்காலமக்களின் கூர்த்த மதியையும் இயற்கையைக் கண்டு அறிந்த முறையையும் எண்ணி வியக்காமலிருக்க முடியாது.

வாழ்க பி.எல்.சாமி அவர்களின் புகழ்!

வளர்க அன்னாரின் அறிவியல் பார்வை!

ஒளி காட்டுபவர்!

வி. இராமலிங்கம், எம்.ஏ., எம்.ஏ.,
எம்.பி எல்., பி.எட்., பிஎச் டி.,
புதுச்சேரி – 9

அறிஞர் பி.எல்.சாமி ஆட்சியியல் துறையில் வல்லுநராக விளங்கியதோடு, தமிழ்நாட்டு வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய துறைகளிலும், தனித்திறமை பெற்றவராக விளங்கினார்.

பழந்தமிழர் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்து எழுதவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியவர்.

குறிப்பாக, குமரிக் கண்ட ஆய்வு குறித்து அவர் அதிகம் ஆர்வம் கொண்டிருந்தார். வயது முதிர்ந்த நிலையிலும் 1994ஆம் ஆண்டு மே மாதம் சென்னையில் நடந்த லெமூரியா சிந்துவெளி குறித்த ஆய்வு மாநாட்டில் மிகுந்த ஆர்வத்தோடு கலந்துகொண்டு நல்ல செய்திகளை ஆய்வு உலகிற்கு வழங்கினார்.

புதுவையில் வரலாற்றுச் சங்கம் சிறப்பாகச் செயல்பட அரிய பல பங்களிப்பை நல்கிப் புதுவை வரலாற்றிற்குப் 'புது வெளிச்சம்' ஊட்டியவர்.

படிக்கும் மாணவருலகத்திற்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் இவரது ஆய்வுக் கருத்துகள் என்றும் ஒளிகாட்டி உயர்வைத் தரும் என்பது திண்ணம்.

அறிவியல் இலக்கிய,
கலை வரலாற்று வல்லுநர்.

நடன காசிநாதன்,
தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர், சென்னை.

அறிஞர் பி.எல். சாமி அவர்கள் இந்திய ஆட்சிப் பணி அலுவலராகப் பணியாற்றும்போதும், அப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தமிழிலக்கியங்களைத் தம் ஆய்வின் மையப்பொருளாகக் கொண்டு, அக்கு வேறு ஆணி வேறு என்று கூறுவார்களே அது போன்று பிரித்துப் பிரித்து ஆய்வு செய்தார்.

இலக்கியங்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டிற்குச் சற்றும் குறையாமல் வரலாறு மற்றும் கலைப் படைப்புக்கள் மீதும் பேரார்வம் காட்டி வந்தார்.

அறிஞர் பி.எல். சாமி அவர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்த அருமை நண்பர் வெள்ளையாம்பட்டுசுந்தரம் அவர்களின் வாயிலாகத்தான் அறிஞர் அவர்களின் நூல்கள் எமக்குத் தெரியவந்தன. பின்பு சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் மற்றும் என்.சி.பி.எச். நிறுவனம் ஆகியவை வெளியிட்டுள்ள நூல்களையும் படிக்கும் பேறு பெற்றேன்.

என் மனத்தில் அறிஞர் சாமி அவர்களின் அறிவாற்றலையும், 'எப்பொருள் யார் யார் வாய்க்

கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்ற வள்ளுவரின் குறட்பாவின் பொருளுக்கு முழுமையான வடிவம் தந்து செயல்படும் திறனையும் கண்டு வியந்து நின்றேன். இத்தகைய பேராற்றல் பெற்றுத் திகழும் ஒரு மாமனிதர் தமிழகத்தில் உள்ளாரே என்று பெருமிதம் கொள்வேன்.

இந்தக் காலக்கட்டத்தில் தான் விழுப்புரம் மாவட்டம் கீழ்வாலையில், வரலாற்றுக்கு முந்தையகால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பெற்று, செய்தித்தாள்களில் வெளிவந்தன. ஓரிரு திங்களில் அவ்வோவியங்கள் பற்றிய அருமையான ஒரு சிறுநூலைத் 'தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்' என்ற தலைப்பில் இப்பெருமகனார் வெளியிட்டிருந்தார்.

நூலைப் படித்துப் பார்த்ததும் இவ்வோவியங்களில் உள்ள சில குறியீடுகளை, ஆசிரியர் சிந்துவெளி நாகரீகக் குறியீடுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்திருந்தது, ஏற்புடையதாக எமக்குப் பட்டது. ஆதலால் இவர்தம் அறிவாற்றலை எம் துறைக்குப் பயன்படுத்திக் கொள்ள வழிவகைக் காணவேண்டும் என்று மனத்தில் திட்டமிட்டுக்கொண்டேன்.

சில ஆண்டுகள் கழித்துத் தமிழகத்தில் மிக முக்கிய துறைமுகமாகவும், சங்க காலச் சோழர்களின் தலைநகரமாகவும், விளங்கிய பூம்புகாரில் ஆழ் கடலாய்வைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையும் கோவா தேசிய ஆழ்கடல் ஆய்வு நிறுவனமும் சேர்ந்து நடத்தி வந்த காலத்தில், பூம்புகாரிலேயே

கடற்பயணம் பற்றிய ஒரு கருத்தரங்கை நடத்த வேண்டியதாயிற்று.

அக்கருத்தரங்கில் இப்பேரறிஞர் 'கபாடபுரம்' என்னும் கட்டுரையைப் படித்தளித்தார். 'கபாடபுரத்துக்கு' இவர் அளித்த விளக்கம் கருத்தரங்கில் பங்கு கொண்டிருந்த அனைவரையும் மேலும் ஆழ்ந்து சிந்திக்க வைத்தது.

'கபாடபுரம்' என்பது கடலால் கொள்ளப்பெற்ற 'குமரக்கண்டத்தின் நுழைவாயில்' என்று இவர் தந்த விளக்கம் குமரிக்கண்டம் எற்றி அறிஞர்கள் கொண்டிருந்த சிறு சந்தேகத்தைக் கூடப்போக்கும் வகையில் அமைந்தது.

இந்தி ஆட்சிப் பணி அலுவலராக இவர் மாஹியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தாம் நேரில் கண்டுகளிதத 'வேலன் ஆட்டம்' தமிழ் நாட்டு முருகன் வழிபாட்டோடு எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைத் தம் நூலான 'சங்க நூல்களில் முருகன்' என்பதில் மிக அழகாகவும், உரிய சான்றுகளோடும் விளக்கியுள்ளார்.

தில்லை 'நடன சபாபதி' பற்றி 'செந்தமிழ்ச் செவ்வியல்' ஒரு கட்டுரையும், 'தட்சிணாமூர்த்தி பற்றி' 'அமுதசுரபி' திங்கள் இதழில் ஒரு கட்டுரையும் எழுதியிருப்பது கலையியலில் இவர் கொண்டிருந்த ஆர்வத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

நடன சபாபதி கோயிலுக்கு ஆதியில் 'பொது' என்று இருந்த பெயரே பின்னாளில் 'சபை' என்று மாறியது என்றும். 'சிற்பொது' என்ற பெயர் சிற்றம்பலம் என்று

மாற்றம் பெற்றது என்னும் இவரது கருத்துக்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியவையாக உள்ளன.

''அப்பர் தேவாரத்தில், உமைபாட ஆடும் சிவனும், உமையோடு ஆடும் சிவனும், காளி காண ஆடும், காளி கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் வியாக்கர பாதரும், பதஞ்சலியும் பார்த்ததோ பூசித்ததோ அப்பர் கூறவில்லை.

இதிலிருந்து சிவராமூர்த்தி வடமொழி உப நிடதங்களோடு, வேதங்களோடு நடனத்தை இணைத்துக் கூறியது பொருத்தமற்ற, வலிந்த கூற்றாகும், என்பது விளங்குகின்றது'' என்று இவர் நடனசபாபதி பற்றிய கட்டுரையில் எழுதியிருப்பது தேவராத்திருப்பகங்களில இவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்தும்.

இவர் படைத்துள்ள மற்றொரு முக்கிய நூல் தாய்த் தெய்வ வழிபாடு பற்றியதாகும். இந்நூலை என்.சி.பி.எச் வெளியிட்டிருக்கிறது.

தமிழகத்தில் தாய்த் தெய்வ வழிபாட்டின் தோற்றம், அவ்வழிபாடு பற்றி இலக்கியங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள், தொல்பொருள் சான்றுகள் இலக்கியக் கருத்துக்களுக்குத் துணை நிற்கும்பாங்கு, மக்கள் வாழ்க்கையில் தாய்த் தெய்வ வழிபாட்டிற்கு அளிக்கப் பெற்றிருந்த முக்கியத்துவரம் ஆகிய அனைத்துக் கூறுகள் பற்றியும் விரிவாக அறிஞர் சாமி அவர்கள் எழுதியிருப்பது, தாம் ஒரு இலக்கியவாதி மட்டுமல்ல கலை வரலாற்று வல்லுநரும் கூட என்பதை நிருபிப்பதாகும்.

இப்பேரறிஞர் இத்திங்கள் தொடக்கத்தில் இவ்வுலகு விட்டு மறைந்திருப்பது கலை வரலாற்று உலகுக்கும் அறிவியல் இலக்கிய உலகுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

இப்பெருமகனார் தம் நேர்முகக் கள ஆய்வு மூலமும், இலக்கிய மற்றும் வரலாற்றுப் பட்டறிவு மூலமாகவும், பன்மொழிப் புலமை மூலமாகவும் தாம் கண்ட, கேட்ட, ஆராய்ந்தறிந்த அநுபவப் புதையல்களைத் தமிழகத்துக்கு விட்டுச் சென்றுள்ளார்கள்.

இவர் மேற்கொண்டிருந்த ஆய்வு வழியைப் பின்பற்றி மேலும் ஆய்வு செய்வதும்; இவரது அரிய நூல்களை நாட்டுடைமையாக்குவதும் நாம் இப் பெருமகனாருக்குக் காட்டும் நன்றிக் கடனாக அமையும்.

தமிழுக்கு அணிசெய்தார் வாழ்க!

முனைவர் **தி. தேவிதாசன்**, புதுவை.

எண்டிசையும் புகழ்மணக்க இருந்திட்ட எங்கள்
எழிலார்ந்த தமிழகத்தின் ஒப்பில்லா ஓய்மா
திண்டிவனப் பெருநாட்டில் வழிவழியாய் வந்த
திருவுடைய செல்வர்தம் குடும்பத்தில் அன்பாய்ப்
பிறந்திட்ட குழந்தைக்குப் பெயரிட்டார் நல்ல
பி.எல். சாமி என்றேதான் பின்னாளில் கண்டோம்
சிறந்திட்டார் சங்கவிலக்கி யங்களிலே ஊறிச்
சிறப்புற்றார் சிந்தனையால் செழிப்புற்றார் வாழ்க!

வில்லியனூர் வட்டார வளர்ச்சியிலே ஆழ்ந்து
விரிவான திட்டங்கள் தீட்டியதால் ஆட்சி
நல்லநல்ல செயலெல்லாம் செய்துபெயர் வாங்க
நாளெல்லாம் உழைத்துவந்தார்; உயர்ந்திட்டார் சாமி
சங்கநூலை ஆழ்ந்தாழ்ந்து கற்று வந்தார்; சொன்னார்
சங்கம்போல் நமக்குண்டோ பொற்காலம்? இல்லை!
எங்கும்நாம் நூல்நிலையம் அமைத்திடுவோம் என்றே
எழுச்சியூட்டி தமிழுக்கே ஏற்றஞ்செய் தாரே!

அறிவியலின் கண்கொண்டே அயராமல் கற்றே
ஆழமாகச் சிந்தித்துத் தெரிந்தறிந்த பின்னே
பிறமொழியில் உள்ளவைபோல் பிரித்தெடுத்துத் தேர்ந்தே
பற்பலவாம் விலங்குகளை, பறவைகளை யெல்லாம்
திறனாய்வு செய்துநல்ல கற்களையும் கண்டு
தெரிந்தெடுத்தார் 'நவரத்னம் இவையிவை!' என்றே
அறிவுசான்ற தமிழ்நூற்கள் பற்பலவும் தீட்டி
அன்னையாம் தமிழுக்கே அணிசெய்தார் வாழ்க!

கலங்கரை விளக்கம்

புலவர் ம. அய்யாசாமி, எம்.ஏ., எம்.எட்.,
புதுச்சேரி

திரு பி.எல். சாமி அவர்கள், தமிழில் பட்டம் பெறாவிடினும் தமிழில் உள்ள சங்க இலக்கியங்களையும் புராண இதிகாசங்களையும் நன்கு கற்றவர்.

அறிவியல் துறையில் ஆழ்ந்த ஈடுபாடும் நுண்ணறிவும் உடையவர். சங்க இலக்கியங்களை அறிவியல் நோக்கோடு ஆய்ந்து கற்றுத் தோய்ந்து பல புதிய செய்திகளைத் தமிழ் உலகிற்கு அளித்த அறிவியல் தமிழ் அறிஞர் என அவரைப் போற்றலாம்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் அறிவியல் கருத்துகளை நன்கு ஆய்ந்து, பல நூல்களை எழுதி வெளியிட்டுத் தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்தார்; நிலைத்த புகழ் பெற்றார் அவர். தொண்டு தமிழ் இலக்கியம் கற்பார்க்கு ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது. அறிவியல் நோக்குடன் இலக்கியத்தைக் கற்க அவர் ஒரு வழிகாட்டியாக விளங்கினார்.

மேலும் அவர் தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, கம்பன் காவியத்தில் உயிரினங்கள், Common Names and Myths of the Flora and Fauna in Dravidian and

Indo - Aryan languages ஆகிய நூல்களையும் எழுதித் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இலக்கியத்தில் கூறப்படும் ஒரு வகை விந்தைப் பூச்சி தம்பலப்பூச்சி ஆகும். இதை இந்திர கோபம் என்று வடமொழியில் அழைப்பர். இலக்கியத்தில் இதை நம் புலவர்கள் 'மூதாய்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இது மாரிக்காலத்தில் புல்வெளியில் முதல் மழை பெய்தால் தோன்றித் திடீரென்று மறைந்துவிடும் இயல்புடையது. வெயில் தோன்றின் இருந்த இடம் மறைந்து போகும். மாலைக் காலத்தில் தரையில் ஊர்ந்து வெளிப்படும்.

அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்துப் பிரித்தபோது களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்ற பொருத்தமான பெயர்கள் இட்டு அமைத்தனர். இம்மூன்று தலைப்புகளுக்கும் ஆசிரியர் கூறும் விளக்கம் வியந்து பாராட்டுதற்குரியது.

மணிகள்

சங்ககால இலக்கியங்களில் காணப்படும் மணிகளைப்பற்றிய செய்திகளை, உரோமர், கிரேக்கர், சீனர் கூறியுள்ள பண்டைய செய்திகளுடன் ஒப்பிட்டு ஆய்ந்து முதல்முறையாக ''சங்க நூல்களின் மணிகள்'' என்ற நூலைத் தமிழுலகிற்குத் திரு பி.எல். சாமி அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

மணி என்ற பெயர் பெரும்பாலும் மாணிக்கத்திற்கும் நீலத்திற்கும் வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில்

கிடைத்த கற்களில் சிறந்தவை வைடூரியமும் நீலமும் ஆகும்.

வைடூரியம் என்ற பெயரைப்பற்றி ஆராய்ச்சி செய்து இந்நூலில் ஆசிரியர் கூறியுள்ளார். வெருகின்கண், வெருக்கக் கண் என்ற பெயர்களே வைடூரியத்தின் பெயராக முற்காலத்தில் வழங்கி இருக்க வேண்டும். வைடூரியம் என்பது வடமொழிப் பெயர்.

மணிகளின் பலவகை நிறங்களைக் குறிப்பிடப் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை ஒப்பிட்டுக் கூறுவது பழந்தமிழர் மரபு. மணிகளில் தோன்றும் நுண்ணிய நிறங்களை வேறுபடுத்திச் சொல்ல அக்காலத்தில் சொற்கள் இல்லை. இயற்கைப் பொருள்களின் நிறங்களுடன் மணிகளின் நிறங்களை ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

இந்நூலில் சிவப்பு ஆள்காட்டி, மஞ்சள் ஆள்காட்டி, ஆள்காட்டி - காதிலை, வேட்டுவன் எனும் குளவி, கடுந்தேறு எனும் குளவி, வரையாடு, ஆமா, நீலச்சேவல், பட்டுப்பூச்சி, ஆதின முதுபோத்து, வேதினம் (அம்பு), கொந்துகோல் (அங்குசம்) ஆகியன பற்றி வண்ணப் படங்களுடன் விளக்கங்களையும் காணலாம்.

அரிய உண்மைகளைக் கண்டளித்த இவர் புகழ் தமிழ் வரலாற்றில் புதிய கலங்கரை விளக்கமெனத் திகழும்!

சிந்தனையில் சிறந்தவர்!

அர. வசந்தகல்யாணி
தமிழ்நாடு தொல்பொருளாய்வுத் துறை,
கல்வெட்டாய்வாளர், தரமணி, சென்னை - 113

தமிழகத்தில் அறிவியலையும் இலக்கியத்தையும் வரலாற்றையும் தனித்தனியே ஆய்வு செய்து ஒன்றுக் கொன்று தொடர்பில்லாதவை என்ற தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருந்த கால கட்டத்தில் அறிஞர் பி.எல். சாமி அறிவியற் கண்ணோட்டத்தோடு இலக் கியத்தை ஆய்வு செய்து புதிய வகையில் சிந்தித்தவர். அந்த வகையில் அனைவருக்கும் முன்னோடியாவார்.

முதன்முறையாகத் தாவரங்கள் பற்றிய விளக்கங் களை ஆய்வு செய்து அவற்றுக்கான தாவரப் பெயர்களை இணைத்து எழுதியவர். பழந்தமிழ் நூல்கள் கூறும் விலங் கினங்களை வகைப்படுத்தி அவை அந்தந்த இயற்கைச் சூழல்களில் உள்ளனவா என்பதையும் ஆய்ந்தவர். அக்காலத் தமிழ் மக்களின் நிலவியல் அறிவு தாவர மற்றும் விலங்கின அறிவுபற்றி உலகிற்கு எடுத்துக் காட்டியவர்.

எறும்பு முதல் யானை வரை உருவில் சிறியன வற்றையும் பெரியனவற்றையும் கூர்ந்தாய்வு செய்தவர். சங்க இலக்கியங்களில் விலங்குகளில் இளங்குட்டிகள், வயது முதிர்ந்தவை ஆகியவற்றைக் கண்டறிந்து கூறியவர். எனவே இவர் சிறந்தார் என்று கூறுவதைக் காட்டிலும் பண்டைத் தமிழர் சிறந்தனர் என்று பெருமையுறலாம்.

அறிவியல் தமிழ் அறிஞர்

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
சென்னைப் பல்கலைக்கழகம்

காலந்தோறும் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சிக்குப் புதிய புதிய பங்களிப்புச் செய்தவர்கள் பலர். பதிப்பு நோக்கிலும் இலக்கணநோக்கிலும், இலக்கிய நோக்கிலும் சங்க இலக்கியங்கள் தொடக்க காலத்தில் ஆராயப் பெற்றன.

உரையாசிரியர்களின் புலமைப் பின்புலத்தில் பல ஆய்வுகள் உருவாயின. தொல்பொருளியல் ஆய்வின் விளைவாகச் சங்கநூல்களை அத்துறையோடு பொருத்தி ஆராய்ந்தனர். மேலைநாட்டு ஆய்வுத் திறத்தின் பின்னணியில் புதியபுதிய ஆய்வுகள் உருவாயின. சங்க இலக்கியப் பொருண்மை புதிய ஒளிபெற்றுத் திகழ்ந்தது.

அறிஞர் பி.எல்.சாமி அவர்கள் அறிவியல் சார்ந்த ஆய்வுகளால் ஆய்வுலகிற்குப் புதிய வளம் சேர்த்தவர். இலக்கியங்களில் காணலாகும் தாவரங்கள்,உயிரினங்கள் முதலியவற்றைப் புதியநோக்கில் அரிதின் முயன்று ஆராய்ந்து பழந்தமிழரின் புலமையையும் இயற்கை சார்ந்த வாழ்வியல் நெறியையும் புலப்படுத்தியவர்.

சங்கப்பாடலின் தனித் தன்மை இவருடைய விளங்கங்களால் மேலும் புதுவதாகச் சிறக்கின்றது.

'கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே'

என்ற வரியில் காணலாகும் குறிஞ்சிப் பூவையும், குறிஞ்சித்தேனையும் தாவரவியல் சார்ந்த சிறப்பு நிலையில் நினைக்கும்போது அப்பாடல் புதுவிளக்கம் பெறுவதைக் காண்கின்றோம்.

குறிஞ்சிப்பூ பூப்பதையே அடிப்படையாக வைத்து வயதைக் கணக்கிட்ட தோடர்கள் வழக்கத்தினையும் அறிஞர் கூறுவது எண்ணத்தக்கது. குறிஞ்சிப் பூவின் வளர் நிலையையும் நட்பாக ஆராய்ந்து அதன்பின்புலத்தில் அறிஞர் சாமி அவர்கள் பல வியத்தகு சுவையான செய்திகளைத் தந்துவிடுகின்றார்.

அறிவியல் சார்ந்த அவருடைய விளக்கங்களைப் படித்து முடித்த பின்னர் சங்க இலக்கியம் ஆழமும் அகலமும் பெற்ற அறிவியல் களஞ்சியமாகத் திகழ்வதை உணரமுடிகின்றது.

இன்றைய 'தொட்டாற்சிணுங்கி' என்று கூறப்படும் செடிவகை அகநானூற்றில் கூறப்பெறும் 'மாழ்கி' எனும்போது அதன் பண்டைய பெயரையும் அதன் பொருளையும் அறிந்து வியந்து நிற்கின்றோம்.

'மாழ்கி அன்ன தாழ் பெருஞ் செலிய' என்னும் தொடரில் மாழ்கி என்பதற்கு 'மயங்கி விழுந்தாற் போல' என உரையாசிரியர் தரும் விளக்கத்தையும்

பொருத்திக் காட்டி அச் செடியின் தன்மையையும் விளக்கி விடுகின்றார்.

இன்னசெடி என்றறிய வியலாத வாழ்வுச் சூழலில் வளர்ந்து வரும் நமக்குத் தாவரவியலின் பொருள் விளக்கத்தை அரிய முறையில் சுவையாகக் காட்டி விடுகின்றார். இவ்வாறு அரிய உயிரினங்கள் பலவற்றின் விளக்கங்கள் அவர்தம் ஆய்வு நெறியால் புலனாகி உள்ளன.

மல்லிகையின் மணத்தை நாம் நுகர்ந்து மகிழ்ந் திருக்கின்றோம். குறிஞ்சிப்பாட்டில் 'நள்ளிருள் நாறி' எனும் பூச்செடி சுட்டப் பெற்றுள்ளது. இது இருவாட்சிப்பூ எனப்படும் என்பார். 'கொல்லிப் பெருவாய் மலரோடு பசும்பிற் மகிழ்ந்து' என்னும் தொடரில் வரும் பெருவாய் என்பதற்கும் இருவாட்சி எனப் பொருள் உரைக்கப் பெற்றுள்ளது. இருவாட்சி மலர் மல்லிகைப்பூவின் ஒருவகைப் பொருண்மை நுட்பத்தைச் சுவைத்து மகிழலாம்.

'வெள்வீ' என்று புறநானூற்றில் சுட்டப்பெறும் பூவும் மல்லிகைப் பூவைக் குறித்துச் சொல்லியது என்பார். முல்லை, மௌவல், குளவி, பித்திகம், பெருவாய் என்ற பெயர்கள் எல்லாம் சங்ககாலத்தில் மல்லிகைப்பூவின் வகைகளாகக் குறிக்கப்பெற்றன என்று குறித்துள்ளார்.

இத்துறையில் மேன்மேலும் ஆராய்வதற்கு அறிவியல் அறிஞரின் நூல்கள் பெருந் துணையாய் அமைகின்றன.

சங்கப்புலவர்கள் இலக்கியத்தில் அறிவியலையும் கலந்தே தம் படைப்புகளைப் படைத்துள்ளார் என்பதை அறிஞர் சாமி தம் நூல்களின் வழி நன்கு விளக்கி யுள்ளமை கருதத்தக்கது.

சங்கப்புலவர்கள் மரஞ் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள் ஆகிய உயிர்களைக் கண்டு அவைகளின் தோற்றம், உருவம், குணம், செயல் ஆகிய பல செய்திகளையும் ஆராய்ந்தறிந்து கூறியுள்ளனர் என்பதைத் தக்க சான்றுகளோடு விளக்கிக் காட்டியுள்ளார்.

வாழ்நாள் முழுவதும் இவ் வாய்விற்காகவே தம்மை ஈடுபடுத்திக்கொண்டு உழைத்த அறிஞர் சாமி அவர்களின் ஆய்வுப்பணி தமிழாய்வுலகிற்குக் கிடைத்த நல்வரவு. அவரோடு இணைந்து பெரும்பொருட்செலவில் உரிய நிழற்படங்களோடு அவற்றை நூலுருவாக்கிய சேகர் பதிப்பகத்தாரின் பெருமுயற்சியையும் நாம் பாராட்டுதல் வேண்டும்.

மறக்க முடியா மேதை

கலைமாமணி டாக்டர் விக்கிரமன்
தலைவர், அகில இந்திய எழுத்தாளர்கள் சங்கம்

பண்டைய தமிழ் இலக்கியங்கள், தமிழர் வாழக்கையைப் படம் பிடித்துக் காட்டும் வரலாற்றுப் பெட்டகம், கலைக் களஞ்சியம்.

சங்கப் பாடல்களை இயற்றிய புலவர்கள் காலச் சூழலைக் கூர்ந்து கவனித்தார்கள். அவர்கள் மக்கள் வாழ்க்கையுடன் இணைந்திருந்ததால் தாங்கள் படைத்த பாடல்களில் அகத்தையும் புறத்தையும் சித்திரித்தார்கள். அந்தப் பாடல்களை ஆராயும்போது நமக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர் நாகரிகம், பண்பாடு, கல்வி, ஒழுக்கம் தெரியவருகின்றன.

மக்கள் வாழ்க்கையை மட்டுமன்றி இயற்கைச் சூழலை அவர்கள் கூர்ந்து நோக்கியிருக்கிறார்கள். உயிரினங்கள், விலங்கு, செடி, கொடி, மரம், மலைமுகடு இவற்றைப்பற்றித், தம் காலத்திற்குப் பிறகு வரப்போகிற சந்ததியினர் அறிவதற்கு வழி வகுத்திருக்கிறார்கள்.

அப் பாடல்களினின்று சங்க காலத்து விலங்குகள், பறவைகள் போன்றவற்றை அறிய முடிகிறது.

அறிய முடிகிறது என்று கூறினால், அறியுமாறு செய்தவர் யார்? சங்கப் பாடல்களுக்கு விளக்கம் சொல்ல வந்த ஆராய்ச்சியாளர்கள் சங்கப்பாடல் நயம் பற்றியும், புலவர்களின் திறமைபற்றியும் மட்டுமே விளக்கி நூல்கள் எழுதினார்கள்.

ஆனால், நம் காலத்தில், வாழ்ந்த மேதை ஒருவர் சங்கப்பாடல்களை மிகக் கூர்ந்து ஆராய்ந்து, நாம் வியக்கும் அளவுக்குக் கட்டுரைகளாக வடித்துள்ளார்.

முதலைகள் என்று சொல்லும்போது நமக்குச் சிறிது அச்சம் உண்டாகிறது. முதலைகளைப் பற்றிச் சங்கப் பாடல்கள் என்ன கூறுகின்றன?

பெண் முதலைகள் தங்கள் குட்டிகளைத் தின்று விடுமாம். பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு 'ஐங்குறு நூறு' கூறியுள்ள இந்தச் செய்தியை, ஜயப்பூரில் உள்ள உயிர்க் காட்சி சாலையில் இப்போது ஆராய்ந்து கூறுகிறார்கள்.

கடலில் கிடைக்கும் சங்கு வகைகளும் முத்துச் சிப்பியும் சங்கப்பாடலில் விளக்கப்பட்டுள்ளன. நத்தையோட்டுக் கிளிஞ்சில் வகைகளில் பறையலகு எனப்படும் பலகறை (சோழி) அரிதாக 'மதுரைக் காஞ்சியில்' கூறப்பட்டுள்ளது. இந்தக் கிளிஞ்சல்கள் பண்டைக் காலத்திலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை சில்லறை நாணயமாகப் பயன்பட்டனவாம்.

சங்கநூல்களில் அரசரா என்னும் நீலநாகம் இராஜநாகம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இந்த நாகம், அடர்ந்த மரக்கிளையில் கூடுகட்டி முட்டை

யிட்டு வாழும். பாம்புகளில் கூடுகட்டி முட்டையிடும் பாம்பு இது ஒன்றே.

வீட்டுப் பூனையைக் குறித்த பூனையென்ற சொல் சங்கநூல்களில் எங்குமே கூறப்படவேயில்லை. ஆதலின் சங்க காலத்தில் வீடுகளில் பூனை வளர்க்கப்படவே யில்லை என்பது தெளிவாகிறது. வீட்டுப் பூனையைக் கூறினதால் சங்க நூல்களுக்குப் பிற்பட்டது தான் பொருளதிகாரம் என்பது புலனாகிறது.

அரப்பா அகழ்வாராய்ச்சியிலும் அதற்குப் பிறகு கி.மு 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட செப்பு நாகரிகக் கால அகழ்வாராய்ச்சியிலும் தமிழ்நாட்டுப் பெருங்கற்கால அகழ்வாராய்ச்சியிலும் வீட்டுப் பூனை எலும்புகளே கிடைக்காதது சங்கச்செய்திகளோடு ஒத்துள்ளது. அப்படி யிருக்க பொருளதிகாரம் சங்கநூல்களுக்கு முந்தியது என்று எப்படிச் சொல்ல முடியும்? இவ்வாறு தமிழ் நூல்களில் வழங்கப்பட்ட தாவர விலங்குப் பெயர்களை அறிவியல் அறிவோடு ஆராய்ந்தால் காலத்தைக் கணிக்க உதவும் என்பது விளங்கும்.

சங்க நூல்களில 125 மரஞ் செடி கொடிகள், புற்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாக நூல் ஒன்றில் திரு சாமி ஆராய்ந்துக் கூறியுள்ளார்.

மேலே நான் குறிப்பிட்டவை என் ஆராய்ச்சிக் குறிப்பு அல்ல. நான் ஆராய்ந்து எழுதும் அரிய நிகழ்ச்சிகள் அல்ல. அவற்றைப் படிக்க படிக்க எங்கே என் அறிவுத் திறமையைப் பாராட்டி விடப் போகிறீர்களோ என்ற அச்சத்தில் இவ்வளவுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

மேதை பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ். என்ற ஆராய்ச்சி யாளரின் நூல்களில் கண்டவற்றை நான் மேலே எடுத்துக் கூறியுள்ளேன். திரு பி.எல். சாமி அவர்கள் சங்க நூல்களை மிகக் கவனத்துடன் ஆராய்ந்து பல அரிய செய்திகளைக் கட்டுரைகளாக எழுதியுள்ளார். புதுவை மாநிலத்தில் பணியாற்றியபோது புதுவைப் பகுதியாகத் திகழ்ந்த கேரள நாட்டிலும் அவர் தங்கும் வாய்ப்பு ஏற்பட்டது; அவர் ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவியது. பல சங்கப் பாடல் களில் வரும் அரிய சொற்களுக்கு விளக்கம் சேர நாட்டில் கிடைத்தது.

அவர் சங்க நூல்களை ஆராய்ந்து புள்ளினம், மீன் வகைகள், மணிகள், மரங்கள், உயிரினங்கள், எனப் பலவற்றை எளிய தமிழில் விளக்கியுள்ளார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு என் நண்பர் புலவர் தாமரைக்கண்ணன் திரு பி.எல். சாமியின் ஆராய்ச்சித் திறமையை எனக்கு எடுத்துரைத்து அவரை அறிமுகப் படுத்தினார். பிறகு 1995இல் கோலாலம்பூர் உலகத்தமிழ் மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவர் படித்ததை நேரே கேட்டுப் பயன் அடைந்தேன். அப்பப்பா! எவ்வளவு செய்திகள்! சங்க இலக்கியம் என்பது உலக மகா கலைக் களஞ்சியம் என்பதைத் தம் கட்டுரை வாயிலாக எடுத்துக் கூறியவர் திரு சாமி.

திரு சாமி, தம் வாழ்நாளில் பெரும் பகுதியை ஆராய்ச்சிக்காகவே கழித்தவர். அவர் எழுதியவை பலவற்றைத் திரு வெள்ளையாம்பட்டு சுந்தரம் நூல் வடிவில் வெளியிட்டுள்ளார்.

'அறிவு பூர்வமான அறிவியல் ஆராய்ச்சிநிறைந்த 'கனமான' நூல்களை வாங்குவோர் அதிகம் இல்லை. இருப்பினும் ஊதியம் கருதாது திரு பி.எல். சாமி மனந்திறந்து புகழ்ந்துள்ளார். நாமும், ஆமாம் ஆமாம் என்று வழிமொழிகிறோம்.

திரு சாமி இன்று அமரராகிவிட்டார். தமிழ்த் தாத்தா உ.வே.சா. வைப்போல் திரு பி. எல். சாமி தமிழ்த் தாயின் பெருமைகளை உலகு அறியச் செய்தவர். அவர் ஆற்றலை, புகழைத் தமிழகம் அழியாமல் எவ்வாறு காப்பாற்றப் போகிறது!

நெஞ்சில் நிலைத்தவர்

கவிமுரசு பூவை அமுதன்

உத்தமர் பிறந்த நாளில்
உதித்தவர் பி எல் சாமி
வித்தகம் நிறைந்தா ரேனும்
விளம்பர மின்றி வாழ்ந்தார்
சத்தமே யின்றி நாட்டில்
சரித்திரம் படைத்தா ருள்ளே
மெத்தவும் கற்றோர் ஏத்தும்
மேதையாய் வாழ்ந்தார் போற்றி!

அக்டோபர் இரண்டாம் நாளில்
அவதரித் தவராம் காந்தி
மக்களுக் குழைத்தாற் போல
மணித்தமிழ் நூல்கள் யாத்து
தக்கவா ராய்ச்சி யோடு
தமிழரே அறிவு மேன்மை
மிக்கவர் என்னும் உண்மை
மேதினிக் குணர்த்தி னாரே!

எழுபத்து நான்காண்டு காலம்
        இருந்தவர் தமிழர் வாழ்வில்
எழுச்சியுண் டாக்கு தற்காய்
        எழுதிய நூலொவ் வொன்றும்
விழுமிய கருத்துக் கோவை
        விளங்கிடும் உயர்ந்த சேவை
வழுவவர் எழுத்தில் இல்லை!
        வாழ்க்கையோ புகழின் எல்லை!

இலக்கியக் கடலுள் மூழ்கி
        எடுத்தநன் முத்துகள் நூல்கள்
இலங்கும் விலங்கின விளக்கம்
        இயற்கை செடிகொடி மலர்கள்
பலபொருள் புதைய லாக
        பண்டைய தமிழர் சொத்தாய்
நிலவிடும் உண்மை எல்லாம்
        நினைவினில் கொள்ள வைத்தார்!

அரசாங்கப் பணியை ஏற்போர்
        அதனுள்ளே அழுந்திப் போவார்!
பிறதுறை அறிவை எண்ணார்
        பெரும்பதவி குறிக்கோள் என்பார்!
அறிஞராம் பி. எல். சாமி
        அருந்தமிழ் அறிவில் ஆழ்ந்தார்!
சிறந்தவா ராய்ச்சி நூல்கள்
        செய்துதாய்த் தமிழுக் கீந்தார்!

பதவியெது வான போதும்
பண்பாடு மறந்தா ரல்லர்
புதையலைத் தோண்டு வார்போல்
புதுக்கருத் தகழ்ந் தெடுத்தே
இதழ்களில் தமிழ்ஆங் கிலத்தில்
எழுதியவை யாவும் சொத்தாய்
உதவிடும் தமிழர்க் கென்னும்
உண்மையை உணர்வோம் போற்றி!

புதுவையின் விடுத லைக்காய்ப்
புத்துணர் வோடு ழைத்தார்!
நதியென நடையைக் கொண்ட
நன்னூல்கள் பலவும் செய்து
மதுரநம் தமிழாம் தாய்க்கு
மாண்புகள் சேர்த்து வைத்தார்!
எதனிலும் புதுமை கண்ட
ஏந்தலாய் வாழ்ந்தார் போற்றி!

எட்டாவ தான பிள்ளை
எட்டினார் புகழின் எல்லை!
அட்டாவ தானியைப் போல்
அரும்பணி பலவும் செய்தார்
தொட்ட தெல்லாம் துலங்கும்
தூயராய்ப் புலமை தேர்ச்சி
மட்டிலா அளவில் பெற் றார்
மனமெலாம் நிறைந்தார் போற்றி!

வழிகாட்டி!

முனைவர் இரா.சேது, எம்.ஏ, பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு),
விவேகாநந்தா கல்லூரி, சென்னை-4.

சென்னை பி.எல். சாமி. அவர்கள் சிறந்த ஆய்வியல், அறிவியல் அறிஞர். அவர் சங்க இலக்கியங்களில் தோய்ந்து அவற்றுள் மலிந்துகிடக்கும் வாழ்வியல் கூறுகளை மிக நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார்.

சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் என்பதனை அறிவியல் முறையில் தெளிவுபடுத்தியுள்ளார். விலங்குகளும் பறவைகளும் செடிகளும் சங்ககால மக்கள் வாழ்வோடு எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன என்பதைக் காரண காரிய விளக்கங்களோடு எடுத்துக் காட்டியுள்ளார்.

இயற்கையோடு வாழ்ந்த சங்ககாலத் தமிழர் களுக்குத் துணையாக இருந்த விலங்குகளையும் செடி கொடிகளையும் தொகுத்து, 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்', என நூல்களாக வரைந்துள்ளார்.

ஈராஸ் பாதிரியாரின் அரப்பா, மொகஞ்சதாரோ ஆய்வுகளின் துணைக்கொண்டு விழுப்புரம் வட்டத்தில் உள்ள கீழ்வானம் குன்றுகளில் காணப்படும் வண்ண

ஓவிய முத்திரைகளையும் எழுத்துகளையும் ஆய்ந்து, சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்பதை நிறுவியுள்ள திறம், இவரின் ஆய்வறிவின் சிறப்பை நன்கு புலப்படுத்துகிறது.

சங்கத் தமிழில் புலமையும், அறிவியல் நோக்கும் இவர்பால் அமைந்துள்ளதால், தமிழர்களின் வாழ்வியல் சிறப்பு தெளிவுபடுத்தப்படுகிறது. சங்க இலக்கியம் வாழ்வியல் உண்மைகளைச் சொல்லிச் செல்கிறது என்பதைப் பல இயற்கைக் கூறுகளால் வெளிப்படுத்தும் இவரது நுண்மையுடன் நுழைபுலம் போற்றத் தக்கதாகும்.

சங்ககால இயற்கைக் கூறுகளில் மறைந்துள்ள பல நுட்பங்களை விளக்கும் இவரது கட்டுரைகள் எதிர்காலத் தமிழர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகுமென்பதில் ஐயமில்லை.

நோக்கரிய நோக்கர்

தமிழ்ப் பேராசிரியர் அ. அறிவுநம்பி
புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி - 605 014

தமிழ்கூறு நல்லுலகில் தம் எழுத்துக்களினால் புகழை ஈட்டியவர்கள் பலர். அவருள் ஒருவர் புதுவை பி.எல். சாமி அவர்கள். இலக்கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் நோக்கி, மிகப் புதிய அணுகு முறையில் அவற்றினை வெளிக்காட்டிய வித்தகர் அவர்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வாயிலாக அவர் வெளியிட்டுள்ள நூல்கள் யாவும் தமிழிலக்கியங்களை இதர இயல்களுடன் இணைத்துப் பார்த்து உருவாக்கப் பெற்ற தகுதியினையுடையவை. சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள செடி, கொடி, மரம் போல்வனவற்றைப் பயிரியல் பெயர்களுடன் (Botanical Names) விளக்கிக் கூறும் நுண்மாண் நுழைபுலம் அவரிடம் இருந்தமை குறிக்கத் தக்கது. இலக்கியங்களுடன் சமூகவியல், மானுடவியல் கருத்துகளைப் பொருத்தி, பல புதிய செய்திகளை அவர் வழங்கியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேலன் வெறியயர்தல் பற்றிய செய்திகளை வெறும் இலக்கியச் செய்திகளாக மட்டும் அவர் கருதவில்லை. அதனால்

அச்சடங்கு நடைமுறையில் உள்ளதா என்ற களஆய்வு அவரால் மேற்கொள்ளப் பெற்றது.

புதுவை மாநில மாகே, கேரளாவின் சில பகுதிகளில் அவர்தம் தேடல் நீளுகின்றது. விளைவு: 'சங்க நூல்களில் முருகன்' என்ற அவருடைய நூலில் மிகப்புதிய செய்திகள் மொழியப் பெற்றுள்ளமை. வேலனுக்கான இன்றும் களமிழைக்கப்படுவது தமிழரின் பண்பாட்டு எச்சமாகும். அதனை முறைப்படியாக வெளியுலகிற்கு உணர்த்திய பெருமைக் குரியவர் பி.எல்.சாமி அவர்கள்.

அந்நூல் பலபடங்களைக் கொண்டதாகச் சேகர் பதிப்பகத்தாரால் வெளிவந்துள்ளது. படங்கள், வரை கோட்டு உருவங்கள், பட்டியல்கள் எனப் பல்வேறு கோணங்களில் தம் கருத்து ஒன்றை நிறுவ முனையும் போக்கு அவரின் அறிவியல் நோக்கினை வெளிப் படுத்தும்.

மேலோட்டமாக எழுதுவதைவிடவும் துல்லியத் தன்மையே தேவை என்பதை அவரின் எழுத்துகள் எடுத்துக்கூறுகின்றன. சொல்லாய்வு, இடப்பெயராய்வு என்ற வகையில் தம் ஆய்வுப் பரப்பை அகலமாகவும் ஆழமாகவும் அமைத்துக் கொண்டிருக்கிறார் அவர்.

தமிழியல் துறையைச் சாராத ஒருவர் தமிழிலக் கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் கண்டுணரவும், கண்டுணர்த்தவும் இயலுமென்பதைப் பல நூல்களின் வழியே அவர் மெய்ப்பித்திருக்கிறார்.

மலையாள நாட்டிலுள்ள வழிபாட்டில் இடம் பெறும் 'செக்கிப் பூ' என்பதனைத் 'தமிழிலக்கியத்தில்

தாய்த்தெய்வ வழிபாடு' என்ற நூலில் விளக்கவரும் ஆசிரியர் அடிக்குறிப்பில் ''ஈஸ்வரனுக்குரிய பூ என்றே இதற்குத் தாவர நூற்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது'' (ப. 143) எனவரைவது அவரின் பயிரியல் நூல் திறமைக்கு ஒரு பதச்சோறு.

சில இலக்கியச் செய்திகளை மீளவும் சரி பார்ப்பதற்காக வரலாற்று ஆவணங்கள், கல்வெட்டுகள் இவற்றில் போதிய கவனம் செலுத்துவது இவருடைய தனித் திறமையாகவே இருந்துள்ளது.

வழக்கமான பார்வையிலிருந்து மாறுபட்டுப் புதிய கோணங்களைப் பயன்படுத்தி அவர் தம் கருத்துகளை நிரல்படுத்தியிருக்கிறார் என்பதற்கு ஏராளமான சான்றுகளை அவருடைய நூல்களில் பரவலாகக் காணலாம். ஒரு செய்தியை வலுவாகக் கூறிடக் கூடியமட்டும் எத்துணை அரண்களைத் தேட இயலுமோ அவ்வளவு அரண்களையும் அவர் அமைக்கத் தயங்கியதில்லை. அவருடைய உழைப்பு, பரந்துபட்ட அறிவு, செயல்திறன் இவற்றைக் கருதியே தமிழ்ப் பல்கலைக் கழகம் அவரைப் பணியமர்த்தம் செய்துகொண்டது.

இலக்கியங்களைப் பல கோணங்களில் காணவியலும், காணவேண்டும் என்ற அவர்தம் வேட்கை குறிக்கத்தக்கது மட்டுமன்று, பிறராலும் கொள்ளத் தக்கதுவுமாம்.

மறையார் என்றும்!

இனமானக் கவிஞர் இளமாறன்

சிந்துவெளி நாகரிகக் காலந் தொட்டுச்
சந்திரனில் கால்பதிக்கும் இந்நாள் மட்டும்
செந்தமிழின் செழுமைக்கும் நிலைபேற் றிற்கும்
செறிவாகச் செயல்பட்டோர் பலபேர் ஆவார்!
எந்தவொரு தன்னலமோ வணிக நோக்கோ
எள்ளளவும் எதிர்பார்ப்போ இல்லா திந்தச்
சிந்தைவளம் தொண்டுள்ளம் படைத்தோ ரால்தான்
செம்மாந்து வாழ்கின்றாள் தமிழ்த்தாய் இன்று!

அந்தபெருந் தமிழ்த்தொண்டர் பலருள் காலம்
அளித்ததொரு திருத்தொண்டர் பி.எல். சாமி
முந்தைபழம் நூல்களுக்குள் புதைந்தி ருந்த
முத்துகளை வெளிக்கொணர்ந்த ஆய்வு ஞானி!
வந்தபல ஆய்வுகளுள் இவரின் ஆய்வோ
வரலாறை அறிவியலால் அகழ்ந்த ஆய்வு!
உந்தியெழும் உணர்வுகளை அடக்கித் தூய
உண்மைகளை உலகறியச் செய்த செம்மல்!

கல்வெட்டுத் துறையினிலும், சங்க நூல்கள்
காட்டுகின்ற களங்களிலும், அவற்றி லுள்ள
சொல்கட்டு, இயல்புநிலை, காலச் சூழல்,
சுவைகூட்டும் கற்பனைகள் முழுதும் ஆய்ந்து
தொல்கட்டுக் கோப்பிதுதான் என்று ரைத்த
தொல்பொருள்கள் ஆய்வறிஞர் மறைந்தார் என்ற
சொல்கேட்டு அதிர்வடைந்தோம், பி.எல். சாமி
செய்திருக்கும் அருந்தொண்டால் மறையார் என்றும்!

தந்தை மதித்த தமிழறிஞர்!

திருமுடி சேது அசோக், புதுச்சேரி

என் தந்தையார் திருமுடி ந. சேதுராமச் செட்டியாரை எல்லோரும் போற்றிப் புகழ்வார்கள். என் தந்தையாரோ அறிஞர் பி.எல். சாமி அவர்களை மிகவும் புகழ்ந்து பேசுவார்கள்.

அறிஞர் சாமி அவர்களும் என் தந்தையாரைப் புதுவையின் மாமனிதர் என்று புகழ்வார் . பலரும் பல சமயங்களில் கூறியதை என்னைப் போலவே பலரும் அறிவார்கள்.

தொலைபேசியில் நீண்டநேரம் என் தந்தையும் அறிஞரும் அளவளாவும் காட்சிகளைப் பலமுறை பார்த்து வியந்திருக்கிறேன்.

எங்கள் திருமுடி இல்லத்தில் எண்ணற்ற அறிஞர்கள், எழுத்தாளர்கள் வருவதும் தங்குவதும், என் தந்தையாருடனும் பிற அறிஞர்களிடமும் கலந்துரையாடுவதும் நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். மேலும் எங்கள் இல்லத்தில் இலக்கியக் கூட்டங்கள் அடிக்கடி நடப்பது வழக்கம்; இது அனைவருக்கும் தெரிந்ததே.

அறிஞர் பி.எல்.எஸ். அவர்களின் நூல்களும் எங்கள் இல்லத்திலேயே, அமைச்சர்கள், நீதிபதிகள், அறிஞர்கள், கவிஞர்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள் இன்றும் என் நினைவில் காட்சிகளாக விரிந்து களிப்பூட்டுகின்றன.

மதிப்பிற்குரிய என் தந்தையார் மறைந்த பின், பதினாறாவது நாளன்று சேகர் பதிப்பகத்தார் தயாரித்த, என் தந்தையாரைப் பற்றிய வரலாற்றுக் களஞ்சியம் எனும் நூல், எங்கள் வீட்டில் வெளியிடப் பெற்றது.

பாகூர் புலவர் சு.குப்புசாமி எழுதியும், தொகுத்தும் உருவான அந்த நூல் வெளியிட்ட பொழுது அறிஞர் பி.எல்.எஸ். அவர்கள், மனந்திறந்து என் தந்தையாரின் பெருமையையும் பேரன்பையும் நெஞ்சம் நெகிழப் பேசியதை எல்லோரும் கேட்டனர்; நானும் சிறுவனா யிருந்தும் கேட்டேன்.

முன்னாள் புதுவை முதலமைச்சர் டி.ஆர்., கல்வி அமைச்சர் ரேணுகா அப்பாத்துரை முதலானவர் களுடன் அறிஞர் சாமி (கலெக்டர்) அவர்களும் கலந்து கொண்டதும் சேகர் பதிப்பகத்தார் சுந்தரம் பேசும் காட்சியும் இந்தப் புத்தகத்தின் மேலட்டையின் பின் புறத்தில் சாட்சியாகத் தெரிகின்றது.

புகழ்மிக்க இப்புதுவை, புரட்சிக் கவிஞரை இழந்தது;வாணிதாசனாரை இழந்தது; பெரும்புலவர் சண்முகசுந்தரனாரை இழந்தது. என் தந்தையும் மறைந்தார். இப்பொழுது தனிப்புகழ் கொண்ட தமிழ்ப்

பேரறிஞர் சாமி அவர்களும் போய்விட்டார். 'அந்தோ, என் புதுவைப் பூமியே! உன் நிலை இப்படியாகி விட்டதே!' என்று புலம்புவதைத் தவிர, வேறென்ன செய்வேன்?

என் தந்தையின் நண்பர் சாமியவர்கள் மறைவால் என் குடும்பமும் துன்பத்தில் தோய்ந்துள்ளது.

அறிஞர்களான பெருமையானவர்களை இழந்தால் அது எப்படிப்பட்ட துன்பமாக இருக்கும் என்பதை எமது குடும்பங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

அறிஞரைப் போற்றும் புத்தகத்தில் என் கருத்தையும் வணக்கத்தையும் வைக்கக் கிடைத்த வாய்ப்பை மறவேன்.

அறிஞர் பி. எல். எஸ். புகழ் வாழ்க!

புதுநெறி காட்டியவர்!

புலவர் வரத கோவிந்தராசன், எம்.ஏ.,

சீமையை விட்டே வெள்ளைச்
சிங்கத்தை ஒழித்த காந்தி
மேதையின் பிறந்த நாளில்
மரியமதலேன் பெற்ற பிள்ளை
தோமையர் மதத்தைச் சார்ந்தார்,
தூயநற் சான்றோர் கல்வி
சேவையில் இன்பம் கண்ட
பெரியநா யகனார் பிள்ளை

இளமையிற் கல்வி கேள்வி
இலக்கிய அறிவில் தேர்ச்சி
உளம்மகிழ் பணியில் நாட்டம்
ஓய்வின்றி நூல்கள் ஆய்வு
வளமைசேர் மனையின் நல்லாள்,
வண்டமிழ் பெயர்கொள் மக்கள்
விளம்பர வெளிச்சந் தேடா
வீரார்ந்த வெற்றி வாழ்க்கை!

செந்தமிழ் நாடு பெற்ற
சிறந்தநல் லறிஞர், சங்க
முந்துநூல் யாவும் முற்ற
எழுத்தெண்ணி கற்ற நூலோர்,
முந்தையர் வகுத்துச் சொன்ன
முதல்கரு உரிப்பொ ருட்கள்
தந்தபொருள் மயக்கம் போக்கித்
தகுபொருள் உரைத்த ஆய்வர்.

செடிகொடி, விலங்கு, புட்கள்
செம்மணி, மீன்கள், பூச்சி,
படிப்படி யாய்வ ளர்ந்த
பலவகை உயிரி னங்கள்,
அடிதொழும் தெய்வம், வாழ்க்கை
அறிவியல், கலைபுண் பாட்டில்
முடிவிலா முரண்க ருத்தை
முடித்தார்நுண் ணறிவால் ஆய்ந்து

திராவிட இனமே பாரின்
தொல்குடி மக்கள் என்றும்
திராவிடர்நா கரிகம் வையத்
தொன்மைநா கரிகம் என்றும்
அராப்பா மொகஞ்ச தாரோ
ஆய்வொடுகீழ் வாலை கண்ட
அரியமுத் திரையைக் கொண்டு
ஆய்ந்துபே ருண்மை கண்டார்

ஆட்சியர், புதுவை நாட்டில்
அரும்பணி நாளும் ஆற்றி
நீட்சியே யின்றி மக்கள்
நேர்துயர் துடைத்தார், என்றும்;
காட்சிக்கு எளியர், கொண்ட
கடமையில் தவறார் நேர்மை,
மாட்சிமை மிக்க மேலோர்
மனிதரில்மா ணிக்கம் போன்றார்!

புதுவைவிடு தலையின் சிற்பி
புகழ்மிகு புரட்சி வீரர்
பொதுவாழ்வில் தொண்டு செய்ய
பொன்னான பணிது றந்தோன்
முதுபெரும் தலைவர், முன்னாள்
முதல்வர்நம் ஓ.பி. ஆரின்
இதயத்தைக் கவர்ந்த செல்வர்
ஈடிணை யில்லாச் சான்றோர்!

ஏசுவின் மதத்த ரேனும்
எம்மதமும் ஏற்றுப் போற்றும்
மாசிலா மனித நேயர்
மனிதகுல மேம்பாட் டுக்காய்
ஆசற பணிக ளாற்றி
'அரசுசார் செயலர்' என்னும்
வீசுபுகழ் பதவி பெற்றார்
மேன்மைமிகு லூர்து சாமி!

என் தந்தையுடன் கடைசி ஐந்தாண்டுகள்!

பி. எல். இளங்கோ பெரியநாயகம்

நினைவுகள் நிஜங்களாவிடினும், நிஜங்கள் நீங்கா நினைவுகளாக நிலைத்துவிடுவது சிலரது வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிகழ்ச்சி. என் தந்தையின் நினைவுகள் நீங்காத சம்பவங்களாக, அழிக்கவியலாத நினைவுகளாக என் இதயத்தில் பதிந்துவிட்ட தென்னவோ உண்மை யிலும் உண்மை.

1994ஆம் ஆண்டு நவம்பர் மர்தம் 14ஆம் நாள் காலை 10.30 மணியளவில் எனது தாயார் தொலைபேசி மூலம் என்னைத் தொடர்பு கொண்டு என் தந்தை 'ரத்த வாந்தி' எடுப்பதாகவும், உடனே வருமாறும் அழைத்தார்கள். உடனே என் தந்தையின் ஊழியரான சுப்புராயன் என்பவரை அழைத்துவிட்டு வீட்டிற்கு விரைந்தேன்.

வாழ்க்கையில் அச்சம் என்றால் என்ன என்று கேட்கக்கூடியவரும், எவ்வளவு பெரிய சிரமங்களும் பிரச்சனைகளும் எதிர்ப்பட்டாலும் எவரிடமும் கூறாமல் தான் மட்டுமே அதற்குத் தீர்வு கண்டவருமான என் தந்தை, என் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டு தனக்குப் பயமாகயிருக்கிறது என்றும், தான் இறந்துவிடுகின்ற

நேரம் நெருங்கிவிட்டது என்றும், தன்னை உடனே மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படியும் வேண்டினார்.

அதற்கு முன்போ அதற்குப் பின்போ அப்படியொரு வார்த்தையை அவர் கூறி எவருமே கேட்டதில்லை. பின்பு அவரை மருத்துவமனையில் சேர்த்ததும், அங்கு அவர் நீங்காத் துயர்பட்டதும், அவற்றைத் தாங்கியதும், தாங்கி அவற்றிலிருந்து விடுபட்டதும், வீடு திரும்பியதும் இவை அனைத்தும் அவரது திடமனத்திற்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டு.

அதன்பிறகு பல நேரங்கள் அவருடன் மிக அருகாமையில் அமர்ந்து பலவற்றைப் பேசியது என் நினைவைவிட்டு அகல மறுக்கிறது. மனத்தின் அடித் தளத்திலே புதைந்து கிடந்த உணர்வுகள் பல நேரங்களில் உறங்கிவிடும் எனக்கூறியது, தனது வாழ்க்கையில் நடந்த சோகமான நிகழ்ச்சிகள் எங்களுக்கு வராமல் பார்த்துக் கொள்ளும்படி எச்சரித்தது, உதவி செய்துவிட்டு எதிர் பார்ப்பது ஏமாற்றத்தைத் தரும் என எடுத்துரைத்தது, மற்றவரின் உதவியைச் சார்ந்து வாழும் நிலையில் ஏற்படுகின்ற துயரங்களை வர்ணித்தது, மவுனமே பலவற்றிற்கு விடைதரும் மருந்து என்பதை விளக்கியது... சங்க இலக்கியத்தையே கரைத்துக் குடித்தவர் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் வாழ்க்கையின் தத்து வங்களைப் பேசியது எனக்கு மிகுந்த வியப்பைத் தந்தது.

பல நேரங்களில் அவர் மவுனமாகவே யிருந்து பார்த்திருக்கின்றேன். 'மவுனமே! உனக்குத்தான் எத்தனை

அர்த்தங்கள் என் தந்தையின் வாயிலாக' என நான் கண் கலங்கியதுண்டு.

தினமும் மூன்று முறை நான் அவரிடம் பேசுவது வழக்கம். அதுபோலவே 1999 ஜூன் மாதம் 3ஆம் தேதியன்று மாலை நான்கு மணியளவில் அவரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு, அவரிடம் என்ன வேண்டும் எனக் கேட்டுவிட்டு, மாத்திரைகளின் பட்டியலைக் குறித்துக் கொண்டு அலுவலகத்திற்குச் சென்றேன். இரவு ஏழரை மணியளவில் தொலைபேசி மூலம், 'அப்பா மிகவும் மோசமாக உள்ளார்' என்று கேள்வியுற்று வீட்டிற்கு விரைந்தேன்.

வார்த்தை எதுவுமே பேச இயலாமல் முனகல் சத்தத்துடன் ஏதோ பேச முயன்றவராய் என் மேலேயே சாய்ந்து அவர் உயிர் நீத்தார்.

நினைவுகள் நிஜங்களாக வாய்ப்பில்லை என்ற போதும் நடந்த நிஜங்கள் நீங்கா நினைவுகளாக இதயத்தில் குடிகொண்டிருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



பேரறிஞருடன் 16 ஆண்டுகள்...

திரு சுப்புராயன்

நான் 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் நாள் எனது மாமன் உறவு முறையிலுள்ள பாண்டி திரு சாம்பசிவம், B.D.O., அவர்கள் மூலம் எனக்கு வேலை வேண்டிய நிலையில் திரு பி.எல். சாமி வீட்டில் அவர் முன் நிறுத்தப்பட்டேன்.

திரு பி.எல். சாமி அவர்கள் என்னிடம் சிறிது விசாரணை செய்து, பின் டெலிபோன் வழியாகத் தனது நேரடிப் பார்வையின் கீழ் இயங்கும் மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலகத்தில் (மத்திய அரசு) கடைநிலை ஊழியர் பதவிக்கு என்னை நிரப்பும்படி உத்தரவு அளித்தார். அதன் பின் எனக்கு வந்த உத்தரவுப்படி 24.1.1983இல் மேற்படி மத்திய அரசு அலுவலகத்தில் பணிக்குச் சேர்ந்தேன்.

அன்றைக்கு இந்த அலுவலகத்தின் உதவி இயக்குநர் திரு D. சந்தானம் அவர்கள் என்னை இயக்குநர் திரு பி.எல். சாமி வீட்டு வேலைக்குப் போகும்படி பணித்தார் நானும் அவ்வாறே சென்றேன்.

ஆரம்ப நாட்களில் அந்த வீட்டில் தோட்ட வேலை செய்யத் தொடங்கிப் பின்பு வீட்டுக்குத் தேவையான காய் கறி, மீன்மார்க்கெட், மளிகைக்கடை, வங்கி கணக்குகள், இதர அரசு அலுவல்கள் சார்பாகச் சென்று வரும் அளவுக்குத் தயார் செய்யப்பட்டேன்.

திரு பி.எல்.எஸ். அவர்களுக்கு 1994ஆம் ஆண்டு நவம்பர் 14தேதியில் உடல்நலம் குன்றியது. புதுவை அரசு மருத்துவமனையிலும், பின்னர் மத்திய அரசு மருத்துவ மனையிலும் சேர்ந்து ஓரளவு உடல்நலம் தேறி வீடு திரும்பியபோது, ஒரு கை, ஒரு கால் சரிவர இயங்க வில்லை. எனவே அவரால் சரிவர எழுத இயலவில்லை.

ஆனால், தம் வாழ்நாள் இறுதிவரை, பல்வேறு புத்தகங்களைப் படிப்பார்; படித்த செய்திகளைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டுக் கூறி மகிழ்வார்.

தமிழை அனைவரும் கற்றிருக்கலாம். ஆனால் தமிழை ஆய்வு செய்து அறிவியல் தமிழை முதன் முதலில் அறிமுகம் செய்த பெருமை இவரை மட்டுமே சாரும்.

இவரிடம் உள்ள குணத்தில் இதுவும் ஒன்று.

எந்த ஒரு சொல்லையும், ஆராய்ச்சி செய்வது இவருடைய இயல்பு. காலப்போக்கில் ஆராய்ச்சி என்ற சொல்லையே ஆராய்ச்சி செய்துவிட்டார், இந்தச் சங்கத்தமிழ் விஞ்ஞானி.

இவருக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் புதுச்சேரி கிளை 11. 5. 81இல் விழா எடுத்துச் **சங்கநூல் பேரறிஞர்** எனும் பட்டத்தை அளித்துத் தன்னையும் பெருமைப்படுத்திக் கொண்டது.

இவர் அரசுப் பணியில் இருந்தபோது தம்மிடம் வரும் பொதுமக்கள், மற்றும் அரசு ஊழியர்களின் பிரச்சனைகளுக்கு சட்டத்தின் வழி கொண்டும் தன் மனசாட்சிப்படியும் நல்ல தீர்ப்பு அளிப்பார்.

சட்டம் அனைவருக்கும் நல்லது செய்யத்தானே ஒழிய, தீமை செய்ய அல்ல என்று கூறுவார். தாம் முடிவு எடுத்த விதம் குறித்து அரசு ஆவணங்களிலும் பதிவு செய்து வைப்பார்.

அரசுப் பணிகளில் இவர் கையூட்டு (லஞ்சம்) பெற்றதில்லை, தம் கீழ் பணிபுரியும் யாரும் பெறுவதையும் விரும்பமாட்டார்.

பணியில் தவறு புரிந்தவர்களை அழைத்து விசாரித்து தவறு உறுதியாயின் பணி இடமாற்றம் அளிப்பார். பதவி உயர்வு இனி கிடையாது என்றும் கூறுவார். நீ செய்த தவறுக்கு வேறு அதிகாரியாய் இருந்தால், உன்னைப்பணி நீக்கம் செய்வர்; நான் உன் குடும்பம் குறித்து அவ்வாறு செய்யவில்லை என்று கூறுவார்.

எளிய தவறுகளை மன்னித்து அக்கணமே மறப்பார். பணியில் திறமை உடையவர்களை மிகவும் விரும்புவார். பதவி உயர்வுக்கு வழி செய்துவைப்பார். சாதி, மதம் பார்க்கமாட்டார்.

விருந்தோம்பல்

அரசுப் பணியில் இருந்தபோது தம் உடன் வெளிவரும் ஊழியர்களுக்குத் தமக்கு அளிக்கப்படும் உணவு வகைகளையே அளிக்கும்படி பணிப்பார்.

அளிக்கப்படுகிறதா எனக் கவனித்த பின்பே அவர் உண்பார்.

அரசுப் பணிக்குப் பின், தாம் வெளியில் செல்லும் போது உடன் வருபவர்களுக்கு உணவு வகைகளை அளித்து மகிழ்வார். பணம் ஒரு நாளும் அவருக்கு எஜமானனாக இருந்தது இல்லை. எல்லா நேரத்திலும் தாமே பணத்துக்கு எஜமானனாக இருந்தார். இதனால் இவருடைய சேமிப்புக் கணக்குப் புத்தகம் பென்ஷன் வரவு புத்தகமாக மட்டும் இருந்தது என்றால் அது மிகையில்லை.

தம் உறவினர், நண்பர்களைப் பிறந்தநாள் தினமான அக்டோபர் 2, புதுவருட தினம், ஜனவரி 26 ஆகிய நாட்களில் அழைத்து விருந்து அளித்து மகிழ்வார்.

புதுவைக்கு வருகை தரும் நண்பர்களை நேரில் விழாக்களில் சந்தித்து வீட்டுக்கு வரும்படி அழைத்து விருந்து அளித்து மகிழ்வார்.

ரோம் நகரில் கடவுள் பணியில் உள்ள கர்டினால் லூர்துசாமி இவரது வகுப்புத் தோழர் மட்டும் அல்லர், மிகவும் நெருங்கிய நல்ல நண்பரும் ஆவார். புதுவைக்கு வரும்போது எல்லாம் இவரை வந்து சந்தித்து மகிழ்ச்சி கொள்வார்.

பி.எல். சாமியின் மரணகாலம் வரை நான் அந்த வீட்டின் உப்பைத் தின்னாத நாட்கள் மிகவும் குறைவு.

உணவுப் பழக்கம்

தினமும் காலையும் மாலையும் காப்பி நிறைய விரும்பி அருந்துவார். அரிசி உணவினைச் சிறிது அளவே

உண்பார். ஊன் மிக விரும்பி உண்பார். தினசரி உணவில் தினம் ஒரு கீரை வகை மிகவும் அவசியம் என்பார். கோதுமை உணவு வகைகளை விரும்பி உண்பார்.

இல்லறத்து இனிய ஞானியாகிய என் ஆசான் பி.எல். சாமி, இ.ஆ.ப.'ஒய்வு அற்றது பற்று எனில் உள்ளது வீடு' என்னும் மறைமொழிக்கு ஒப்பத் தம் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டதால், தம் வாழ்நாள் முழுதும் மனநெருடல்களினால் அவர் கண்ணீர் விட்டு யாரும் பார்த்தது இல்லை.

தமது உடலில் படுக்கைப் புண்ணேற்பட்டபோது அது குறித்துக் கவலைப்படாமல் ரமண மகரிஷி போல் வாழ்ந்த என் ஆசான், வீடு பேறு அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு
விசுவாச ஊழியன்
சுப்புராயன்.

வாழையடி வாழை...

திரு பி. அருள்தாஸ் அவர்கள்

பி.எல். சாமி அவர்கள் முன்னோர் சிவகங்கைச் சீமையிலிருந்து வந்தவர்கள். குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் முத்துசாமி முதலியார், இவருடைய (பி.எல். சாமி) பாட்டனார். இவர் நன்கு படித்தவர். அதன் காரணமாக அன்றிருந்த ஆங்கிலக் கம்பெனியாரிடம் ரயில்வே காண்ட்ராக்டராகப் பணியாற்றினார். அப்படிப் பணியாற்றியதன் விளைவாகப் பெரும் நிலக்கிழாராக (ஜமீன்தார்) மக்களிடம் நல்ல மதிப்பும் பெற்றிருந்தார்.

கோவை, திருச்சி, தஞ்சாவூர் இடைப்பட்ட ரயில் மார்க்கத்தைக் காண்டிராக்ட் எடுத்துச் செவ்வனே முடித்தும் கொடுத்தார்.

இவரது மனைவி பெரியநாயகத்தம்மாள் திருச்சியைச் சேர்ந்த தாசில்தார் அன்னப்பமுதலியாரின் மகளாவார். பெரியநாயகத்தம்மாள் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். அவர் இறந்தபிறகு அவரது கல்லறையில் நிறை மாதக் கர்ப்பிணிகள் சுகப் பிரசவத்திற்காக வேண்டிக் கல்லறை யிலிருந்து மண்ணை எடுத்துச் சாப்பிடும் வழக்கம் கொண்டிருந்தனர்.

அவருக்கு ஆனந்தநாதன், இராயப்பன், அன்னப்பன் என்று மூன்று மகன்களும், அக்னேஸ் என்று ஒரு மகளும்

இருந்தார்கள். திரு முத்துசாமி தம்மைப்போலவே தம் பிள்ளைகளையும் படிக்க வைத்தார்.

முத்துசாமி முதலியார் காலத்திற்குப் பின் அவர் பிள்ளைகள் சேடப்பாளையம், பள்ளப்பாளையம்,ஒரு பகுதி சோமனூர் ஆகிய இடங்களில் அதிக நில புலன்களைப் பெற்றிருந்தனர்.

இவர்கள் ஆற்றிய சமூக சேவை மிகவும் போற்றத் தக்கது. இம்மூன்று கிராமங்களில் பள்ளர், கவுண்டர் இனத்தவர் மிகுதியாக இருந்தனர். அவர்களிடையே அவ்வப்போது சண்டை ஏற்பட்டு அது கொடூரமான அடிதடிக்குக் கொண்டு செல்லும். அதை மூத்தமகன் ஆனந்தநாதனும் இராயப்ப முதலியாரும்தான் பஞ்சாயத்துத் தலைவர்களாக யிருந்து தீர்த்து வைப்பார்கள். அவர்களுடைய தீர்ப்பிற்கு ஊர்மக்களும் கட்டுப்படுவார்கள். இந்தக் கிராமங்களில் இவர்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. மக்களிடையே சமத்துவமும் சம தொண்டும் அன்றே ஏற்படுத்தியவர்கள் இவர்கள்.

இவர்கள் குடும்பக் கிணறு இந்தக் கிராமங்களுக்கே குடிதண்ணீர் அளித்த தனிச்சிறப்பைப் பெற்றது. இவர்கள் தன்னலமின்றிச் செய்த சமுதாய சேவையை மக்களெல் லாரும் போற்றுவார்கள். ஊர் மக்களுக்கு உடல் நலக் குறைவு என்றால், உடனே அருகிலுள்ள சுகாதார நிலையத்திற்கு இவர்களது வண்டிதான் நோயுற்ற வரை எடுத்துச் செல்லும்.

சமூகசேவை மட்டுமல்லாமல் சமய சேவைகளிலும் இவர்கள் சளைத்தவர்களல்லர். சேடப்பாளையத்தில் ஒரு நல்ல ஆலயத்தையும் கட்டினார்கள். அதற்குத் திருமுழுக்கு யோவான் (ஸ்நாபக அருளப்பர்) ஆலயம் எனப் பெயரிட்டனர். அவர்கள் காலத்திலேயும், இன்றும் ஜூன் 24ஆம்தேதி தேர்த் திருவிழா இவர்கள் முன்னிலையில் நடைபெறும். இப்பொழுதும் மிகச் சிறப்பாக ஊர் மக்கள் கொண்டாடி வருகின்றனர். தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த பலரையும் சமயத் தொண்டிற்காகக் குருக்களாகவும், கன்னியாஸ்திரியாகவும் அர்ப்பணித்துள்ளனர்.

சமூக சமய சேவைகளைத் தவிர அன்றே கல்வித்தொண்டு ஆற்றிய பெருமை இவர்களுக்குண்டு. பள்ளபாளையத்தில் ஒரு பள்ளியைத் தோற்றுவித்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி புகட்டினார்கள். அதன் காரணமாகவே வாத்தியார் குடும்பம் எனப் பெயர் பெற்றனர். எனவே, மூத்த பேரன் பெரியநாயகத்தை நன்றாகப் படிக்க வைத்தார்கள்.

பெரியநாயகம் அவர்கள் திருச்சிராப்பள்ளி தூய வளனார் கல்லூரியில் படித்து, பிறகு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சிக்கான பட்டமும் பெற்றார்.

அன்று ஆங்கிலேயர் காலத்தில் (1908)இப்படிப் படித்துப் பட்டம் பெற்ற கிறிஸ்துவர் ஒருசிலரே.

அன்று கிறிஸ்துவர்களுக்கு ஆட்சியாளர்களிடத்தில் நல்ல ஆதரவிருந்தது. அவர்கள் ஆட்சியிலே கலெக்டர்,

காவல்துறைக் கண்காணிப்பாளர் போன்ற பெரிய வேலைகளில் சேரக்கூடிய வாய்ப்புகள் அதிகமிருந்தது. பட்டம் பெற்ற கிருத்துவர்களுக்கு சுலபமாக வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும் இருந்தன.

என்றாலும் இவரது பாட்டனார்,ஆசிரியர் வேலை சமுதாயத்திற்கு அறிவுக் கண்களைத் திறக்கும் வேலை என்பதன் காரணமாக, தம் மகன் ஆசிரியராக வேண்டும் என்று விரும்பி ஆசிரியர் பயிற்சிக்குப் படிக்க வைத்தார். பெரியநாயக முதலியார் கல்வித் தொண்டினை முதன் முதல் குடும்பத்தில் ஏற்றார்.

இவர் ஆல்வே (Allways), தூத்துக்குடி போன்ற இடங்களில் வேலை செய்து, பின்பு கோவையில் பெருமை வாய்ந்த தூய மைக்கேல் பள்ளியில் சரித்திரம் போதிக்கும் ஆசிரியராக, மாணவரும் மக்களும் போற்றும் விதமாக மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

இவருக்கு இருந்த நல்ல பெயரின் காரணமாக, கோவையில் முனிசிபல் கவுன்சிலராக இருமுறை தேர்ந் தெடுக்கப்பட்டுக் கோவையின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். கோவை சி.எஸ். இரத்தினசபாபதி முதலியாருக்குப் பக்கபலமாக இருந்து பணியாற்றினார். மேலும் கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பல ஆண்டுகள் இருந்தார்.

குறிப்பாக, அக்காலத்தில் திருச்சபை வரலாற் றினைத் தமிழில் எழுதிய பெருமை இவருக்கு உண்டு. ரோமை நகரிலிருந்து வந்த போப்பாண்டவரின் பிரதிநிதி கூட இவர் செய்த தொண்டினைக் குறித்துப் பாராட்டினார்.

இவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இக் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் கல்வித்தொண்டினையே சிறப்பாக ஏற்று ஆசிரியர், ஆசிரியைகளாகத் திகழ்ந்தார்கள்.

பெரியசாமி முதலியார் நோய்வாய்ப்பட்டதன் காரணமாகக், கோவையைவிட்டுத் திண்டிவனத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றலானார்.

அயர்லாந்தைச் சேர்ந்த அன்னிய போதகசபை தந்தை காவான்டவி (GavanDavi) அவர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டுத் திண்டிவனத்தில் தலைமை யாசிரியராகப் பணியாற்றினார். இந்தப் பள்ளி இவர் காலத்தில் சென்னை மாகாணத்திற்கே ஒரு முன்மாதிரிப் பள்ளியாக விளங்கிற்று என்று அன்றிருந்த வெள்ளைக்காரக் கல்வித்துறை இயக்குநர்கள் சான்று கொடுத்துள்ளனர்.

இவ்வாறு பெயர் பெற்ற பெரியநாயகத்திற்கு ஒன்பது பிள்ளைகள். ஆண்மக்கள் எட்டுப்பேர்; பெண் ஒருவர். எட்டாவதாகப் பிறந்தவர்தாம் நம் சங்கநூல் ஆய்வாளர் திரு பி. லூர்துசாமி அவர்கள். எட்டில் பிறந்தவர் திக்கெட்டும் ஆள்வார் என்பது பழமொழி. இவர் பிறந்த தேதியே 2.10.1925. அதே தேதியில் நமது தேசத்தின் தந்தை அண்ணல் காந்தியடிகளும் பிறந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

சிறு வயதிலேயே லூர்துசாமி எதையும் ஆராய்ந்து உய்த்துணரும் பக்குவத்தைப் பெற்றிருந்தார். பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் பழக்கங்களிலும், செடி

கொடிகளை வளர்ப்பது போன்ற செயல்பாட்டிலும் மிக்க ஆர்வம் காட்டினார்.

பாரதியார் சொன்ன 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற சொல்லிற்கேற்பக் கிளி, மைனா, சிட்டுக்குருவி போன்ற பறவைகளை வளர்ப்பதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். இவர் சொல்லிற்கு ஏற்றபடியே அவை நடக்கும்.

ஏழு வகுப்பு வரை படித்த இவர், கடலூர் மஞ்சக் குப்பத்திலுள்ள தூய வளனார் பள்ளியில் சேர்ந்து பத்தாம் வகுப்புவரை படித்தார். இவருக்குத் தமிழாசிரியராக இருந்தவர் அன்று மிகவும் பெயர் பெற்ற தமிழண்ணல் திரு வேங்கடாச்சாரியார் அவர்கள்.

அவர் ஒருமுறை வகுப்பிலே புறநானூற்றுப் பாட லொன்றை விளக்கிவிட்டு, அதை உடனே, பாராமல் ஒப்பிக்கும்படி சவால் விட்டார், மாணவர்களிடம். வகுப்பறையிலுள்ளவர்கள் வியக்கும் வண்ணம் அன்று லூர்துசாமி எனப் பெயர் கொண்ட இரு மாணவர்கள் அதைத் திறமையுடன் ஒப்பித்தனர். அதில் ஒருவர் பி.எல். சாமி (சுருக்கப்பட்ட பெயர்). மற்றொருவர் இன்று ரோமையிலே கர்தினலாக விளங்கும் இளவரசர் சைமன் லூர்துசாமி அவர்கள்.

பின்பு பி.எல். சாமி, திருச்சி தூய வளனார் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். தமிழ் ஆர்வத்தில் இளமையிலேயே உந்தப்பட்டவரான இவர், அன்று தமிழ் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய திராவிடக் கழகத்தின்பால் ஈர்க்கப்பட்டது ஒன்றும் வியப்புக்குரியது அல்ல. காலம்

சென்ற முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் திருச்சியில் கூட்டம் நடத்தியபோதெல்லாம் தவறாமல் பங்கு கொண்ட இவர், திராவிடநாடு பத்திரிக்கையை வாங்கித் தவறாமல் படித்து, மற்ற மாணவர்களையும் படிக்கும்படித் தூண்டி அவர்களுக்கும் பத்திரிகையைக் கொடுப்பார்.

அண்ணா அவர்கள் எழுதிய எல்லாப் புத்தகங் களையும் விலை கொடுத்து வாங்கிவிடுவார். அன்று திராவிடக் கொள்கையைத் தவறாகப் புரிந்துகொண்ட கத்தோலிக்க இயக்கங்கள், அண்ணாவின் கொள்கையை ஏற்கவில்லை. எனவே இவர் திராவிடநாடு பத்திரிகை, அண்ணாவின் புத்தகங்கள் வைத்திருந்த காரணத்தால், ஒருமுறை இருமுறை அல்ல, பலமுறை அபராதம் (Fine) கட்டியுள்ளார். அன்று தோன்றிய தமிழார்வத்தால், சங்க இலக்கியம் முதலானவற்றை விரும்பி, ஆழ்ந்து படித்து அதன் ஆராய்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

கல்லூரியில் (Rembola Mascaranes) ரம்போலா மாஸ்கரெனாஸ் என்ற தமிழ்த்துறைத் தலைவருடன் இவருக்கு அதிக நெருக்கமுண்டு. அவரும் இவரை நல்ல வகையில் ஊக்குவித்தார்.

அவர் சொல்லும் ஆராய்ச்சிக் கருத்துகளைப் பட்டயம் தீட்டித் தெளிவுபடுத்தினார். அதன் விளைவே பின்னர் எழுதிய சங்க இலக்கிய ஆராய்ச்சி நூல்களாகும். தாவரஇயல், விலங்கியல் பி.எஸ்ஸி., பட்டம் பெற்று, சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்பு அஞ்சலகத் துறையில் செகந்தராபாத்தில் பணியில் சேர்ந்தார்.

திண்டிவனத்திலிருந்தபோது இவர் ஓமந்தூரில் திரு O.P. ராமசாமி ரெட்டியாரைப் பார்த்து அவருடன் சங்கத்தமிழ், சைவசித்தாந்தம் - இவற்றில் தமக்குள்ள ஈடுபாட்டை அவருக்கு எடுத்துரைப்பதும் அவ்விருவரும் சங்கத்தமிழைப் பற்றி விவாதிப்பதும் வழக்கம். இந்த O.P. ராமசாமி ரெட்டியார் அவர்கள் பிற்காலத்தில் சென்னை மாகாணத்தின் முதல்வரானார்.

அப்பொழுதே இவர் திண்டிவனத்தில் ராஜாங்குளம் மற்றும் செஞ்சிக்கோட்டை ராஜாதேசிங்கு இவர்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும் இறங்கினார். அங்குத் தமிழ்ப் புலவர்களுடன் கலந்து ஆலோசிப்பார். புலவர் கூட்டங்களில் பங்கேற்பார். அப்பொழுதே இவர் ஓலைச் சுவடிகளைச் சேகரிக்க ஆரம்பித்தார்.

ஆந்திரப் பகுதியில் தபால் இலாக்காவில் வேலை பார்த்த காலத்தில், புதுவை மக்களிடம் விடுதலைப் போராட்ட ஆர்வம் எழுந்தது. பிரஞ்சு ஆட்சியிலிருந்து விடுபட, முன்னாள் முதல்வர்கள் குபேர், வெங்கடசுப்பா ரெட்டியார் போன்றவர்கள் பெருமுயற்சி யெடுத்து நெட்டப்பாக்கம் கிராமத்தில், சுதந்திரப் புதுவை அரசு என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதற்குத் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கலெக்டராகப் பணி யாற்றி ஓய்வு பெற்ற H.S.S. பால் இ.ஆ.ப. அவர்களை நிர்வாகியாக அமர்த்தினார்கள்.

பாரதியாருக்கு உண்டான சுதந்திர தாகம் பி.எல். சாமி அவர்களுக்கும் ஏற்பட்டது. புதுவை சுதந்திரத்திற்குத் தம்மாலானவற்றை ஏன் செய்யக்கூடாது என்ற உந்துதலால், இந்த நெட்டப்பாக்க அரசு அமைப்பில்

H.S.S. பால் அவர்களுக்கு உதவியாளராகவும், சுதந்திரப் புதுவைக்குக் கல்வி அதிகாரியாகவும் நியமனம் பெற்றார்.

தான் பார்த்த தபால் இலாகா வேலையையும் சுதந்திரப் போராட்டத்திற்காகத் தியாகம் செய்தார். அந்த வகையில் இவர் புதுவை சுதந்திரம் பெற உழைத்த ஒரு தியாகி ஆவார். இதன் காரணமாகவே இவருக்குப் புதுவை தியாகி எனத் தாமிரப்பத்திரம் அளிக்கப்பட்டது.

புதுவை சுதந்திரம் அடைந்த பிறகு இவர் தொண்டினைப் பாராட்டித் திருமிகு கேவல் சிங் (Carval Singh) ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது, இவருக்கு இந்திய சுதந்திர நாடெங்கிலும் தோற்றுவிக்கப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற பதவி கொடுக்கப் பட்டது. இவர் வில்லியனூரை மையமாகக் கொண்டு பணியாற்ற ஆரம்பித்தார். இப்படியாக இவர் புதுவை அரசாங்கப் பணியில் சேர்ந்தார்.

வட்டார வளர்ச்சி அதிகாரியாகப் பணியாற்றும் பொழுது தமது வாகனத்தில் ஓய்வென்பதே இல்லாமல் கிராமம் கிரமமாகச் சென்று மக்களின் தேவைகளை அறிந்து, அந்தத் தேவைகளுக்கேற்ப, கல்வி, சுகாதாரம் மற்றும் கிராமத் தேவைகளை உணர்ந்து நல்லவிதமாகச் செயல்பட்டு அன்று பதவியிலிருந்த ஆட்சியாளர் (கவர்னர்), அமைச்சர்கள், தலைமைச் செயலர் மற்றும் மக்களிடத்திலேயும் பெரும் மதிப்பைப் பெற்றார்.

இளம் வயதின் வேகத்தில் வியக்கத்தகு விதத்தில் பணியாற்றி நம் நாட்டிலேயே ஓர் உதாரண வட்டார வளர்ச்சி அலுவலகமாகத் திகழும்படி செய்தார்.

அவ்வமயம் மத்திய அரசு பட்டதாரியான ஒரு குறிப்பிட்ட வயது வரம்பிற்குட்பட்டவர்கள் I.A.S. தேர்வு எழுதலாம் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

புதுவை மாநிலத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான நபர்கள் இத்தேர்வை எழுதினார்கள். அந்தத் தேர்வில் புதுவை மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒருவர் இவர்தாம். என்றாலும் பின்பு நடந்த நேர்முகத் தேர்வில் இவருக்கு வாய்ப்பு கிட்டவில்லை.

அன்றிலிருந்தே தம் வாழ்நாளில் இந்த I.A.S. பட்டத்தைப் பெற்றே தீருவேன் என்று ஒரு சபதம் கொண்டிருந்தார். பின்பு, தலைமைச் செயலகத்தில் சார்புச் செயலராகப் (Under Secretary) பணியாற்றினார்.

முக்கியமான அரசு வேலைகளில் பணியமர்த்துவதில் எழுத்துத் தேர்வு இவரிடமே ஒப்படைக்கப் பட்டது. ஏனென்றால், இவரிடமிருந்து யாரும் எதையும் தெரிந்துகொள்ளவே முடியாது. நேர்மை இவர் ரத்தத்தில் ஊறியது.

தலைமைச்செயலர் ஒவ்வொருவரும் இவர் ஆற்றிய வேலையைப் பாராட்டி, சிறப்புக் குறிப்புகள் எழுதி யுள்ளார்கள். இதன் காரணமாகவே இவருக்கு 1978 ஆம் ஆண்டு I.A.S. பட்டம் வழங்கப்பட்டது. அதையேற்று இவர் புதுவையிலேயே ஆளுநரின் செயலராகவும், மாவட்ட ஆட்சித்தலைவராகவும் பொறுப்பு வகித்தார். பல துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

கோப்புகள் எது வந்தாலும் அதை அன்றே படித்து, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைக்குத் தெளிவாக குறிப்பு எழுதி அனுப்பி விடுவார். இவர் எடுக்கும் முடிவிற்கு மாற்று முடிவெடுக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது மிக மிக அரிது.

இந்த அயராத வேலைகளுக்கு இடையிலேயும் தமது தமிழ் ஆராய்ச்சியை இவர் விட்டவரல்லர்.

இரவில் பல மணிநேரம் விழித்திருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவார். இவரது நடை மிக எளிதானது. நடைக்கேற்பக் கருத்துக்களோ மிக வலிமையானவை. ஓரிரு கட்டுரைகள் வெளியானவுடன் நமிழகத்திலிருந்த ஆராய்ச்சியாளர்கள் அல்லாமல் அண்டை மாநில ஆராய்ச்சியாளர்களும் இவரது முன்னறிவைப் போற்றத் தொடங்கினர். இவரிடம் தொடர்பு கொள்ளவும் ஆரம்பித்தனர்.

ஊக்கம் ஆற்றலில் முடிந்தது. ஒன்று இரண்டல்ல. பதினாறுக்கு மேற்பட்ட சங்கஇலக்கிய ஆராய்ச்சிப் புத்தகங்களை எழுதி வெளியிட்டார். மற்றும் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் செந்தமிழ்ச் செல்வி தினமணி, தினமலர், ஆராய்ச்சி, அமுதசுரபி முதலான இதழ்களில் வெளியிடப்பட்டன.

இவரது கட்டுரை, கேரளப் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக ஆக்கப்பட்டது. தமிழ்நாட்டில் ஒன்பதாம் வகுப்பில் இவரது கட்டுரை ஒன்று தமிழ்ப் பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டது.

உலகத்தமிழ் மகாநாடுகளில் இவர் தவறாமல் கலந்துகொண்டார்; மாநாட்டு மலர்களில் இவரது கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மதுரை மற்றும் கோலாலம்பூரில் நடந்த மாநாட்டிலும் கட்டுரை வாசிக்கின்ற பெரும் பேற்றினைப் பெற்றார்.

இவர் குடும்பம் இனிய குடும்பம்; அன்புக் குடும்பம். இவருடைய துணைவியார் மங்களவதியார் இவர் ஆய்வுக்கும் வேலைகளுக்கும் உதவிகரமாக நடந்து கொள்வார். இவருடைய பிள்ளைகள்: மேரி மனோன் மணி, அருள் செல்வம், இளங்கோ பெரியநாயகம், ஜோசப் முத்தையா என நால்வரும் தந்தையின் அன்புக்குரிய மக்களாக இருக்கின்றனர்.

பரிசுபெற்ற நூல்கள் எழுதுதல்

தமிழ்மொழியின் மேல் ஏற்பட்ட தாகம் அடங்காத ஒன்றாக இருக்கவே, செயலர் பணியிலிருந்து முன் கூட்டியே ஓய்வு பெற்றார். பின்னர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், தமிழ் அறிவியல் களஞ்சியம் உருவாக்கும் பணியில் ஆசிரியப் பொறுப்பினை ஏற்றார். முதலில் சென்னையிலும் பின்பு தஞ்சையிலும் அறிவியல் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார்.

பின்பு முற்றிலும் ஓய்வு பெற்றுப் புதுவையில் ஆராய்ச்சிப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். இரவு பகலாயிற்று, பகல் இரவாயிற்று. அயராது உழைத்ததால் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் நாள் உடல் நலம் மிகவும் குன்றி மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டார். ஒருசில தினங்கள் நினைவிழந்த நிலமைக்கே சென்றுவிட்டார். மருத்துவர்களின் அயராத சேவையின் காரணமாக அவர் சுய உணர்வு பெற்றுக் குணமடைந்தார்; என்றாலும் ஒரு கையும் ஒரு காலும் செயல்படாமல் போயின. வீட்டிலேயே ஓய்வெடுக்க வேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டார். குடும்பத்தாரால் குழந்தை போல் பராமரிக்கப்பட்டு வந்தார்.

எதிர்பாராத நிலையில், ஜுன் திங்கள் மூன்றாம் நாள் இரவு உணவுக்குப் பின்பு ஏதோ ஓர் அதிர்வு ஏற்பட்டுத் தம் மகன் இளங்கோ பெரியநாயகத்தின் மார்பிலே சாய்ந்து உயிர் நீத்தார். தமிழ்மொழியின் ஆராய்ச்சி மைந்தன் தமிழோடு கலந்துவிட்டார்.

இவரது நண்பர்கள் குழாமில் இடம்பெற்ற, குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள்: அப்பாத்துரையார், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தணிகை அடிகளார், கி.ஆ.பெ. விசுவநாதம், ஐராவதம் மகாதேவன், தினமலர் கிருஷ்ணமூர்த்தி, வி.ஐ. சுப்பிரமணியன், உலகப் புகழ் பறவை நோக்காளர் சலீம் அலி, வெங்கட சுப்பா ரெட்டியார், திருமுடி சேதுராமன் செட்டியார், வ. சுப்பையா, குபேர், அப்ரகாம், மற்றும் புதுவைப் பிரதேச காங்கிரஸ் தலைவர் சண்முகம், டாக்டர் நல்லாம் முதலியோர் ஆவர்.

எமது சிறந்த நூல்கள்

1. சங்க நூலாய்வும் சாமியும்
தொகுப்பு - புலவர் ந. வேங்கடேசன் 75.-
2. பண்பாளர் பன்னீர்செல்வம்-
-பேராசிரியர் மது. ச. விமலானந்தம் 40.-
3. பன்மொழிப்புலவர் -புலவர் த. கோவேந்தன் 37.-
4. கம்பர் ஒளிமணிகள் -பேராசிரியர் இரா. சேது 36.-
5. தமிழ்விடு தூது -திறனாய்வு
-ஸ்டெல்லா மேரி ஜோஸ்பின் 26.-
6. ஒட்டக்கூத்தர் - நாடகம் கு. ம. கிருஷ்ணன் 20.-
7. வெற்றித் திருமகள் '' 40.-
8. கவித்தென்றல் கல்லாடன் -முனைவர் அ.கனகராசு 22.-
9. மேடைக் கனிகள் -கவிமாமணி கல்லாடன் 40.-
10. திருக்குறள் கதைகள் -திருக்குறளார் வீ. முனிசாமி 16.-
11. திருக்குறளில் நகைச்சுவை '' 32.-
12. மங்கையின் மாண்புக் கதைகள் -புலவர் அரசுமணி 27.-
13. மங்கையின் மாண்புக் கதைகள் - பாகம்-2 '' 27.-
14. சர்.பி.டி.தியாகராயர் -புலவர் ம. அய்யாசாமி 28.-
15. பாவேந்தர் தோட்டத்துப் பூங்குயில்கள்
தொகுப்பு -கவிஞர் இளமாறன் 30.-
16. பாவேந்தர் குயில்கள் '' '' 40.-
17. பாவேந்தர் பூங்கா '' '' 45.-

18. 50 சாதனையாளர் 'முகம்' மாமணி 40. -

19. 'ஜீவா' நாரண துரைக்கண்ணன் " 40. -

20. பேரறிஞர்களின் உவமைகள்
-கே.எஸ்.லட்சுமணன் 17.50

21. சிந்தனைக் கதைகள் -புலவர் க. முனிசாமி 21. -

22. பாவேந்தரின் காளமேகம்
-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 6. -

23. கடல் காட்டும் விந்தைகள்
-கே. ஆறுமுகம் பி.எஸ்ஸி., பி.டி. 26. -

24. உயிரியலில் சில உண்மைகள்
-இரா. இலக்குமி நாராயணன், எம்.எஸ். 23. -

25. அறிவியல் மனப்பான்மை
-ப. செங்குட்டுவன், பி.எஸ்ஸி. பி.டி. 16. -

26. இயற்கை பேசுகிறது
புலவர் கு.வை.இளங்கோவன் எம்.ஏ., 20. -

27. கட்டடக்கலை(மாணவர்க்கு) - தனராஜ் பி.ஏ., 17.50

28. மலைவிருந்து -அமல்ராஜ் 18. -

29. நீரிழிவு மருத்துவம் -சி.செல்வராஜ். 16. -

30. கல்விக் கனிகள்- வெள்ளையாம்பட்டு சுந்தரம் 28. -

31. கல்விக் கதைகள் " 32. -

32. வண்ணக் களஞ்சியம்(சிறுவர் பாடல்) 45. -

33. தாயுமானார் கதை 22. -

34. சுயமரியாதை எழுச்சிப் பேருரைகள் கொ 24. -

35. காளி வழிபாடு
-அனந்தபுரம். கோ. கிருட்டிணமூர்த்தி 28. -

36. நகைச்சுவைக் கொத்து உடுமாராசன் 25. -

★




SMATIC SOCIETY
MADRAS - 600 002.